ஆ.— தம்விசாரே தத்ராகாரதி "பூர்த்ரத்வாரமிதம் ருஜ்யபய்யத்ரமுக்தத்தம் ஜகத்த்ரயம்| அபாகவாயுகா ஜுஷ்டம் ஸர்வதைவாதிரூத்விதம்" என்றே வமாதிகளால் விஷய சிந்தைப்பண்ணும் ஹிதா நாராயணாக்ஞகளாலே சாஸித்து திருத்தவொண்ணாதபடி, அப்ராப்தங்களுமாய் அபோக்யங்களுமாய் ஜுகுப்ஸிதங்களுமான தேஹவிஷயங்களிலே, மீட்க வொண்ணாதபடி பெருமிடர்செய்துமண்டி, பகவத்விஷயமென்றால் கற்பங்கண்ட பாம்பைப் போலே முகம்மாறிக்கொண்டு, அநாதிகாலமேபிடித்து விமுகராயநர்த்தப்பட்டு அஸத்கல்பராய்ப் போரும் சேதநர்க்கு; பகவத்விஷயமென்றால் வேப்பங்குடிநீராய் "யாதானும்பற்றி நீங்கிப்" போருகிற வைமுக்யத்தை மறுவலிடாதபடி ருசிவாஸனைகளுடன் மாற்றி, "தன்பாலாதரம் பெருக வைத்த" என்று தன்னைக்கோகாட்டமாட்டும் விஷயங்களை காரித்துமிழும்படி, மெய்யான ஸ்வருசியை பலபர்யந்தமாக விளைப்பிக்கக் கடவதாய், பற்றற்று விடாதபடியான தன்பக்கலுண்டான ருசி ஸ்வஸௌந்தர்யாவிஷ்காரத்தாலே ஒருபடி பிறந்தால் "சிவத்தைத்தரும் மெய்" என்று இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரம் பண்ணுமபத்ஸலித்தேபாயமாய் "உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்றுபாயாத்யவஸாயிகளானால் "எனக்குத் தேனே பாலே" இத்யாதிப்படியே நிரதிசயபோக்யமான உபேயமாயிருக்கு

விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப்போரும் சேதநர்க்கு வைமுக்யத்தை மாற்றி ருசியை விளைக்கக் கடவதாய், ருசிபிறந்தால் உபாயமாய் உபாயபரி

ஜீ.—மாக்கிவிடுமிறே; "జన్మాన్తరసహస్రేషు యా బుద్ధిర్భావితా నృణామ్। తామేవ భజతే జన్తురుపదేశో నిరర్థకః" "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு யா புத்திர்ப்பாவிதா ந்ருணாம்| தாமேவ பஜதே ஜந்துருபதேசோ நிரர்த்தக:" என்னக்கடவதிறே: (விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப் போரு)கையாவது "சிலம்படியுருவிற்கருநெடுங்கண்ணார் திறத்தனாயறத்தையே மறந்து புலம்படிந்துண்ணும் போகமே பெருக்கி" என்றும், "சுரிகுழல் மடந்தையர் திறத்துக்காதலே மிகுத்துக் கண்டவாதிருந்த" என்றும், "மாதரார்கயற்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனை" என்றும் சொல்லுகிறபடியே இதரவிஷயங்களிலே அத்யபிநிவிஷ்டராய் "யாதானும்பற்றி நீங்கும் விரதத்தை" மேறிட்டுக் கொண்டு, பகவத்விஷயத்தில் முகம் வைக்க இசையாதே வர்த்திக்கை; இப்படிபோரும் சேதநர்க்கு (வைமுக்யத்தைமாற்றி ருசியை விளைக்கை) யாவது - "போதரேயென்றுசொல்லிப் புந்தியிற்புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்தவழகன்" என்கிறபடியே ஸ்வஸௌந்தர்யாதிகளாலே சித்தாபஹாரம்பண்ணி; தன்னைக்காணவேண்டோமென்றிருக்குமிருப்பைக் குலைத்து, கண்டகண்மாற வைக்கமாட்டாதபடி பண்ணுகை. (ருசிபிறந்தாலுபாயமாகை)யாவது இப்படி தன் வைலக்ஷண்யதர்சநத்தாலே தன்னை நித்யாநுபவம் பண்ணப் பெறவேணுமென்னும் ருசி பிறந்த வநந்தரம், "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்" என்கிறபடியே ஸம்ஸாரநிவ்ருத்தி பூர்விகையான ஸ்வப்ராப்திக்கு தானே ஸாதநமாகை. (உபாயபரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கை)யாவது தன்னை யுபாயமாக பரிக்ரஹித்தால் உபேயஸித்திக்கொருதேசவிசேஷத்திலே போமளவும் பார்த்திருக்கவேண்டாதே, "அணியரங்கனென்னமுதனைக்கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்றும் "எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலைக்கோனே" என்றும் சொல்லுகிறபடியே நிரதிசயபோக்யமாயிருக்கையாலே, தானே யுபேய

ஆ. —மென்கிறார். ஆக உபாயோபேயமாய் தத்துபயருசிஜநகமாய் இதரவிஷயருசிமோசகமாய்தேசாத்யபாதியற ஸர்வஸுலபமாய் அநாதரிப்பாரை யாதரிக்குமதாய் ப்ரபத்த்யநுகூணமாய் ஸர்வகுணஸம்பூர்ணமாய் ப்ரபந்ந ஜநகூடஸ்த்தர்க்குச் சரணவரணவிஷயமுமான அர்ச்சாவதாரமே ப்ரபத்திக்கு நியதவிஷயம் ; இந்நியதியே ப்ரபத்திக்குள்ளதென்று கீழோடே ஸம்பந்தம்.

சக. மேல் (இதில் ப்ரபத்திபண்ணும்)என்று துடங்கி(''ఇదంశరణమ్'' ''இதம் சரண'') மாவாக இவ்வர்ச்சாவதாரத்தில் ப்ரபத்திபண்ணுமதிகாரி த்ரைவித்யத்தையும், அதில்முக்க்யாதிகாரிவிசேஷத்தையு மருளிச்செய்கிறார், (இதில்) இத்யாதியால். ப்ரபத்திக்குநியதவிஷயமான விந்தவர்ச்சாவதாரத்தில், பரஸமர்பணரூபப்ரபத்திபண்ணும் நிவ்ருத்த்யதிகாரிகள், ப்ரபதநஹேதுபேதத்தாலே மூவர்.

சஉ. அவர்களாரென்ன(அஜ்ஞரும் ஜ்ஞாநாதிகரும் பக்திவிவசரும்) என்கிறார்.

---

க்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கும்.

சக. இதில் ப்ரபத்திபண்ணுமதிகாரிகள் மூவர்.

சஉ. அஜ்ஞரும், ஜ்ஞாநாதிகரும், பக்திவிவசரும்.

---

ஜீ.—முமாயிருக்கை. ஆகப்ரபத்திக்கு குணபூர்த்தியுள்ளவிடமேவிஷயமாக வேணுமென்றும், அதுதானுள்ளது அர்ச்சாவதாரத்திலேயென்றும், அத்தைப்பற்ற ஆழ்வார்களெல்லாரும் ப்ரபத்திபண்ணிற்று இவ்விஷயத்திலேயென்றும், இவ்விஷயத்திலே யெல்லாகுணங்களும் புஷ்கலங்கள் என்றும், விசேஷித்துப்ரபத்திக்கபேக்ஷிதகுணங்கள்விசதமாகப்ரகாசிப்பதிங்கேயென்றும், இதுதான் தன்னுடைய நைரபேக்ஷ்யாதிகளை யழியமாறி, தன்னை நாதரிப்பாரை யாதரித்துக்கொண்டுநிற்கிற ஸ்த்தலமென்றும், பரத்வாதிகளோரொருப்ரகாரத்தாலே துர்லபம் இது ஸர்வப்ரகாரஸுலபமென்றும், இவ்வளவேயன்று இவ்விஷயம் ருசிஜநகமுமாயுபாயோபேயமுமாயிருக்குமென்றும், சொல்லப்பட்டது ; இத்தானுபாயோபேயங்களிரண்டும் தானேயாய், ஸ்வேதரவிஷயவிரக்திபூர்வகமாக ஸ்வவிஷயருசியை ஜநிப்பிக்குமதாய், ஸர்வஸுலபமாய், தன்படிகளை யழியமாறிக்கொண்டு தன்னையநாதரிப்பாரையுமாதரிக்குமதாய், ப்ரபத்த்யபேக்ஷிதகுணோஜ்ஜ்வலமாய், ஸமஸ்தகுணஸம்பூர்ணமாய், ப்ரபந்நஜநகூடஸ்த்தர்க்கு உபாயவரணவிஷயமாயிருந்துள்ள அர்ச்சாவதாரமே ப்ரபத்திக்கு நியதவிஷயமென்றதாய்த்து.

சக. (ப்ரபத்திக்கு தேசநியமமும்) என்று துடங்கி, இவ்வளவுமுபாயவரணாத்மிகையான ப்ரபத்தியினுடைய தேசகாலாதிநியமாபாவமும் விஷயநியமமும் தர்சிப்பிக்கப்பட்டது ; இப்படி விஷயவிசேஷத்தை தர்சிப்பித்தவநந்தரம் பகவச்ச்சாஸ்த்ராதி ஸித்த்தமான வதிகாரிவிசேஷங்களையும் ப்ரகாசிப்பிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, அதிகாரிவிசேஷத்தை யருளிச்செய்கிறார், (இதில் ப்ரபத்திபண்ணுமதிகாரிகள் மூவர்) என்று. அதாவது ஸௌலப்ப்யாதிகுணபூர்த்தியாலே ப்ரபத்திக்கு நியதவிஷயமான இவ்வர்ச்சாவதாரத்தில் ப்ரபத்திபண்ணுமதிகாரிகள், ப்ரபதநஹேதுபேதத்தாலே மூன்றுவகைப்பட்டிருப்பர்களென்கை.

சஉ. அவர்களாரென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் ; (அஜ்ஞரும்) என்றுதுடங்கி. (அஜ்ஞ)ராகிறார் - பகவல்லாபத்துக்குறுப்பாக ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணுகைக்கீடான ஜ்ஞாநமில்லாதவர்கள்; அஜ்

ஆ.—சுஙு. இதரஸாதநங்களறியவும நுஷ்டிக்கவு மரிதென்றும் (அஜ்ஞாநத்தாலே) ஸாதநாந்தரங்களை விட்டு, அவை யிரண்டுக்குமெளிதான ப்ரபத்திபண்ணும் (ப்ரபந்நர்) ஸ்த்தூலதர்சிகளான (அஸ்மதாதிகள்) என்று துச்ச்சீகரிக்கிறார்; இதரஸாதநம் ஸ்வரூபத்துக்கப்ராப்தம், ப்ரபதநம் ஸ்வரூபப்ராப்தமென்றறியாமையாகிற அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நரென்றும் யோஜிப்பர்கள்; துஷ்கரத்வாதிப்ரபத்தியால் விடுகை இரண்டுக்குமொக்கும்; அஜ்ஞாநமசக்திக்குபலக்ஷணம். ஸாதநாந்தரம் பரதந்த்ர ஸ்வரூபநாசகம், ப்ரபதநம் ஸ்வரூபாநுரூபமென்கிற (ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்) நாதமுநிகள் துடக்கமான (பூர்வாசார்யர்கள்). பகவத்ப்ரஸாதலப்தையான பக்தியின் பாரதந்த்ர்யஜ்ஞாநகாலுஷ்யத்தாலே (ப்ரபந்நர்) "மயர்வறமதிநலமரு"ளிப்பெற்ற (ஆழ்வார்கள்).

சுஙு. அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் அஸ்மதாதிகள்;
ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர் பூர்வாசார்யர்கள்;
பக்திபாரவச்யத்தாலே ப்ரபந்நர் ஆழ்வார்கள்.

ஜீ.—ஞாநமசக்திக்குமுபலக்ஷணம்; (ப்ராபகாந்தரபரித்யாகத்துக்குமஜ்ஞாநாசக்திகளன்று) என்று மேலே யிவர்தாமே யருளிச்செய்கிறாரிறே. (ஜ்ஞாநாதிக)ராகிறார்-ஜ்ஞாநசக்த்யாதிகளுண்டாயிருக்கச்செய்தேயும், பகவதத்யந்தபரதந்த்ரமான ஸ்வரூபயாதாத்ம்ய தர்சநத்தாலே, உபாயாந்தரங்கள் ஸ்வரூபவிருத்தமென்று பரித்யஜிக்கும்படிக்கீடான ஜ்ஞாநபூர்த்தியுடையவர்கள். (பக்திவிவச)ராகிறார்-ஒன்றையுமடைவுபட வநுஷ்டிக்கக்ஷமரல்லாதபடி பகவத்ப்ரேமாதிசயத்தாலே சிதிலகரணராயிருக்குமவர்கள்.

சுஙு. இப்படி யிவ்வஜ்ஞாநாதிகளடியாக ப்ரபத்தி பண்ணினவர்கள் இன்னாரென்னுமிடங் காணலாமிடமுண்டோ வென்னுமாகாங்க்ஷையிலேயருளிச்செய்கிறார், (அஜ்ஞாநத்தாலே) என்று துடங்கி. (அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர்) என்றது-இதரோபாயாநுஷ்டாநத்திலிழிகைக்கு ஈடான ஜ்ஞாநாதிகள் முதலிலே யில்லாமையாலே, அநந்யகதிகளாய்க்கொண்டு பகவத்விஷயத்திலே பரந்யாஸம் பண்ணினவர்களென்றபடி; (அஸ்மதாதிகள்) என்று ஸ்வநைச்யாநுஸந்தாநத்தாலே மந்தாதிகாரிகளோடே தம்மையுங்கூட்டி யருளிச்செய்கிறார். (ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்) என்றது – உபாயாந்தரங்கள்ஸ்வரூபநாசகமென்று நடுங்கும்படியானஸ்வரூபயாதாத்ம்யதர்சநத்தால் வந்த ஜ்ஞாநபூர்த்தியாலே அநந்யகதிகளாய்க்கொண்டு, ஸ்வரூபாநுரூபமாக பகவதிந்யஸ்தபரரானவர்களென்றபடி; (பூர்வாசார்யர்களா)கிறார் - நாதயாமுநயதிவராதிகள். (பக்திபாரவச்யத்தாலே ப்ரபந்நர்) என்றது - பகவத்ப்ரேமபௌஷ்கல்யத்தாலே, "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றும் "இட்டகாலிட்டகை" என்றும் சொல்லுகிறபடியே சிதிலகரணராயிருக்கையாலே, ஸாதநாநுஷ்டாநத்துக்கு ஆளன்றிக்கே அநந்யகதிகளாய்க் கொண்டு, அவன்பக்கலிலே பரஸமர்பணம் பண்ணினவர்களென்றபடி; பக்திபரவசர்க்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணப்போகாதென்னுமிடம், "உன்னைக்காணுமவாவில் வீழ்ந்து நானெங்குத்தேனுமல்லேன்"என்றும்"என்கொள்வன்" என்கிறபாட்டிலும் ஆழ்வார் ஸுஸ்பஷ்டமாக வருளிச்செய்தாரிறே.

ஆ.—௬௪. அஜ்ஞாநாதிஹேதுகமான வதிகாரிபேதோக்திக்கு ஹ்ருதயமருளிச்செய்கிறார்மேல், (இப்படி) இத்யாதியால். அஜ்ஞாநாதிஹேதுபேதத்தாலே ப்ரபத்த்யதிகாரத்தை இப்படி பிரித்துச் சொல்லுகிறதும், இவ்வதிகாரிகளுக்கு தந்தாமதிகரித்த அஜ்ஞாநாதிஹேதுகப்ரபத்திவிசேஷங்களிலுண்டான ப்ரதிபத்தி நியதி விசேஷத்தைப் பற்ற. ப்ராப்தாப்ராப்த ஸ்வரூப ஜ்ஞாநமில்லாத முற்பட்டவர்களுக்கு அஜ்ஞாநஹேதுக ப்ரபத்தியிலும் துஷ்கரத்வப்ரதிபத்தி நடக்கிலும், ப்ராப்தாப்ராப்த ஜ்ஞாநமுள்ள நடுவிலவர்களுக்கு ஜ்ஞாநாதிக்யஹேதுக ப்ரபத்தியிலும் ஸ்வரூப ஜ்ஞாநம் நடையாடிலும், பக்திபரவசரான பிற்பட்டவர்களுக்கு பக்திபாரவச்யஹேதுக ப்ரபத்தியிலும் நிஷ்டையாயிருக்குமென்றபடி.

இப்படி சொல்லுகிறதும் ஊற்றத்தைப்பற்ற.

ஜீ.—௬௪. இப்படி அஜ்ஞாநாதிகளிலோரொன்றே இவர்களுக்கு ப்ரபதநஹேதுவாகச் சொல்லுகைக்கு மூலமின்னதென்கிறார், (இப்படி) என்று துடங்கி. அதாவது அஜ்ஞாநாசக்திகளும் ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநமும் பகவத்பக்தியுமாகிற இவை மூன்றிலும் மூவர்க்குமன்வயமுண்டாயிருக்கச் செய்தே ஓரொன்றே இவர்களுக்கு ப்ரபதநஹேதுவாகச் சொல்லுகிறதும் இவற்றிலோரொன்றே இவ்வதிகாரிகள்பக்கல் உறைத்திருக்கையாலே யென்கை. இத்தால் முற்பட்டவர்கள்பக்கல் ஜ்ஞானபக்திகளிரண்டும் குறைந்து அஜ்ஞாநமே மிஞ்சியிருக்கும்; நடுவிலவர்கள்பக்கல் அஜ்ஞாநமற்பமாய் பக்தியுமளவுபட்டு ஜ்ஞாநமே மிஞ்சியிருக்கும்; பிற்பட்டவர்கள் பக்கல் அஜ்ஞாநமத்யற்பமாய் ஸ்வரூப ஜ்ஞாநமும் குறைவற்றிருக்கச் செய்தே ப்ரேமமே கரைபுரண்டிருக்கும்; ஆகையாலெல்லாம் எல்லார்பக்கலிலுமுண்டேயாகிலும், அற்பங்களானவை கிடக்கச்செய்தே அதிகமானதுவே யவ்வவர்க்குப் ப்ரபதந ஹேதுவாமென்றதாய்த்து.—இந்த யோஜநைக்கொருகுறையுண்டு - "மயர்வறமதிநலம் பெற்ற வாழ்வார்களுக்கும், அஜ்ஞாநம் சிறிது கிடக்கிறதுண்டென்று கொள்ளவேண்டிவருகையாலே: ஆனால் செய்வதென் என்னில், (ஊற்றத்தைப் பற்ற) என்கிறவித்தையநுஸந்தாநபரமாக்கி யோஜிகுமளவில்விரோதமில்லை; அப்போது (இப்படி) இத்யாதிக்கு அஜ்ஞாநாசக்திகளும் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநமும் பகவத்பக்தியுமாகிற விம்மூன்றினுடையவு மநுஸந்தாநம் மூவர்க்குமேதேனுமொருபடி யுண்டாயிருக்கச்செய்தே, ஓரொன்றே யிவர்களுக்கு ப்ரபதநஹேதுவாகச் சொல்லுகிறதும், இவற்றிலோரொன்றிலே யிவ்வதிகாரிகளுக்கூற்றமாகையாலே என்று பொருளாகக்கடவது; அதாவது அநந்யகதிகளாய் ப்ரபந்நராகைக்குடலான அஜ்ஞாநாதித்ரயாநுஸந்தாநமும்மூவர்க்குமுண்டானாலும், மூன்றிலும்வைத்துக் கொண்டு ப்ரசுரமானதே தந்தாமுக்கு அநந்யகதிகளாய் ப்ரபத்தியிலிழிகைக்குஹேதுவாகவநுஸந்தித்திருக்கையாலே யென்றபடி. இதில் ப்ரதமாதிகாரிகளுக்கு அஜ்ஞாநாநுஸந்தாநம் ஸ்வரஸம்; நடுவுசொன்னவர்களுக்கும் ப்ராமாணிகராகையாலே அஜ்ஞாநத்தினுடைய ஸவாஸநநிவ்ருத்தி கூடாமையால் அஜ்ஞாநாநுஸந்தாநங்கூடும்; பிற்பட்டவர்கள் "மயர்வறமதிநலம்பெற்றவர்களாகையாலேஅஜ்ஞாநாநுஸந்தாநம்நைச்யநிபந்தநமாமித்தனை.

ஆ.—சரு. இந்த ஹேதுத்ரயத்தின் காரணத்ரயத்தை யருளிச்செய்கிறார்மேல். இந்த அஜ்ஞாநாதிகளில் அஜ்ஞாநாசக்திகள் அசித்தத்த்வத்தைப்பற்றிவரும், துர்ஜ்ஞேயத்வதுஷ்கரத்வங்கள் ப்ராக்ருதகரணஸங்கோசநிபந்தநமாய் வருகையால்; ஜ்ஞாநாதிக்யம் ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிவரும், ப்ராப்த்யப்ராப்திகள் ஸ்வரூபாநுஸந்தாநநிபந்தநமாய் வருகையால்; பக்திபாரவச்யம் ஈச்வரதத்த்வத்தைப்பற்றிவரும். பாரவச்யம் பகவத்வைலக்ஷண்யஜ்ஞாநநிபந்தநமாய் வருகையால்.

சசா. இந்தபேதங்கண்டவிடமுண்டோவென்ன உண்டென்கிறார், ("என்னான்") இத்யாதியால். "என்னான் செய்கேன்" என்கிற வாழ்வாருடைய ப்ரபதநோக்தியிலே, அஜ்ஞனான நானென்செய்கேன். அப்ராப்தனான நானென்செய்கேன். பக்திபரவசனான நானென்செய்கேன். என்றிம்மூன்றுபேதமுமுண்டு.

---

சரு. இம்மூன்றும் மூன்றுதத்த்வத்தையும் பற்றிவரும்.

சசா. "என்னான்செய்கேன்" என்கிறவிடத்தில் இம்மூன்றுமுண்டு.

---

ஜீ.—சரு. இவ்வஜ்ஞாநாதித்ரயத்துக்கும் காரணமின்னதென்கிறார். (இம்மூன்றும்) என்றுதுடங்கி. (மூன்று தத்த்வத்தையும்பற்றிவரும்) என்றது ஸாதநாநுஷ்டாநத்தில் அஜ்ஞாநாசக்திகளுக்குமூலம், கர்மநிபந்தநமான அசித்ஸம்பந்தமாகையாலே அஜ்ஞாநம் அசித்தத்த்வத்தைப்பற்றிவரும்; இதரஸாதநங்கள் ஸ்வரூபவிருத்தமென்றுபரித்யஜிக்கைக்குடலான ஜ்ஞாநபூர்த்திக்கடி, மத்த்யமபதத்தில் சொல்லுகிறஆத்மஸ்வரூபயாதாத்ம்யதர்சநமாகையாலே, ஜ்ஞாநாதிக்யமாத்மதத்த்வத்தைப்பற்றிவரும்; ஒன்றையுமடைவுபடவநுஷ்டிக்கமாட்டாதபடி கரணசைதில்யத்தைபண்ணும்பக்திவிவ்ருத்திக்குக்காரணம் "காதல்கடல்புரைய விளைவித்தகாரமர்மேனி" என்னும் பகவத்விக்ரஹவைலக்ஷண்யமாகையாலே, பக்திபாரவச்யம் பகவத்தத்த்வத்தைப்பற்றிவருமென்றபடி.

சசா. அதிகாரித்ரயத்துக்கும் அஜ்ஞாநாதித்ரயத்திலுமந்வயமுண்டாயிருக்க ஓரொன்றே ப்ரபதநஹேதுவாகச் சொல்லுகிறது (ஊற்றத்தைப் பற்ற) என்றிறே சொல்லிற்று; இப்படிஏகாதிகாரிபக்கலிலேஇம்மூன்றுமுண்டென்னுமிடங்காணலாமிடமுண்டோ என்னஅருளிச்செய்கிறார், ("என்னான்") என்றுதுடங்கி. அதாவது எம்பெருமான்தம்முடைய ஆர்த்திகண்டிரங்கக் காணாமையாலே, தன்னைப்பெறுமிடத்தில் சில ஸாதநாநுஷ்டாநம்பண்ணவேணுமென்றிருந்தானாகக் கொண்டு, உபாயாந்தராநுஷ்டாநத்துக்கு யோக்யதை யில்லாதபடி அஜ்ஞனான நான் என்செய்கேன்; ஜ்ஞாநம் தந்தோமே யென்னில், நீதந்த ஜ்ஞாநத்தாலே ஸ்வரூபபாரதந்த்ர்யத்தை யுணர்ந்து ஸாதநாநுஷ்டாநமப்ராப்தமென்றிருக்கிற நான் என்செய்கேன்; ஸ்வரூபத்துக்குச் சேராதாகிலும் உன்னைப்பெறலாமாகில் அது தன்னை யநுஷ்டிக்கலாய்த்திறே; ஜ்ஞாநமாத்ரத்தைத் தந்தாயாகில், பக்திரூபாபந்நஜ்ஞாநத்தைத் தருகையாலே ஒன்றையுமடைவுபட வநுஷ்டிக்க க்ஷமனல்லாதபடி பக்திபரவசனான நான்என்செய்கேனென்று மூன்றும் ஆழ்வார்க்கு விவக்ஷிதமாகையாலே, இவ்விடத்திலே யிம்மூன்றுமுண்டென்கை; ஆகையாலிவ்விடத்திலே காணலாமென்றுகருத்து.

ஆ.—௪௭. அந்த ஸூக்தியில் பக்திபாரவச்யமொன்றையுமேபற்றி ப்ரபத்திவருமென்றே கொள்ளவேணும், அஜ்ஞாநாப்ராப்திகள் பாரவச்யத்தாலே ஜ்ஞாநவிஷயமாகமாட்டாமையால்.

௪௮. அசித்தையும் ஆத்மாவையும்பற்றி வருமதில், பகவத்வைலக்ஷண்யத்தைப்பற்றி ப்ரபந்நாநாம் அதுவேமுக்க்யம்; மற்றையவையிரண்டும் கௌணமென்கிறார்.

௪௯. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணோபாதாநம் பண்ணுமேல், "అవిద్యాతో దేవే పరిబృఢతయా వా విదితయా స్వభక్తేర్భూమ్నా వా జగతి గతిమన్యామవిదుషామ్ । గతిర్గమ్యశ్చాసౌ హరిరితి జితన్తాహ్వయమనోరహస్యం వ్యాజహ్రే స ఖలు భగవాన్ శౌనకమునిః" "அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா ஸ்வபக்தேர்ப்பூம்நா வா ஜகதி கதிமந்யாமவிதுஷாம்। கதிர்கம்யச்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸ கலு பகவாந் சௌநகமுநி:" என்கிற ச்லோகத்தில் "அவித்யாத:" என்று ஜ்ஞாந

---

௪௭. அங்கொன்றைப்பற்றி யிருக்கும்

௪௮. முக்க்யமதுவே.

௪௯. "అవిద్యాతః" "அவித்யாத:" என்கிற ச்லோகத்திலே

---

ஜீ.—௪௭. ஆனால் இம்மூன்றுமவ்விடத்தில் ப்ரபத்திகாரணமாகிறதோவென்ன (அங்கொன்றைப்பற்றியிருக்கும்) என்கிறார்; அதாவது அவ்விடத்தில் ப்ரபத்தியானது மூன்றிலும் வைத்துக்கொண்டொன்றியிருக்கிற பக்திபாரவச்யத்தையே தனக்கு ஹேதுவாகப்பற்றி யிருக்குமென்றபடி.

௪௮. இந்தஹேதுத்ரயமடியாக வரும் ப்ரபத்திகளில் முக்க்யமேதென்ன (முக்க்யமதுவே) என்கிறார்; அதாவது - பக்திபாரவச்யமடியாக ப்ரபத்திபண்ணுமிடத்தில் ப்ராப்யருசி கண்ணழிவற வுண்டாகையாலேயதுவே முக்க்யமென்றபடி.

௪௯. இவ்வதிகாரித்ரயத்துக்கும் ப்ரமாணமுண்டோவென்ன ப்ரதமம் பட்டரருளிச்செய்ததொரு ச்லோகத்தை உதாஹரிக்கிறார், ("అవిద్యాతః" "அவித்யாத:") என்று துடங்கி. "అవిద్యాతో దేవే పరిబృఢతయా వా విదితయా స్వభక్తేర్భూమ్నా వా జగతి గతిమన్యామవిదుషామ్ । గతిర్గమ్యశ్చాసౌ హరిరితి జితన్తాహ్వయమనోరహస్యం వ్యాజహ్రే స ఖలు భగవాన్ శౌనకమునిః" "அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா ஸ்வபக்தேர்ப்பூம்நா வா ஜகதி கதிமந்யாமவிதுஷாம்। கதிர்கம்யச்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸ கலு பகவாந் சௌநகமுநி:" இச்ச்லோகார்த்தம்ஜிதந்தாவ்யாக்யாநோபோத்காதத்திலே "'ப்ரபத்திக்கதிகாரிகள் அஜ்ஞரும் ஸர்வஜ்ஞரும் பக்திபரவசருமென்று த்ரிவிதமாக பட்டரருளிச்செய்தாரிறே' என்று துடங்கி, 'அஜ்ஞனாகிறான் பகவல்லாபத்துக்கு தன்பக்கலில் ஜ்ஞாநசக்திகளில்லாதவன்; ஸர்வஜ்ஞனாகிறான் தேசகாலவஸ்துக்களால் பரிச்சேதிக்கவொண்ணாத வைபவத்தையுடையவன் ஈச்வரனென்றிருக்கையாலே அநந்யஸாத்யனென்றிருக்குமவன்; பக்திபரவசனாகிறான் ஜ்ஞாநசக்திகளுண்டாயிருக்கச்செய்தே அடைவுபடவநுஷ்டிக்கமாட்டாதவன்; இவர்கள் மூவரும் பகவத்விஷயமொழிய வேறுபாயமுண்டென்றறியாதவர்கள்; இவர்களுக்கு ப்ராபகனுமாய் ப்ராப்யனுமாயிருக்கும் ஸர்வேச்வரன்' என்று ஜிதந்தை என்றுபேரையுடைத்தான மந்த்ரரஹஸ்யத்தை, ஸர்வஜ்ஞனான ஸ்ரீசௌநக

ஆ.—ஹேதுகப்ரபத்தியையும் “దేవే పరిబృఢతయా వా విదితయా” “தேவே பரிப்ருடதயா வா விதிதயா” என்று ஜ்ஞாநாதிக்யஹேதுகப்ரபத்தியையும், “స్వభక్తేర్భూమ్నా వా” “ஸ்வபக்தேர்ப்பூம்நா வா” என்று பக்திபாரவச்ய ஹேதுகப்ரபத்தியையும் சொல்லிற்று.

௫௦. “ఇదం శరణమజ్ఞానామిదమేవ విజానతామ్ । ఇదం తితీర్షతాం పారమిదమానన్త్యమిచ్ఛతామ్” “இதம் சரணமஜ்ஞாநாமிதமேவ விஜாநதாம் । இதம் திதீர்ஷதாம் பாரமிதமாநந்த்யமிச்சதாம்” என்கிற ச்லோகத்திலும் அஜ்ஞாந விஜ்ஞாநதிதீர்ஷைகளாலே இம்மூன்றதிகாரமுமுக்தமென்றிவ்வளவாக

இம்மூன்றும் சொல்லிற்று.

௫௨. “இதம் சரணமஜ்ஞாநாம்.”

ஜீ.—பகவான் வ்யாக்க்யாநம்பண்ணப்பெறுவதேயென்கிறார்” என்றுச்சான் பிள்ளையருளிச்செய்தார். (ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்) என்கிறவிடத்தில் ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநம் ப்ரபதநஹேதுவாகச்சொல்லிற்று, இந்த ச்லோகத்தில் பகவதநந்யஸாத்யத்வஜ்ஞாநம் ப்ரபதநஹேதுவாகச் சொல்லிற்று; ஆகையாலிரண்டும் ஜ்ஞாநாதிகர்க்கு அநந்யகதித்வபூர்வகமான ப்ரபதநத்துக்கு ஹேதுவாமென்று கொள்ளவேணும்; கீழுமிதுதானே யர்த்தமானாலோவென்னிலொண்ணாது, (இம்மூன்றும் மூன்று தத்த்வத்தையும்பற்றி வரும்) என்றத்தோடு சேராமையால்.

௫௦. அநந்தரமிவ்வர்த்தவிஷயமாக அகிலஜகந்மாதாவாய் ஆப்ததமையான பிராட்டி, லக்ஷ்மீதந்த்ரத்திலருளிச்செய்த வசநத்தை உபாதாநம்பண்ணுகிறார், (“ఇదం శరణమజ్ఞానామ్”) (“இதம் சரணமஜ்ஞாநாம்”) என்று. “ఇదం శరణమజ్ఞానామిదమేవ విజానతామ్ । ఇదం తితీర్షతాం పారమిదమానన్త్యమిచ్ఛతామ్” “இதம் சரணமஜ்ஞாநாமிதமேவ விஜாநதாம் । இதம் திதீர்ஷதாம் பாரமிதமாநந்த்யமிச்சதாம்” இந்த ச்லோகத்தில் “இதம்” என்று பராமர்சிக்கிறது கீழ்ச்சொன்ன சரணாகதியை; “అపాయోపాయనిర్ముక్తా మధ్యమాం స్థితిమాస్థితా । శరణాగతిరగ్ర్యైషా సంసారార్ణవతారిణీ” “அபாயோபாயநிர்முக்தா மத்யமாம் ஸ்த்திதிமாஸ்த்திதா । சரணாகதிரக்ர்யைஷா ஸம்ஸாரார்ணவதாரிணீ” என்றிறே கீழ்ச்சொல்லிநின்றது; லிங்கவ்யத்யயம் சரணசப்தவிவக்ஷையாலே; இதில் அஜ்ஞஸர்வஜ்ஞர்களை ஸ்ப்புடமாகச்சொல்லுகையாலே மேல் பக்திபரவசரைச் சொல்லுகிறதென்று கொள்ளவேணும்; “ఇదం తితీర్షతాం పారమ్” “இதம் திதீர்ஷதாம் பாரம்” என்றது சடக்கெனவநிஷ்டநிவ்ருத்தி பிறக்கவேணுமென்னும் த்வரையுடையார்க்கென்றபடி; “ఆనన్త్యమిచ్ఛతామ్” “ஆநந்த்யமிச்சதாம்” என்றது ஸ்வரூபப்ராப்த பரிபூர்ணபகவதநுபவத்தைப் பெற்றாலல்லது தரிக்கமாட்டாதார்க்கென்றபடி; இவையிரண்டும் பக்தியினுடைய பூமாவாலே வருமவையிறே; பக்திபாரவச்யமுபாயாந்தராநுஷ்ட்டாநத்தில் அசக்திக்குமுறுப்பாய், அநிஷ்டநிவ்ருத்தியிலுமிஷ்டப்ராப்தியிலுமுண்டான விளம்பாக்ஷமதைக்குமுடலாயிறே யிருப்பது; அதில் விளம்பாக்ஷமதைக்குடலானவாகாரத்தை இந்த ச்லோகத்தில் சொல்லுகிறது; ஆனால், கீழ் அசக்திக்குடலாகவன்றோ சொல்லிப்போந்தது, அதுக்கிது ப்ரமாணமாமோவென்னில், அதிகாரித்ரைவித்த்யம் தர்சிப்பிக்கிறவளவே இவ்விடத்திலபேக்ஷிதமாகையாலே இது ப்ரமாணமாகச் சொல்லத்தட்டில்லை; “అవిద్యాతః” “அவித்யாதः” என்கிற ச்லோகத்தில் ஜ்ஞாநாதிக்யத்துக்குடலாகச் சொன்னதும் கீழ்ச்சொல்லி

ஆ.—அர்சாவதாரத்தில் ப்ரபத்திபண்ணுமதிகாரிவிசேஷங்களை யருளிச்செய்து,

௫௧. அதில் பக்திபரவசர்க்கு பாரவச்யபாகவிசேஷத்தாலே இப்ப்ரபத்திதான் குலையுமென்கிறார் மேல், (பக்திதன்னிலே) இத்யாதியால். ப்ரபத்தியிலே மூட்டுமதான ஸத்தாஸிபந்த்தபக்திதன்னிலே, க்ருதப்ரபத்த்யத்த்யவஸாயபஞ்ஜகமான புநப்ப்ரபதநாதிப்ரேரகத்வராதிசயரூபாவஸ்த்தாபேதமும் பக்த்யுத்பாதகேச்சாநுகுணமாகப் பிறந்தவாறே, ஸக்ருத்கரணீயமாய் உபாயாந்தரஸ்பர்சகந்த்தம்பொறுத பூர்வக்ருதமான விப்ரபதநந்தான், சணற்கயிறுகண்ட ப்ரஹ்மாஸ்த்ரம்போலே நிலைகுலையக்கடவதாயிருக்கும்.

௫௨. இப்படி ப்ரபத்தியிலே மூட்டுவது குலைப்பதாய்க்கொண்டு, ஒரு படிப்பட்டிராமை பக்திக்குள்ளதொன்றென்கிறார், (தன்னைப்பேணவும்) இத்யாதியால். "காறை பூணும்...தன் கோலைச்செவ்வாய் திருத்தும்" என்று தன்னைப்பேணவும்பண்ணும்; "அயர்க்கும்" என்று ஸ்வாலங்காரமநர்த்தஹேதுவாய்த்தோவென்று மோஹம் விளைய "தேறி" என்றந்த

---

௫௧. பக்திதன்னிலே யவஸ்த்தாபேதம் பிறந்தவாறே
இதுதான் குலையக்கடவதா யிருக்கும்.

௫௨. தன்னைப்பேணவும்பண்ணும் தரிக்கவும்பண்ணும்.

---

ஜீ.—வந்ததும் பிந்நமாயிருக்கச்செய்தே, அதிகாரித்ரைவித்யத்துக்கு ப்ரமாணமாகவத்தைச் சொன்னப்போலே.

௫௧. ஆக ப்ரபத்த்யதிகாரித்ரைவித்யத்துக்கு ப்ரமாணங்காட்டினாய்நின்றார்க்கிழ். இந்த த்ரிவிதப்ரபத்தியிலும் பக்திபாரவச்யப்ரபத்தியே முக்யமென்றிறே கீழ்ச்சொல்லிற்று; ஏவம்பூதப்ரபத்திநிஷ்டரானவர்கள் தந்நிஷ்டை குலைந்து பகவல்லாபார்த்தமாக ஸ்வயத்நத்திலே மீளுவது, அவன்வரக்கொள்ள அவனையுபேக்ஷிப்பதாகிற விவற்றுக்குநிதாநமேதென்ன வருளிச்செய்கிறார், (பக்திதன்னிலே) என்றுதுடங்கி. (பக்திதன்னிலேயவஸ்த்தாபேதம் பிற)க்கையாவது கரணசைதில்யத்தாலே ஸ்வயத்நக்ஷமரன்றிக்கே, அவனேயுபாயமாகவத்யவஸித்து, அவன் வரவு பார்த்திருக்குமவஸ்த்தையளவன்றிக்கே, கண்ணுஞ்சுழலையிட்டு ஏதேனுமொருபடியாலேயாகிலும்அவனையிப்போதே பெறவேணுமென்னு மதிமாத்ரத்வராவஸ்த்தைவிளைகை. (இது) என்று ப்ரபத்தியைச்சொல்லுகிறது. தாத்ருசாவஸ்த்தைபிறந்தால் ப்ரபத்தி(குலை)கையாவது "என்னான்செய்கேன்" என்று ஸ்வப்ரவ்ருத்தியிலந்வயமற்று பகவதிந்யஸ்தபராராயிருக்குமிருப்புக்குலைகை.

௫௨. இப்படி ப்ரபத்திநிஷ்டைகுலையும்படி பிறந்த பக்தியும் அவஸ்த்தாபேதம்விளைக்குமத்தையருளிச்செய்கிறார், (தன்னை) என்றுதுடங்கி. (தன்னைப் பேணப்பண்ணு)கையாவது - "காறைபூணும்" இத்யாதியிற்படியே அவன்வரவுக்குடலாகத் தன்னையலங்கரிக்கும்படி பண்ணுகை; அதாவது பகவல்லாபார்த்தமாக ஸ்வயத்நத்திலே மூட்டுமென்றபடி; இது மடலெடுக்கைமுதலானவற்றிலே மூட்டுமதுக்குமுபலக்ஷணம்; (தரிக்கப்பண்ணு)கையாவது-அரைக்ஷணமவனையொழிய தரிக்கமாட்டாமையாலே, அவன்வரவுக்குடலாக ஸ்வயத்நத்திலே மூளும்படிபண்ணினவதுதானே, அவன்வரக்கொள்ள விளம்பரோஷத்தாலே "போகுநம்பி" "கழகமேறேல் நம்பி" என்று அவனையுபேக்ஷித்து தள்ளி தரித்திருக்கும்படி பண்ணுகை. ஆக இவையிரண்டாலும் "என்னான்செய்கேன்" என்றும் "தரியேனினி"

ஆ.—க்ஷணத்திலே அந்திமதசையில்போல் மேல்மேலன தெளிவுபிறந்து, இந்த தசையில் வாராதொழியாயென்று தரிக்கவும்பண்ணும்; இப்படி நாநாஸ்வபாவத்தை விளைக்கை பக்திக்குள்ளதொன்று.

௫௧. இந்த ஸ்வபாவம் பக்திவிஷயத்தைப்பற்றி வருமவையொன்றாத் திலுங் காணலாமென்கிறார் மேல், (இந்த ஸ்வபாவம்) இத்யாதியால். பல ஸ்வபாவத்தை விளைக்கையாகிற வித்த ஸ்வபாவவிசேஷங்கள், "வல்வினை யேனையீர்கின்ற குணங்களையுடையாய்" "கோவிந்தன்குணம்பாடியாவி காத்திருப்பேனே" என்று பாதகமாயும் தாரகமாயும் போருகிற கல்யாண குணங்களிலும், "கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்" "மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே" என்று ஸாத்மியாதும் ஸாத்மித்தும் போருகிற

௫௧. இந்த ஸ்வபாவவிசேஷங்கள் கல்யாணகுணங்களிலும்

ஜீ.—என்றுமிருக்குமிருப்புக்கு ப்ரதிகோடியை விளைக்குமென்றபடி. ஆகையால் ப்ரபத்திநிஷ்டைகுலைத்து ஸ்வப்ரவ்ருத்யாதிகளில் இழி கைக்கடி பக்தியினுடையவவஸ்த்தாபேதமென்று கருத்து.

௫௧. (தன்னைப்பேணவும்பண்ணும் தரிக்கவும்பண்ணும்) என்று எம்பெருமான் வருகைக்குடலாக க்ருஷிபண்ணுகையும், அவன் வரக்கொ ள்ள அவனையுபேக்ஷிக்கையுமாகிற பரஸ்பரவிருத்தஸ்வபாவங்களை விளை க்கும்படியையிறே சொல்லிற்று; இப்படி பக்தியானது ஸ்வாவஸ்த்தாவி சேஷங்களாலே சேதநர்க்கு விளைக்கும் பரஸ்பரவிருத்தஸ்வபாவங்கள் தத்விஷயமாத்ரத்திலன்றிக்கே, தத்ஸம்பந்திவஸ்துக்கள்விஷயமாகவுங் காணலாமென்கிறார் மேல், (இந்த) என்றுதுடங்கி. (இந்த ஸ்வபாவவிசே ஷங்கள் என்று கீழ்ச்சொன்னவைதன்னையே சொல்லுகிறதன்று, இப்படிப் பட்ட ஸ்வபாவவிசேஷங்களென்றபடி; அவையாவன-அநுபாவ்யவிஷயமோ ருபடிப்பட்டிராநிற்கச்செய்தே அத்தையநுபவிக்கிறவிவர்களுக்கு தாரக மாய்த்தோற்றுகையும் பாதகமாய்த்தோற்றுகையும். (கல்யாணகுணங்கள்) இத்யாதி. "கோவிந்தன்குணம்பாடியாவிகாத்திருப்பேனே" என்று தாரகமாகவும், "வல்வினையேனையீர்கின்றகுணங்களையுடையாய்" என்று பாதகமாகவும் சொல்லுகையாலே கல்யாணகுணவிஷயமாகவும், "சரங் களாண்டதண்டாமரைக்கண்ணனுக்கன்றியென்மனந்தாழ்ந்துநில்லாதே" என்று தாரகமாகவும், "சரங்களே கொடிதாயடுகின்ற" என்று பாதகமா கவும் சொல்லுகையாலே திருச்சரவிஷயமாகவும், "திருமாலைப்பாடக் கேட்டு மடக்கிளியைக்கைகூப்பிவணங்கினாளே" என்று தாரகமாகவும், "கண்ணன்நாமமே குழறிக்கொன்றீர்"என்று பாதகமாகவும் சொல்லுகை யாலே திருநாமவிஷயமாகவும், "எங்களுக்கேயொருநாள்வந்தூதவுன் குழலின்னிசை போதராயே" என்று தாரகமாகவும், "அவனுடைத்தீங் குழலீருமாலோ" என்று பாதகமாகவும் சொல்லுகையாலே திருக்குழ லோசைவிஷயமாகவும் காணலாமென்றபடி. என்றுமொக்க போக்யங்களா யிருந்துள்ள கல்யாணகுணாதிகள் தாரகமாய்த்தோற்றுவது பாதகமாய்த் தோற்றுவதாகிறது, அநுபோக்தாக்களானவிவர்களுடைய ப்ரேமஸ்வபாவ விசேஷங்களாலேயிறே; அல்லது குணாதிகளின் ஸ்வரூபபேதத்தாலன்றே; ஆகையால் பக்த்யவஸ்த்தாபேதஜநிதங்களான ஸ்வபாவவிசேஷங்கள், இவ்வோவஸ்துக்கள்விஷயமாகவுங்காணலாமென்கிறது. குணாதிகள் தார கங்களாகவும் பாதகங்களாகவும் பேசுகிறவிடத்தில், இரண்டுமொருவர் பேச்சன்றிக்கேயிருந்ததேயாகிலும், ஆழ்வார்களெல்லாருமேகப்ரக்ருதி

ஆ.—திருநாமங்களிலும், "ஜ்வலம் ஜிஷ்ணும் ஶார்ங்கம்" "சிந்தம் பிந்தம் பரைர்த க்தம்" "எரிசிதறும் சரத்தால்" "சரங்களாண்ட" என்று சேதநபேத நாதிமுகத்தாலுமழகாலும் ப்ரதிகூலரை முடித்துமநுகூலரை வாழ்வித் தும் போருகிற திருச்சரங்களிலும், "அவனுடைத் தீங்குழலீருமாலோ" "எங்களுக்கே யொருநாள் வந்தூதாய்" என்று அஸஹ்யமாயும் ஸஹ்ய மாயும் போருகிற திருக்குழலோசையிலும் விசேஷஜ்ஞர்க்குக் காணலாம்; பக்திவிஷயபகவத்ஸம்பந்தமுடையவைபோல் பக்திபாரவச்யமும் ப்ரபத் தியிலே மூட்டுவது குலைப்பதாய்க்கொண்டு பலஸ்வபாவத்தை விளைக்கை தத்ஸம்பந்தி வஸ்துஸ்வபாவமென்றபடி; ஆச்ரயதோஷத்தால் குலை யிலிறே யதிகாரப்ரச்யுதிவருவது.

திருச்சரங்களிலும் திருநாமங்களிலும் திருக்குழ லோசையிலுங் காணலாம்.

ஜீ.—களாகையாலும், எல்லாருடையபக்தியும் பகவத்ப்ரஸாதலப்தத்தை யான பரபக்தியாகையாலும், அந்தபக்திஸ்வபாவவிசேஷங்கள் காட்டுகிற மாத்ரமேயிவ்விடத்திலபேக்ஷிதமாகையாலே விரோதமில்லை. "சரங் களே கொடிதாயடுகின்ற" என்கிறவிது பராஜிதராக்ஷஸர்பாசுரமன் றோ, அத்தை "சரங்களாண்ட" என்கைக்கு ப்ரதிகோடியாகச்சொல் லலாமோவென்னில், ராமவிஜயம் தமக்கிஷ்டமாகையாலே, அந்தவிஜயத் துக்கிலக்காய்த்தோற்ற ராக்ஷஸர்தசைபிறந்து, பிராட்டிமார்தசைபிற ந்து பேசுமாப்போலே, தாமானதன்மைதோற்றுதே தோற்ற ராக்ஷஸர் பாசுரத்தாலே விஜயத்தைப்பேசி அநுபவிக்கிறுரென்றிறே இத்திரு மொழிக்கு வ்யாக்யாநம் பண்ணியருளுகிறவாசார்யர்களருளிச்செய்வது; ஆகையால் தம்முடைய ப்ரேமஸ்வபாவத்தாலே ததவஸ்தாபந்நரான பின்பு, திருச்சரங்கள் பாதகமாய்த்ததும் தமக்கேயாய்த்தோற்றிப்பேசு கையாலே, அப்படிசொல்லக்குறையில்லை.—அதவா (தன்னைப்பேணவும் பண்ணும் தரிக்கவும்பண்ணும்) என்றவிவையிரண்டாலும் அவன் தானே வருமளவும் தரியாமல் வரவுக்குடலாக யத்நிக்கப்பண்ணுவது, வரக்கொ ள்ள ப்ரணயரோஷத்தாலே தள்ளி தரித்திருக்கப் பண்ணுவதாம்படியை யிறேசொல்லிற்று; இப்படி விருத்தஸ்வபாவங்களையொன்றுதானே விளை க்குமென்னுமிது வேறுசிலவிஷயங்களிலும்காணலாமோவென்ன வரு ளிச்செய்கிறுர், (இந்த) என்று துடங்கி. அதாவதிப்படிப்பட்ட ஸ்வபாவ விசேஷங்கள் "கோவிந்தன்குணம்பாடி" என்றுதுடங்கி கீழ்ச்சொன்னப டியே ஒருதசையிலே தாரகமாகப்பேசுவது ஒருதசையிலே பாதகமாகப் பேசுவதாம்படி, இவர்களுக்கு தரிப்பும் பாதையுமாகிற விருத்தஸ்வபா வங்களை விளைக்கிற கல்யாணகுணதிகளிலேயும் காணலாமென்கை. ஆக (ப்ரபத்திக்கு) என்றுதுடங்கி இவ்வளவாக ப்ரபத்திவைபவத்தையும், தத் விஷயவைபவத்தையும், ததிகாரித்ரைவித்யத்தையும், த்ரிவிதப்ரபத்தி யிலும்பக்திபாரவச்யஹேதுகப்ரபத்தியினுடைய முக்க்யதையையும், அது தனக்கு ஸ்வஹேதுபூதபக்த்யவஸ்தாபேதத்தால்வரும் குலைத்தலையும், அந்தபக்த்யவஸ்த்தாபேதம் செய்விக்குமம்சங்களையுமருளிச்செய்தார்.

ஆ.—௫௪. இந்தஸ்வகதப்ரபத்தி உபயஸ்வரூபஸம்பந்ததூஷகமாய்த் தலைக்கட்டுமென்கிறார், (இதுதன்னை) இத்யாதியால். ரக்ஷகன்பண்ணும் ரக்ஷணஹேதுவாக ரக்ஷ்யமானவிவன்பண்ணும் ப்ரபத்திதன்னை உள்ளபடி நிரூபித்துப்பார்த்தால், ஹிதைஷியாய் அறியாததசையிலும் ரக்ஷிக்கையாகிற பெற்றபிதாவுக்கு, பிதாபுத்ரஸம்பந்தமறிந்த ரக்ஷணீயபுத்ரன் உபநயநாதியைப்பண்ணி என்னை ரக்ஷிக்கவேணுமென்று மார்விலேபொறித்தெழுத்துவாங்கினால், நல்லபிதாவும் நல்லபுத்ரனுமாய்த்தென்று, நாட்டார் பழிமொழியும் விளைந்து, உபயஸம்பந்தக்கோத்தையும் விளையுமாப்போலே, விசேஷஜ்ஞர் சிரிக்கைக்குமுபயஸம்பந்தக்கோத்தையும் விளைக்கைக்குமடியாயிருப்பதொன்று.

௫௪. இதுதன்னைப்பார்த்தால் பிதாவுக்கு புத்ரனெழுத்துவாங்குமாப்போலே யிருப்பதொன்று.

ஜீ.—௫௪. இப்ப்ரபத்திதனக்கு(தர்மபுத்ராதிகளும்)என்றுதுடங்கிகிழுக்தரானவதிகாரிகள்பக்கலிலே ஸாதநதயாநுஷ்டானம் காண்கையாலும், கர்மஜ்ஞாநபக்திப்ரபத்திகள் என்றுபாயங்களோடே ஸஹபடிதமாய்ப் போருகையாலும், "యస్త్వేన కామకామేన న సాధ్యం సాధనాన్తరైః। ముముక్షుణా యత్సాఙ్ఖ్యేన యోగేన న చ భక్తితః। ప్రాప్యతే పరమం ధామ యతో నావర్తతే పునః। తేన తే నాప్యతే తత్త్వన్యాసేనైవ మహామునే। పరమాత్మా చ తేనైవ సాధ్యతే పురుషోత్తమః" "யத்யேந காமகாமேந ந ஸாத்யம் ஸாதநாந்தரை:। முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந ந சபக்திதா। ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்ததே புந:। தேந தேநாப்யதே தத்தந்ந்யாஸேநைவ மஹாமுநே। பரமாத்மா ச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம:" என்றும் "ఇదం శరణమజ్ఞానామ్" "இதம் சரணமஜ்ஞாநாம்" என்றும் இப்படியே சாஸ்த்ரங்களித்தை ஸாதநமாகச் சொல்லுகையாலும், உபாயத்வப்ரதிபத்தியோக்யதையுண்டாகையாலே, அத்தை வ்யாவர்த்திக்கைக்காக அதுக்குடலான பலவற்றையுமருளிச் செய்கிறார் மேல்; அதில் ப்ரதமத்திலே இப் ப்ரபத்தியை யுபாயமாகக் கொண்டால் வருமவத்யத்தை தர்சிப்பிக்கிறார், (இதுதன்னை) என்றுதுடங்கி. (இதுதன்னைப்பார்த்தால்) என்றது-இச்சேதநனீச்வரவிஷயத்தில் பண்ணுமிப்ப்ரபத்திதன்னை யுபாயமாகப்பார்த்தாலென்றபடி.—ஈச்வரன் தன்னை ரக்ஷிக்கைக்கு ஹேதுவாக இச்சேதநன்பண்ணும் ப்ரபத்தி தன்னை நிரூபித்தால் என்றிங்ஙனே அத்யாஹாரேண யோஜிக்கவுமாம்; அப்போதுமர்த்தமொக்குமிறே. (பிதாவுக்குபுத்ரனெழுத்துவாங்குமாப்போலே யிருப்பதொன்று) என்றது-உத்பாதகனாகையாலே ஹிதைஷியாய், தானறியாததசையிலும் தன்னை ரக்ஷித்துக்கொண்டு போரும் தமப்பனுக்கு, புத்ரனானவன், தானறிந்ததசையிலே என்னை நீ ரக்ஷிக்கவேணுமென்று எழுத்துவாங்கினால் இரண்டுதலைக்குமுண்டான வுறவுக்குக் கொத்தையாமாப்போலே, ஸத்தாகாரணபூதனாய் ஸர்வதசையிலும் ரக்ஷகனாய்க்கொண்டுபோருகிற அகாரவாச்யனான ஸர்வேச்வரனுக்கும் மகாரவாச்யனான விவனுக்குமுண்டான ஸம்பந்தத்துக்கவத்யகரமென்றபடி; (எழுத்துவாங்கு)கையாவது - ரக்ஷகன்பேரைத் தன் மார்பிலே யெழுதிக் கொள்ளுகை.

ஆ.—௫௫. ஆகில் இப்ப்ரபத்திக்கு ஸ்வரூபமாய்த்ததேதென்ன ஸாதநத்வாகாரமற்ற நிலைநின்றவாகாரத்தை யருளிச்செய்கிறார்மேல், (இதுதனக்கு) இத்யாதியால். சரணவரணரூபையானவிப்ப்ரபத்திக்கு ஸ்வாஸாதாரணரூபம், அதிகாரிவிசேஷணமாகையே நிலைநின்றவேஷமானதன்னை, பலஸாதநமானவுபாயமென்ன, ஸ்வவ்யாவர்த்யாதிகாரம் குலையும்படி பொருதொழிகை. பரப்ரேரிதமாய் பரதந்த்ரவஸ்துவிசேஷணமானதன்னை ஆபாதஸ்வப்ரதிதிமாத்ரமாய்க்கொண்டு உபாயமென்னப்பொருதிறே; இதுவரணபூர்வபாவியுமாய் வரணாநந்தரபாவியுமான ஸ்வரூபமென்னவும் உபேயமென்னவும் பொருது; (தன்னைப்பொருது) என்கிற ஸாமாந்யோக்தி, உசிதார்த்தத்தை யிப்படிகாட்டித்தேயாகிலும், உபாயமென்னப்பொருது என்னுமிதுவே ப்ரகரணோசிதம். பரகதமானதன்னை ஸ்வகதமாக்கப் பொருதென்றுமருளிச்செய்வர்; ஸ்வகதமானபோது ஆச்ரயவிஷயதூஷகமாய்க்கொண்டு தானுமழியும்; பரகதமானபோது ஆச்ரயவிஷயோத்தேஜகமாய்க்கொண்டு தான் விறடிக்கும்.

௫௬. "𑌯𑌦𑍍𑌯𑌦𑌙𑍍𑌗𑌂 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌸𑌾𑌧𑌨𑌂" "யத்யத் ஸாங்கம் தத்தத் ஸாதநம்" என்கையால் உபாயத்வலக்ஷணமான விதரோபாயத்யாகமாகிற வங்கமிதுக்குண்டேயென்ன, இந்தவங்கத்தினுகாரவிசேஷத்தை யருளிச்செய்து, உபாயத்வத்தை நுடைக்கிறார்மேல், (அங்கம்) இத்யாதியால். ஸித்தோபாயஸ்வீகாரத்தைப்பற்ற ச்லோகத்தில் விதேயமானவிதரோபாயத்யாகமாகிறவங்கம், த்யாகரூபமானதன்னையொழிந்த ப்ரதியோகிஸ்வீகாரரூபமானவற்றை, அதிகாரபங்கம் வாராதபடி பொருதொழிகை; ஸ்வரூபோத்பாதகத்வம், உத்பந்நஸ்வரூபவர்த்தகத்வம், வர்த்திதஸ்வரூப பலப்ரதத்வமாகிற அங்கலக்ஷணமின்றியே, இதரஸ்பர்சாஸஹத்வமாத்ரமேயிறே இந்தவங்கத்துக்குள்ளது; ஸ்வீகாரபூர்வபாவித்வமாத்ரங்கொண்டு இத்தையங்கமென்கிறதித்தனையிறே; இதுக்கங்கியாய்த்தோற்றுகிறதுபாயமாகிலிறே இதங்கமாவது; இனி ஸித்தோபாயத்துக்கு அங்கஸாத்யத்வ

---

௫௫. இதுதனக்கு ஸ்வரூபம் தன்னைப்பொருதொழிகை.

ஜீ.—௫௫. ஆனாலிதுதனக்கு ஸ்வரூபமேதென்ன வருளிச்செய்கிறார், (இதுதனக்கு) என்றுதுடங்கி. (இதுதனக்கு ஸ்வரூபம்) என்றது - இப்ப்ரபத்திதனக்கஸாதாரணாகாரமென்றபடி; (தன்னைப்பொருதொழிகை)யாவது - உபாயவரணாத்மகமான தன்னை உபாயமென்ன ஸஹியாதபடியாயிருக்கை; அதாவது ஆபாதப்ரதீதியிலொழிய உள்ளபடி நிரூபித்தால் ஸ்வஸ்மிந்நுபாயத்வப்ரதிபத்திக்கு யோக்யமாகமாட்டாதபடி யிருக்கையென்றபடி. அன்றிக்கே (தன்னைப்பொருதொழிகை) என்கிறவிடத்தில் உபாயத்வேந ப்ரதீதமானதன்னைப்பொருதொழிகை என்று அநத்யாஹாரேண யோஜிக்கவுமாம்; இப்படிசொன்னாலும் ஸ்வஸ்மிந்நுபாயத்வப்ரதிபத்யஸஹத்வமே பொருளாமிறே.

௫௬. சரமச்லோகத்தில் இத்தை ஸாங்கமாக விதிக்கையாலே "𑌯𑌦𑍍𑌯𑌦𑌙𑍍𑌗𑌂, 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌸𑌾𑌧𑌨𑌂" "யத்யத்ஸாங்கம், தத்தத் ஸாதநம்" என்கிற ந்யாயமிதுக்கும் வாராதோவென்ன, அங்கஸ்வரூபத்தை தர்சிப்பிக்கவே அந்த ந்யாயமிங்குவாராதென்று பார்த்து அதுதன்னை யருளிச்செய்கிறார், (அங்கம்) என்றுதுடங்கி. (தன்னையொழிந்தவற்றைப் பொருதொழிகை)யாவது - ஸ்வீகாரரூபமான தன்னையொழிந்த சேதநப்ரவ்ருத்திகளில் ஒன்றையும் ஸஹியாதபடியிருக்கை; ஸாதநரூபஸகலப்ரவ்ருத்திகளினுடை

ஆ.—யில்லேயிறே. அன்றியே ப்ரபத்த்யங்கமானவிது, அங்கியானவ்ஸ்விகாரந்தன்னையொழிந்தவற்றைப் பொருதொழிகையென்றும், த்யாகரூபமான தன்னையும் ஸ்வீகாரரூபமானவொழிந்தவற்றையும் ப்ரவ்ருத்பஸஹத்வேந பொருதொழிகையென்றுமருளிச்செய்வர். ஆக, அங்கத்வத்துடையுண்மையால் உபாயமென்னப்பொருது என்ற ப்ரதிஜ்ஞைநுபபாதிக்கப்பட்டது.

௫௭. ஆகில், பொறுப்பதேதென்னவருளிச்செய்கிறார்மேல், ஸித்தோபாயமானவீச்வரன், உபேயமான தன்னை சேதநன் சயக்ருதியைப் பற்ற உபாயமென்னப்பொறுக்கும், ஸித்தோபாயமென்றிவ்வளவை ஸஹிக்குமித்தனையல்லது, அங்கியென்னவும் ஸஹியாது; அங்கமென்னவும் ஸஹியாது.

௫௮. இப்பொருமை எல்லாவுபாயத்துக்குமொக்குமோவென்ன, ஸாத்யமான கர்மாத்யுபாயங்கள், அங்கம் அங்கி என்கிற விரண்டையும் பொறுக்குமென்கிறார். கர்மம் ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநபூர்வகமாகையாலே

௫௬. அங்கம் தன்னையொழிந்தவற்றைப்பொருதொழிகை.
௫௭. உபாயம் தன்னைப்பொறுக்கும்.

ஜீ.—யவும் ஸவாஸநத்யாகமிறே யிதுக்கங்கம்; "సర్వధర్మాన్" "யத்யத் ஸாங்கம்" என்கிறவிடத்தில், ப்ரவ்ருத்திரூபாங்கஸஹிதமானவற்றையிறே ஸாதநமாகச் சொல்லுகிறது; அப்படியன்றிக்கே இதினுடைய வங்கம் நிவ்ருத்திரூபமாகையாலே, இதுதானே இதினுடைய வநுபாயத்வஸூசகமென்று கருத்து.

௫௭. இதினுடைய வநுபாயத்வத்தை த்ருடீகரிக்கைக்காக ஸித்தஸாத்யோபாயங்களின் படிகளைச்சொல்லி, அவையிரண்டையும்பற்ற இதுக்குண்டான வ்யாவ்ருத்தியையருளிச்செய்கிறார், (உபாயம்) என்றுதுடங்கி (பொருது) என்னுமளவாக. (உபாயம் தன்னைப் பொறுக்கும்) என்றது - ஸித்தோபாயமான ஸர்வேச்வரன் இஷ்டாநிஷ்டப்ராப்திபரிஹாரங்களிரண்டுக்கும் ஸ்வயமேவ நிர்வாஹகனாகையாலே, தன்னைஉபாயமென்றால் அதுக்குத்தகுதியாயிருக்குமென்றபடி. "ఉపాయోపేయత్వే తదిహ తవ తత్త్వం న తు గుణౌ" "உபாயோபேயத்வே ததிஹ தவ தத்த்வம் ந து குணௌ" என்றுபேயத்வத்தோபாதிவஸ்துவுக்கு ஸ்வரூபமாயிறே உபாயத்வமிருப்பது; "యే చ వేదవిదో విప్రా యే చాధ్యాత్మవిదో జనాః। తే వదన్తి మహాత్మానం కృష్ణం ధర్మం సనాతనమ్॥ శరణ్యం శరణం చ త్వామాహుర్దివ్యా మహర్షయః। అమృతం సాధనం సాధ్యం సమ్పశ్యన్తి మనీషిణః" "யே ச வேதவிதோ விப்ரா யே சாத்யாத்மவிதோ ஜநா꞉ । தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் । சரண்யம் சரணம் ச த்வாமாஹுர்திவ்யா மஹர்ஷய꞉ । அம்ருதம் ஸாதநம் ஸாத்யம் ஸம்பச்யந்தி மநீஷிண꞉" என்னக்கடவதிறே. (தன்னைப்பொறுக்கும்) என்கிறவிவ்வளவே சொல்லிவிடுகையாலே, தன்னையொழிந்தவற்றைப்பொருமை அர்த்தாத்ஸித்தம்; இந்த ஸித்தோபாயம் ஸஹாயாந்தரஸம்ஸர்காஸஹமாயிறேயிருப்பது, இவ்வுபாயவிசேஷம் ஸ்வவ்யதிரிக்தமாயிருப்பதொன்றை ஸஹியாமையாலேயிறே "ஆநுகூல்யஸங்கல்பாதிகளுக்குபாயாங்கத்வமன்றிக்கே, அவகாதஸ்வேதம்போலே ஸம்பாவிதஸ்வபாவத்வமுண்டாகிறது" என்று இவ்வர்த்தத்தை பரந்தபடியிலே இவர்தாமே யருளிச்செய்தாரிறே.

௫௮. (உபாயாந்தரமிரண்டையும் பொறுக்கும்) என்றது-ஸித்தோபாயேதரமான ஸாத்யோபாயம், ஸ்வபாரதந்த்ர்யஜ்ஞாநரஹிதராய் ஸ்வயத்நபரராயிருப்பார்க்கு மோக்ஷஸாதநதயா சாஸ்த்ரவிஹிதமாகை

ஆ.—ஜ்ஞாநத்தையங்கமாகவுடைத்தாய், ஜ்ஞாநம்விரோதிபாபநிவர்த்தக கர்மபூர்வகமாகையாலே கர்மத்தையங்கமாகவுடைத்தாய், பக்திகர்மஜ்ஞாநஸாத்யமாகையாலே ததுபயத்தையுமங்கமாகவுடைத்தாய், அந்தஜ்ஞாநகர்மங்கள்தான் ப்ரீதிபூர்வகமாய் வருகையால் பக்தியை யங்கமாகவுடைத்தாய், இப்படியுபாயாந்தரங்களுக்கு அந்யோந்யமங்காங்கிபாவமுண்டாகையால் இரண்டையும் பொறுக்குமிறே.

ருகூ. ஆகில், ஸித்தோபாயேதரமாய்க்கொண்டு உபாயாந்தரமென்னலானவிவன்பண்ணும் ப்ரபத்தியும் இரண்டையும்பொறுக்குமே, பொறுதென்னீரென்ன, ப்ரவ்ருத்யஸஹமான நிவ்ருத்திரூபமாகையால் அங்கமென்னவும்பொறாது, நிரபேக்ஷஸித்தரூபமாயிருப்பதொன்றாகையாலே அங்கியென்னவும் பொறாதென்கிறார்; "ஆநுகூல்யாதிகளுமங்கமல்ல இப் ப்ரபத்தியுண்டாகவே அவகாதஸ்வேதம்போலே தன்னடையே வருமவையாகையால், உபாயமாகாதவித்தை உபாயமாகவிதித்ததும், ஜ்ஞாநபாகாநுகுணமாக உபாயாந்தரங்களைவிட்டு ஸித்தோபாயநிஷ்டை வருகைக்கு வழியாகவித்தனை. ஆக, அதிகாரிவிசேஷணமானவிதுக்குபாயத்வாகாரம் நேராகத் துடையுண்கையால், அங்காங்கித்வங்களை ஸஹியாதென்றதாய்த்து.

---

ருஅ உபாயாந்தரமிரண்டையும் பொறுக்கும்.

ருகூ. இதிரண்டையும் பொறாது.

---

ஜீ.—பாலே, ஸ்வஸ்மிந்நுபாயத்வப்ரதிபத்திஸஹமுமாய், ஸ்வோத்பத்யாதிகளில் ப்ரவ்ருத்திரூபாங்கஸாபேக்ஷமாகையாலே ஸ்வவ்யதிரிக்தங்களையும்ஸஹிக்குமதாய் இருக்குமென்றபடி. "భక్త్యా లభ్యస్త్వనన్యయా" "ఉభయపరికర్మితస్వాన్తస్యైకాన్తికాత్యన్తికభక్తియోగైకలభ్యః" "జన్మాన్తరసహస్రేషు తపోజ్ఞానసమాధిభిః । నరాణాం క్షీణపాపానాం కృష్ణే భక్తిః ప్రజాయతే" "பக்த்யா லப்யஸ்த்வநந்யயா" "உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்யைகாந்திகாத்யந்திகபக்தியோகைகலப்ய:" "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபி: । நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே" என்னக்கடவதிறே.

ருகூ. (இதிரண்டையும்பொறாது) என்றது - ஸித்தோபாயவரணரூபமாய் நிவ்ருத்திஸாத்யரூபமாய் அதிகாரிவிசேஷணமாய் ஸ்வரூபாதிரேகியாயிருக்கிற விந்தப்ப்ரபத்தி, உபயாஸஹமாயிருக்குமென்றபடி; ஆகையால் ஸித்தஸாத்யோபாயவ்யாவ்ருத்தவேஷையாயிருக்கிறவிந்தப்ப்ரபத்திக்கு உபாயத்வமஸம்பாவிதமென்றதாய்த்து.

அன்றிக்கே (இது தனக்குஸ்வரூபம் [ருரு.] ) இத்யாதிக்கு,—ஆனால் ஸாங்கமாக சாஸ்த்ரவிஹிதமானவிந்தப்ப்ரபத்திக்கு ஸ்வரூபமேது, இதுக்குச் சொல்லுகிறவங்கந்தானேதென்ன, அவை இரண்டையுமடைவே யருளிச்செய்கிறார், (இதுதனக்கு) இத்யாதிவாக்யத்வயத்தாலே.

ஆனால் தன்னைப்பொறுப்பதேதென்ன வருளிச்செய்கிறார், (உபாயம் [ருஎ.]) இத்யாதி. தன்னையும் தன்னையொழிந்தவற்றையும் பொறுக்குமதேதென்னவருளிச்செய்கிறார், (உபாயாந்தரம்[ருஅ.]) இத்யாதி. இந்த ஸித்தஸாத்யோபாயங்களிரண்டிலுமிப்ப்ரபத்திக்குண்டான வ்யாவ்ருத்தியை தர்சிப்பியாநின்றுகொண்டு உக்தார்த்தத்தை நிகமிக்கிறார், (இதிரண்டையும்) இத்யாதி என்றிங்ஙனே ஸங்கதியாகவுமாம்.

ஆ.—௯௦. இப்படி யிப்ப்ரபத்தி யுபாயமல்லவாய்விட்டால் பேற்றுக்கடியாக சில இத்தலையில் வேண்டாவோவென்ன, அதுக்கு வேண்டுவது இவ்வளவேயென்கிறார்மேல், (பலத்துக்கு) இத்யாதியால். ஸ்வதந்த்ரஸ்வாமி கொடுக்கிறபலலாபத்துக்கு, நிருமந்த்ரோக்தமான சேஷசேஷிஸம்பந்த ஜ்ஞாநமும், நானுன்னை ரக்ஷிப்பனென்றால் ப்ரதிஷேதியாமையுமே, சாஸ்த்ரம் சிலுகிடாமைக்கு வேண்டுவது. ஜ்ஞாநமடியாக பலமுண்டாகையாலும், அதுதான் ஸ்வரூபமாகையாலும், ஸர்வமுக்திப்ரஸங்கஸஹேதுகத்வங்கள் வாராதென்றபடி.

௯௧. இத்தலையில் சிலஸாபேக்ஷனாய், பலப்ரதனானால் வருங்குறையேதென்ன, உபயர்க்குங் கொத்தையாமென்கிறார், (அல்லாதபோது) இத்யாதியால். ஆத்மஜ்ஞாநாதியொழிய அந்யஸாபேக்ஷனாக இவன் சிந்தித்து செய்யும்போது, நிருபாதிகரக்ஷ்யரக்ஷகஸம்பந்தத்துக்கும் ஸாபேக்ஷத்வசங்காகந்தமற்ற பூர்த்திக்கும், ஸோபாதிகத்வாபூர்த்தித்வங்களாகிற கொத்தையாம். ஸார்வபௌமன் ஸாபேக்ஷனாய்தன்மஹிஷீரக்ஷணம்பண்

---

௯௦. பலத்துக்கு ஆத்மஜ்ஞாநமும் அப்ரதிஷேதமுமே வேண்டுவது.

௯௧. அல்லாதபோது பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையாம்.

---

ஜீ.—அதவா இதினநுபாயத்வத்தை ஸாதிக்கைக்காக இதினுடைய ஸ்வரூபாங்கங்களிரண்டையும் தாமே யருளிச்செய்கிறார், (இதுதனக்கு[௫௫]) இத்யாதிவாக்யத்வயத்தாலே; இதினநுபாயத்வத்தை ஸ்புடமாக்குகைக்காக ஸித்தஸாத்யோபாயங்களின்படிகளை தர்சிப்பிப்போமென்று திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் ஸித்தோபாயத்தின்படியை யருளிச்செய்கிறார், (உபாயம்[௫௭]) இத்யாதியால்; அநந்தரம் ஸாத்யோபாயத்தின்படியை யருளிச்செய்கிறார், (உபாயாந்தரம்[௫௮]) இத்யாதியால்; இவை யிரண்டிலும் ப்ரபத்திக்குண்டான வ்யாவ்ருத்தியை தர்சிப்பிக்கிறார், (இதிரண்டையும்) இத்யாதியால் என்றிங்ஙனே ஸங்கதியாகவுமாம்; இவ்வுபயஸங்கதிக்கும் வாக்யங்களுக்கர்த்தம் பூர்வவத்.

௯௦. இப்படி யிப்ப்ரபத்தி யுபாயமல்லவாய்விட்டால், பலஸித்திக்கு இவன்பக்கலிலும் சிலவேண்டாவோவென்ன வருளிச்செய்கிறார், (பலத்துக்கு) என்றுதுடங்கி. (பலத்துக்கு) என்றது-பலஸித்திக்கென்றபடி; (ஆத்மஜ்ஞாந)மாவது ஸ்வஸ்வரூபஜ்ஞாநம். அதாவது-ததேகசேஷத்வததேகரக்ஷ்யத்வங்களையறிகை; (அப்ரதிஷேத)மாவது - நிருபாதிகசேஷியாய் நிருபாதிகரக்ஷகனானவவன் பண்ணும் ரக்ஷணத்தை விலக்காமை. அதாவது - ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயநிவ்ருத்தி. அவதாரணத்தால்-இவை யிரண்டுமொழிய பின்னையொன்றும் வேண்டாவென்றபடி. சரமபதத்திற் சொல்லுகிற பலத்துக்கு, ப்ரதமபதத்திற்சொல்லுகிற ஆத்மஜ்ஞாநமும், மத்யமபதத்திற்சொல்லுகிற அப்ரதிஷேதமுமிறே வேண்டுவது.

௯௧. இப்படியன்றிக்கே, பலஸாதநமாக இவனும் சில செய்யவேணுமென்றால், வருந்தீங்கென் என்ன வருளிச்செய்கிறார், (அல்லாத) என்றுதுடங்கி. (அல்லாதபோது) என்றது - இவ்வளவன்றிக்கே பலஹேதுகமாக இவன் சில செய்யவேண்டும்போதென்றபடி ; (பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையா)கையாவது- இவனுடையரக்ஷணம் தன் பேறும்படியான

ஆ.—னுகையும், அவன் ஸ்வரக்ஷணார்த்தமாக யத்நம்பண்ணுகையும், ஸம்பந்தபூர்த்திகளுக்குக் கொத்தையாகாதிராதிறே.

சூ௨. ஆகில் அநிஷ்டநிவ்ருத்த்யர்த்தமாகவாகிலும் சிறிது யத்நிக்கவேண்டாவோவென்ன, அப்படிசெய்யில் அவ்வநிஷ்டமநிவ்ருத்தமாய்விடுமென்கிறார், (ஆபத்தை) இத்யாதியால். ஆமஜ்வரத்தை யாறக் கோலி ஆற்றிலே முழுகத்தேடுவாரைப்போலே, ஸம்ஸாரமாகிற மஹாபத்தை ஸ்வயத்நத்தாலே மறுவலிடாதபடி போக்கிக்கொள்ளுகிறோமென்று விபரீதஜ்ஞாநத்தாலே ப்ரமித்து, ஸ்வயத்நநிவர்த்யமல்லாத வந்தவாபத்தை, ஸ்வயத்நமாகிற வபத்த்யஸேவையாலே சதசாகமாகவிளைத்துக் கொள்ளாதே, அந்த ப்ரமத்தை விட்டு, ஸ்வயத்நநிவ்ருத்தனாயிருக்கையே தன்னிவ்ருத்திக்கு வேண்டுவது. அநிஷ்டநிவ்ருத்தியில் இவன் கைமுடங்கவே, தந்நிவர்தகன் கை நிமிருமிறே.

சூ௩. ஆகில் ரக்ஷணத்துக்கு வேண்டுவதேதென்ன, அவன் திருவுள்ளத்தைப் பின்செல்லுகையே வேண்டுவதென்கிறார், (ரக்ஷணத்துக்கு) இத்யாதியால். நிருபாதிகரக்ஷகன் பண்ணும் ரக்ஷணத்துக்கு பக்ஷபாதி

---

சூ௨. ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறோமென்று ப்ரமித்து அத்தை விளைத்துக்கொள்ளாதொழிகையே வேண்டுவது.

சூ௩. ரக்ஷணத்துக்கபேக்ஷிதம் ரக்ஷ்யத்வாநுமதியே.

---

ஜீ.—அவனுடைய நிருபாதிகசேஷித்வத்துக்கும், இவனுடைய ப்ரவ்ருத்தியிலொன்றையுமபேக்ஷியாத நிரபேக்ஷோபாயத்வத்துக்கும் அவத்யமாய்த் தலைக்கட்டுகை.

சூ௨. ஆனாலும் அநந்தக்லேசபாஜநமான ஸம்ஸாரஸாகரத்தில் அழுந்திக் கிடந்தலைகிற தன்னாபத்தையுணர்ந்தால், ஆபத்ஸகனானவீச்வரனை ஸ்வப்ரபத்தியாலே வசீகரித்து, தத்ப்ரஸாதத்தாலே இத்தைக் கழித்துக்கொள்ள வேண்டாவோ வென்ன வருளிச்செய்கிறார், (ஆபத்தை) என்றுதுடங்கி. அதாவது - ஸர்வேச்வரன் திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணி, ஸம்ஸாரமாகிற (ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறோமென்று) தான் பண்ணுகிற ப்ரபத்தியாலே, தன் (ஆபத்தைப்போக்கிக்கொள்ளுகி) றோனாக (ப்ரமித்து), தத்தேகபாரதந்த்ர்யரூபஸ்வரூபஹாநியாகிற ஆபத்தை (விளைத்துக்கொள்ளாதொழிகையே) தந்நிவ்ருத்திக்கு இவன் செய்ய வேண்டுவதென்றபடி. ஓராபத்தைப் பரிஹரிக்கப்புக்கு ஓராபத்தை விளைத்துக்கொள்ளாதே, இவன் ஸ்வயத்நத்தில் நிவ்ருத்தனாயிருக்கவே எம்பெருமான் தானே ரக்ஷிக்குமென்று கருத்து. (அத்தை) என்றது - ஆபத்ஸாமாந்யத்தைப்பற்ற; அல்லது ப்ரக்ருதாபத்துதன்னையே பராமர்சித்தபடியன்று.

சூ௩. ஆனாலும் "रक्ष्यापेक्षां प्रतीक्षते" "ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்று ரக்ஷகனான ஸர்வேச்வரன், ரக்ஷ்யபூதனான இச்சேதநனுடையவபேக்ஷையைப் பார்த்திருக்குமென்கையாலே, அவன்பண்ணும்ரக்ஷணத்துக்கு இவனுடைய வபேக்ஷையும் வேண்டியன்றோ யிருக்கிறதென்ன வருளிச்செய்கிறார், (ரக்ஷணத்துக்கு) என்றுதுடங்கி. அதாவது - நிருபாதிகரக்ஷகனானவன் பண்ணும் ரக்ஷணத்துக்கு இச்சேதநன்பக்கல் வேண்டுவது, நீ யெனக்கு ரக்ஷ்யமென்றால் அல்லேனென்னாதே, தன்னு

ஆ.—யாகாரமைக்கபேக்ஷிதம், நீயெனக்கு ரக்ஷ்யமென்றால் ஒக்குமென்று அநுமதிபண்ணுமென்றிவ்வளவே வேண்டுவது. அதில்லாமையிறே அநாதி காலமிழந்ததும்.

சூ. ௪. இவ்வநுமதிதான் ஸாதநமாகாதோவென்னவொண்ணாதென்கிறார் மேல் (இதுதான்) இத்யாதியால். இந்த ரக்ஷ்யத்வாநுமதிதான் ஸாத்யஸித்தரூபமான எல்லாவுபாயங்களுக்கும் நித்யாநுஷ்டாந த்வாரேண பொதுவாகையாலும், ஸ்வரூபதர்மமான சைதந்யத்தின் ஆகாராந்தரமான பரேச்சாநுவிதாநரூபகார்யமாகையாலும், உபாயதசையளவன்றிக்கே ப்ராப்யப்ராப்திதசையிலும் "அதுகாணுமிவனுக்கு வேண்டுவது" என்றநுமதிமுன்னாக ப்ராபிக்கவேண்டி யநுவர்த்திக்கையாலும், சேஷமாய் பரதந்த்ரமான ஸ்வரூபத்துக்கு சேஷ்யதிசயகரியாய் தச்சித்தாநுவிதாநம் பண்ணிக்கொண்டு ஸ்வரூபத்தை யதிரேகித்திருப்பதொன்றல்லாமையாலும், சைதந்யாதாரமல்லாத அசித்வ்யாவர்த்தகையான சைதந்ய

சூ. ௪. எல்லாவுபாயத்துக்கும் பொதுவாகையாலும், சைதந்யகார்யமாகையாலும், ப்ராப்திதசையிலு மநுவர்த்திக்கையாலும், ஸ்வரூபாதிரேகியல்லாமையாலும், அசித்வ்யாவ்ருத்தவேஷத்தை ஸாதநமாக்கவொண்ணாது.

ஜீ.—டைய ரக்ஷ்யத்வத்தை இசையுமிவ்வளவேயென்கை. "रक्ष्यापेक्षां" "ரக்ஷ்யாபேக்ஷாம்" என்கிறவிடத்தில் சொல்லுகிறவபேக்ஷை, ரக்ஷ்யத்வாநுமதித்யோதகமித்தனை என்று கருத்து. "याच्ञा प्रपत्तिः प्रार्थनामतिः" "யாச்ஞா ப்ரபத்தி: ப்ரார்த்தநாமதி:" என்கிற ஸ்வீகாரத்தை அப்ரதிஷேதத்யோதகமென்றிறே இவர்தாமருளிச்செய்தது.

சூ. ௪. இப்படி அநுமதிஸாபேக்ஷனாய் ரக்ஷிக்குமாகில் இவ்வநுமதிதான் ஸாதநமாகாதோவென்ன வருளிச்செய்கிறார், (எல்லாம்) என்றுதுடங்கி. (எல்லாவுபாயத்துக்கும் பொதுவாகை)யாவது - போகமோக்ஷோபாயங்களில் ஏதேனுமொன்றிலே யதிகரிக்குமவனுக்கும், நீ யிவ்வுபாயத்தை யநுஷ்டியென்றால் அப்படியே செய்கிறேன் என்னுமநுமதிபூர்வகமாக அதிலிழியவேண்டுகையாலே, ஸகலோபாயஸாதாரணமாயிருக்கை. இத்தாலோரிடத்திலும் இவ்வநுமதிக்கு அதிகாரிவிசேஷணத்வமொழிய, பலஸாதநத்வமில்லாமை காட்டப்பட்டது. (சைதந்யகார்யமாகை)யாவது ரக்ஷ்யத்வம் சேதநாசேதநஸாதாரணமாயிருக்கச்செய்தே, ஜ்ஞாநசூந்யமாகையாலே அவ்வாகாரத்தை அறிகைக்கு யோக்யமல்லாத வசேதநம்போலன்றிக்கே, ஜ்ஞாநாச்ரயபூதனாகையாலே அத்தை யறிகைக்கு யோக்யனாயிருக்கிற இச்சேதநன்பக்கலுண்டானவநுமதி, இவனுடைய ஜ்ஞாநகார்யமாய்க்கொண்டு வந்ததாயிருக்கை ; இத்தாலிவ்வநுமதி சேதநனுடைய வசியைப்பற்ற வந்ததாகையாலே, ஸாதநகோடியிலக் வயியாதென்றபடி. (ப்ராப்திதசையிலுமநுவர்த்திக்கை)யாவது உபாயதசையளவிலன்றிக்கே உபேயதசையிலும், அவன் வ்யாமோஹாநுகுணமாகக் கொள்ளும் விநியோகவிசேஷங்களில், திருவுள்ளமானபடி கொண்டருளவேணுமென்னுமநுமதி இவனுக்கு நடந்துசெல்லுகை. இத்தால் ஸாதநமாகில் பலஸித்தியளவிலே மீளவேணுமென்றுகருத்து. (ஸ்வரூபாதிரேகியல்லாமை)யாவது, சேஷிசெய்யுமதுக்குடன்பட்டிருக்கை சேஷத்வபாரதந்த்ர்யகார்யமாகையாலே, இவ்வநுமதி ஸ்வரூபத்துக்குப்புறம்பன்றிக்கே

ஆ'—வேஷாநுமதியை, பொதுவன்றியே ஸ்வதந்த்ரமாய் சேதநதர்மமல்லாததாய் ஸ்வதசையளவிலே நிற்பதாய் ஸ்வரூபாதிரேகியான ஸாதநகோடியிலே ஒதுக்கவொண்ணாது. (இதுதான்) என்றது ப்ரபத்தியென்று கொள்ளும்போது, ஸக்ருத்க்ருதையான வித்தை, தசாந்தரத்திலநுவர்திக்குமென்னக்கூடாது.

௬௫. இவன் தன்னுடைய அசித்வ்யாவ்ருத்திக்கு ப்ரயோஜநமின்னதென்கிறார் மேல், பகவச்சேஷமான ஜ்ஞாநாநந்தைகரூபையான (அசித்வ்யாவ்ருத்திக்கு) அநுரூபமான (ப்ரயோஜநம்), பரமசேதநமான ஸித்தோபாயத்தின்பக்கல் "என்னைத் தீமனங்கெடுத்தாய்" "மருவித்தொழும் மனமேதந்தாய்" என்கிற (உபகாரஸ்ம்ருதியும்), நித்யசேஷிவிஷயநித்ய கைங்கர்யமாகிற (உபேயத்தில்) "உகந்து பணிசெய்து" என்கிற(உகப்பும்) ஸ்ம்ருதிப்ரீதியோக்யதையற்ற அசித்திற்காட்டில் தது்பயயோக்யதையிறே இவன் சேதநனானவற்றால் பெற்றபலம்.

௬௬. ஈத்ருசனான இவனுக்கு ப்ராப்த்யுபாயமாயிருவது இன்னதுஎன்கிறார்மேல், ("உன் மனத்தால்") இத்யாதியால். "குவளையங்கண்ணி" என்கிறஜ்ஞாநமும், "கொள்ளியம்பாவை" என்கிற பாரதந்த்ர்யமும், "நின்

---

௬௫. அசித்வ்யாவ்ருத்திக்கு ப்ரயோஜனம், உபாயத்திலுபகாரஸ்ம்ருதியும் உபேயத்திலுகப்பும்.

௬௬. "உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்" என்கிறபடியே ப்ராப்திக்குபாயம் அவன்னினைவு.

---

ஜீ.—ஸ்வரூபமாயிருக்கை; இத்தால் ஸாதநமாகில் ஸ்வரூபாதிரேகியாயிருக்கவேணுமென்றுகருத்து. (அசித்வ்யாவ்ருத்தவேஷ)மாவது ஜ்ஞாத்ருத்வத்தாலே ஜ்ஞாநசூந்யமானவசித்தில் வேறுபட்டிருக்கிற ஆத்மாவினுடைய ஆகாரம்; இவ்விடத்தில் அவ்வாகாரமாவது - ஜ்ஞாநகார்யமான அநுமதி; இத்தை (ஸாதநமாக்கவொண்ணாது) என்றது - இப்படி இதினுடைய அஸாதநத்வஹேதுக்களநேகமுண்டாகையால் இத்தை ஸாதநமாகக் கற்பிக்கப்போகாதென்றபடி. (அசித்வ்யாவ்ருத்திவேஷம்) என்று பாடமாகில், ஜ்ஞாநசூந்யமான வசித்திற்காட்டில் ஆத்மாவுக்குண்டான ஜ்ஞாத்ருத்வரூபவ்யாவ்ருத்தியின் வேஷமானவநுமதியை என்று சப்தார்த்தம்.

௬௫. ஆனால் இவ்வசித்வ்யாவ்ருத்திதனக்கொருப்ரயோஜநம் வேண்டாவோவென்ன வருளிச்செய்கிறார், (அசித்வ்யாவ்ருத்திக்கு) என்றுதுடங்கி. (உபாயத்திலுபகாரஸ்ம்ருதி)யாவது "என்னைத் தீமனங்கெடுத்தாய்" "மருவித்தொழும் மனமேதந்தாய்" என்கிறபடியே ஸித்தோபாயமானவெம்பெருமான் தன்திறத்தில் பண்ணினவுபகாரங்களை யநுஸந்திக்கை. (உபேயத்திலுகப்)பாவது- அவன் திருவடிகளில் தான் பண்ணுங்கைங்கர்யங்களில் "உகந்துபணிசெய்து" என்கிறவுகப்பும், அத்தாலவனுக்கு விளைகிற ப்ரீதியைக்கண்டு தனக்கு விளைகிற ப்ரீதியும்.

௬௬. இப்படி இவன்பக்கலுள்ளதொன்றுமுபாயமன்றாகில், இவனுக்கு தத்ப்ராப்த்யுபாயந்தானேதென்ன வருளிச்செய்கிறார், ("உன் மனத்தால்") என்றுதுடங்கி. அதாவது இத்தலையிலுள்ளதொன்றும் பேற்றுக்கு உபாயமல்லாமையாலே, "உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்"

ஆ.—தாள்நயந்த" என்கிற ஸ்வரூபாநுரூபபக்தியும், அங்கீகாரஹேதுவன்றியே இவற்றைப் பார்த்து கைவிடவோ, உன்னையேபார்த்து கைக்கொள்ளவோ, ஏது திருவுள்ளம் என்கிற திருமங்கையாழ்வார் திருவுள்ளக் கருத்தின்படியே; பரதந்த்ரனும் ஸ்வம்மானவிவன் ஸ்வதந்த்ரனும் ஸ்வாமியானவவனை ப்ராபிக்கைக்குபாயமாயுள்ளது, நினைத்தபடி செய்து தலைக்கட்டவல்லனுமாய், ப்ராப்தனுமான அவனுடைய இவனை யுஜ்ஜீவிப்பிக்க வேணுமென்னும் சலனமற்ற (நினைவு).

௬எ. ஆகில் இன்னாள்வரை யவனுக்கின்னினைவுண்டாய்த்தில்லையோ வென்ன வருளிச்செய்கிறார், (அதுதான்) இத்யாதியால். ப்ராப்த்யுபாயமாயற்றவவன்னினைவுதான், இவனவனைப் பிரிந்து திரிகிறவநாதிகாலமே பிடித்து (எப்போதுமுண்டு).

௬அ. ஆகில் இன்னாள்வரை பலியாதொழிவானென் என்ன வருளிச்செய்கிறார், (அது பலிப்பது) இத்யாதி. அநாதியைப்பிடித்துண்டான வவன் நினைவு இவனுக்கு ப்ராப்திஸாதகமாய் பலிப்பது, தன்னநுமதியளவாக தத்ப்ராப்திஸாதகமென்று ப்ரமிக்கிற இந்த அஜ்ஞசேதநனுடைய ப்ரதிபந்தகமான ஸ்வரக்ஷணசிந்தமான நினைவு, அவன் நினைவே தஞ்சமென்னும்படி அவன்தன்னினைவாலே ஸவாஸநமாகவற்றதாகில்.

௬௯. ப்ராப்தியிலிவன்னினைவு குலையவேணுமென்னுமிதுக்கு சிஷ்டவசநங்காட்டுகிறார், (அந்திமகாலம்) இத்யாதியால். அழகியமணவாளப்பெருமாள் பட்டருடைய வந்திமதசையிலே நஞ்சீயரெழுந்தருளி வினவி

---

௬எ. அதுதானெப்போதுமுண்டு.

௬அ. அது பலிப்பது இவன்னினைவு மாறினால்.

௬௯. "அந்திமகாலத்துக்குத் தஞ்சம், இப்போது தஞ்சமென் என்கிற நினைவு குலைகை" என்று ஜீயரருளிச்செய்வர்.

---

ஜீ.—என்று கைகழிந்தவற்றுக்கும் ஒருபோக்கடிபார்த்திருக்கக்கடவவுன் திருவுள்ளத்தால் நினைத்திருந்ததென் என்று, ஹிதைஷியானவவன்நினைவே வுபாயமென்று ஆழ்வாரநுஸந்தித்தபடியே, அவனைப் ப்ராபிக்கைக்குபாயம், ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தியாய் ப்ராப்தனும் பரமதயாளுவாயிருக்கிறவவனுடைய, இச்சேதநோஜ்ஜீவநார்த்தமான நினைவென்றபடி.

௬எ. அந்நினைவுதானவனுக்கு எப்போதுண்டாவதென்ன வருளிச்செய்கிறார், (அதுதானெப்போதுமுண்டு) என்று. (எப்போதும்)என்றது - இவன் "யாதானும்பற்றி நீங்கித்திரிகிறகாலத்தோடு இன்றோடு வாசியற ஸர்வகாலத்திலுமென்றபடி.

௬அ. ஆனால் அதிந்நாள்வரை பலியாதிருப்பானென் என்னவருளிச்செய்கிறார், (அது பலிப்பதிவன்னினைவுமாறினால்) என்று. அதாவது-அவன்னினைவு இவனுக்கு கார்யகரமாவது; இவனுடைய ஸ்வரக்ஷணசிந்தை மாறினகாலத்திலென்றபடி.

௬௯. இவ்வர்த்தத்தினுடைய ஆப்த்யர்த்தமாக நஞ்சீயர் வார்த்தையை யருளிச்செய்கிறார், (அந்திமகாலத்துக்கு) என்றுதுடங்கி. அதாவது-நஞ்சீயர், தம்முடைய ஸ்ரீபாதத்திலேயுள்ளாரொரு ஸ்ரீவைஷ்ணவரை

ஆ.—யருள, அவரும் ஜீயா அந்திமகாலத்துக்குத் தஞ்சமேதென்ன, இப்போது தஞ்சமென் என்கிறநினைவு குலைகையே காணும் தஞ்சம்; "అహం స్మరామి" "அஹம் ஸ்மராமி" என்றதசையில் அவன் வாய்புகுசோறுகாணுமென்று ஜீயரருளிச்செய்தாரென்று இவ்வர்த்தத்தை ஸ்த்திரீகரிக்கிறார். ஆக இவன் பேறிழவு தன்னுதாம்படியான பந்தவிசேஷமுள்ள ஸ்வதந்த்ரஸ்வாமியான அவன்னினைவே பேற்றுக்குடலாய், தத்ப்ரதிபந்தகமான இவன்னினைவிழவுக்குடலாய்விடுமென்றதாய்த்து.

௭௦. இப்படி ப்ராப்திப்ரதிபந்தகமான நினைவுடைய இவனுக்கு ப்ராப்த்ருத்வமில்லை, ப்ராப்தாவல்லாதவனுக்கு ப்ராபகாபேக்ஷையில்லை, ப்ராபகமில்லாதவனுக்கு ப்ராப்தியால் வரும் ப்ரீதிப்ராப்தியுமில்லை, ஆனபின்பிவ்விடத்திலே ப்ராப்த்ருத்வாதிகளுடையவனாரென்ன, அவையெல்லாமவனே யென்கிறார், (ப்ராப்தாவும்) இத்யாதியால். தன் ஸ்வத்தை ப்ராப்தியுடன் ப்ராபிக்குமவனுந்தான், இவனை ப்ராபிக்குமிடத்து ப்ராபகனும், இவனை ப்ராபித்துகப்பானும், ஸ்வாமியாய் ஸ்வதந்த்ரனாய் சேஷியானவவனே; அவதாரரூபேணவும் ஸ்வஸங்கல்பரூபேணவும் ப்ரதாநபலித்வரூபேணவும் உக்தத்ரயமுந்தானேயாகையால், ஈச்வரலாபம்ஆத்மாவதன்றியே ஆத்மலாபம் ஈச்வரனதென்னுமுபயஸம்பந்தவிசேஷார்த்தம் சொல்லப்பட்டது.— அன்றியே பராதீநப்ராப்யத்வமடியாக (ப்ராப்தாவும்) அவனேயென்று ஸமாநாதிகரித்து, இவனுடைய ப்ராப்திகர்த்ருத்வம் மூச்சறுத்தும், ஸ்வதந்த்ரப்ராபகத்வமடியாக (ப்ராபகனும்) அவனே யென்று

---

௭௦. ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்குகப்பானுமவனே.

---

ஜீ.—கோவறிகைக்காகச் சென்றெழுந்தருளியிருக்கிறவளவிலே, அந்த ஸ்ரீவைஷ்ணவர், "அடியேனுக்கந்திமகாலத்துக்குத் தஞ்சமாயிருப்பதொன்றருளிச்செய்யவேணும்" என்ன, "அந்திமகாலத்துக்குத் தஞ்சம், நமக்கிப்போது தஞ்சமென் என்கிற தன்னுடைய ஸ்வரக்ஷணசிந்தை குலைகைகாணும்" என்றருளிச்செய்தவார்த்தை. ஆகையாலே, ஈச்வரனிவ்வாத்மோஜ்ஜீவநத்துக்குறுப்பாகப்பண்ணும் சிந்தனை பலிப்பது இவனுடைய ஸ்வரக்ஷணசிந்தை மாறினாலென்றதாய்த்து.

௭௦. ப்ராபகன் ஈச்வரனானாலும், ப்ராப்தாவும் ப்ராப்திக்குகப்பானுமிவனன்றோ, ஆனபின்பிவன்னினைவை இப்படி கோரகத்துடைக்கலாமோவென்னவருளிச்செய்கிறார் (ப்ராப்தாவும்) என்றுதுடங்கி.— அன்றிக்கே இச்சேதநன்கையிலுள்ளவற்றில் உபாயத்வகந்தமறத்துடைத்து, ஈச்வரனேயுபாயமென்று நிஷ்கர்ஷித்தபோதே, ப்ராப்த்ருத்வமும் ப்ராப்தியில் வருமுகப்பும் இவனதன்றிக்கே, உபாயபூதனான ஈச்வரனதேயாய் பலித்துவிடுகை; ஆகையால் (ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்குகப்பானுமவனே) என்று நிகமித்தருளுகிறாராகவுமாம். (ப்ராப்தா) அவனாகையாவது-"స్వత్వమాత్మని సఞ్జాతం స్వామిత్వం బ్రహ్మణి స్థితమ్" "ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்த்திதம்" என்கிற ஸ்வதஸ்ஸித்தமான ஸ்வஸ்வாமித்வஸம்பந்தமடியாக, உடைமையைப் ப்ராபிக்குமுடையவனைப் போலே இவ்வாத்மாவைப் ப்ராபிப்பான் தானாயிருக்கை. (ப்ராபகன்) அவனாகையாவது - தானிவனைப் ப்ராபிக்குமிடத்தில் ப்ராப்திக்குமுபாயமும், ஸர்வஜ்ஞத்வஸர்வசக்தித்வஸத்யஸங்கல்பத்வாதிகுணவிசிஷ்டனாய் நிரங்குசஸ்வதந்த்ரனான தானாயிருக்கை. (ப்ராப்திக்குகப்பா)னவனாகையாவது-ஸ்வத்தினுடைய லாபத்திலே தத்போக்தாவான ஸ்வாமிஹ்ருஷ்டனாமாப்போலே, இவனைப்

ஆ.—ஸ்வயத்நத்தில் மூச்சறுத்தும், பாரதிநப்ரயோஜநபோக்த்ருத்வரூப போக்யத்வமடியாக (உகப்பானுமவனே)என்று ஸ்வார்த்தபோக்த்ருத்வம் மூச்சறுத்தும், இப்படி யிவனுடைய பரப்ரேரிதத்வபரைகாந்த்யத்வபரை கார்த்தத்வரூபபாரதந்த்ர்யசேஷத்வஸித்தியைச் சொல்லுகிறதென்று மருளிச்செய்வர்.

எக. உக்தார்த்தவிசேஷங்களுக்கு ப்ரயோஜநங்களை யருளிச்செய்கிறார், (ஸ்வயத்ந) இத்யாதியால். (ப்ராப்தாவும் ப்ராபகனும்) அவனே என்கிற (ஸ்வயத்நநிவ்ருத்தி), பரேச்சாதிநஸ்வரூபஸ்த்திதியுடையனாகை யாகிற (பாரதந்த்ர்ய)த்தின் ஸ்வஸத்தாஸித்திரூப (பலம்); (ப்ராப்திக்குகப்பானுமவனே) என்கிற (ஸ்வப்ரயோஜநநிவ்ருத்தி), பரைகப்ரயோஜநத்வமாகிற (சேஷத்வ)த்தின் ஸ்வரூபஸித்திரூப (பலம்);பாரதந்த்ர்யசேஷத்வங்கள் ஸ்வயத்நஸ்வப்ரயோஜநத்வங்கள் நடையாடில், கிட்டத்தின் னமாணிக்யம்போலே தன்னுருகெடுத்துவைத்துக்கொண்டு, அவை நிவ்ருத்தங்களாகவே, தெளியக்கடைந்த மாணிக்யம்போலே பாஸம்செய்யுமிறே. தத்வயநிவ்ருத்தியும் ததுபயபலமாயிருக்குமென்றதாய்த்து.

எஉ. இந்த பாரதந்த்ர்யஜ்ஞாநம்பிறந்து பின்னுமிவனுக்குண்டாம் ஸ்வயத்நங்களில் ஸ்வப்ரயோஜநமில்லை என்கிறார்மேல், (பரப்ரயோ

---

எக. ஸ்வயத்நநிவ்ருத்தி பாரதந்த்ர்யபலம்; ஸ்வப்ரயோஜநநிவ்ருத்தி சேஷத்வபலம்.

எஉ. பரப்ரயோஜநப்ரவ்ருத்தி ப்ரயத்நபலம்;

---

ஜீ.—ப்ராபித்தால், ப்ராபிக்கப்பெற்றோமே! என்றுகப்பானும், இவ்வாத்மாவுக்கு நித்யபோக்தாவான தானாயிருக்கை. இவைமூன்றும்(அவனே)என்கிற அவதாரணத்தாலே இவற்றில்லிவனுடைய்வயமில்லையென்கை. இதில் (ப்ராப்தாவும் ப்ராபகனும்) அவனேயென்கையாலே, இவனுக்கு ஸ்வயத்நத்திலந்வயமில்லையென்னுமிடமும், (ப்ராப்திக்குகப்பானுமவனே) என்கையாலே, ஸ்வப்ரயோஜநத்திலந்வயமில்லை யென்னுமிடமும் ஸித்தமாய்த்து.

எக. ஆனால், ஜ்ஞாத்ருத்வகார்யமான கர்த்ருத்வபோக்த்ருத்வங்களையுடையவனாகையாலே, ஸ்வயத்நஸ்வப்ரயோஜநங்களுக்கர்ஹனாயிருக்க, இவையிரண்டினுடையவும் நிவ்ருத்தி யிவனுக்கெவ்வழியாலே வருகிறதென்கிற சங்கையிலே அத்தை யருளிச்செய்கிறார்,(ஸ்வயத்நநிவ்ருத்தி) இத்யாதிவாக்யத்வயத்தாலே. அதாவது - ஜ்ஞாத்ருத்வநிபந்தநமான கர்த்ருத்வமுண்டாயிருக்கச்செய்தே பகவத்ப்ராப்திக்குத் தானொரு யத்நம்பண்ணமலிருக்கையாகிற இந்த ஸ்வயத்நநிவ்ருத்தி; ''பராதீநஸ்வரூபஸ்த்தித்யாதிமத்வமாகிற பாரதந்த்ர்யத்தின் கார்யம்; அப்படியே, போக்த்ருத்வமுண்டாயிருக்கச்செய்தே, அத்தலையை ரஸிப்பிக்குமதொழிய தனக்கென்ன ஒன்றில் ரஸமின்றிக்கே யிருக்கையாகிற ஸ்வப்ரயோஜநநிவ்ருத்தி, பராதிசயாதாயகத்வமே வடிவாயிருக்கையாகிற சேஷத்வத்தின் கார்யம். இத்தால்-பாரதந்த்ர்யசேஷத்வங்களிரண்டும் ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலே, அவ்வாகாரங்களை யறியவே இவை யிரண்டும் தன்னடையேவருமென்றதாய்த்து.

எஉ. ஆனால் இப்படி ஸ்வயத்நஸ்வப்ரயோஜநங்களிலந்வயமற்றிருக்குமாகில், இவனுடைய ப்ரயத்நத்துக்கும் சைதந்யத்துக்கும் ப்ரயோஜந

ஆ.—ஜநம்) இத்யாதியால். இந்தநிவ்ருத்த்யதிகாரிக்கு அவச்யகரணீயங்களான ஊர்த்த்வபுண்ட்ரதாரணத்வயோச்சாரணமாலாகரணதீபாரோபணாதி சிஷ்டாசாரரூபஸ்வப்ரயத்நத்துக்குபலம், ப்ரயத்நவிஷயபூதனுமாய் ப்ரேரகனுமான பரனுக்கு ப்ரீதிவர்த்தகமாய்க்கொண்டு தத்ப்ரயோஜநமான ப்ரவ்ருத்தி விசேஷமாயிருக்குமத்தனை. அது ஸ்வப்ரயோஜநப்ரவ்ருத்தியாகாமையால் பாரதந்த்ர்யவிரோதியாகாது.

சேதநனானவிவன்சைதந்யபலமின்னதென்கிறார்மேல், (தத்விஷயம்)இத்யாதி. தான்செய்யும் சேஷவ்ருத்தியைக்கண்டு அத்யந்தப்ரீதனானவந்த விலக்ஷணசேஷியை விஷயீகரித்து ப்ராப்தப்ரீதியுடையனாகை, இவன் சேதநனாகையால் பெற்றபலம். அன்றியே ததநுபவத்திலுண்டானப்ரீதி இவனுக்குமன்றியே அவனுக்கேவிஷயமாயிருக்கை சைதந்யபலமென்றருளிச்செய்வர்.

எரு. இவனுக்குண்டாம்ப்ரீதி அவனுக்கேயாகவேண்டுவானென்னென்ன, இவனுக்கு சேஷத்வமே அந்தரங்கநிரூபகமாகையாலென்கிறார், (அஹமர்த்தம்) இத்யாதியால். ப்ரத்யக்காய்க்கொண்டு ஸ்வயம்ப்ரகாசமாய் அஹம்சப்தார்த்தமான ஸ்வரூபத்துக்கு, ப்ரகாசத்வாநுகூலத்வா

---

தத்விஷயப்ரீதி சைதந்யபலம்.

எரு. அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள்
தடஸ்த்தமென்னும்படி தாஸ்யமிறே

ஜீ.—மென்னென்ன வருளிச்செய்கிறார், (பரப்ரயோஜந) இத்யாதிவாக்யத்வயத்தாலே. அதாவது "అహం సర్వం కరిష్యామి" "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" "வழுவிலாவடிமை செய்யவேண்டும்" "உனக்கே நாமாட்செய்வோம்" என்கிறபடியே பரனுக்கு ப்ரயோஜநமாகப்பண்ணும் கைங்கர்யரூபப்ரவ்ருத்தி, இவனுடைய ப்ரவ்ருத்த்யுத்யோகரூபமான ப்ரயத்நத்துக்குப் ப்ரயோஜநம் "నిత్యకింకరః ప్రహర్షయిష్యామి" "நித்யகிங்கரஃ ப்ரஹர்ஷயிஷ்யாமி" என்கிறபடியே அத்தலையிலுகப்புக்குறுப்பாகத் தான் பண்ணுகிற கைங்கர்யத்தாலே அத்யந்தஹ்ருஷ்டனாயிருக்கிறவந்தபரனை விஷயமாகவுடைத்தான ப்ரீதி, இவனுடைய அசித்வ்யாவ்ருத்திரூபமான சைதந்யத்துக்குப் ப்ரயோஜநமென்கை. "படியாய்க்கிடந்துன்பவளவாய்காண்பேனே" என்னக்கடவதிறே. இத்தால் பாரதந்த்ர்யசேஷத்வங்களாலே பலித்த ஸ்வயத்நஸ்வப்ரயோஜநநிவ்ருத்திகளையுடையனான சேதநனுடைய ப்ரயத்நசைதந்யங்களுக்கு, பாரதந்த்ர்யசேஷத்வாநுகுணமாக ப்ரயோஜநங்கள்சொல்லிற்றாய்த்து.

எரு. சேஷத்வாதிகளும் ஜ்ஞாத்ருத்வாதிகளும் ஆத்மதர்மங்களாயிருக்கச்செய்தே, சேஷத்வாதிகளைப் ப்ரதாநமாக்கி ஜ்ஞாத்ருத்வாதிகளை ததநுகுணமாக யோஜிக்கைக்கு நியாமகமேது, மற்றைப்படி தானாலோவென்ன வருளிச்செய்கிறார், (அஹமர்த்தத்துக்கு) என்றுதுடங்கி. (அஹமர்த்த)மாவது - ப்ரத்யக்த்வேநாஹம்புத்தித்வ்யவஹாரார்ஹமானவாத்மவஸ்து; (ஜ்ஞாநாநந்தங்க)ளாவன - தத்கதமான ப்ரகாசத்வாநுகூலத்வங்கள்; "జ్ఞానానందమయస్త్వాత్మా" "ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா" "స్వరూపమణుమాత్రం స్యాత్ జ్ఞానానందైకలక్షణమ్" "ஸ்வரூபமணுமாத்ரம் ஸ்யாத் ஜ்ஞாநா

ஆ.—காரத்தையிட்டுப் பிரித்து வ்யவஹரிக்கும் ஸ்வநிரூபகஜ்ஞாநகந்தங்களும் பஹிரங்கமாய்க்கொண்டு புறவிதழென்னும்படி, பராநிரயகரத்வமே வேஷமான தாஸ்யமேயிறே, தன்னைப் புறவிதழாக்கும் ஸ்வநிரூபகாந்தரமற்று, அந்தரங்கமாய்க்கொண்டு ஸ்வரூபத்தையுள்ளபடி நிரூபிக்கும் நிரூபகவிசேஷம். நித்யவிசேஷ்யசேஷிக்கு நித்யவிசேஷணமான சேஷமாயிறே யிவ்வஹமர்த்தஸத்பாவமிருப்பது; இதரவ்யாவர்த்தகமாய்வருமவையிறே மற்றுள்ளவை. இப்படிசேஷத்வஜ்ஞாநமே நிரூபகமும் நிரூப்யமுமான ஸ்வரூபத்துக்கு, ஸ்வப்ரயோஜநாந்வயம் கூடாதென்றபடி.

௭௪. லோகத்தில் வந்தேறியாயிருப்பதன்றோ தாஸ்யம் என்ன, அன்றென்கிறார்; ஸ்வரூபநிரூபகமான விந்த தாஸ்யந்தான் ஸ்வதஸ்ஸித்தமாகை

---

அந்தரங்கநிரூபகம்.

௭௪. இதுதான் வந்தேறியன்று.

ஜ்ஞாநந்தைகலக்ஷணம்" என்றிவற்றையிட்டிறே வஸ்துவை நிரூபிப்பது; (தடஸ்த்தமென்னும்படி)என்றது பஹிரங்கநிரூபகதயா புறவிதழென்னும்படியென்றபடி; (தாஸ்ய) மாவது சேஷத்வம். இது (அந்தரங்கநிரூபக)மாகையாவது, பகவத்ஸ்வரூபத்துக்கு ப்ரகாரதயா சேஷமாய்க்கொண்டு தன் ஸத்தையாம்படி இருக்கும் வஸ்துவாகையாலே, ப்ரதமம் சேஷத்வத்தையிட்டு நிரூபித்துக்கொண்டே மற்றுள்ள ஆகாரங்களையிட்டு நிரூபிக்க வேண்டும்படியிருக்கை. இத்தால், (நிரூபக)மாகையாவது, வஸ்துவை வஸ்த்வந்தரத்திற்காட்டில் வ்யாவர்த்திக்குமதாகையாலே, தாஸ்யம் ஈச்வரவ்யாவர்த்தகமாய், ஜ்ஞாநாநந்தங்கள் அசித்வ்யாவர்த்தகங்களாயிருக்கும்; இப்படி நிரூபகத்வயமும் வஸ்துவுக்கபேக்ஷிதமாயிருக்கச்செய்தே, பகவத்ப்ரகாரதயா லப்தஸத்தாகமான வஸ்துவுக்கு, அசித்திற்காட்டிலுண்டானவாசியை யறிவிக்கிறமாத்ரமான ஜ்ஞாநாநந்தங்கள் புறவிதழாம்படி ப்ரகாரத்வப்ரயுக்தமான சேஷத்வமே அந்தரங்கநிரூபகமாக்குமென்றதாய்த்து. (இறே) என்றிவ்வர்த்தத்தில் ப்ரமாணப்ரஸித்தி. ப்ரதமம் சேஷத்வத்தையிட்டு வஸ்துவை நிரூபித்துக்கொண்டு, பின்னை ஜ்ஞாநாநந்தலக்ஷணமுமாய் ஜ்ஞாநகுணகமுமாய் அசித்வ்யாவ்ருத்தமுமாயிருக்குமென்னுமிடத்தை த்ருதீயபதத்தாலே நிரூபிக்கிற ப்ரணவமும், ஸமஸ்தவஸ்துக்களும் ஸர்வேச்வரனுக்கு ப்ரகாரமென்னுமத்தை ப்ரதிபாதிக்கிற நாராயணபதமும், முதலானவை இதில் ப்ரமாணம்; "దాసభూః తాస్స్వతస్సర్వే హ్యాత్మానః పరమాత్మనః । నాన్యథా లక్షణం తేషాం బన్ధే మోక్షే తథైవ చ" "தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: । நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச" இத்யாதிகளுமுண்டிறே. "அடியேனுள்ளான்" என்றாரிறேயாழ்வார். திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலே ஆழ்வானாறுமாஸம் ஸேவித்துநின்று மஹாநிதியாகப்பெற்றவர்த்தமிறேயிது. இப்படி சேஷத்வம் அந்தரங்கநிரூபகமாகையாலே நிரூபிதஸ்வரூபவிசேஷங்களான ஜ்ஞாத்ருத்வாதிகளையே ததநுகுணமாக யோஜிக்கவேணுமென்று கருத்து.

௭௪. இது ஸ்வரூபநிரூபகமாகில், ஆத்மாவுள்ளவன்றே துடங்கியுண்டாய்ப்போரவேண்டாவோ, இதுக்கு முன்பின்றிக்கே யிப்போதுண்டாகையாலும், லோகத்திலிதுதான் ஔபாதிகமாய்நடக்கக்காண்கையாலும், தாஸ்யமாத்மாவுக்கு வந்தேறியன்றோவென்ன வருளிச்செய்கிறார் (இதுதான் வந்தேறியன்று) என்று. (இதுதான்) என்று ப்ரக்ருதமான தாஸ்யத்தைப் பராமர்சிக்கிறது; (வந்தேறி) யாவது ஆகந்துகம்; (அன்று)

ஆ.— யாலே வந்தேறியன்று, ''ఆత్మ దాస్యం హరేస్స్వామ్యం స్వభావం చ సదా స్మర'' ''ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர'' ''நானுமுனக்குப் பழவடியே''னிறே.

எரு. ஆகில் வந்தேறியாய்ப்போவதேதென்ன, பகவத்பாரதந்த்ர்ய விரோதியான ஸ்வ(ஸ்வாதந்த்ர்யமும்)பகவச்ச்சேஷத்வவிரோதியான(அந்யசேஷத்வ)மாய்த்து ஆகந்துகமாய்க்கொண்டு பற்றிக் கழியுண்ணுமதென்கிறார். ஸத்தாப்ரயுக்தம் நித்யஸித்தம், உபாதிப்ரயுக்தம் ஆகந்துகம்.

எசு. இந்த சேஷத்வப்ரகாசவிரோதியாய்ப் போந்ததென், என்ன, ஸாமாந்யசேஷத்வஸத்பாவவிரோதியாயிருக்கும் ஸ்வஸ்வாதந்த்ர்யம் என்கிறார்.

அந்த ஸ்வாதந்த்ர்யம்போய் சேஷத்வத்துக்கிசைந்தபின் பகவச்சேஷத்வப்ரகாசவிரோதியாயிருப்பதேதென்ன, நிருபாதிகசேஷிக்கு நிருபாதிகசேஷமாகையாகிற தச்ச்சேஷத்வத்தை ப்ரகாசிக்கவொட்டாமல் மறைக்கும் ப்ரபலவிரோதி, மாதாபித்ருதேவதாந்தரமாகிற ததிதரசேஷத்வப்ரதீதியென்கிறார். (ஸ்வாதந்த்ர்ய)ாந்ய (சேஷத்வ)ங்கள் அயதாசேஷத்வப்ரதீதி யதாவஸ்திதசேஷத்வப்ரகாசத்துக்கும் நிரோதகங்கள் ; இந்த ஸ்வாதந்த்ர்யம் குலையவே அயதாசேஷத்வப்ரமத்திலிசைவுபிறக்கும், அந்த ப்ரமம் குலையவே யதாசேஷத்வப்ரகாசமுண்டாம்.

---

எரு. ஸ்வாதந்த்ர்யமும் அந்யசேஷத்வமும் வந்தேறி.
எசு. சேஷத்வவிரோதி ஸ்வாதந்த்ர்யம் ; தச்ச்சேஷத்வ விரோதி ததிதரசேஷத்வம்.

ஜீ.—என்கையாலே ஸ்வாபாவிகமென்றபடி. ''స్వోజ్జీవనేచ్ఛా యది తే స్వసత్తాయాం స్పృహా యది । ఆత్మ దాస్యం హరేస్స్వామ్యం స్వభావం చ సదా స్మర'' ''ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி। ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர'' ''நானுமுனக்குப்பழவடியேன்''என்னக்கடவதிறே.

எரு. ஆனால் வந்தேறியாக விவக்ஷிதங்கள்தானெவையென்ன, இதுக்கு விரோதிகளானவை யென்றருளிச்செய்கிறார், (ஸ்வாதந்த்ர்யமும்) என்றுதுடங்கி. (ஸ்வாதந்த்ர்ய)மாவது - நானெனக்குரியனென்றிருக்கை; (அந்யசேஷத்வ) மாவது பகவதந்யவிஷயங்களிலே தொண்டுபட்டிருக்கை ; இவற்றை (வந்தேறி) என்கிறது - இவனுடைய அவித்யாதிகளடியாக வந்தவையாகையாலே.

எசு. இவை இதுக்கு விரோதிகளானமையை உபபாதிக்கிறார் மேல் (சேஷத்வவிரோதி) என்றுதுடங்கி. (சேஷத்வவிரோதி ஸ்வாதந்த்ர்யம்) என்றது - நானெனக்குரியேனென்றிருக்குமளவில், ஒருவிஷயத்திலும் சேஷத்வமில்லாமையாலே ஸ்வாதந்த்ர்யம் சேஷத்வத்தையுதிக்கவொட்டாதென்றபடி.

(தச்ச்சேஷத்வ விரோதி ததிதரசேஷத்வம்) என்றது - ஸ்வாதந்த்ர்யம் குலைந்து சேஷத்வத்துக்கிசைந்தாலும், பகவத்வ்யதிரிக்தவிஷயங்களிலே ஒன்றுக்குத் தன்னை சேஷமென்றிருக்குமது, நிருபாதிகசேஷியானவன்பக்கல் சேஷத்வத்தைத் தலையெடுக்கவொட்டாதென்றபடி.

ஆ.—எஎ. இப்படி பகவச்சேஷத்வமேவடிவான ஸ்வரூபத்துக்கு, ஆகந்துகமாலிந்யமறவே சேஷத்வமே நித்யநிரூபகம் என்கிறார், (அஹங்காரம்) இத்யாதியால். ப்ரக்ருதிஸம்பந்தநிபந்தநமான தேஹாத்மாபிமாநம் ஸ்வஸ்வாதந்த்ர்யாபிமாநம்என்கிற(அஹங்காரமாகிற) ஸ்வரூபப்ரகாசதிரோதாயகமாய்க்கொண்டு வந்தேறியான (ஆர்ப்பை) ஆசார்யன் ஜ்ஞாநக்கையாலே பற்றறத் (துடைத்தால்) சேஷத்வமேஸ்வரூபமான நிர்மலாத்மாவுக்கு, தேவத்வமநுஷ்யத்வாதிகள்போலழியுமதன்றிக்கே, ஸம்ஸாரதசையோடு மோக்ஷதசையோடு வாசியற மூன்றிலும்(அழியாதபேர்), ''குலதொலடியேன்'' ''அடியானிவனென்று'' ''அடியவர்கள் தம்மடியான்'' என்னுமதிறே; ஸ்வரூபத்தை மறைக்கும்அஹங்காரமாலிந்யமறவே, விளக்கினமாணிக்கக்கண்ணாடிபோல் நிர்மலசேஷத்வமே நிரூபகமாயிருக்கும்.

எஅ, எகூ. இப்படி பகவச்சேஷத்வமே ஸ்வரூபநித்யநிரூபகமென்று சிக்ஷித்த பரமைகாந்திக்கு, தேஹாநுபந்தியான (க்ராமகுலாதிகளால்

---

எஎ. அஹங்காரமாகிற ஆர்ப்பைத்துடைத்தால் ஆத்மாவுக்கழியாதபேர் அடியானென்றிறே.

எஅ. க்ராமகுலாதிகளால் வரும்பேர் அநர்த்தஹேது.

---

ஜீ.—எஎ. (இதுதான் வந்தேறியன்று) என்றுதுடங்கி உபபாதித்த அர்த்தத்தை மூதலிக்கிறார் மேல், (அஹங்காரம்) என்றுதுடங்கி. அஹங்காரந்தான் தேஹாத்மாபிமாநரூபமாயும ஸ்வாதந்த்ர்யரூபமாயும இரண்டுவகைப்பட்டிறே யிருப்பது; அதில் இங்கு ஸ்வாதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது; (ஆர்ப்)பு என்கையாலே அதினுடைய திரோதாயகத்வமும் ஆகந்துகத்வமும் தோற்றுகிறது; அத்தை (துடை)க்கையாவது - ஸதாசார்யோபதேசாதிகளாலே ஸவாஸநமாகப் போக்குகை. (ஆத்மாவுக்கழியாத பேர்அடியான்) என்றது-ஔபாதிகமான ஜாதிவர்ணாச்ரமாதிகளாலே வந்தழிந்துபோம் நாமங்கள்போலன்றிக்கே, யாவதாத்மாநுவர்த்தியான நாமம் தாஸனென்னுமதென்றபடி; (இறே) என்றிவ்வர்த்தத்தில் ப்ரமாணப்ரஸித்தி; "దాసభూతాస్స్వతః" "தாஸபூதாஸ்ஸ்வத:" "ఆత్మదాస్యమ్" "ஆத்மதாஸ்யம்" இத்யாதிகளிவ்விடத்தில் விவக்ஷிதங்கள்; ஆகையால் ஸ்வாதந்த்ர்யாதிகள் ஔபாதிகம், தாஸ்யம் ஸ்வாபாவிகமென்னக் குறையில்லையென்று கருத்து.

எஅ. அதுவென், க்ராமகுலாதிகளால் வரும் வ்யபதேசமன்றோ நடந்து போருகிறது என்னவருளிச்செய்கிறார், (க்ராம) இத்யாதியால். அதாவது - க்ராமகுலாதிவ்யபதேசம் அஹங்காரஜநகமாகையாலே ஸ்வரூபஹாநிரூபாநர்த்தகரமென்றபடி; ஆகையாலவற்றாலிவன் வ்யபதேஷ்டவ்யனல்லனென்று கருத்து.

எகூ. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணங்காட்டுகிறார் மேல், ("ఏకాన్తీ వ్యపదేష్టవ్యః") (''ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்ய:'') என்று. "ఏకాన్తీ వ్యపదేష్టవ్యో నైవ గ్రామకులాదిభిః। విష్ణునా వ్యపదేష్టవ్య స్తస్య సర్వం స ఏవ హి" ''ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபி:। விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ்தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி''. இத்தால் பகவதேகபரனாயிருக்குமவன் க்ராமகுலாதிஸம்பந்தங்களையிட்டுச்சொல்லப்படுமவனல்லன், பகவத்ஸம்பந்தத்தையிட்டு சொல்லப்படுமவன்; அவனுக்கந்த க்ராமகுலாதிகளெல்லாம் பகவானேயிறே என்கிறது. (ப்ராப்தாவும்) இத்யாதி வாக்யத்திலே இச்சேதநனுடைய ஸ்வ

ஆ.—வரும்) வ்யபதேசம், சேஷத்வரூபஸ்வரூபஹாநியாகிறமஹாநர்த்தஹேதுவென்றருளிச்செய்து "ఏకాన్తీ వ్యపదేష్టవ్యో నైవ గ్రామకులాదిభిః। విష్ణునా వ్యపదేష్టవ్యస్తస్య సర్వం స ఏవ హి" "ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபிః। விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி" என்றதுக்கு ப்ரமாணோபாதாநம் பண்ணுகிறார்.

(ஆறு ப்ரகரணங்களில் இரண்டாமதான)

உபாயவைபவப்ரகரணம் முற்றிற்று.

---

எகூ. "ఏకాన్తీ వ్యపదేష్టవ్యః" "ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யః".

(ஆறு ப்ரகரணங்களில் இரண்டாமதான)

உபாயவைபவப்ரகரணம் முற்றிற்று.

---

ஜீ.—யத்நநிவ்ருத்த்யாதிகள் தோற்றினபடியாலே, இவற்றுக்கு நிதாநமின்னதென்றும், ஏவம்பூதனுடைய ப்ரயத்நசைதந்யப்ரயோஜநமும் சேஷத்வாதிப்ராதாந்யஹேது ஆத்மஸ்வரூபத்தினுடைய தாஸ்யாந்தரங்கநிரூபகத்வமென்றும், இப்படியிருக்கிறவிது ஸ்வாபாவிகம், ஏதத்விரோதிகளௌபாதிகமென்றும், தந்நிவ்ருத்தியிலாத்மாவுக்கு தாஸ்யமே நித்யநிரூபகமாயிருக்குமென்கையாலே இவ்வர்த்தத்தை மூதலித்தும், க்ராமகுலாதிகளாலிவன் வ்யபதேஷ்டவ்யனல்லனென்றும், உக்தார்த்தத்தில் ப்ரமாணமும் சொல்லுகையாலே (ஸ்வயத்நநிவ்ருத்தி) இத்யாதிவாக்யம் துடங்கி யிவ்வளவும் ப்ராஸங்கிகம்.

ஆக இப்ப்ரகரணத்தால் ப்ரபத்திக்கு தேசாதிநியமங்களில்லை, விஷயநியமமேயுள்ளதென்னுமிடமும், அவ்விஷயந்தானின்னதென்னுமிடமும், அவ்விஷயத்தினுடைய வைலக்ஷண்யமும், அதில் ப்ரபத்திபண்ணுமதிகாரிகளுடைய வைலக்ஷண்யமும், அதில் ப்ரபத்திபண்ணுமதிகாரிகளுடைய த்ரைவித்த்யமும், ப்ரபத்தியை யுபாயமாக்கினால் வருமவத்யமும், ப்ரபத்திதன்னுடைய ஸ்வரூபாதிகளும், ப்ரபத்தவ்யனே வுபாயமென்னுமிடமும் ப்ரதிபாதிக்கப்பட்டது.

(ஆறு ப்ரகரணங்களில் இரண்டாமதான)

உபாயவைபவப்ரகரணம் முற்றிற்று.

## அதிகாரிநிஷ்டாப்ரகரணம்.

ஆ.—அ0. ஆகஇப்படி அஹங்காரகர்ப்பமான வ்யபதேசகர்த்தஹேது, அதற்ற சேஷத்வவ்யபதேசமுஜ்ஜீவகஹேது, இந்தபகவச்சேஷத்வாந்ய சேஷத்வவிரோதிகளான அந்யசேஷத்வஸ்வஸ்வாதந்த்ர்யங்கள் ஆகந்துகங்கள், பகவச்சேஷத்வமே அந்தரங்கநித்யநிரூபகம். சேஷபூதசைதந்ய தத்கார்யபலம் தத்விஷயப்ரீதிப்ரயோஜநங்கள். ஸ்வப்ரயோஜநஸ்வயத்ந நிவ்ருத்தி தச்சேஷத்வபாரதந்த்ர்யபலம், சேஷத்வபாரதந்த்ர்யவஸ்துப்ராப்திப்ரீதிகர்த்ருத்வங்கள் சேஷியான ஸ்வதந்த்ரஸ்வாமியது, அத ஏவ ப்ராப்திதசையில் நினைவுமவனது, ப்ராப்த்யுபாயமாயிருப்பதும்அவன்னினைவு, அது அநாதிஸித்தமாயிருக்க இவன் ஸ்வார்த்தநினைவுமாறினபோது உபாயமாமென்று ஸிம்ஹாவலோகநந்யாயேந ப்ராஸங்கிகமானவர்த்தத்தை தலைக்கட்டி, ப்ரஸ்துதமானவுபாயோபேயங்களினதிகாரிகளிருக்கும்படியையருளிச்செய்கிறார்மேல், (உபாயத்தில் [துக்கு]) இத்யாதியால். ஸ்வதந்த்ரனேஸித்தோபாயமென்கிறவத்யவஸாயரூபமானவுபாயத்தில், “[illegible] సదృశం భవేత్” “தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்” என்று ஸ்வாக்ருதிவையைவிட்டு பாரதந்த்ர்யத்தைநோக்கி, லங்காபவநத்திலேபெருமாள்வரவுபார்த்திருந்த(பிராட்டியை)ப்போலே, உபாயாதிகாரியும் ஸ்வரக்ஷணார்த்தவ்யாபாரசக்தியைவிட்டு, ஸ்வயத்நாநர்ஹஸ்வரூபத்தையே நோக்கி துஸ்ஸஹமானஸம்ஸாரத்திலே ஸ்வதந்த்ரனுடைய அங்கீகாரகாலத்தைப்பார்த்திருக்கவேணும்; ஸபாமத்த்யே ஸ்த்ரீத்வப்ரயுக்தலஜ்ஜையைவிட்டு, பர்த்தாக்கள்ரக்ஷகரென்னும் ப்ரதிபத்தியையும்விட்டு, க்ருஷ்ணனே ஆபத்ரக்ஷகனென்றத்யவஸித்து, சரணாகதையாய்நின்ற(த்ரௌபதியை)ப்போலே, லௌகிகஸந்நிதியில் தத்ஸங்க்ரஹப்ரவ்ருத்தித்யாகலஜ்ஜையைவிட்டு, உபாயாந்தரங்களிலுபாயத்வப்ரதிபத்தியைவிட்டு, ஸுலபஸ்வாமியே உபாயமென்றத்யவஸித்துக்கொண்டு ப்ரபந்நனாயிருக்கவேணும்; ஒருசேவகன் ஒருசேவகன்வாசலிலே நாயை

## அதிகாரிநிஷ்டாப்ரகரணம்.

அ0. உபாயத்துக்கு, பிராட்டியையும் த்ரௌபதியையும் திருக்கண்ணமங்கையாண்டானையும்போலே யிருக்கவேணும்; உபேயத்துக்கு, இளையபெருமாளையும்

## அதிகாரிநிஷ்டாப்ரகரணம்.

ஜீ.—அ0. அநந்தரம் அதிகாரிசோதநம்பண்ணுகிறது:—உபாயமுபேயார்த்தமாகையாலும், (உபேயத்திலுகப்பும்) என்றும், (பரப்ரயோஜநப்ரவ்ருத்தி ப்ரயத்நபலம், தத்விஷயப்ரீதி சைதந்யபலம்) என்றும் உபேயாதிகாரமும் கீழ் ப்ரஸக்தமாகையாலும், த்வயநிஷ்டனான வதிகாரிக்கு உபயமுமபேக்ஷிதமாகையாலும், உபாயோபேயாதிகாரங்களில் இச்சேதநன் இன்னவின்னபடி யிருக்கவேணுமென்னுமத்தை தத்தந்நிஷ்டரை

ஆ.—யடிக்க அதுபொறுமல் அவனை நிர்வா, இருவரும் பொருதுபட்டுக்கிடக்கிறபடியைக்கண்டு, ஒருக்ஷுத்ரசேதநன் தன்னபிமாநத்திலே யொதுங்கினதென்னுமிவ்வளவுக்காக தன்னையழியமாறினபடி கண்டால், 'பரமசேதநன் திருவாசலிலே யொதுங்கினுல் அவனென்படுமோவென்று தண்டியில் குதித்து திருக்கண்ணமங்கையில் பத்தராவி திருவாசலில் கைப்புடையிலே "நாயேன்வந்தடைந்தேன்" என்று அப்படியே பாவித்து பரவ்யாபாரமே ஸ்வவ்யாபாரமாம்படி கண்வளர்ந்தருளின (திருக்கண்ணமங்கையாண்டானை)ப்போலே, ஸ்வவ்யாபாரயோக்யஜாதிஸ்மரணமற்று "காம்பரத்தலை சிரைத்துன்கடைத்தலை யிருந்துவாழும் சோம்ப"ராகவேணுமென்கிருர். ஸித்தோபாயபலமான பகவத்கைங்கர்யரூபமாயும் தத்விஷயவிக்ரஹமாயுமிருக்கிற உபேயத்தில், கைங்கர்யாபிநிவேசியான(இளையபெருமாளையும்), ஸ்ரீகார்யம் நிமித்தமாக தம்மையழியமாறின(பெரியவுடையாரையும்), எம்பெருமான் திருமேனியிலே நெருப்புப்படில் செய்வதேதென்னும் பயத்தாலே ஸகுடும்பமாக வணைத்துக்கொண்டு திருமேனியை த்யஜித்த(பிள்ளை திருநறையூரரையரையும்), திருக்குழலோசைகேட்டோடுகிறபோது பர்த்தா கையில் ப்பிடித்துத் தகைய, உன்னெச்சில் சரக்கைக்கொள்ளலாகாதோ வென்று சரீரத்தைவிட்டு, க்ருஷ்ணன் திருவடியைக்கிட்டின (சிந்தயந்தியையும்போல)வும், உபேயாதிகாரி கைங்கர்யாபிநிவேசியாய் ததீயப்ரேமாந்ததையாலே ஸ்வசரீரத்தை யழியமாறும்படி ப்ரேமாதிகனுயிருக்கவேணுமென்கிருர். பரசமயிகளிட்ட தீ திருநாராயணபுரத்தெம்பெருமான் திருமேனியை ஸ்பர்சியாதபடி, திருநறையூரரையர் தழுவிக்கொண்டு ஸகுடும்பமாக திருநாட்டுக்கெழுந்தருளினுரென்றருளிச்செய்வர்.

அக. உபாயாதிகாரிகளுக்கு நிதர்சநபூதராணுரில், அந்யபரையான (த்ரௌபதி)யில் அநந்யபரையான (பிராட்டிக்கு) நிவ்ருத்த்யதிகாரத்தில் (வாசி), விரோதிவர்கத்தை பஸ்மீகரிக்கவல்ல (சக்தி)யுண்டாகையும்,(பிரா

---

பெரியவுடையாரையும் பிள்ளை திருநறையூரரைய
ரையும் சிந்தயந்தியையும்போலே யிருக்கவேணும்.
அக. பிராட்டிக்கும் த்ரௌபதிக்கும் வாசி, சக்தியும் அசக்தியும்.

---

ஜீ.—நிதர்சநமாக்கிக்கொண்டருளிச்செய்கிருர், (உபாயத்துக்கு) இத்யாதிவாக்யத்வயத்தாலே. (உபாயத்துக்கு)என்றது - உபாயத்துக்கதிகாரியாம்போதென்றபடி; உபாயாதிகாரத்துக்கென்னவுமாம்; இப்படியே (உபேயத்துக்கு) என்றதுவும். (உபாயத்தில்) என்று பாடமானபோது உபாயவிஷயத்திலென்றபடி; இப்படியே மற்றையதுவும்.

அக. அவர்களைப்போலே யிருக்கவேணுமென்றதின் கருத்தை தர்சிப்பிக்கைக்காக, அவர்கள்தங்கள் படிகளை அடைவே யருளிச்செய்கிருர் மேல்; அதில் பிராட்டியுடையவும் த்ரௌபதியுடையவும் படிகளை யருளிச்செய்கைக்குடலாக, ப்ரதமத்திலே யுபயர்க்கும் வாசியையருளிச்செய்கிருர், (பிராட்டிக்கும்) என்றுதுடங்கி. அதாவது "తత్తస్య సదృశం భవేత్" "தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்" என்றிருந்த பிராட்டிக்கும், "రక్ష మాం" "ரக்ஷ மாம்" என்ற த்ரௌபதிக்கும் தம்மில் வாசி, "శీతో భవ" "சீதோ பவ" என்று நெருப்பை நீராக்கினுப்போலே, "దగ్ధో భవ" "தக்த்தோ பவ" என்று விரோதிவர்கத்தை பஸ்மமாக்கி தன்னை ரக்ஷித்துக்கொள்ளவல்ல

ஆ,—ட்டி) யில் (த்ரௌபதிக்கு...வாசி), உறியுண்கிற சேலையை யிடுக்க மாட்டாத(அசக்தி) யுண்டாகையும்.

அஉ. இப்படி சக்தாசக்தைகளாயிருவர்கள் செய்ததேதென்ன, நாயகசக்தியையேநோக்கும்(பிராட்டி) ஸ்வபாரதந்த்ர்யஹாநியைப் பிறப்பிக்கும் ஸ்வரக்ஷணஹேதுவான(ஸ்வசக்தியை) மறுவலிடாதபடி(விட்டாள்); ஸ்வசக்தித்யாகம் பரசக்த்யாலம்பநஸூசகம். ஆபத்ஸகன் க்ருஷ்ணனென்று விச்வஸித்து, (த்ரௌபதி) ஸபாமத்யே யிருகையையும் விட்டு,பரமபுருஷனை சரணம்புக்கு ஸ்த்ரீத்வப்ரயுக்தமான (லஜ்ஜையை) பிற்காலியாமல் (விட்டா)ளென்கிறார்; ஸ்வஸ்வபாவத்யாகம் ஸ்வவிச்வாஸவிசேஷபலமாய் வந்ததிவளுக்கு. ஜாத்யாதிகளிலுத்க்ருஷ்டனான (திருக்கண்ணமங்கையாண்டான்),ஸ்வஜாதிஸ்வவர்ணாநுரூபமான(ஸ்வவ்யாபாரத்தை) வாஸநாருசியுடன்(விட்டான்);பரசக்தியைப்பற்றி ஸ்வசக்தியை விடுகையும்,பரரைக்ஷகத்வத்தைப்பற்றிஸ்வரக்ஷணாபிமாநத்தை விடுகையும், பரவ்யாபாரத்தைப் பற்றி ஸ்வவ்யாபாரத்தை விடுகையும், உபாயாதிகாரிக்ருத்யமென்றபடி.

---

அஉ. பிராட்டி ஸ்வசக்தியைவிட்டாள்; த்ரௌபதி லஜ்ஜையை விட்டாள்; திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வவ்யாபாரத்தைவிட்டான்.

---

ஜீ.—சக்தியுண்டாகையும்; ஸ்வயத்நத்தாலே விரோதிகளைத்தள்ளி தன்னை நோக்கிக்கொள்ளப் பார்த்தாலும், நோக்கிக்கொள்ளுகைக்கிடான சக்தி தனக்கில்லாமையும் என்கை.

அஉ. ஏவம்பூதரானவர்கள் செய்ததைதன்னை யருளிச்செய்கிறார், (பிராட்டி ஸ்வசக்தியை விட்டாள், த்ரௌபதி லஜ்ஜையை விட்டாள்) என்று. (ஸ்வசக்தியைவி)டுகையாவது - நாயகரான பெருமாள் ரக்ஷிக்குமத்தனையல்லது,நம்முடைய சக்தியால் நம்மை ரக்ஷித்துக்கொள்ளுகை நம்பாரதந்த்ர்யத்துக்கு நாசகமென்று ஸ்வசக்தியைக்கொண்டு காரியங்கொள்ளாதொழிகை. "అసన్దేశా త్తు రామస్య తపసశ్చానుపాలనాత్ । న త్వా కుర్మి దశగ్రీవ భస్మ భస్మార్హ తేజసా" "அஸந்தேசாத் து ராமஸ்ய தபஸச்சாநுபாலநாத் । ந த்வா குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹதேஜஸா"என்றருளிறே. (லஜ்ஜையைவி)டுகையாவது-துச்சாஸநன் ஸபாமத்யே துகிலை யுரிகிறவளவில்,லஜ்ஜாவிஷ்டையாய்க்கொண்டு தானொருதலை யிடுக்குகையன்றிக்கே, இரண்டுகையும் விடுகை. பேரளவுடையாளாகையாலே பிராட்டிக்கு பெருமாளே ரக்ஷகரென்று விச்வஸித்து ஸ்வசக்தியை விட்டிருக்கலாம்; அத்தனையளவன்றிக்கே யிருக்கச்செய்தே, மஹாபத்தசையிலே இவ்வளவில் க்ருஷ்ணனே ரக்ஷகனென்று மஹாவிச்வாஸம்பண்ணிமஹாஸபாமத்யே இவள் லஜ்ஜையை விட்டதிறே யரிது. (திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான்), அதாவது - ஸ்வரக்ஷணஹேதுவான ஸ்வவ்யாபாரங்களை விட்டானென்றபடி; ஒருசேவகனுடைய நாயை ஒருசேவகன் அடிக்க, அவன் அது பொறாமல் அடித்தவனோடெதிர்த்துப் பொருது அவனையுங்கொன்று தானும் குத்திக்கொள்வதாகயிருக்கிற படியைக்கண்டு, ஒரு க்ஷுத்ரசேதநன் தன்னபிமாநத்திலே யொதுங்கினதென்னுமிவ்வளவுக்காக தன்னையழிய மாறினபடி கண்டால், பரமசேதநனபிமாநத்திலே யொதுங்கினால்அவனென்படுமோவென்று ஸ்வரக்ஷணவ்யாபாரங்களை யடையவிட்டு, அந்நாயோபாதியாகத்தம்மையநுஸந்தித்துக்கொண்டு,அப்போதேவந்துதிருக்கண்ணமங்கையில் பத்தராவி திருவாசலில் கைப்புடையிலே புகுந்து கண்வளர்ந்தாரென்று ப்ரஸித்தமிறே.

ஆ.—அ௯. உபேயாதிகாரிக்ருத்யவிசேஷங்களை யருளிச்செய்கிறார், (பசியர்) இத்யாதியால். பெரும்பசியராய் சோறுசமைவதெப்போதோவென்று துடித்துக்கொண்டாகாங்க்ஷித்திருப்பார் ஊர்க்க(ட்ட சோறுமுண்ணவேணும்) நாட்டுக்க(டுகிற சோறுமுண்ணவேணுமென்று) மநோரதிக்குமாப்போலே, நாட்டுக்குக் கட்டினகாப்பே காட்டுக்காம்படி கொடியகாட்டுக்கு பித்ருவசநபரிபாலகராய் பெருமாள் முகமலர்ந்து போகிறபோது, "బాల్యాత్ప్రభృతి సుస్నిగ్ధః" "பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்த்த:" என்று பால்யம் துடங்கி திருத்தொட்டிலிணைத்தீண்டவேண்டும்படி ஸுஸ்நிக்த்தரான விளையபெருமாள் "న చ సీతా త్వయా హీనా న చాహమపి రాఘవ । ముహూర్తమపి జీవావో జలాన్మత్స్యావివోద్ధృతౌ" "ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ। முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" என்று பிராட்டிபோல(பிரியில்) ஸ்வஸத்தை (தரியாமையை முன்னிட்டு)ப் பின்சென்று "భవాంస్తు సహ వైదేహ్యా గిరిసానుషు రంస్యతే । అహం సర్వం కరిష్యామి జాగ్రతస్స్వపతశ్చ తే । పరవానస్మి కాకుత్స్థ త్వయి వర్షశతం స్థితే। స్వయం తు రుచిరే దేశే క్రియతామితి మాం వద" "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே। அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே। பரவாநஸ்மி காகுத்ஸ்த்த த்வயி

---

அ௯. பசியராயிருப்பார் அட்டசோறுமுண்ணவேணும் அடுகிற சோறுமுண்ணவேணுமென்னுமாப்போலே, காட்டுக்குப் போகிறபோது இளையபெருமாள் பிரியில் தரியாமையை முன்னிட்டு, அடிமைசெய்யவேணும் எல்லாவடிமையும்

---

ஜீ.—அ௯. இனி உபேயாதிகாரிகளில் ப்ரதாநரான இளையபெருமாள்படியை விஸ்தரேண வருளிச்செய்கிறார், (பசியர்) என்றுதுடங்கி. அதாவது- (பசியராயிருப்பார்) தங்கள் பசியின் கனத்தாலே, இதுக்குமுன்பாக்கின சோறும் இப்போதாக்குகிற சோறும் எல்லாம் நாமே உண்ணவேணுமென்று மநோரதிக்குமாப்போலே, பெருமாள் காட்டுக்கெழுந்தருளுகிறபோது, "பால்யாத்ப்ரப்ருதிஸுஸ்நிக்த்த"ரான இளையபெருமாள், படைவீட்டில் நின்றும் புறப்படுவதற்குமுன்னே கூடப்போவதாக உத்யோகிக்கிறபடியைக் கண்டு, நீர் நில்லுமென்று நிர்பந்தித்தருள, "కురుష్వ మామనుచరం వైధర్మ్యం నేహ విద్యతే। కృతార్థోఽహం భవిష్యామి తవ చార్థః ప్రకల్పతే" "குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே। க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி தவ சார்த்த: ப்ரகல்பதே" என்றும், கங்கைகடந்தேறினவன்று மீளவிடுகைக்குறுப்பாக அவர் அநேகமருளிச்செய்ய, "న చ సీతా త్వయా హీనా న చాహమపి రాఘవ। ముహూర్తమపి జీవావో జలాన్మత్స్యావివోద్ధృతౌ" "ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ। முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" என்றும் சொல்லுகையாலே பிரியில் தாமுளராகமாட்டாமையை முன்னிட்டு "కురుష్వ మామ్" "குருஷ்வ மாம்" என்றவநந்தரத்திலே, "ధనురాదాయ సగుణం ఖనిత్రపిటకాధరః। అగ్రతస్తే గమిష్యామి పన్థానమనుదర్శయన్ । ఆహరిష్యామి తే నిత్యం మూలాని చ ఫలాని చ। వన్యాని యాని చాన్యాని స్వాహారాణి తపస్వినామ్" "தநுராதாய ஸகுணம் கநித்ரபிடகாதர:। அக்ரதஸ்தே கமிஷ்யாமி பந்த்தாநமநுதர்சயந் ॥ ஆஹரிஷ்யாமி தே நித்யம் மூலாநி ச பலாநி ச। வந்யாநி யாநி சாந்யாநி ஸ்வாஹாராணி தபஸ்விநாம்" என்கையாலே ஸ்வசேஷத்வாநுகுணமாக வடிமை செய்யவேணுமென்றும், ததநந்தரத்திலே "భవాంస్తు సహ వైదేహ్యా గిరిసానుషు రంస్యతే। అహం సర్వం కరిష్యామి జాగ్రతస్స్వపతశ్చ తే" "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்

ஆ.—வர்ஷசதம் ஸ்த்திதே। ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத" என்று சேஷத்வத்திலே நிற்கும்படி சேஷவ்ருத்தியான வடிமைசெய்யவேணும்; அதில் இன்னது செய்வன் இன்னது செய்யேன் என்னாதே, சேஷிக்கபிமதமான எல்லாவடிமையும் செய்யவேணும்; செய்யுமிடத்து ஸ்வாதந்த்ரிய விஷம் தட்டாதபடி, ஸ்வதந்த்ரசேஷி ஏவிக்கொள்ளவும் வேணுமென்றுப் ராத்தித்தார்; "ஸுக்ரீவமாருதிவிபீஷணபுண்யபாதஸஞ்சார"த்தாலே சோஷணதாஹநப்லாவகம் பண்ணின திருப்படைவீட்டிலே, பெருமாள் நாச்சியாருடன் பெருமழியோடே நாடுகளிக்கப்புக்குப் புகுந்தபோது, அடிமைக்குக் கூட்டுப்படுவாரொருவருமற்ற காட்டிலே, தாமேயான தனியிடத்துத் தாமேயடிமைசெய்கையாகிற ஸ்வயம்பாகத்திலே, கைங்கர்யாபிநிவேசமாகிற வயிற்றை, பதினாலாண்டு அமைவுதலறப் பெருக்கினபடியாலே, ஸ்ரீபரதாதிகளுடன் பகுந்தடிமைசெய்கையாகிற (ஓப்பூணுண்ணமாட்டாதே)

---

செய்யவேணும் ஏவிக்கொள்ளவும்வேணும் என்றார்; படைவீட்டில் புகுந்தபின்பு காட்டில் தனியிடத்தில் ஸ்வயம்பாகத்திலே வயிற்றைப்பெருக்கினபடியாலே,

ஜீ.—யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே| அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ்ஸ்வபதச்ச தே" என்கையாலே-அதுதன்னிலும் இன்னவின்னவடிமையென்று ஒருநியதியின்றியே எல்லாவடிமையும் செய்யவேணுமென்றும்; பஞ்சவடியிலே எழுந்தருளினபோது, நீரும் நிழலும் வாய்த்திருப்பதொருப்ரதேசத்தைப்பார்த்து பர்ணசாலையைச் சமையும் என்ன, "ఏవముక్తస్తు రామేణ లక్ష్మణస్సంయతాఞ్జలిః। సీతాసమక్షం కాకుత్స్థ మిదం వచనమబ్రవీత్" "ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணஸ்ஸம்யதாஞ்ஜலி:| ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்த்தமிதம் வசநமப்ரவீத்" என்று - நந்தலையிலே ஸ்வாதந்த்ர்யத்தை வைத்தபோதே பெருமாள் நம்மைக்கைவிட்டாரென்று விக்ருதராய், பிராட்டி முன்னிலையாகக் கையுமஞ்ஜலியுமாய்நின்று, "పరవానస్మి కాకుత్స్థ త్వయి వర్షశతం స్థితే। స్వయం తు రుచిరే దేశే క్రియతామితి మాం వద" "பரவாநஸ்மி காகுத்ஸ்த்த த்வயி வர்ஷசதம் ஸ்த்திதே| ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத" என்கையாலே-அடிமை செய்யுமளவில் ஸ்வாதந்த்ர்யமாகிற தோஷம் கலசாதபடி யுசிதகைங்கர்யங்களிலே ஏவிக்கொள்ளவேணுமென்றும் ப்ரார்த்தித்தாரென்கை. (படைவீட்டில்) இத்யாதி.- திருப்படைவீட்டிலே யெழுந்தருளிவந்து புகுந்து திருவபிஷேகம் பண்ணியருளினபோது, தம்மோடுகூட வடிமைசெய்கைக்கொருவருமில்லாததொரு தனிக்காட்டிலே தாமே யடிமைசெய்து கைங்கர்யாபிநிவேசத்தைப் பெருக்குகையாலே, ஸ்வயம்பாகத்திலே வயிற்றைப் பெருக்கினவன் ஓப்பூணுண்ணமாட்டாதாப்போலே; ஸ்ரீபரதாழ்வான் துடக்கமானவர்களோடொக்கத் தாமுமோரடிமை செய்துநிற்கமாட்டாதே, திருவெண்கொற்றக்குடையை யெடுக்கை, திருவெண்சாமரம் பரிமாறுகையாகிற இரண்டடிமையை ஏககாலத்தில் செய்தாரென்கை. இந்த வ்ருத்தாந்தந்தான் ஸ்ரீராமாயணத்திலில்லை. "ఛత్రచామరపాణిస్తు లక్ష్మణోఽనుజగామహ" "சத்ரசாமரபாணிஸ்து லக்ஷ்மணோऽநுஜகாமஹ" என்கிறது ஸ்ரீராமாயணமன்றோவென்னில், காட்டுக்கெழுந்தருளுவதற்குமுன்னே திருவபிஷேகார்த்தமாக வலங்கரித்து, தம்முடைய திவ்யாந்த:புரத்தில் நின்றும் புறப்பட்டு, சக்ரவர்த்தித்திருமாளிகையைநோக்கி திருத்தேரிலேயேறி பெருமாளெழுந்தருளுகிறபோது, இளையபெருமாள் செய்த வ்ருத்தாந்தமாக திருவயோத்யாகாண்டத்திலே சொல்லப்பட்டதாகையாலே, இவ்விடத்துக்கது

ஆ.—"ఛత్రచామరపాణిస్తు లక్ష్మణోఽనుజగామహ" "சத்ரசாமரபாணிஸ்து லக்ஷ்மணோ஽நுஜகாமஹ" என்று மற்றைத் திருக்கைக்குக் கூறுகொடுக்கமாட்டாத (ஒருதிருக்கையாலே) தம்முடையஆகாராந்தரமான (திருவெண்கொற்றக்குடையையும்) அத்தை தரிக்க ஆசைப்பட்டவிகிற (ஒரு திருக்கையாலே) ஸ்வாகாராந்தரமான (திருவெண்சாமரத்தையும்) சேதநஸமாதியான வவற்றுடன், ப்ரயோஜக கர்த்தாவாய்நின்று (தரித்து) பலர் செய்யுமடிமையைத்தாமொருவரே செய்தார்.

அச. ஒழிந்த உபேயாதிகாரிகள்மூவரும் செய்ததேதென்ன, அவர்

---

ஒப்பூணுண்ணமாட்டாதே, ஒருதிருக்கையாலே திருவெண்கொற்றக்குடையையும், ஒருதிருக்கையாலே திருவெண்சாமரத்தையும், தரித்தடிமைசெய்தார்.

அச. பெரியவுடையாரும் பிள்ளைதிருநறையூரரையரும் உடம்

---

ஜீ.—சேராது. ஆனால்இவரென்கொண்டிப்படியருளிச்செய்தாரென்னில்; பாத்மபுராணப்ரக்ரியையாலே யருளிச்செய்தார். "అథతస్మిన్దినే పుణ్యే శుభలగ్నే శుభాన్వితే। రాఘవస్యాభిషేకార్థం మఙ్గళం చక్రిరే జనాః" "அத தஸ்மிந் திநே புண்யே சுபலக்நே சுபாந்விதே। ராகவஸ்யாபிஷேகார்த்தம் மங்களம் சக்ரிரே ஜநா:" என்று துடங்கி பரக்கச் சொல்லிக்கொண்டுவந்து, "మన్త్రపూతజలైశ్శుద్ధైర్మునయస్సంశితవ్రతాః। జపన్తో వైష్ణవాన్ సూక్తాన్ చతుర్వేదమయాన్ శుభాన్॥ అభిషేకం శుభం చక్రుః కాకుత్స్థం జగతాం పతిమ్।తస్మిన్ శుభతమే లగ్నే దేవదున్దుభయో దివి॥నినేదుః పుష్పవర్షాణి వవర్షుశ్చ సమన్తతః। దివ్యామ్బరైర్భూషణైశ్చ దివ్యగన్ధానులేపనైః॥ పుష్పైర్నానావిధైర్దివ్యైర్దేవ్యా సహ రఘూద్వహః।అలఙ్కృతశ్చ శుశుభే మునిభిర్వేదపారగైః॥ ఛత్రంచ చామరం దివ్యం ధృతవాన్ లక్ష్మణస్తథా। పార్శ్వే భరతశత్రుఘ్నౌ తాలవృన్తే వివేజతుః॥ దర్పణం ప్రదదౌ శ్రీమాన్ రాక్షసేన్ద్రో విభీషణః।దధార పూర్ణకలశం సుగ్రీవో వానరేశ్వరః॥ జామ్బవాంశ్చ మహాతేజాః పుష్పమాలాం మనోహరామ్।వాలిపుత్రస్తు తామ్బూలం సకర్పూరం దదౌ ప్రియాత్॥హనుమాన్ దీపికాం దివ్యాం సుషేణస్తు ధ్వజం శుభమ్। పరివార్య మహాత్మానం మన్త్రిణస్సముపాసిరే" "மந்த்ரபூதஜலைச்சுத்தைர் முநயஸ்ஸம்சிதவ்ரதா:। ஜபந்தோ வைஷ்ணவாந் ஸூக்தாந் சதுர்வேதமயாந் சுபாந்॥ அபிஷேகம் சுபம் சக்ரு: காகுத்ஸ்த்தம் ஜகதாம் பதிம்। தஸ்மிந் சுபதமே லக்நே தேவதுந்துபயோ திவி॥ நிநேது: புஷ்பவர்ஷாணி வவர்ஷுச்ச ஸமந்தத:।திவ்யாம்பரைர் பூஷணைச்ச திவ்யகந்தாநுலேபநை:॥புஷ்பைர் நாநாவிதைர் திவ்யைர் தேவ்யா ஸஹ ரகூத்வஹ:।அலங்க்ருதச்ச சுசுபே முநிபிர் வேதபாரகை:॥ சத்ரம்ச சாமரம்திவ்யம் த்ருதவாந் லக்ஷ்மணஸ்ததா।பார்ச்வே பரதசத்ருக்நௌ தாலவ்ருந்தே விவேஜது:॥ தர்பணம் ப்ரததௌ ஸ்ரீமாந் ராக்ஷஸேந்த்ரோ விபீஷண:।ததார பூர்ணகலசம் ஸுக்ரீவோ வாநரேச்வர:॥ஜாம்பவாம்ச்ச மஹாதேஜா: புஷ்பமாலாம் மநோஹராம்।வாலிபுத்ரஸ்து தாம்பூலம் ஸகர்பூரம் ததௌ ப்ரியாத்॥ஹநுமாந் தீபிகாம் திவ்யாம் ஸுஷேணஸ்து த்வஜம் சுபம்। பரிவார்ய மஹாத்மாநம் மந்த்ரிணஸ்ஸமுபாஸிரே" என்று பாத்மபுராணத்தில் உத்தரகண்டத்தில் நாற்பத்தொன்பதாமத்த்யாயத்திலே சொல்லப்பட்டதிறே. "ఛత్రంచ చామరం దివ్యం ధృతవాన్" "சத்ரம்ச சாமரம் திவ்யம் த்ருதவாந்" என்றது தோற்றவிறே (திருவெண்கொற்றக்குடையையும் திருவெண்சாமரத்தையும்தரித்து) என்றருளிச்செய்தது.

அச. (பெரியவுடையாரும் பிள்ளைதிருநறையூரரையரும் உடம்பையுபேக்ஷித்தார்கள்).-ஸ்ரீஜடாயுமஹாராஜரைப்பெரியவுடையார்என்றுய்த்து

ஆ.—களில் மிதுநவிச்லேஷத்தில் தம்மையழியமாறும்பெரியவுடையாரும், அச்சேர்த்தி நித்யமாகவேணுமென்று மங்களாசாஸநம்பண்ணும் பிள்ளை திருநறையூரரையரும், ப்ரேமபாரவச்யத்தாலே கைங்கர்யோபகரணமான திருமேனியை அழியக்கிட்ட சரக்காக்கி உபேக்ஷித்தார்கள்; "చిన్తయన్తీ జగత్సూతిం పరబ్రహ్మస్వరూపిణమ్। నిరుచ్ఛ్వాసతయా ముక్తిం గతాన్యా గోపకన్యకా" "சிந்தயந்தி ஜகத்ஸூதிம் பரப்ரஹ்மஸ்வரூபிணம் | நிருச்ச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா" என்று பர்தாவரத் தகைவுபட்ட சிந்தயந்திக்கு. அப்போதே க்ருஷ்ணாநுபவம் பண்ணப்பெறாமல் துவண்ட வுடம்பு, இவளுபேக்ஷித்து விடவேண்டாதபடி, க்ருஷ்ணவிக்ரஹஸ்நேஹமாத்மாவை யிருஞ்சிக்

---

கையுபேக்ஷித்தார்கள்; சிந்தயந்திக்குடம்பு தன்னடையே போய்த்து.

---

ஜீ.—நம்முதலிகளருளிச்செய்வது. இவர்தாம், பஞ்சவடியிலே பெருமாளெழுந்தருளித்தம்மையங்கிகரித்து "ఇహ వత్స్యామి సౌమిత్రే సార్ధమేతేన పక్షిణా" "இஹ வத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேந பக்ஷிணா" என்றவன்றுதுடங்கி திருவடிகளுக்குமிகவும்பரிவராய், பெருமாளெழுந்தருளியிருக்கிற திவ்யாச்ரமத்துக்கு ஆஸந்நமாக வர்த்தியாநிற்கச்செய்தே, அசிந்திதமாக ராவணன்வந்து பிராட்டியைப் பிரித்துக் கொண்டுபோக, அப்போது பிராட்டி இவரையொரு வ்ருக்ஷத்தின்மேலேகண்டு "என்னையிவனிப்படி யபஹரித்துக்கொண்டு போகாநின்றான்" என்று இவர் பேரைச்சொல்லிக்கூப்பிட, உறங்குகிறவிவர் அந்த ஆர்தத்த்வநியைக்கேட்டுணர்ந்து, ராவணன்கொண்டுபோகிறபடியைக்கண்டு "உனக்கிது தகாதுகாண்" என்று தர்மோபதேசம்பண்ணினவளவில் அவன்கேளாமையாலே, "நம் ப்ராணனோடிதுகண்டிருக்கக்கடவோமல்லோம் யுத்தம்பண்ணிமீட்குதலில்லையாகில் முடிதல்செய்யக்கடவோம்" என்றத்யவஸித்து அதிபலபராக்ரமராகையாலே அவனோடே மஹாயுத்தத்தைப்பண்ணி, அவன்கையாலேயடிபட்டுவிழுந்து தம் திருமேனியை விட்டாரிறே.—பிள்ளை திருநறையூரரையர் ஸகுடும்பமாக திருநாராயணபுரத்தில் வேதநாராயணப்பெருமாளை ஸேவிக்கச் சென்றுபுகுந்தவளவிலே, பரஸமயிகள் அந்தக்கோயிலிலே அக்நிப்ரக்ஷேபத்தைப் பண்ண, உள்ளுநின்றவர்களெல்லாரும்புறப்பட்டோடிப்போகச் செய்தே, அந்த வெம்பெருமான் திருமேனிக்கழிவு வருகிறபடியைக்கண்டு ஸஹிக்கமாட்டாத ப்ரேமாதிசயத்தாலே தாமுமொக்கமுடிவதாக வத்யவஸித்து இவர் நிற்கையாலே பிள்ளைகளுமிவரைவிட்டுப்போகோமென்று நிற்க, அவர்களும் தாமும் கூட வதுக்குள்ளே நின்று திருமேனியை விட்டாரென்று ப்ரஸித்தமிறே. (சிந்தயந்திக்குடம்பு தன்னடையே போய்த்து).-அதாவது:—"కాచిదావసథస్యాన్తే స్థిత్వా దృష్ట్వా బహిర్గురుమ్। తన్మయత్వేన గోవిన్దం దధ్యౌ మీలితలోచనా॥ తచ్చిత్తవిమలాహ్లాదక్షీణపుణ్యచయా తదా। తదప్రాప్తిమహాదుఃఖవిలీనాశేషపాతకా॥ చిన్తయన్తీ జగత్సూతిం పరబ్రహ్మస్వరూపిణమ్। నిరుచ్ఛ్వాసతయా ముక్తిం గతాన్యా గోపకన్యకా" "காசிதாவஸதஸ்யாந்தே ஸ்த்தித்வா த்ருஷ்ட்வா பஹிர்குரும் | தந்மயத்வேந கோவிந்தம் தத்த்யௌ மீலிதலோசநா || தச்சித்தவிமலாஹ்லாதக்ஷீணபுண்யசயா ததா | தத ப்ராப்திமஹாதுஃகவிலீநாசேஷபாதகா || சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்மஸ்வரூபிணம் | நிருச்ச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா" என்கிறபடியே திருக்குரவையினன்று திருக்குழலோசையைக் கேட்டு, ஸ்ரீப்ருந்தாவநத்தேறப் போவதாகப்புறப்பட்டவளவிலே, குருதர்சநத்தாலேபோகமாட்டாமல் நின்று க்ருஷ்ணனை த்த்யாநம்பண்ணி, தத்கத்தசித்தையாகையாலே வந்த நிர்மலஸுகத்தாலும் ததப்ராப்திநிபந்தநமான நிரவதிக

ஆ,—கொண்டு அவன் திருவடிகளிலே சேர்க்கக் கொள்வதாய், நினைவறத் தன்னடையே விட்டுப்போய்த்து.

அரு. இந்த வுபயவிதாதிகாரிகள் அநுஷ்டாநதாத்பர்யத்தை யருளிச்செய்கிறார், (உபாயத்துக்கு) இத்யாதியால். ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்திரூபப்ரபத்த்யு பாயத்துக்கு ஒருவனதிகாரியாம்போது, நிதர்சநமான மூவரையும்போலே ஸ்வரக்ஷணஹேதுவான ஸ்வயத்நசக்தியும், த்யாகஸ்வீகாரங்களில் பிற்காலிக்கப் பண்ணும் லஜ்ஜையும், ஸ்வபாரதந்த்ர்யவிருத்தமான யத்நமும், தத்ததகந்தஸ்பர்சமற உபாயசக்த்யா குலையவேணும்; அநுரூபமான வுபேயத்துக்கதிகாரியாம்போது, நிதர்சநமான நால்வரையும்போலே கைங்கர்யப்ரேமமும், ப்ரேமத்தாலே தன்னுடம்பைப் பேணுமையும், விக்ரஹாநுபவம் பெறாவிடில் முடியும்படி தரியாமையும், உபயவைலக்ஷண்யப்ரகாசத்தாலே யுண்டாகவேணும்; இப்படி செய்யாவிடில் தத்தததிகாரிபூர்த்தியில்லை.

அசு. பிள்ளை திருநறையூரரையர் வலிய திருமேனியை த்யஜிக்கை சாஸ்த்ரவிருத்தமன்றோவென்ன பரிஹரிக்கிறார்மேல், (இவனுக்கு) இத்யாதியால். பகவத்ப்ரேமாந்தனான இவனுக்கு, "ఇదం కుర్యాత్" "இதம் குர்

அரு. உபாயத்துக்கு, சக்தியும் லஜ்ஜையும் யத்நமும் குலையவேணும்; உபேயத்துக்கு, ப்ரேமமும் தன்னைப்பேணாமையும் தரியாமையும் வேணும்.

அசு. இவனுக்கு வைதமாய் வருமதிறே த்யஜிக்கலாவது,

ஜீ.—துஃகத்தாலும் ப்ரக்ஷீணசேஷபுண்யபாபையாய், தத்ஸ்மரணம்செல்லாநிற்க, தத்ப்ராப்த்யலாபக்லேசத்தாலே தரிக்கமாட்டாமல் மூச்சடங்குகையாலே, இவளுக்குத்தானுபேக்ஷிக்கவேண்டாதபடி தேஹம் தன்னடையே விட்டுக்கொண்டு நின்றதென்கை.

அரு. ஆக, இப்படி நிதர்சநபூதர்படிகளைச்சொல்லி, இனி யிவர்களைப்போலே யிருக்கவேணுமென்றதின் கருத்தை யருளிச்செய்கிறார், (உபாயத்துக்கு) இத்யாதிவாக்யத்வயத்தாலே. அதாவது - உபாயத்துக்கதிகாரியாம்போது, தன்னுடைய ரக்ஷணம்தானே பண்ணிக்கொள்ளுகைக்குறுப்பான சக்தியும், தான் பரிக்ரஹிக்கிற வுபாயத்துக்கு விரோதிகளானவற்றை விடுமளவில், நாட்டார் சிரிக்குமதுக்குக் கூசும் லஜ்ஜையும், தன் பாரதந்த்ர்யவிரோதியான ஸ்வயத்நமும் கைவிடவேணும்; உபேயத்துக்கதிகாரியாம்போது, சேஷியைப்பிரியாதேநின்று எல்லாவடிமையுமவனேவினபடி செய்யவேணுமென்னும் ப்ரேமமும், அத்தலைக்கொரு தீங்குவரில் அதுகண்டாற்றமாட்டாமல் தன்னுடம்பை யுபேக்ஷிக்கையும், தத்விக்ரஹாநுபவாலாபத்தில் தரித்திருக்கமாட்டாமல் மூச்சடங்கும்படியாகையும் வேணுமென்றபடி.—ஆகையாலே, அவர்களைப்போலே யிருக்கையாவது-இவ்வதிகாரங்களை யுடையராகை யென்று கருத்து.

அசு. "విష్ణోః కార్యం సముద్దిశ్య దేహత్యాగో యదా కృతః। తదా వైకుణ్ఠమాసాద్య ముక్తో భవతి మానవః" "விஷ்ணோஃ கார்யம் ஸமுத்திச்ய தேஹத்யாகோ யதா க்ருதஃ। ததா வைகுண்ட்டமாஸாத்ய முக்தோ பவதிமாநவஃ" என்றாக்நேயபுராணத்திலும், "దేవకార్యపరో భూత్వా స్వాం తనుం యః పరిత్యజేత్। స యాతి విష్ణుసాయుజ్యమపి పాతకకృన్నరః" "தேவகார்யபரோ பூத்வா ஸ்வாம் தநும் யஃ பரித்யஜேத்। ஸ யாதி விஷ்ணுஸாயுஜ்யமபி பாதகக்ருந்நரஃ" என்று வாயவ்யத்திலும், "రఙ్గనాథం సమాశ్రిత్య దేహత్యాగం కరోతి యః। తస్య వంశే మృతాస్సర్వే గచ్ఛన్త్యాత్యన్తికం లయమ్"

ஆ.—யாத்” என்கிற விதிப்ரயுக்தமாய் சோபாதிகோநுகமாய்வரும் நிஷித்தமான சரீரத்யாகத்தையிறே வித்யதிக்ரமபியாலே வருந்தித் த்யஜிக்கலாவது; ப்ராப்தவிஷயராகப்ராப்தமாய் வித்யநுஸாரம்பண்ணவொட்டாத ராகப்ரேரித ஸ்வசரீரத்யாகத்தை வருந்தியும் த்யஜிக்கவொண்ணாதிறே. ஸ்வதோஷத்தாலே வருமதிலே தோஷம் வருமித்தனையல்லது, ப்ராப்தராகத்தால் வருமதில் தோஷப்ரஸங்கமே யில்லையென்றபடி; ‘మన్నిమిత్తకృతం పాపమపి ధర్మాయ కల్పతే। మామనాదృత్య ధర్మోఽపి పాపం స్యాన్మత్ప్రభావతః’’ ‘‘மந்நிமித்தக்ருதம் பாபமபி தர்மாய கல்பதே।மாமநாத்ருத்ய தர்மோ஽பி பாபம் ஸ்யாந்மத்ப்ரபாவத:” என்னுநின்றதிறே.

அஎ. ஸ்வசரீரத்யாகரூபஸ்வயத்நம் பாரதந்த்ர்யதூஷணமாகாதோ வென்ன, உபாயாதிகாரிக்காம் அல்லது உபேயாதிகாரிக்கு தூஷணமாகாதென்கிறார், (உபாயத்வ) இத்யாதியால். ஸ்வதந்த்ரவஸ்துவே வ்யாபாரமென்று பரதந்த்ரவஸ்து வநுஸந்திக்கிற வ்யாபாரத்வாநுஸந்தாநம், தன்னை நு

---

ராகப்ராப்தமாய் வருமது த்யஜிக்கவொண்ணாதிறே.

அஎ. உபாயத்வாநுஸந்தாநம் நிவர்தகம்; உபேயத்வாநுஸந்தாநம் ப்ரவர்தகம்.

ஜீ.—‘‘ரங்கநாதம்ஸமாச்ரித்ய தேஹத்யாகம் கரோதிய:। தஸ்யவம்சே ம்ருதாஸ்ஸர்வே கச்சந்த்யாத்யந்திகம் லயம்”என்று வாமநீயத்திலும் சொல்லுகையாலும், விசேஷித்து ஆச்வமேதிகபர்வத்தில் வைஷ்ணவதர்மசாஸ்த்ரத்தில் பஞ்சமாத்யாயத்திலே “అగ్నిప్రవేశం యశ్చాపి కురుతే మద్గతాత్మనా। స యాత్యగ్నిప్రకాశేన విమానేన మమాలయమ్॥ ప్రాణాన్ సంత్యజతి యో మర్త్యో మాం ప్రపన్నో ఉపవాసకమ్। బాలసూర్యప్రకాశేన వ్రజేద్యానేన మద్గృహమ్” ‘‘அக்நிப்ரவேசம் யச்சாபி குருதே மத்கதாத்மநா। ஸ யாத்யக்நிப்ரகாசேந விமாநேந மமாலயம்॥ப்ராணாந்ஸந்த்யஜதி யோ மர்த்யோ மாம் ப்ரபந்நோஉபவாசகம்। பாலஸூர்யப்ரகாசேந வ்ரஜேத் யாநேந மத்க்ருஹம்” என்று பகவான்தானே யருளிச்செய்கையாலும், இப்படி மோக்ஷஸாதநமாகச்சொல்லப்படுகிற பகவதர்த்தமான ஸ்வதேஹத்யாகம் அநந்யஸாதநனான விவனுக்கு த்யாஜ்யமன்றோ, ப்ரபந்நராயிருக்கிறபிள்ளை திருநறையூரரையர் இத்தை யநுஷ்டிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார், (இவனுக்கு) என்றுதுடங்கி. அதாவது “ఇదం కుర్యాత్” ‘‘இதம் குர்யாத்”என்று ஒருவிதிப்ரயுக்தமாய் வருமதிறே ப்ராப்தாப்ராப்தவிவேகம் பண்ணி யிவனுக்குக் கைவிடலாவது; அங்ஙனன்றிக்கே, தன்விரஹத்திலாற்றப்போகாதபடி போக்யமுமாய் ப்ராப்தமுமான விஷயத்தில்ராகப்ரயுக்தமாய் வருமது வருந்தியும் கைவிடப்போகாதிறேயென்கை.

அஎ. வைதமாய் வருமளவில் ஸுத்யஜமாய், ராகப்ராப்தமாய் வருமளவில் துஸ்த்யஜமாவானேனென் என்ன வருளிச்செய்கிறார், (உபாயத்வ) இத்யாதியாலே. (உபாயத்வாநுஸந்தாநம் நிவர்தகம்) என்றது—வைதமாய் வரும் தசையில் தேஹத்யாகரூபப்ரவ்ருத்தியில் உபாயத்வாநுஸந்தாநம் நடக்கையாலே, அவ்வநுஸந்தாநமிவனை ஸாதநதயா ஸம்ப்ரதிபந்நமான இத்தேஹத்யாகரூப ப்ரவ்ருத்தியினின்றும் மீளுவிக்குமென்றபடி. (உபேயத்வாநுஸந்தாநம் ப்ரவர்தகம்)என்றது—ராகப்ராப்தமாய் வரும்தசையில், இவ்விஷயத்துக்கு ஹாநிவரக்கண்டிருப்பதில் முடிகையே நல்லது என்று தேஹத்யாகந்தன்னை புருஷார்த்தமாக வநுஸந்திக்கையாலே, அவ்வநுஸந்தாநமிவனை யதிலே மூளுவிக்குமென்றபடி.—அன்றிக்கே, வைதமாய் வரும்போது, பகவத்விஷயத்திலுபாயத்வாநுஸந்தாநம் இதுக்கு நிவர்த

ஆ.—ரும்பு நறுக்கவொட்டாதபடி ஸ்வயத்நநிவர்த்தகமாயிருக்கும்; நித்ய சேஷவிக்ரஹமே நித்யோபேயமென்கிற தத்விக்ரஹவைலக்ஷண்யஜ்ஞாநாநுரூபமான உபேயத்வாநுஸந்த்தாநம், துரும்பெழுந்தாடும்படி தன்னை ஸ்வயத்நத்திலே ப்ரவர்த்திப்பிக்கும். ஸ்வதந்த்ர நித்யோபாயோபேயாநுஸந்த்தாநம் நிவ்ருத்திப்ரவ்ருத்திநிஷ்டையைப் பிறப்பித்து, உபயாதிகாரத்தையும் நிலைப்பிக்குமென்றபடி.

௮௮. ப்ரவர்த்தகமான துர்நிவார தத்ப்ராவண்யம் ஏது செய்வியாதென்கிறார் மேல், (அப்ராப்த) இத்யாதியால். ஸ்வரூபநாசகமாய்க்கொண்டு அப்ராப்தமான ஹேயவிஷயங்களிலே, ஒன்றுமும்மீளாதபடி ஸக்தனானவன், அவ்விஷயந்தனக்கு வருந்தியும் லபிக்கவேணுமென்று அதிஸாஹஸங்களைக்கோலி தன்னையழியமாறியிராநின்றால், ஸ்வரூபவர்த்தகமாய்க்கொண்டு ப்ராப்தமாய் நிரதிசயபோக்யமான பகவத்விஷயத்தை லபிக்கவேணுமென்னும் அநிவாரிதப்ராவண்ய பாரவசனான வுபேயாதிகாரிக்கு, தன்னையழியமாறும்படியான ப்ரவ்ருத்தி விசேஷமுண்டாமென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்தமிறே யென்கிறார். ஒருவேச்யாஸக்தன் அவளுக்கு வ்யாதியாற ப்ரார்த்தித்து ஒருதேவதைக்கு தன்தலையறுத்துக் கொடுத்தானென்றருளிச்செய்வர்.

௮௯. இந்தப்ரேமகார்யப்ரவ்ருத்தி, உபாயாதிகாரிக்குப்போல வுபாயாந்தர்கதமாகாதென்கிறார் மேல், (அநுஷ்ட்டாநமும்) இத்யாதியால்.

---

௮௮. அப்ராப்தவிஷயங்களிலே ஸக்தனானவன் அதுலபிக்கவேணும் என்றிராநின்றால்; ப்ராப்தவிஷயப்ரவணனுக்குச் சொல்லவேண்டாவிறே.

௮௯. அநுஷ்ட்டாநமுமநநுஷ்ட்டாநமுமுபாயகோடியிலந்வயியாது.

---

ஜீ.—கமாம்; ராகப்ராப்தமாய்வரும்போது, அவ்விஷயத்திலுபேயத்வாநுஸந்த்தாநமிதுக்கு ப்ரவர்த்தகமாமென்னவுமாம்.

௮௮. இப்படியொரு ஸாதநபுத்த்யாவன்றிக்கே, தத்விஷயப்ராவண்யாதிசயத்தாலே ஸ்வதேஹத்தை விடும்படியான நிலைவிளையக்கூடுமோவென்ன அருளிச்செய்கிறார், (அப்ராப்த) இத்யாதியாலே. அதாவது-ஸ்வரூபப்ராப்தமல்லாத ஹேயவிஷயங்களிலே ப்ரவணனானவன், தன்னை யழியமாறியாகிலுமவ்விஷயத்தை லபிக்கவேணுமென்று ஸ்வதேஹத்யாகத்திலே ப்ரவர்த்தியாநின்றால், ஸ்வரூபப்ராப்தமான விலக்ஷணவிஷயத்திலே ப்ரவணனானவனுக்கு, அவ்விஷயத்தைப்பற்ற தன்னை யழியமாறுகையாகிற விது கூடுமென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்தமன்றோவென்கை.—ஒரு வேச்யையளவிலே ஒருவன் அதிஸக்தனாய்க்கொண்டுபோருமவனாய், அவளுக்கு வ்யாதிகனக்க வந்தவளவிலே, "இவளாறியெழுந்திருந்தவாறே நானென் தலையை யரிந்துதருகிறேன்" என்று ஒருதைவத்துக்கு ப்ரார்த்தித்து, பின்பு தன்தலையையரிந்துகொடுப்பதும் செய்தானென்று ப்ரஸித்தமிறே.

௮௯. உபாயோபேயாதிகாரங்களுக்குடலாக மற்றும் சொன்ன வநுஷ்ட்டாநங்கள்போலன்றிக்கே, உபாயதயா சாஸ்த்ரஸித்தமாகையாலே, அநந்யஸாதநனுக்கு அநுஷ்ட்டாநமானவிந்தேதேஹத்யாகம் ராகப்ராப்தமாகையாலே துஸ்த்யஜமாயிருந்ததேயாகிலும், உபாயகோடியிலே அந்வயித்தன்றி நில்லாதே யென்ன வருளிச்செய்கிறார், (அநுஷ்ட்டாநமும்) என்றுதுடங்கி. அதாவது-அநுஷ்ட்டாநமாகச்சொன்ன ஸ்வசக்தித்

ஆ.—பூர்வாதிகாரிகளுக்குண்டான ஸ்வசக்தித்யாகாதிவிசிஷ்டாநுஷ்ட்டாநம்உத்தராதிகாரிகளில் ஒருவருக்குண்டான ஸ்வசரீரத்யாகபர்யந்தமான பரமாத்ருஷ்ட்யா தோன்றுகிற அநுஷ்ட்டாநமும், ஸ்வதந்த்ரத்யாகமான வுபாயகோடியி லொருபடியாலுமந்வயியாது; ஸ்வரூபத்திலும் ப்ராப்யத்திலுமந்வயிக்குமித்தனை.

கூ0. இப்ப்ராவண்யம் விசிஷ்டவேஷவிரோதிகளிலே அூட்டுகிறவளவேயோ, நிஷ்க்ருஷ்டவேஷ விரோதிகளிலும் அூட்டுகிறதில்லையோ வென்கிறார், (அநந்யோபாயத்வமும்) இத்யாதியால். "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்கிற வநந்யோபாயத்வமும் குலையும்படியான "நோற்கின்ற நோன்பினைக்குறிக்கொள்" என்கிற வுபாயாந்தரப்ரவ்ருத்தியும், "உனக்கே நாமாட்செய்வோம்" "உனக்கேயாளாய்த்திரிகின்றோம்" என்கிற வநந்யோபேயத்வமும் குலையும்படியான "யாமணிவோம்" "நமக்கே நலமாதலில்" என்று ஸ்வரஸத்வாந்வயமாகிற உபேயாந்தர ப்ரவ்ருத்தியும், "தேவாதிதே

கூ0. அநந்யோபாயத்வமும் அநந்யோபேயத்வமும் அநந்யதைவத்வமும் குலையும்படியான ப்ரவ்ருத்திகாணாநின்றோமிறே.

ஜீ'—யாகாதிகளும் ப்ரேமாதிகளும் உபாயோபேயாதிகாராந்தர்ப்பூதமாகையாலே உபாயகோடியிலந்வயியாதாப்போலே, அநுஷ்ட்டாநமாகச்சொன்னஸ்வதேஹத்யாகமும், உபாயபுத்த்யாவநுஷ்ட்டிதமன்றிக்கே ராகப்ராப்தமாகையாலே உபாயகோடியில் அந்வயியாது ; உபேயாதிகாரத்திலேயந்தர்ப்பவிக்குமத்தனையென்கை. 'உபாயதயா சாஸ்த்ரஸித்தமேயாகிலும், உபாயபுத்த்யாவநுஷ்ட்டிதமானதுக்கேயிறே உபாயத்வமுள்ளது. அங்ஙனன்றாகில்ப்ரபந்நஜ்ஞனவன்உபாயபுத்தியற உபேயபுத்த்யாபண்ணுகிற புண்யதேசவாஸாதிகளுமுபாயகோடியிலே அந்வயிக்கவேணுமிறே.

கூ0. அன்றிக்கே, இந்த ப்ரபத்திதான் உபாயகோடியிலே அந்வயித்ததாகிலும் அநந்யோபாயத்வத்துக்குக் குலைத்தல் வருமித்தனையிறே ; அது ப்ரேமபரவசர்க்கவத்யமன்றென்கைக்காக ப்ரேமபரவசர்ப்ரவ்ருத்திகளை தர்சிப்பிக்கிறார் , (அநந்யோபாயத்வமும்) என்றுதுடங்கி. அநந்யோபாயத்வம் குலையும்படியான ப்ரவ்ருத்தியாவது - "திருந்தவேநோற்கின்றேன்" "நோற்கின்றநோன்பினைக்குறிக்கொள்" "குதிரியாய் மடலூர்தும்" "ஓதிநாமம்" "ஊராதொழியேன் நான் - வாரார்பூம்பெண்ணைமடல்" "உலகறிய வூர்வன்நான் — மன்னிய பூம்பெண்ணை மடல்" என்று-நோன்புநோற்கை, மடலெடுக்கை முதலான வ்யாபாரங்களிலே யிழிகை, அநந்யோபேயத்வம் குலையும்படியான ப்ரவ்ருத்தியாவது - அத்தலைக்கதிசயத்தை விளைக்கையே புருஷார்த்தமென்றிருக்கை தவிர்ந்து, "நமக்கேநலமாதலில்" என்றும், "தூமலர்தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம்" என்றும் தனக்கதிசயந்தேடத்துடங்குகை. அநந்யதைவத்வம்குலையும்படியான ப்ரவ்ருத்தியாவது - "காமதேவா வுன்னைபுழும்பியையும் தொழுதேன்" "பேசுவதொன்றுண்டிங்கெம்பெருமான்" என்று-காமன்பக்கலிலே தேவதாபுத்திபண்ணி யாராதிக்கை. (காணாநின்றோமிறே) என்றது - ப்ராப்யவஸ்துவில் ப்ராவண்யாதிசயத்தாலே பேரளவுடையவர்கள்பக்கலிலுமுண்டாகக் காணாநின்றோமிறே யென்கை. மூன்பு சொன்ன ப்ரவ்ருத்திக்குபாயகோட்யந்வயம் வஸ்துகத்யா வருமென்று கொள்ளுகிறமாத்ரமிறே ; அங்ஙனன்றிக்கே, நேரேவுபாயபுத்த்யா

ஆ.-வனைச் .. சேவி" க்கையாகிற வநந்யதைவத்வமும்குலையும்படியான "உன்னையு மும்பியையும்தொழுதேன்" என்கிற வநந்யசேஷத்வ விருத்தப்ரவ்ருத்தியும், உபேயப்ராவண்யமடியாக "மயர்வறமதிநலமருள" ப்பெற்றுத்தெளியக்கண்டவர்களுக்குமுண்டாகக் காணாநின்றோமிறே.

௯௧. பாரதந்த்ர்யபோகத்வாநந்யார்ஹத்வபஞ்ஜகங்களான விந்தப்ரவ்ருத்திகள், ஹேதுபேதத்தைப்பற்ற ச்லாக்யங்களாயிருக்குமென்கிறார், (ஜ்ஞாநவிபாகம்) இத்யாதியால். ஸாக்ஷாத்காரஜ்ஞாநத்தின் விசேஷபரிபாகரூபபக்திகார்யமாய் கர்தவ்யாகர்தவ்யவிவேகதிரோதாயக பாரவச்யரூபமானவஜ்ஞாநத்தாலே, பக்திபரவசர்க்கு ஸ்வசரீரத்யாககாம பஜநாதியாய்வருமவையான வ்ருத்திவிசேஷங்களெல்லாம், ச்லாக்யங்களுமாய ப்ரார்த்தநீயங்களுமாகையாலே (அடிக்கழஞ்சுபெறும்). ஜ்ஞாநதசையில் வருமஜ்ஞாநகார்யங்களாய்த்து ஸ்வரூபஹாநியைப் பிறப்பிக்குமத்தனையல்லது, பக்திபாரவச்யதசையில் வருமஜ்ஞாநகார்யம் ஸ்வரூபவர்த்தகமத்தனை யென்றபடி.

௯௨. இந்த பக்திப்ரேரிதவ்ருத்திகள், பூர்வபாவியான வுபாயப்ரதிபந்தகங்களாகாதென்கிறார் மேல், (உபாயபலம்)இத்யாதியால். உபாயஜ்ஞாநாநந்தரபாவியான உபேயப்ராவண்யகார்யங்களாய்க்கொண்டு இவையுண்

௯௧. ஜ்ஞாநவிபாககார்யமான வஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம்அடிக்கழஞ்சுபெறும்.

௯௨. உபாய பலமாய்உபேயாந்தர்ப்பூதமாயிருக்குமதுஉபாயப்ரதிபந்தகமாகாது.

ஜீ.—வநுஷ்ட்டிதமானவையிறே யிவை ; ஆகையால் ப்ரேமப்ரவசர்க்கிது அவத்யமன்றென்று கருத்து.

௯௧. இத்தனையும் கலக்கத்தாலே வந்தவையிறே, அஜ்ஞாநமூலமாய் வருமவையொன்றுமாதரணீயமன்றேயென்ன வருளிச்செய்கிறார், (ஜ்ஞாந)இத்யாதியாலே. (ஜ்ஞாநவிபாக)மாவது—"ஞானங்கனிந்தநலம்" என்கிறபடியே- ஜ்ஞாநத்தினுடைய பரிபாகரூபையானபக்தி; அதின்கார்யமான (அஜ்ஞாந)மாவது- அந்தபக்த்யதிசயத்தாலே வரும் ப்ராப்தாப்ராப்தவிவேகாபாவம் ; அத்தாலேவரும் ப்ரவ்ருத்திவிசேஷங்களெல்லாம் (அடிக்கழஞ்சுபெறும்) என்றது-அதி ச்லாக்யங்களாயிருக்குமென்றபடி. கர்மநிபந்தநமான வஜ்ஞாநத்தாலே வருமவையே ஹேயங்களென்று கருத்து.

௯௨. ஆனாலும், இவ்வதிப்ரவ்ருத்தி இத்தலையில் ப்ரவ்ருத்தியிலொன்றையும் ஸஹியாதஸித்தோபாயத்தின் கார்யகரத்வத்துக்குப்ரதிபந்தகமாகாதோவென்ன வருளிச்செய்கிறார், (உபாய) இத்யாதியாலே. (உபாய பலம்) என்றது-ஸித்தோபாயமான வவன்பண்ணின க்ருஷிபலமென்றபடி. "மயர்வற மதிநலமருளினன்" "பேரமர்காதல்கடல்புரைய விளைவித்த காரமர்மேனி நங்கண்ணன்" என்றும் ஏவம்பூதப்ரவ்ருத்திஹேதுவான பக்திக்கு உத்பாதகனும் வர்த்தகனுமவனேயிறே; ஆகையாலே,பக்திபாரவச்யநிபந்தநமான விப்ரவ்ருத்தியை உபாயபலமென்கிறது. (உபேயாந்தர்ப்பூதமாயிருக்குமது) என்றது- ப்ராப்யத்வரையின் முறுகுதலாலே கண்ணுஞ்சுழலையிட்டு இத்தலை படுகிற வலமாப்பெல்லாம் நம்மை யாசைப்பட்டிப்படிபடப் பெறுவதே என்று அவன்முகமலருகைக்குறுப்பாகையாலே, மடலெடுக்கை துடக்கமான விந்த ப்ரவ்ருத்திகள் அவன் முகமலர்த்திக்காகப் பண்ணும் கைங்கர்யத்தோபாதியாய்க்கொண்டு, உபேயத்திலே

ஆ.—டாகையாலே, உபாயத்தின் பலமாய், உபாயஸ்வீகாராநந்தரபாவிக
ளான ஆநுகூல்யாதிகள்போலே,பகவத்கைங்கர்யரூபோபேயத்திலே அந்த
ர்ப்பூதமாயிருக்கிற காமபஜநாதியான விவைதனக்கு.பூர்வபாவியான வுபா
யத்துக்கு அநுதயாபாதகப்ரதிபந்த்தகமாகாது சேஷிக்கதிசயகரங்களா
கையாலே கைங்கர்யரூபஸித்த்தஸாத்த்யஸமாகமென்கிறார்.

கூங. தத்ப்ராப்த்யர்த்தமாக வருமிவற்றுக்கு ஸாதநத்வந்தான் வ
ரில் தட்டேன் என்கிறார், (விளம்பாஸஹம்) இத்யாதியால். பலவிளம்பத்தை
ஸஹியாதென்றன்றோ ஸித்த்தஸாதநந்தனக்கு உபாயாந்தரங்களைப்பற்ற
ஏற்ற முண்டாகிறது; அத்தைப்பற்றவும் விளம்பாஸஹத்வமிவற்றுக்கே
யதிசயித்திருக்கையால், இவைதானும் ஸித்த்தோபாயவிசேஷங்களாலும்
வரும்தட்டேன் என்றுகருத்து. இவன் இவற்றிலே முயல்வதற்குமுன்னே, அ
வனை த்வரித்துக்கொண்டு வரப்பண்ணுமவையிறே யிவை. ஆனால் ஸித்த்
தோபாய த்வித்வம் வாராதோவென்னவேண்டா, ஒன்று ஜ்ஞாநதசையிலும்
ஒன்று பக்திதசையிலும் வருகையால்; ஏகதசையில் வரிலிறே ஸமவிகல்
பம்வருவது.—அன்றிக்கே, சேஷிக்கதிசயகரமாகையாலே ஸாத்த்யமான

கூங· ஸாத்த்யஸமாநம் விளம்பாஸஹமென்றிறே ஸாதநத்

ஜீ.—அந்தர்ப்பூதமாயிருக்கை. (உபாயப்ரதிபந்த்தகமாகாது) என்றது -
ஏவம்பூதமானது உபாயத்தினுடைய கார்யகரத்வத்துக்கு விலக்காகா
தென்றபடி.

கூங. இப்படி மடலெடுக்கை முதலானவை ஸித்த்தோபாயப்ரதிபந்
த்தகமாகாதென்னுமிடம்சொல்லி, அவைதனக்கு ஸித்த்தோபாயஸாம்யத்
தை விவக்ஷித்தருளிச்செய்கிறார்மேல், (ஸாத்த்யஸமாநம்) இத்யாதி
வாக்யத்வயத்தாலே. அதாவது - ஸாத்த்யவஸ்துவே ஸாதநமாகையாலே
ஸாத்த்யத்துக்கு ஸமாநமென்றும், பலவிளம்பத்தை ஸஹியாதே சீக்ர
மாக கார்யம் செய்துகொடுக்குமென்றுமிறே இதரஸாதநங்களிற் காட்டில்
ஸித்த்தஸாதநத்துக்கேற்றம்; ஸாத்த்யத்தில்ப்ராவண்யமடியாகவிறே இந்
த ஸாதநபரிக்ரஹந்தன்னிலிழிகிறது; அவை இரண்டுமிவற்றுக்குமுண்டென்
றுகருத்து. எங்ஙனே யென்னில் - மடலெடுக்கைமுதலான ப்ரவ்ருத்திகள்
சேஷிக்கதிசயகரங்களாகையாலே கைங்கர்யரூபஸாத்த்யத்துக்கு ஸமா
நங்களாயிருக்கையாலும், மடலூருதல்கோன்புநோற்குதல் செய்வனென்று
துணிந்தபோதே, ஸர்வேச்வரன் த்வரித்துக்கொண்டுவந்து இவர்கள் காலி
லேவிழும்படிபண்ணிக்கொடுக்கையாலே பலவிளம்பாஸஹங்களாயிருக்கை
யாலும், ஸித்த்தஸாதநம்போலே இதரஸாதநங்களிற்காட்டிலேற்றத்
தையுடைத்தாய், ஸாத்த்யப்ராவண்யமடியாகவிவற்றிலிழிகிற வாகாரமு
மொத்திருக்கையாலே. இத்தால் - ஸித்த்தோபாயத்தையொழியவுமிது
தானே கார்யம் செய்யவற்றாகையாலே, தத்ப்ரதிபந்த்தகமென்னும் தூஷ
ணமில்லையென்றுகருத்து.— அன்றிக்கே, (உபாயப்ரதிபந்த்தகமாகாது)
என்றத்தை இன்னமும் முகபேதத்தாலே வுபபாதிக்கிறார், (ஸாத்த்ய) இத்
யாதி வாக்யத்வயத்தாலே. அதாவது-பால்மருந்தாமாப்போலே ஸாத்த்ய
வஸ்துதானே ஸாதநமாகையாலே, ஸாரஸ்யத்தில் ஸாத்த்யத்தோடொத்
திருக்குமென்றும், ஸாத்த்யத்தை ப்ராபிக்குமளவில் காலவிளம்பத்தைப்
பொறாது கடுக ப்ராபித்துவிடுமென்றுமன்றோ ஸாதநாந்தரத்திற்காட்டில்
ஸித்த்தஸாதநத்துக்கேற்றம்; இப்போதிது சொல்லுகிறது, இவ்வாகாரத்
வயமும் ஸாத்த்யப்ராவண்யஹேதுவாமென்று தோற்றுகைக்காக. இப்படி
யாகையாலே, தானடியாகவிளைந்து க்ஷணகாலவிளம்பம் பொறாமல் துடிக்
கும்படி முறுகடியிடுகிற ஸாத்த்யப்ராவண்யமடியாகவிறே மடலெடுக்கைமு

ஆ.—கைங்கர்யஸமாநமாய், இதரஸாதநங்கள்போலன்றியேபலவிளம்பாஸஹமாயிருக்குமென்றிறே ஸித்தஸாதநத்துக்கேற்றம்; அப்படியே யிவையுமென்று ஸாத்யஸமாநத்தை மேலேகூட்டியுமருளிச் செய்வர்.

ஹேதுஸாம்யத்தாலிவையும் ஸித்தஸாதநமாமென்கிறார் மேல் (ஸாத்யப்ராவண்யம்) இத்யாதியால். கைங்கர்யரூப ஸாத்யப்ராப்திப்ராவண்யமடியாகவிறே தத்விளம்பாஸஹமான ஸித்தஸாதநத்திலிழிகிறதும்; தத்விக்ரஹாநுபவரூபகைங்கர்யப்ராவண்யத்தாலே இவற்றிலேயிழிகையால், இவற்றையும் ஸித்தஸாதநம் என்னலாமென்று கருத்து. ஆக, பக்திபாரவச்யகார்யங்களான காமபஜநாதிகள் உபேயாந்தர்கதமாய்க்கொண்டு, உபாயப்ரதிபந்தகமாகாதென்றதாய்த்து.

௧௦௪. இப்படி ப்ரவர்தகமான விந்த ப்ராவண்யம் ஆத்மகுணகணகாரணமாயிருக்குமென்கிறார், (இவனுக்குப் பிறக்கும்) இத்யாதியால். ஸத்வகுணோத்மேஷமுடைய விவனுக்கு ஆசார்யாங்கீகாரஹேதுவாக பகவத்ப்ரஸாதத்தாலே பிறக்கும் முமுக்ஷுத்வமுக்தத்வாநுகுணமான ஜ்ஞாநாத்யாத்மகுணங்களெல்லாவற்றுக்கும், ப்ரகாச ப்ரதாநஹேது ஸத்தாப்ரயுக்தமாய்த் துடிப்பிக்குமிந்த பகவத்ப்ராவண்யம்.

---

துக்கேற்றம்; ஸாத்யப்ராவண்யமடியாகவிறே ஸாதநத்திலிழிகிறது.

௧௦௪. இவனுக்குப் பிறக்குமாத்மகுணங்களெல்லாவற்றுக்கும் ப்ரதாநஹேது இந்த ப்ராவண்யம்.

---

ஜீ.—தலானவிஸ்ஸாதநத்திலிழிகிறதென்கை. ஆகையாலே, ஏவம்பூதப்ராவண்யத்தின் முறுகுதலாலே கண்ணுஞ்சுழலையிட்டுச்செய்கிற விப்ப்ரவ்ருத்திகள் உபாயம் மேல்விழுந்து கார்யம்செய்கைக்குடலாமித்தனையல்லது, தத்ப்ரதிபந்தகமாகாதென்று கருத்து. ஆக, (இவனுக்கு வைதமாய் வருமதிறே த்யஜிக்கலாவது) என்றுதுடங்கி இவ்வளவும்வர, பிள்ளைதிருநறையூரரையர் ப்ரவ்ருத்திவ்யாஜத்தாலே, பகவத்ப்ரபந்நனாயிருந்தானேயாகிலும் உபேயபரனானவனுக்கு தத்விஷயப்ராவண்யத்தால்வரும் ஸ்வதேஹத்யாகம் துஸ்த்யஜம், உபாயபுத்த்யா வநுஷ்ட்டிதமல்லாமையாலே அது தானுபாயகோடியிலந்வயியாது, வஸ்துகத்யா அந்வயித்ததாகிலும் ப்ரேமபரவசர்க்கு தோஷாயவன்று, புத்திபூர்வகமாகவநந்யோபாயத்வாதிகள் குலையும்படியான ப்ரவ்ருத்திகள் தெளியக்கண்டவர்கள்பக்கலிலும் காண்கையாலே; இவைதான் அஜ்ஞாநமூலமேயாகிலும் ப்ரேமகார்யமான வஜ்ஞாநத்தாலே வந்தவையாகையால் அதிச்லாக்க்யங்கள், ஸித்தோபாயப்ரதிபந்தகமாகாது; அவ்வளவன்றிக்கே, அத்தோடொக்கச்சொல்லலாம்படியன்றோ இவற்றின்பெருமையென்று சொல்லுகையாலே உபேயாதிகாரத்தில் (தன்னைப் பேணாமை) என்று சொன்ன விது அநந்யஸாதநத்வத்துக்குச் சேருமோவென்னுமதிசங்காபரிஹாரம் பண்ணப்பட்டது.

௧௦௪. ஏவம்பூதமான ப்ராவண்யம்விஷயவைலக்ஷண்யாதீநமத்தனையன்றோ, சமதமாத்யாத்மகுணங்களன்றோ அதிகாரத்தை மினுங்குவிப்பதென்ன, அவைதன்னையுமிது தானேயுண்டாக்குமென்கிறார்மேல், (இவனுக்கு) என்றுதுடங்கி. "శమదమనియతాత్మా" "சமதமநியதாத்மா" "అమానిత్వమ్" "அமாநித்வம்" இத்யாதியிற்சொல்லுகிறபடியே இச்சேதநனுக்குண்டாகத்தக்க ஆத்மகுணங்கள் தானநேகமுண்டிறே; அவையெல்லாவற்றுக்குமிந்த ப்ராவண்யம்(ப்ரதாநஹேது) வாகையாவது - அநுகூலஸஹவாஸசாஸ்த்ராப்யாஸாசார்யோபதேசாதிகளான ஹேத்வந்தரங்களிற் காட்டில் முக்க்யஹேதுவாயிருக்கை.

ஆ.—௱௫. உக்தார்த்தப்ரமாணோபாதாநம்பண்ணுகிறார், ("மாற்பால்") இத்யாதியால். "*மாற்பால்மனஞ்சுழி" த்தபின்பிறே "மங்கையர்தோள்கை விட்ட"து; ("పరమాత్మని యో రక్తః" "பரமாத்மநி யோ ரக்த") என்று பரமாத்மாவின்பக்கல் ரக்தியுண்டானாலிறே அபரமாத்மாக்கள்பக்கல் விரக்தியுண்டாவது; அந்தமிதுநசேர்த்தியைக் கண்ட பின்னிறே இந்த ஐச்வர்யகைவல்யங்களை யொழிந்தது.

௱௬. ப்ராவண்யஹேதுகுணப்ரதாநங்கள் இன்னதென்கிறார், (ஆத்மகுணங்களில்) இத்யாதியால். ஸ்வாதிகாராபேக்ஷிதஜ்ஞாநாத்யாத்மகுணங்களில், அதிகாராந்வயப்ரதாநம் பாஹ்யகரணநியமநரூபமான சமமும் அந்தஃகரணநியமநரூபமான தமமுமென்கிறார்; "శాన్తో దాన్త ఉపరతస్తితిక్షుస్సమాహితః" "சாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷுஸ் ஸமாஹித" "శమదమ..." "சமதமநியதாத்மா" இத்யாதிப்ரமாணஸித்தங்களிறே யிவை.

---

௱௫. "மாற்பால் மனஞ்சுழிப்ப," "పరమాత్మని యో రక్తః"
"பரமாத்மநி யோ ரக்தஃ" "கண்டு கேட்டுற்றுமோந்து".

௱௬. ஆத்மகுணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்.

---

ஜீ.—௱௫. இவ்வர்த்தத்தில் ப்ரமாணோபாதாநம் பண்ணுகிறார், ("மாற்பால்") என்று துடங்கி. "மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு - நூற்பால் மனம்வைக்க நொய்விதாம்" என்று-ஸர்வேச்வரன் பக்கலிலே ஹ்ருதயம் ப்ரவணமாக, போக்யைகளான ஸ்த்ரீகளுடையதோளோடே யணைகையில் நசையற்று, ப்ரமாணங்களிலே மநஸ்ஸை வைக்கவெளிதாமென்றும்; "పరమాత్మని యో రక్తో విరక్తో உపరమాత్మని" "பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோ உபரமாத்மநி" என்று - பரமாத்மாவின் பக்கலிலே ரக்தனாய் அத்தாலே பரமாத்மேதரவிஷயத்தில் விரக்தனானவனென்றும்; "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்ட சதிர்கண்டு - கண்டுகேட்டுற்று மோந்துண்டுழலுமைங்கருவிகண்ட வின்பம் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்தேன்" என்று-பெரிய பிராட்டியாரும் தேவருமாயொரு தேசவிசேஷத்திலே யெழுந்தருளியிருக்கிற சேர்த்தியைக்கண்டு அங்கேப்ரவணனாய், ஐச்வர்யகைவல்யங்களில் விரக்தனானேனென்றும் பகவத்ப்ராவண்யமிதரவிஷயவிரக்திஹேதுவாகச் சொல்லப்பட்டதிறே.

௱௬. பகவத்ப்ராவண்யமாத்மகுணங்களெல்லாவற்றுக்கும் ப்ரதாநஹேதுவென்று ப்ரஸ்தாவித்து, இதரவிஷயவிரக்திஹேதுத்வமாத்ரத்தில் ப்ரமாணங்களை தர்சிப்பிப்பானென் என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார், (ஆத்மகுணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்) என்று. (சம)மாவது - அந்தஃகரணநியமநம்; (தம)மாவது - பாஹ்யகரணநியமநம்; "శమశ్చిత్తప్రశాన్తిస్స్యాద్దమశ్చేన్ద్రియనిగ్రహః" "சமச்சித்தப்ரசாந்திஸ்ஸ்யாத் தமச்சேந்த்ரியநிக்ரஹஃ" என்னக்கடவதிறே. "క్షమా సత్యం దమశ్శమః" "க்ஷமா ஸத்யம் தமச்சமஃ" என்கிறவிடத்தில் "దమో బాహ్యకరణానామనర్థవిషయేభ్యో నియమనమ్; శమో உన్తఃకరణస్య తథా నియమనమ్" "தமோ பாஹ்யகரணாநாமநர்த்தவிஷயேப்யோ நியமநம்; சமோ உந்தஃகரணஸ்ய ததா நியமநம்" என்றிறே பாஷ்யகாரருமருளிச்செய்தது; மாறிச்சொல்லுமிடமுமுண்டு. இந்தசமதமங்களுண்டான விடத்தில் அல்லாதகுணங்கள் தன்னடையே வருமாகையாலே ப்ரதாநமான விவற்றுக்கு ஹேதுவென்னுமிடத்தில் ப்ரமாணம் காட்டப்பட்டதென்று கருத்து — அன்றிக்கே, கீழ்ச்சொன்ன விரக்திஹேதுத்வம், ஸகலாத்மகுணோத்பத்திக்கும் ஹேதுவென்னுமிடத்துக்கு உபலக்ஷணமாக்கி, இவ்வாத்மகுணங்களில்

ஆ.—கூஎ. இவை யிரண்டாலும் வரும் ப்ரயோஜநவிசேஷங்களை ஆரோஹணக்ரமத்தாலும், ப்ரதாநப்ரயோஜநமான ப்ராப்யலாபஹேதுபரம்பரைகளை அவரோஹணக்ரமத்தாலுமருளிச்செய்கிறார் மேல், (இவையிரண்டும்) இத்யாதியால். ப்ரதாநகுணங்களான விவையிரண்டும், ஸதாசார்யபகவத்ப்ரஸாதத்தாலே நிலைநிற்க வுண்டாகப்பெற்றால், இவை கண்டுகந்து விசேஷேண கடாக்ஷிக்கும் ஹிதைஷியான ஸதாசார்யன், ஸ்வாபிமதார்த்தத்தையுபதேசிக்கும்படி கைபுகுரும்; இது ப்ரதமாங்கீகாரமல்லாமையால் ஸஹேதுகத்வதோஷம் வாராது; முன்பு நிர்ஹேதுகமாக வங்கீகரித்தபின்பு, சமதமாதிகண்டுகந்துவிசேஷமாக வங்கீகரிக்கையுமுண்டிறே. இத்தலையில் நன்மைகண்டுகக்கும் ஹிதைஷியான ஸதாசார்யன், ஜாத்யந்தனுக்கு நிதிபோல கைபுகுந்தவாறே, ஸ்வரூபாதிப்ரகாசகமான மாணிக்கச் செப்பான திருமந்த்ரம், ஸ்வார்த்தாநுஸந்தாநபரனும்படி கைபுகுரும்; அர்த்தப்ரதாநமான திருமந்த்ரம்அநுஷ்டாநபர்யந்தமாக கைபுகுந்தவாறே, அதில்ச்சமித்த "ஸ்ரீஸ்தநாபரண"மான வீச்வரன் "இனிநான்போகலொட்டேன்" என்

கூஎ. இவையிரண்டுமுண்டானால் ஆசார்யன் கைபுகுரும்; ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந்த்ரம் கைபுகுரும்; திருமந்த்ரம் கைபுகுந்தவாறே ஈச்வரன் கைபுகுரும்; ஈச்வரன்கைபுகுந்தவாறே, "வைகுந்தமாநகர் மற்றது

ஜீ.—ப்ரதாநமேதென்கிற சங்கையிலே, (ஆத்மகுணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்) என்றருளிச்செய்தாராகவுமாம்.

கசுஅ. அபிமதவிஷயத்திலழுக்குப்போலே ஆதரிக்கிறமாத்ரமன்றிக்கே, இவனுடைய ஜ்ஞாநபரிமளமித்தேஹத்திலே ப்ரகாசிக்கையாலும் இத்தை யாதரிக்குமென்னுமிடத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார், (வேர்) இத்யாதியாலே. அதாவது - மணத்தின்வாசியறிந்து வேர்ச்சூடும் போகிகளானவர்கள், மண்ணையுதறில் மணங்குன்றுமென்று மண்பற்றுக்கழற்றாதே சூடுமாப்போலே, பரமபோகியான ஸர்வேச்வரன் ஜ்ஞாநியான விவனைவிரும்பி யநுபவிக்குமிடத்தில், "[illegible]" "ஆஹ்லாத சீதநேத்ராம்பு:" இத்யாதிப்படியே ஜ்ஞாநகார்யமான விக்ருதிகளுக்கெல்லாமாச்ரயமாய்க்கொண்டு இவனுடைய ஜ்ஞாநபரிமளமெல்லாந் தோற்றும்படி இருக்கிற விக்ரஹத்தோடே கூடவிரும்புமென்றபடி.

கசுகூ. இன்னமும் முகாந்தரத்தாலே இவன் தேஹத்திலவன் விருப்பத்தை தர்சிப்பிக்கிறார், (பரமார்தன்) என்றுதுடங்கி. (பரமார்தன்) ஆகிறான் "இங்ஙின்ற நீர்மையினியாமுறாமை" "எந்நாள் யானுன்னை யினிவந்துகூடுவன்," "எங்கினித்தலைப்பெய்வன்," "நாளேலறியேன்," "தரியேனினி," "கூவிக்கொள்ளுங்காலமின்னங்குறுகாதோ" என்று ஸம்ஸாரத்திலடிக்கொதிப்பாலும், பகவதநுபவத்தில் பெருவிடாயாலும், இதுக்குமேலில்லை யென்னும்படியார்திவிளைந்தவன்; ஏவம்பூதனானவனுடைய சரீரஸ்தி

ஆ.—மான ஸ்த்திதிக்குஹேது, ஜ்ஞாநம்பிறந்த விவன் சரீரத்தை இன்னும் சிலநாளிங்கேவைத்து புஜிப்போமென்றும் வஸ்துவாசியறியும் பகவானுடைய கேவலேச்சையிறே யென்கிறார். முமுக்ஷுத்வபரிபாகமுண்டாயும் இருக்கைக்கடி கர்மமல்ல, ஸ்நிக்த்தபோக்தாவினிச்சையே யத்தனையென்ற படி. முன்புண்டான சரீரஸ்த்திதிஹேது லீலாநுகுணகர்மநிபந்த்தநேச்சை; பின்புண்டான தத்ஸ்த்திதிஹேது போகாநுகுணகேவலஸ்வேச்சை.

கஎO. கேவலஸ்வேச்சாஸ்த்திதமான விவன் சரமதேஹைகதேசத்தில், ஸ்வாபிமதஸ்த்தலமெல்லாவற்றிலும் பண்ணும் ஆதரத்தைப் பண்ணுமென்கிறார் மேல், (திருமாலிருஞ்சோலை) இத்யாதியால். தெற்கில் திருமலையிலும் திருப்பாற்கடலிலும் பண்ணும் விருப்பத்தை என்னுத்தமாங்கத்தில் பண்ணினனென்றும்; பரமபதத்திலும் வடக்கில் திருமலையிலும் பண்ணும் விருப்பத்தை தம்திருமேனியிலே பண்ணினனென்றும் சொல்லுகிறபடியே, ஆழ்வாருகந்தருளின நிலமான பரமபதாதிகளெல்லாவற்றிலும் இருப்பது கிடப்பது நிற்பதாய்க்கொண்டு மிகவும் பண்ணும் விருப்பமெல்லாவற்றையு மொருமடைக்கொண்டு, தானுகந்தருளின நிலமாய், அவ்வுருவான விவர்திருமேனியில் ஓரோரவயவைகதேசத்திலே பண்ணுமென்கிறார்.

---

கேவலபகவதிச்சையிறே.

கஎO. "திருமாலிருஞ்சோலைமலையே" என்கிறபடியே உகந்தருளின நிலங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவனுடைய சரீரைகதேசத்திலே பண்ணும்.

---

ஜீ.—திக்குஹேது ப்ராரப்த்தகர்மமென்ன வொண்ணாதிறே, "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి" "ஸர்வபாபேப்ப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றத்தோடு விரோதிக்கையாலே. "ఆర్తానామాశు ఫలదా సకృదేవ కృతా హ్యసౌ । దృప్తానామపి జన్తూనాం దేహాన్తరనివారిణీ" "ஆர்த்தாநாமாசு பலதா ஸக்ருதேவ க்ருதா ஹ்யஸௌ । த்ருப்தாநாமபி ஜந்தூநாம் தேஹாந்தரநிவாரிணீ" என்றிறே ப்ரபத்திஸ்வபாவந்தானிருப்பது. ஆகையால் இவனுடைய சரீரஸ்த்திதிக்குஹேது, இன்னம் சிலநாளிவனை இச்சரீரத்தோடே வைத்தநுபவிக்கவேணுமென்கிற வீச்வரேச்சையொழிய வேறொன்றில்லாமையாலே, (கேவலபகவதிச்சையிறே) என்கிறார். ப்ராரப்த்தகர்மமடியாக விருக்கிற த்ருப்தவிஷயத்திலும் பகவதிச்சையுண்டாகையாலே அத்தை வ்யாவர்த்திக்கிறது (கேவல) சப்தத்தாலே.

கஎO. இப்படி தன்விருப்பத்துக்கு விஷயமான விவன்சரீரத்தை அவன் விரும்பும்ப்ரகாரமருளிச்செய்கிறார் மேல், ("திருமாலிருஞ்சோலைமலை") என்றுதுடங்கி. அதாவது - தெற்குத்திருமலையையும் திருப்பாற்கடலையும், என்னுத்தமாங்கத்தையுமொக்க விரும்பாநின்றான், ஸ்ரீவைகுண்ட்டத்தையும் வடக்குத்திருமலையையும் என்னுடையசரீரத்தையு மொக்கவிரும்பாநின்றான் என்றாரிறே யாழ்வார். இப்படி வோரோரவயவங்களிலே யிரண்டிரண்டு திருப்பதியில் பண்ணும் விருப்பத்தைப் பண்ணினனென்றவிது எல்லாத்திருப்பதிகளிலும் பண்ணினவிருப்பத்தை வோரோரவயவங்களிலே பண்ணிநின்றானென்னுமதுக்குபலக்ஷணம். ஆகையாலே, அப்பாட்டிற் சொல்லுகிறபடியே தனக்கபிமதமான திவ்யதேசங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை, ஜ்ஞாநியான விவனுடைய சரீரைகதேசத்திலே பண்ணுமென்கிறார்.

ஆ,—கஎக. இரண்டிடத்துக்குமுண்டானவாசி யருளிச்செய்கிறார்மேல், (அங்குத்தைவாஸம்) இத்யாதியால். பரமபதாதிபோகஸ்த்தலமான வங்குத்தை நிரந்தரவாஸம், ஆழ்வார் திருமேனியில் அலப்ப்யவாஸம்பெறுகைக்கு ஸித்தஸாதநமாயிருக்கும்; ஆழ்வார் திருமேனியிலிருப்பாகிற ப்ராப்யமான விங்குத்தை ஸிச்ஸிந்தவாஸம், ஸாதநாநுஷ்டாநயோக்யமான தத்தத்ஸ்த்தலவிசேஷங்களிலிருப்பால் பெற்ற சரமஸாத்யமாயிருக்கும். இத்தால் ஸாபேக்ஷஸாதநத்தைப்பற்ற நிரபேக்ஷஸாத்யம் ப்ரதாநமென்றபடி.

கஎஉ. இந்த ஸாத்யாதரம் ஸாதநாதரத்தை மழுங்கப்பண்ணுமென்கிறார் மேல், ("கல்லும்") இத்யாதியால். திருமலைதுடக்கமான திவ்யதேசங்களை த்ருணவத்கரிக்கும்படியே, இவர் திருமேனியாகிற ஸாத்யதேசம் தனக்கே யற்றுத் தீரும்படி நேராக ஸித்தித்து, அத்தால் ஸாதநமான அந்த திவ்யதேசங்களில் பண்ணுமாதரம் முன்புபோலன்றியே, இருக்கிலுமாம் போகிலுமாமென்னும்படி மட்டமாயிருக்குமென்கிறார். வைவாஹிகக்ருஹாஸக்தனுக்கு ஸ்வக்ருஹஸ்த்திதிபோலவாம்; ஸாத்யத்தின் போக்யதாதிசயம் காணக்காண வதிசயிக்கிற ஸாதநாதராதிசயம், ஸாத்யாநுபவாதரம் அதிசயித்தவாறே மந்தமாய்விடுமென்றபடி.—இவருடைய ஸாத்யமவனுக்கு ஸாதநமாய் அவனுடைய ஸாத்யமிவர்க்கு த்யாஜ்யமாயிருக்கிறது.

---

கஎக. அங்குத்தைவாஸம் ஸாதநம்; இங்குத்தைவாஸம் ஸாத்யம்.

கஎஉ. "கல்லும் கனைகடலும்", என்கிறபடியே இது ஸித்தித்தால் அவற்றிலாதரம் மட்டமாயிருக்கும்.

---

ஜீ.—கஎக. உகந்தருளின நிலங்களிலெல்லாவற்றிலும்பண்ணும்விருப்பத்தை இவ்விஷயமொன்றிலுமே பண்ணுமென்றார்கீழ்; இவ்விஷயம் ஸித்தித்தால் உகந்தருளின நிலங்களிலாதரம் அவனுக்கு ஸங்குசிதமாமென்னுமிட மருளிச்செய்கைக்காக, இரண்டிடத்துக்குமுண்டான வாசியை யருளிச்செய்கிறார், (அங்குத்தை) என்றுதுடங்கி. உகந்தருளின நிலங்களில் விரும்பி வர்திக்கிறது, உசிதோபாயங்களாலே சேதநரை யகப்படுத்திக்கொள்கைக்காகையாலே, (அங்குத்தைவாஸம் ஸாதநம்) என்கிறது. இச்சேதநன் திருந்தி இவன் ஹ்ருதயத்திலுள்ளே தான்வஸிக்கப்பெற்றவிது, அங்கு நின்றுபண்ணின க்ருஷிபலமாகையாலே, (இங்குத்தைவாஸம் ஸாத்யம்) என்கிறது. "நாகத்தணைக்குடந்தை" "மலைமேல்தான்நின்று" "பனிக்கடலுட்பள்ளிகோளை" இத்யாதிகளிலே, இவற்றினுடைய ஸாதநஸாத்யங்கள் தோற்றுகின்றதிறே.

கஎஉ. இந்த ஸாதநஸாத்யத்வப்ரயுக்தமான ஆதரதாரதம்யத்தை யருளிச்செய்கிறார், ("கல்லும்") என்றுதுடங்கி. அதாவது - தன் திருவுள்ளத்திலே புகுந்தபின்பு தனக்குப் புறம்போன்றிலுமாதரமில்லையென்று தோற்றும்படி அவனிதிலே அத்யாதரத்தைப்பண்ணி நித்யவாஸம்பண்ணுகையாலே, திருமலையும், தன் ஸந்நிதாநத்தாலே கோஷிக்கிற திருப்பாற்கடலும், ஒருத்தர்க்குமெட்டாத பரமபதமானதேசமும், புல்லியவாய்த்தினவோ என்றாரிறே யாழ்வார். இப்படியே ஸாத்யமான விச்சேதநஹ்ருதயம் ஸித்தித்தால் இதுக்குஸாதநமாக முன்பு விரும்பிப்போந்த திவ்யதேசங்களிலாதரம் ஸங்குசிதமாயிருக்குமென்கை. ஸாத்யம் கைபுகுருமளவுமிறே ஸாதநத்திலாதரம் மிக்கிருப்பது.

ஆ.—களங. அவனுக்கு அவற்றிலாதரம் மட்டமானபடியை, முதலிக்கிறார்மேல், (இளங்கோயில்) இத்யாதியால். பாலாலயமான திருப்பாற்கடலைக் கைவிடாதே கொள்ளென்று ப்ரார்த்தித்து, இவர் வலியமூட்டும்படியாய்த்து அவற்றிலாதரம் மட்டமானபடி யென்கிறார்.

களச. அபிமததமஸாத்யத்தைப் பெற்றபின்பு அவற்றிலாதரந்தான் நடப்பானென் என்ன, ஆகாரத்வயத்தைப்பற்ற வென்கிறார்மேல், (ப்ராப்ய) இத்யாதியால். போக்தாவான வெம்பெருமான், தனக்கு சரமப்ராப்யமான ஆழ்வார்க்கு ப்ரீதிவிஷயங்களாகையாலும், இவ்வோநிலைவாசியன்றோ ஆழ்வாரைப்பெற்றதென்னும் க்ருதஜ்ஞதையாலும், ப்ராப்யமான ஆழ்வாரைப் பெற்றபின்பும், ப்ராபகங்களான அந்ததிவ்யஸ்த்தலங்கள் நித்யவாஸம்பண்ணும்படி யபிமதங்களாயிருக்குமென்கிறார். போக்

களங. "இளங்கோயில்கைவிடேல்" என்றிவன் ப்ரார்த்திக்க வேண்டும்படியாயிருக்கும்.

களச. ப்ராப்யப்ரீதிவிஷயத்வத்தாலும் க்ருதஞ்ஜதையாலும் பின்பவை அபிமதங்களாயிருக்கும்.

ஜீ.—களங. ஆதரம்மட்டமாம்படிக்கு அவதியை தர்சிப்பிக்கிறார், (இளங்கோயில்) இத்யாதியாலே. அதாவது-ஸ்ரீபூதத்தார், தம்மைப் பெறுகைக்குறுப்பாக முன்பு தான்விரும்பின திவ்யதேசங்களில் முன்புத்தையாதரமின்றிக்கே தன்றிருவுள்ளத்திலே யத்யாதரத்தைப் பண்ணிச் செல்லுகிறபடியைக்கண்டு, அவ்வோதிவ்யதேசங்களைக்கைவிடப் புகுகிறானோ என்றதிசங்கைப்பண்ணி, என்ஹ்ருதயத்திலே புகுந்திருக்கைக்கு பாலாலயமான திருப்பாற்கடலைக் கைவிடாதொழியவேணும் என்றாரிறே. ஆகையால், இப்படி இவன் ப்ரார்த்திக்க வேண்டும்படியாய்த்து அவனுக்கவற்றிலாதரம் மட்டமாம்படியென்கை.

களச. இப்படி யிவனர்த்தித்தாலும், ஸாத்யம் ஸித்தித்தபின்பு அவனுக்கவை யபிமதங்களாயிருக்குமோவென்ன வருளிச்செய்கிறார், (ப்ராப்ய) இத்யாதியாலே. (ப்ராப்ய ப்ரீதிவிஷயத்வ) மாவது-தனக்கு ப்ராப்யபூதனான விச்சேதநனுடைய வுகப்புக்கு விஷயமாயிருக்கை; கண்டியூரரங்கம் மெய்யம்கச்சி பேர்மல்லையென்று மண்டியிறே யிவனிருப்பது. (க்ருதஜ்ஞதை) யாவது-இவ்வோதேசவாஸத்தாலேயன்றோ நாமிவனைப்பெற்றதென்று அத்தேசம்தனக்குப்பண்ணின வுபகாரத்தை யநுஸந்த்திக்கை. இவையிரண்டாலும், ஸாத்யமான விச்சேதநன் கைபுகுந்திருக்கச்செய்தேயும் அவனுக்கு அவ்வோதேசங்களபிமதங்களாயிருக்குமென்கை. ஆக, (குணம்போலே தோஷநிவ்ருத்தி) என்றுகீழ்ச்சொன்ன சேஷத்வபாரதந்த்ர்யரூபாத்மகுணம்போலே தோஷநிவ்ருத்தியும், (பராநுபவத்துக்குவிலக்கு) என்று ப்ரதிஜ்ஞைபண்ணி ததுபபாதநார்த்தமாக அபிமதவிஷயத்தில் அழுக்கு அபிமதமாயிருக்கும்படியையும், இவன் "அழுககுடம்பு" என்று கழிக்கிறவிதிலே யவனத்யாதரத்தைப் பண்ணும்படியையும், ஜ்ஞாநியானவிவனை ஸவிக்ரஹமாக வாதரிக்கைக்கு ஹேதுவிசேஷத்தையும், பரமார்தனவிவன் தேஹஸ்த்திதிகொண்டே இவன் தேஹத்திலவன் விருப்பமறியலாமென்னுமத்தையும், அவனிவனுடைய தேஹத்தைவிரும்பும் ப்ரகாரத்தையும், ஸாத்யமானவிது ஸித்தித்தால் ஸாதநாதரம் மட்டமாம்படியையும், அதினெல்லையையும், இவன் அவ்வோதேசங்களைக் கைவிடாதொழியவேணுமென்று அர்த்தித்தால் ஸ்வஸாத்யம் ஸித்தித்திருக்

ஆ.—யதாதிசயத்தால்வந்த ஆதரமன்றியே தத்ஸாதநத்வேந வந்த வாதரமே யவற்றிலுள்ளதென்றபடி.

௧௱௫. மேல், ப்ரஸ்துதமான ப்ராஸங்கிகார்த்தவிசேஷத்தை நிகமிக்கிறார், (ஆகையாலே) இத்யாதியால். இப்படி ஸ்வாச்ரிததோஷமே போக்யமாம்படி ஆதரவிசேஷமுண்டாகையால், ஸ்வாதீநதோஷநிவ்ருத்தி பராதீநஸ்வரூபவிரோதியாமாப்போலே, ஜ்ஞாநாநந்தங்களைப் பற்ற ஆந்தரகுணங்களான ஸ்வாதீநசேஷத்வபாரதந்த்ர்யங்களும் தத்போகவிரோதித்வேந ஸ்வரூபவிரோதிகளென்று ஸிம்ஹாவலோகநம்பண்ணி, (குணம்போலே தோஷநிவ்ருத்தி) என்கிற வாக்யார்த்தத்தை நிகமிக்கிறார்.

௧௱௬. தோஷநிவ்ருத்யம்சத்தில்வரும் தோஷமேதென்ன, அந்த ஸ்வாதீநதோஷநிவ்ருத்திதானே தோஷஸாதநமாமளவன்றிக்கே, பாரதந்த்ரஸ்வரூபநாசகமான தோஷம் தானுமிருக்குமிறே யென்கிறார்.

---

௧௱௫. ஆகையாலே, தோஷநிவ்ருத்தி போலே ஆந்தரகுணமும் விரோதியாயிருக்கும்.

௧௱௬. தோஷநிவ்ருத்திதானே தோஷமாமிறே.

---

ஜீ.—நச்செய்தேயும் ஹேதுத்வயத்தாலே அவனுக்கவை யபிமதங்களாயிருக்கும்படியையுமருளிச் செய்தார்.

௧௱௫. இப்படி தோஷநிவ்ருத்தி பராநுபவத்துக்கு விலக்கென்னுமிடம் ஸுஸ்பஷ்டமாம்படியான ஹேதுக்கள் பலவற்றையுமருளிச்செய்கையாலே அத்தை ஸித்திப்பித்தாராய், அதுதன்னை த்ருஷ்டாந்தமாக்கி ஸிம்ஹாவலோகநந்யாயத்தாலே கீழ்ச்சொன்ன சேஷத்வபாரதந்த்ர்யரூபாத்மகுணத்தினுடைய பராநுபவவிரோதித்வத்தை ஸ்திரீகரிக்கிறார், (ஆகையாலே) என்றுதுடங்கி. (ஆகையாலே)என்று-கீழே ஸித்திப்பித்தவர்த்தத்தையநுவதிக்கிறார். (தோஷநிவ்ருத்திபோலே) என்றது-தோஷங்கழிகை ஸ்வரூபௌஜ்ஜ்வல்யத்துக்குறுப்பாயிருக்கச்செய்தேயும், தோஷத்தையே போக்யமாக விரும்புகிற ப்ரணயியானவவனுக்கநபிமதமாகையாலே யாதொருபடி பராநுபவத்துக்கு விரோதியாகிறது, அதுபோலேயென்றபடி. (ஆந்தரகுணம்.) என்கிறது - சேஷத்வபாரதந்த்ர்யங்களை. இவற்றை (ஆந்தரகுணம்)என்கிறது-ஜ்ஞாநாநந்தங்களிலும்காட்டில் ஆத்மாவுக்கு அந்தரங்கமாகையாலே. இதினுடைய பராநுபவவிரோதித்வப்ரகாரம் கீழ்ச்சொல்லப்பட்டதிறே. இவ்விடத்திலும், (ஆந்தரகுணம்) என்கிறது-பாரதந்த்ர்யமொன்றையுமாகவுமாம்.

௧௱௬. இப்படி சொல்லுகைக்கு தோஷநிவ்ருத்தியில் வரும் தோஷமேதென்ன; வேறொருதோஷமும் வேண்டா, இதுதானே தோஷமாமென்கிறார், (தோஷ) இத்யாதியாலே. அதாவது - காமிநியானவள் தன்னுடம்பிலழுக்குக்கழற்றி போகத்திலே யந்வயிக்க நிச்சிக்குமாப்போலே, ஸ்வதஃபரிசுத்தமான வாத்மஸ்வரூபத்துக்கு வந்தேறியான தோஷத்தைக் கழித்து ஸ்வசேஷிக்கு போக்யமாக விநியோகப்படவேணுமென்று ஸ்வநிர்பந்தத்தாலே இவன்பண்ணுவித்துக்கொள்ளுகிற தோஷநிவ்ருத்திதானே, காமிநியுடைய வழுக்குகக்கும் காமுகனைப்போலே தோஷமேயபிமதமாய் இத்தோடே தன்னை புஜிக்கவாதரிக்கிற பரனுடைய போகத்துக்கு விலக்காகையாலே தோஷமாமிறேயென்கை. அவனுக்கு அநிஷ்டமாமதிறே தோஷமாவது. (இறே) என்று ப்ரஸித்தியோற்றவருளிச்செய்தது கீழுபபாதித்தத்தை யெல்லாம் நினைத்து.

ஆ.—கஎஎ. ஆகில், தோஷநிவ்ருத்தியத்நமன்றோ தோஷமாவது, தாந் தனக்கு ஸபார்ஜநம்பண்ணலாமேயென்ன, அதுவும் விரஸமாய் அப்ராப்த மாயிருக்குமென்னுமிடத்தை விசிஷ்டோக்தியாலே விசேஷிக்கிறார், (தன் னால்வரும் நன்மை) இத்யாதியால். தனக்குரியனல்லாத தன்னால் தனக்கு வருத்தப்பட்டுவரும் ஜ்ஞாநபக்த்யாதிநன்மை, விலைப்பால்போலே விரஸ முமாய், அப்ராப்தமுமாயிருக்கும். தனக்குரியஸ்வாமியான வவனால் வருத் தமற வரும் அந்த ஸ்வரூபஜ்ஞாநாதிநன்மை, ஸ்தநந்தயனுக்கு தாய் முலைப்பால்போலே ஸரஸமுமாய் ப்ராப்தமுமாயிருக்குமென்று திருக்குரு கைப்பிரான்பிள்ளானருளிச்செய்த வார்த்தை யென்கிறார்.

கஎஅ. ப்ராப்தனுமாய் ஆப்தனுமான வவன் தன்னுடைமையான விவ னுக்கு நன்மைதேடுகையொழிய, அப்ராப்தனுமாயநாப்தனுமான விவன் ஸ்வோஜ்ஜீவநநன்மை ஸ்வயத்நத்தாலே தேடுகையாவது - ஸ்தந்யைக தாரகனாய் மாத்ரைகரக்ஷ்யனான ஸ்தநந்தயப்ரஜையை, ப்ரியஹிதபர ராய் ரக்ஷிக்கும் மாதாபிதாக்கள்கையினின்றும் கத்தக்கத்தப்பறித்து வாங்கித் துடிக்கத்துடிக்க அறுத்தறுத்து மாம்ஸவிக்ரயம்பண்ணும் காது

---

கஎஎ. "தன்னால்வரும் நன்மை விலைப்பால்போலே, அவனால் வரும் நன்மை முலைப்பால்போலே" என்று பிள்ளான் வார்த்தை.

கஎஅ. அவனையொழியத்தான் தனக்கு நன்மைதேடுகையாவ து - ஸ்தநந்தயப்ரஜையை மாதாபிதாக்கள் கையில் நின்றும் வாங்கி காதுகனான ஆட்டுவாணியன்கையிலே காட்டிக்கொடுக்குமாப்போலே யிருப்பதொன்று.

---

ஜீ.—கஎஎ. ஆக, (நன்மைதானே தீமையாய்த்து) என்றும், (தனக்குத் தான்தேடும்நன்மை தீமையோபாதி விலக்காயிருக்கும்) என்றும், (தோஷ நிவ்ருத்திதானே தோஷமாமிறே) என்றும்-தான் தனக்குத் தேடும்நன்மை ஹேயமென்னுமிடம் சொல்லுகையாலே, அவன்தேடும் நன்மையே யுபா தேயமென்னுமிடம் பலித்ததிறே; இப்படி தான் தனக்குத்தேடும் நன்மை ஹேயம், அவன்தேடும் நன்மை யுபாதேயமென்னுமிடத்தை ஆப்தவசநத்தா லே தர்சிப்பிக்கிறார் மேல், (தன்னால்) என்றுதுடங்கி. (தன்னால் வரும்நன்மை) யாவது - ஸ்வயத்நத்தாலே தான் தனக்குண்டாக்கிக்கொள்ளும் நன்மை. (விலைப்பால்போலே) என்றது-ஔபாதிகமுமாய், விரஸமுமாய், அப்ராப்த முமாயிருக்குமென்கை. —(அவனால்வரும் நன்மை) யாவது - நிருபாதிகஸ்வா மியானவவன்றானே இவனுக்கிதுவேணும் என்றுண்டாக்கும் நன்மை.— (முலைப்பால்போலே) என்றது - நிருபாதிகமுமாய், ஸரஸமுமாய், ப்ராப்த முமாயிருக்குமென்கை.

கஎஅ. இவ்வளவன்றிக்கே, எம்பெருமானை யொழியத்தான் தனக்கு நன்மைதேடவிழிந்தால் ஸ்வவிநாசமே பலிக்குமென்னுமிடத்தை ஸநிதர் சநமாக வருளிச்செய்கிறார், (அவனை) என்றுதுடங்கி. அதாவது - ப்ராப் தனுமாயாப்தனுமானவவன் இவனுக்கு நன்மைதேடுமதொழிய, அதுக் கெதிர்தட்டானதான் தனக்கு ஸ்வோஜ்ஜீவநார்த்தமான நன்மைஸம்பாதி க்கையாவது - ஸ்வரக்ஷணோபயோகியான ஜ்ஞாநசக்திகளொன்றுமின்றிக் கே ஸ்வமாத்ராதிகளுணர்ந்து நோக்கவேண்டும்படியான ஸ்தநந்தயப்ர ஜையை, ரக்ஷகரான மாதாபிதாக்கள்கையில்நின்றும் வலியவாங்கி,

ஆ.—கனுன பாபி ஆட்டுவாணியன்கையிலே பையலேப்பசலேப் பேணி ரக்ஷி த்துக்கொள்ளென்று காட்டிக்கொடுத்து உயிர்க்கொலேக் கொல்லுவிக்கு மாப்போலே யிருப்பதொன்றென்கிறார்.

௧௭௯. இப்படி ப்ராப்தஸ்வாமியானவன் நன்மைதேடும்படி தேதே கரக்ஷ்யமாயிருக்கிற தன்னை தீமையை நன்மையென்றுதேடி ஹிம்ஸித்து க்கொள்ளும் அஹிதகரனுன தானேயிறே, "அஸந்நேவ" "அஸந்நேவ" என்றுருமாயும்படி கண்ணற்று முடிப்பானென்கிறார்.

௧௮௦. இது கீழிலர்த்தகிகமகமாய் மேலிலர்த்தஸங்க்ரகமுமானதொரு வார்த்தை, குணம் ஸ்வகதமென்னும் தோஷநிவ்ருத்தி ஸ்வாதீநதையென்னும் பராதீநஸ்வரூபத்தை முடிக்கையென்று உக்தார்த்தநிகமநப்ரகாரம் வக்ஷ்யமாணார்த்தாநுகுணமாக (தன்னைத்தான்முடிக்கை) யாவது - என்றநுபாஷித்து, ஸ்வரூபநாசகமான அஹங்காரத்தையும் ஹேயவிஷயங்

---

௧௭௯. தன்னைத்தானேயிறே முடிப்பான்.

௧௮௦. தன்னைத்தானே முடிக்கையாவது -அஹங்காரத்தையும் விஷயங்களையும் விரும்புகை.

---

ஜீ.— கொலேக்குக்கூசாதே உயிர்க்கொலேயாகக்கொன்று மாம்ஸங்களோடேகலசி விற்றுவிடும் காதுகனுன ஆட்டுவாணியன்கையிலே இத்தை நோக்கிக்கொள் என்று காட்டிக்கொடுக்குமாப்போலே யிருப்பதொன்றென்கை.—இத்தால் - ஸர்வேச்வரனேரக்ஷகன், தான் தனக்கு நாசகன் என்னுமிடம் சொல்லப்பட்டது.

௧௭௯. இப்படி யிவன் தன்னைத்தானே முடித்துக்கொள்ளுமோ வென்ன வருளிச்செய்கிறார், (தன்னைத்தானே) என்றுதுடங்கி. அதாவது-ஸர்வேச்வரன் இவனை யுஜ்ஜீவிப்பிக்கைக்கு அவஸரப்ரதீக்ஷனுய்ப் போருமவனுகையாலே இவனுடைய விநாசத்துக்கொருநாளும் அவன்ஹேதுவன்று, இனி "அஸந்நேவ" "அஸந்நேவ" என்னும்படி தன்னைநசிப்பித்துக்கொள்ளுவான் தானேயிறே யென்கை.—"யானேயென்னை" என்கிறபாட்டிலே, "யானே" என்று-என்னிழவு பகவத்க்ருதமல்ல, அவன் எதிர்சூழல்புக்குத்திரியாநிற்க நானேகிடீர்விநாசத்தைச் சூழ்த்துக்கொண்டேன் என்றாரிறே யாழ்வார்.

௧௮௦. இவன் தன்னைத்தானே முடிக்கையாவதேதென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார், (தன்னைத்தானே) என்றுதுடங்கி. அஹங்கார)மாவது—தேஹாத்மாபிமாநமும், ஸ்வாதந்த்ர்யாபிமாநமும்; (விஷயங்களா)வன- விஹிதநிஷித்தவிஷயங்கள்; இவற்றை (விரும்புகை)யாவது-இவற்றிலே மிகவும் ப்ரவணனுகை. ஆத்மஸ்வரூபந்தான் பகவதநந்யார்ஹசேஷமாய் பகவதேகபோகமாயிறே யிருப்பது; தாத்ருசஸ்வரூபத்தை நசிப்பிக்கையிறே-இவற்றிலே யிவன் ப்ரவணனுகையாவது.—உத்தரவாக்ய நமச்சப்தார்த்தஞ் சொல்லுகிறாராகில் இவையெல்லாமென்னென்னில்; உத்தரவாக்யத்தில் நமஸ்ஸிலே - புருஷார்த்தத்துக்கிடைச்சுவரான விரோதிகளெல்லாம் தள்ளுண்ணுமென்னுமிடந் தோற்றவிறே, "மநோவாக்காயை:" "மநோவாக்காயை:" என்றுதுடங்கி மூன்றுசூர்ணையாலே ஸகலவிரோதிநிவ்ருத்தியையும் பாஷ்யகாரரருளிச்செய்தது. இவர்தாமும் முமுக்ஷுப்படியிலே இந்த நமச்சப்தார்த்தம் சொல்லுகிறவளவில், "இதிலே யவித்யாதிகளும்கழியுண்ணும்" என்றாரிறே. ஆகையாலே இவ்விடத்திலும், தேஹாத்மாபிமாநாதிரூபமான அஹங்காரம், தத்கார்யமான விஷயப்ராவண்யம்,

ஆ.—களையும் அநர்த்தகரமபோக்யமென்றறியாமல் விளக்குகளை விரும்பும் ஐந்துபோல் விரும்புகையென்று அதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார்.

கஅக. அதில் முந்தற வஹங்காரத்தின்கொடுமையை விசதீகரிக்கிறார் மேல், (அஹங்காரம்) இத்யாதியால். தேஹாத்மாபிமாநரூபமாயும் விஷயப்ராவண்யஜநகமாயுமுள்ள அஹங்காரம், பட்டவிடமெங்கும் வேந்துருமாயும்படி சுட்டெரிக்கும் அக்நிஸ்பர்சம்போலே, அதாஹ்யமான ஸ்வரூபத்தையும் தக்தத்தமாக்கிவிடுமென்கிறார்.

கஅஉ. இப்படி யாச்ரயாசியான வஹங்காரஸ்பர்சமுள்ளவை யடங்க பரித்யாஜ்யங்களென்னுமிடத்துக்கு ப்ரமாணம் காட்டுகிறார்மேல்; "న కామ కలుషం చిత్తం మమ తే పాదయోస్స్థితమ్" "ந காமகலுஷம் சித்தம் மம தே பாதயோஸ்ஸ்திதம்" என்று ஸ்வாமியான உன்றிருவடிகளிலே நிலைநின்றவென்னெஞ்சு ஸ்ரீவைகுண்ட்டாதிகளாகிற காமங்களால் கலக்குண்ணாது; அவையெல்லாம் உன்னைப் பற்றவன்றியே என்னைப்பற்றிவருமன்று த்யாஜ்யங்களத்தனையென்றும்; "న హి మే జీవితేనార్థో నైవార్థైర్న చ భూషణైః। వసన్త్యా రాక్షసీమధ్యే వినా రామం మహారథమ్" "ந ஹி மே ஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர்ந ச பூஷணை:। வஸந்த்யா ராக்ஷஸீமத்த்யே விநா ராமம் மஹாரதம்" என்றுபெருமாள் விரும்பாத ஆத்மாத்மீயங்களாலெனக்கொரு ப்ரயோஜநமில்லை;

---

கஅக. அஹங்கார மக்நிஸ்பர்சம்போலே.

கஅஉ. "న కామకలుషం చిత్తమ్" "న హి మే జీవితేనార్థః" "న దేహమ్"

---

ஜீ.—ததுபயகார்யமான பாகவதாபசாரம்முதலான விரோதிகளையெல்லாம், ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக வருளிச்செய்கிறார்; ஆகையாலே விரோதமில்லை.

கஅக. இவ்வஹங்காராதிகளின் கொடுமையை விஸ்தரேணபபாதிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் அஹங்காரத்தின் கொடுமையை யருளிச்செய்கிறார், (அஹங்காரம்) என்றுதுடங்கி. (அக்நிஸ்பர்சம்போலே) என்றது - அக்நிஸ்பர்சமானது அங்வயித்தவிடமெங்கும் சுட்டுருவழிக்குமாப்போலே, இதுவும் ஆச்ரயாசியாய் ஸ்வரூபத்தை நேராக வுருவழித்துவிடுமென்கை.

கஅஉ. இவ்வஹங்காரத்தினுடைய க்ரௌர்யத்துக்கு ப்ரமாணங்கள் காட்டுகிறார்மேல். அதில் ப்ரதமத்திலே, ருக்வேதகிலமான ஜிதந்தாவசநத்தை யருளிச்செய்கிறார்;"న కామకలుషం చిత్తం మమ తే పాదయోస్స్థితమ్। కామయే వైష్ణవత్వం తు సర్వజన్మసు కేవలమ్" "ந காமகலுஷம் சித்தம் மம தே பாதயோஸ்ஸ்திதம்। காமயே வைஷ்ணவத்வந்து ஸர்வஜந்மஸு கேவலம்" இதுக்கர்த்தம்-க்ருபாதிகசேஷியாய் நிரதிசயபோக்யரான தேவரீர் திருவடிகளிலே வ்யவஸ்த்திதமான வென்னெஞ்சானது, ஸ்ரீவைகுண்ட்டாதிகளாகிற வேறொன்றை ஸ்வயம்புருஷார்த்தமாக நினைத்துக் கலங்கி யிருக்கிறதன்று, ஸர்வஜந்மங்களிலும் தேவர்க்கேகரஸமாம்படியிருக்கிற தாஸ்யத்தையே யாசைப்படாநின்றதென்று. கேவலபதத்தால் இத்தலைக்குமாயிருக்குமிருப்பைக் கழிக்கிறது; "து" "து"சப்தம் அவதாரணார்த்தம். இத்தால்மோக்ஷபர்யந்தமாகத்தன்னுகப்பால் வருமதெல்லாம் அஹங்காரகர்ப்பமாகையாலே த்யாஜ்யமென்னுமிடம் சொல்லப்பட்டது. அநந்தரம் பிராட்டிவசநத்தை யருளிச்செய்கிறார், "న హి మే జీవితేనార్థో నైవార్థైర్న చ భూషణైః। వసన్త్యా రాక్షసీమధ్యే వినా రామం మహారథమ్" "ந ஹிமே ஜீவிதேநார்த்தோ நைவார்த்தைர்ந ச பூஷ

ஆ.—அவற்றையவர்விரும்பாமைக்கடி நான் என்னுமென்று தூஷிக்கையாலேயிறே; இப்படி தூஷிதங்களாய் வருமுபேக்ஷாவிஷயங்களானவை எனக்கு த்யாஜ்யங்களன்றோவென்றும். "న దేహం న ప్రాణాన్ న చ సుఖమశేషాభిలషితం న చాత్మానం నాన్యత్కిమపి తవ శేషత్వవిభవాత్ । బహిర్భూతం నాథ క్షణమపి సహే యాతు శతధా వినాశం తత్సత్యం మధుమథన విజ్ఞాపనమిదమ్" "ந தேஹம் நப்ராணாந் ந ச ஸுகமசேஷாபிலஷிதம் ந சாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வவிபவாத் | பஹிர்ப்பூதம் நாதக்ஷணமபிஸஹே யாது சததா விநாசம் தத்ஸத்யம் மதுமதந விஜ்ஞாபநமிதம்" என்று தேவர் சேஷத்வத்துக்கசலாய் நான்என்னுமென்றபிமானித்த வாத்மாத்மீயங்களெல்லாவற்றையும் க்ஷணகாலமும் ஸத்தையுடனிருக்கக்காணவும் பொறேன், அவை விளக்குப்பிணம் பட்டுப்போயிடுகவென்றும். ("எம்மாவீட்டுத்திறமும் செப்பம்") உனக்குத் தருகிறோமென்றஹங்காரகர்ப்பமோக்ஷம் எல்லாப்ரகாரத்தாலும் விலக்ஷணமேயாகிலும், நிஷேதார்த்தமாகவும் அதின்பேர்சொல்லக்கடவோமல்லோமென்றும் தத்வஜ்ஞர் சொல்லுகிறபடியே, சண்டாளஸ்பர்சமுள்ளவை த்யாஜ்யமாமாப்போலே "అహం మమేతి చణ్డాలః" "அஹம் மமேதி சண்டால:" என்றுசொல்லுகிற அஹங்காரமாகிற சண்டாலஸ்பர்சமுள்ளதடங்க த்யாஜ்யமாமிறே. இப்படி

---

"நகாமகலுஷம் சித்தம்" "நஹி மே ஜீவிதேநார்த்த:"

"ந தேஹம்" "எம்மாவீட்டுத்திறமும்".

ஜீ.—க்ஷண: |வஸந்த்யா ராக்ஷஸீமத்த்யே விநா ராமம் மஹாரதம்" இதுக்கர்த்தம் மஹாரதரான பெருமாளைப்பிரிந்து ராக்ஷஸிகள்நடுவே வஸியாநிற்கிறவெனக்கு, ப்ராணனாலொரு ப்ரயோஜநமில்லை, அர்த்தங்களாலுமொரு ப்ரயோஜநமில்லை, ஆபரணங்களாலுமொருப்ரயோஜநமில்லையென்று. இத்தால் ப்ராணாதிகளெல்லாம் அத்தலையில் விநியோகத்துக்காக வன்றிக்கே தனக்கானபோது அஹங்காரஸ்பர்சியாகையாலே த்யாஜ்யமென்னுமிடம் சொல்லப்பட்டது. அநந்தரம், பரமாசார்யரான ஆளவந்தார்வசநத்தை யருளிச்செய்கிறார், "న దేహం న ప్రాణాన్ న చ సుఖమశేషాభిలషితం న చాత్మానం నాన్యత్కిమపి తవ శేషత్వవిభవాత్ । బహిర్భూతం నాథ క్షణమపి సహే యాతు శతధా వినాశం తత్సత్యం మధుమథన విజ్ఞాపనమిదమ్" "ந தேஹம் ந ப்ராணாந் ந ச ஸுகமசேஷாபிலஷிதம் ந சாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வவிபவாத் | பஹிர்ப்பூதம் நாத க்ஷணமபி ஸஹே யாது சததா விநாசம் தத்ஸத்யம் மதுமதந விஜ்ஞாபநமிதம்" இதுக்கர்த்தம்-எனக்குவகுத்த சேஷியானவனே, உன்னுடைய சேஷத்வமாகிற ஐச்வர்யத்துக்குப் புறம்பானதேஹத்தையும் க்ஷணமும் ஸஹியேன், இத்தேஹத்துக்கு தாரகங்களான ப்ராணங்களையும் ஸஹியேன், எல்லாராலுமாசைப்படப்பட்ட ஸுகத்தையும் ஸஹியேன், புத்ரமித்ரகளத்ராதிகளான மற்றொன்றும் ஸஹியேன், இவையித்தனைக்கும் போக்தாவானவாத்மாதன்னையும் ஸஹியேன், இதெல்லா மொருக்காணவொண்ணாதபடி சததாவாக நசித்துப்போகவேணும், இந்த விஜ்ஞாபநம் ஸத்யம், இங்ஙனன்றாகில் தேவர்க்குப்பொய்யனான மதுபட்டது படுகிறேன் என்று. இத்தால்-அத்தலையில் சேஷத்வத்துக்குப் புறம்பானதெல்லாம் அஹங்காரதுஷ்டமாகையாலே த்யாஜ்யமென்னுமிடம் சொல்லப்பட்டது. அநந்தரம், மயர்வறமதிநலமருளப்பெற்றவர்களில் தலையானவர்வசநத்தை யருளிச்செய்கிறார், (யெம்மாவீட்டுத்திறமும்) என்று. அதாவது - "ஆழ்வீர், மோக்ஷத்தைக்கொள்ளும்" என்ன; என்னுகப்புக்காகத் தருகிறமோக்ஷம் எப்ப்ரகாரத்தாலும்விலக்ஷணமாயிருந்ததேயாகிலும், அதின் இடையாட்டமும்

ஆ.—ஹீநமாய் அதிக்ரூரமான வஹங்காரத்தைத் தான்விரும்புகையாயிற்று (தன்னைத் தான் முடிக்கையாவது) என்கிறார்.

கஅரு. (விஷயங்களையும் விரும்புகை) என்று அஹங்காரத்துடன் ஆத்மநாசகரமாக வெடுத்த விஷயவிசேஷங்களின் கொடுமையை யருளிச் செய்கிறார்மேல், (ப்ரதிகூல விஷயஸ்பர்சம்) இத்யாதியால். சாஸ்த்ர நிஷித்தமாய் நரகஹேதுவாய்க்கொண்டு ஆத்மப்ரதிகூலமான அவிஹிதவிஷயஸ்பர்சம், அறிந்தறிந்துகுடிக்கும் ஆசீவிஷஸ்பர்சம்போலே அப்போதே முடித்துவிடும். சாஸ்த்ரவிஹிதமுமாய் நரகஹேதுவுமன்றியே விசிஷ்டவேஷாநுகூலம்போலே தோற்றுகிற விஹிதவிஷயஸ்பர்சம், க்ரூரவிஷமிச்ரமான சால்யந்நபோஜநம்போலே மேலெழ நன்மை போலத்தோற்றி முடிக்குமதாயிருக்கும். இரண்டும் தன்னில்தான் வாசிபட்டிருந்தாலும் அப்ராப்தவிஷயஹேயமாமிடத்து வாசியற்று நிலை நின்ற சரமவேஷமான அநந்யபோகத்வத்தைக் கொன்று நின்றுவிடும். ஒன்று நோக்க ப்ராதிகூல்யம்தோன்றினது; ஒன்றுமேலெழ ப்ராதிகூல்யம் தோற்றாதது; ஒன்று சாஸ்த்ரநிஷித்தம், ஒன்று தாத்பர்யநிஷித்தம்; ஒன்று அஸாரஜ்ஞசிஷ்டகர்ஹிதம், ஒன்று ஸாரஜ்ஞசிஷ்டகர்ஹிதம்; "విషస్య విషయాణాఞ్చ దూరమత్యన్తమన్తరమ్। ఉపభుక్తం విషం హన్తి విషయాస్స్మరణాదపి" "விஷஸ்ய விஷயாணாஞ்ச தூரமத்யந்தமந்தரம் । உபபுக்தம் விஷம் ஹந்தி விஷயாஸ்ஸ்மரணாதபி" என்று உபயவிஷயஸ்மரணமும் விஷஸ்பர்சத்தைப் பற்றவும் கொடிதென்றுநின்றதிறே.

---

கஅரு. ப்ரதிகூலவிஷயஸ்பர்சம் விஷஸ்பர்சம்போலே;
அநுகூலவிஷயஸ்பர்சம் விஷமிச்ரபோஜநம்போலே.

---

ஜீ.—ப்ரஸங்கிக்கக் கடவோமல்லோமென்கை. இத்தால் - தன்னுகப்பால் வரும் மோக்ஷமும் அஹங்காரகர்ப்பமாகையாலே, ஐச்வர்யாதிகளோபாதி த்யாஜ்யமென்னுமிடம் சொல்லப்பட்டது.

கஅரு. ஆக, அஹங்காரத்தின் கொடுமையை யருளிச்செய்தார்கீழ்; அநந்தரம், விஷயங்களின் கொடுமையை யருளிச்செய்கிறார் மேல், (ப்ரதிகூலவிஷயஸ்பர்சம்) என்று தொடங்கி. (ப்ரதிகூலவிஷய)மாவது - லோகவிருத்தமுமாய் நரகஹேதுவுமாயிருக்குமுள்ள நிஷித்தவிஷயம்; தத்ஸ்பர்சத்தை (விஷஸ்பர்சம்போலே) என்றது - ப்ராணபாதகத்வேந ப்ரஸித்தமாகையாலே ப்ராதிகூல்யம் தோற்றநின்று ப்ராணனை முடிக்கும் விஷஸ்பர்சம்போலே, சாஸ்த்ரநிஷித்ததயா ப்ரஸித்தமாகையாலே ப்ரதிகூலமென்றேதோற்றியிருந்து ஸ்வரூபநாசத்தைப்பண்ணுகையாலே.—(அநுகூலவிஷய)மாவது—லோகவிருத்தமுமன்றிக்கேநரகஹேதுவுமன்றிக்கே விசிஷ்டவேஷாநுகூலமாயிருக்குமுள்ள விஹிதவிஷயம்; தத்ஸ்பர்சத்தை (விஷமிச்ரபோஜநம்போலே) என்றது - விஷமிச்ராந்நபோஜநம் அதறியாதவனுக்குஅநுகூலமென்றேதோற்றியிருந்து அவன்ப்ராணனை முடித்துவிடுமாப்போலே, சாஸ்த்ரவிஹிததயா ப்ரஸித்தமாகையாலே. அநுகூலம்போலே தோற்றியிருந்து ஆத்மாவினுடைய வநந்யபோகத்வரூபமான ஸ்வரூபத்தை நசிப்பிக்கையாலே. "విషస్య విషయాణాంచ దూరమత్యన్తమన్తరమ్ । ఉపభుక్తం విషం హన్తి విషయాస్స్మరణాదపి" "விஷஸ்ய விஷயாணாம் ச தூரமத்யந்தமந்தரம் । உபபுக்தம் விஷம் ஹந்தி விஷயாஸ்ஸ்மரணாதபி" என்று—புஜிக்கவும் வேண்டாதே ஸ்மரணமாத்ரத்தாலும் முடிக்கையாலே, விஷத்திற்காட்டில் விஷயமதிக்ரூரமென்னுநின்றதிறே.

ஆ.—கஅச. ஆனாலும் விஷயாநுபவத்திலேயொருஸுகப்ரதீதியநுவர்த்தித்து மேல்விழப்பண்ணுகின்றதேயென்ன, அது விபரீதஜ்ஞாநமத்தனையென்கிறார்மேல், (அக்நிஜ்வாலையை) இத்யாதியால். "ఆస్వాద్య దహనజ్వాలా ముదాన్యా శమనం యథా। తథా విషయసంసర్గాత్సుఖచిన్తా శరీరిణామ్" "ஆஸ்வாத்ய தஹநஜ்வாலா முதாந்யா சமநம் யதா । ததா விஷயஸம்ஸர்காத் ஸுகசிந்தா சரீரிணாம்" என்று காட்டுத்தீக்கதுவ தாஹித்தவன், சேர்ந்துக் குளிர்ந்த தண்ணீராலே தன் விடாய்க்கெடாதே, கொழுந்துபட்டுச் சிவந்தெரிகிற அக்நிஜ்வாலையை மிடறும் நாவும் பல்லும் குளிரவிழுங்கி விடாய்கெடலாமென்று மநோரதிக்குமாப்போலவும்; "విషయాణాం చ సంసర్గాద్యో బిభర్తి సుఖం నరః। నృత్యతః ఫణినచ్ఛాయాం విశ్రమాయాశ్రయేత సః॥ ప్రకుపితభుజగఫణానామివ విషయాణామహం ఛాయామ్। సతి తవ భుజసురవిటపిప్రచ్ఛాయే రఙ్గజీవితం భజామి" "விஷயாணாம் ச ஸம்ஸர்காத் யோ பிபர்த்தி ஸுகம் நர: । ந்ருத்யத: பணிநச்ச்சாயாம் விச்ரமாயாச்ரயேத ஸ: ॥ ப்ரகுபிதபுஜகபணாநாமிவ விஷயாணாமஹம் சாயாம் । ஸதி தவ புஜஸுரவிடபிப்ரச்சாயே ரங்கஜீவிதம் பஜாமி" என்று படத்தைவிரித்தாடுகிற பாம்பின் பயங்கரமான படநிழலிலே யொதுங்கி யிளப்பாற நினைக்குமாப்போலவும்; விநாசகரக்ரூரமான விஷயங்களிலே ப்ரவணனாய் யாத்மாநுகூலமாக ஸுகிக்க நினைக்கையென்கிறார். தேஹபாதகங்களை ஆப்யாயகங்களென்று ப்ரமிக்குமத்தோடொக்கும் ஸ்வரூப பாதகவிஷயங்களை ஸுகஸாதநமென்று ப்ரமிக்கையும்.

கஅச. அக்நிஜ்வாலையை விழுங்கி விடாய்கெட நினைக்குமாப்போலேயும், ஆடுகிறபாம்பின் நிழலிலே யொதுங்கநினைக்குமாப்போலேயும், விஷயப்ரவணனாய் ஸுகிக்க நினைக்கை.

ஜீ.—கஅச. இப்படி விநாசகரமான விஷயங்களிலே ப்ரவணனாய் ஸுகிக்க நினைக்குமது விபரீதஜ்ஞாநகார்யமென்னுமத்தை ப்ரமாணப்ரஸித்தத்ருஷ்டாந்தமுகேந வருளிச்செய்கிறார், (அக்நிஜ்வாலையை) என்றுதுடங்கி. அதாவது - "ఆస్వాద్య దహనజ్వాలాముదన్యా శమనం యథా। తథా విషయసంసర్గాత్సుఖచిన్తా శరీరిణః" "ஆஸ்வாத்ய தஹநஜ்வாலாமுதந்யா சமநம் யதா । ததா விஷயஸம்ஸர்காத் ஸுகசிந்தாசரீரிண:" என்றும் "విషయాణాన్తు సంసర్గాద్యో బిభర్తి సుఖం నరః। నృత్యతః ఫణినచ్ఛాయాం విశ్రమాయాశ్రయేత సః" "விஷயாணாம் து ஸம்ஸர்காத் யோ பிபர்த்தி ஸுகம் நர: । ந்ருத்யத: பணிநச்ச்சாயாம் விச்ரமாயாச்ரயேத ஸ:" என்றும்சொல்லுகிறபடியே-தண்ணீர்க்கு விடாய்ப்பட்டவன், விபரீதஜ்ஞாநத்தாலே தாபஹேதுவான அக்நிஜ்வாலையைவிழுங்கித்தன்விடாய் தீரநினைக்குமாப்போலேயும்; ஆதித்யகிரணங்களாலே அதிமாத்ரதப்தனானவன் அந்ததாபத்தையாற்றுகைக்காக, நிழலென்கிற மாத்ரத்தைக் கொண்டு, ஆகாம்யநர்த்தத்தை நிரூபியாதே, அத்யந்தகுபிதமாய்ப் படத்தைவிரித்து நின்றாடுகிற பாம்பின்நிழலிலே யொதுங்கநினைக்குமாப்போலேயுமிருப்பதொன்று, பாதகமானவிஷயங்களை ஸுகாவஹமாக ப்ரமித்து அவற்றிலே ப்ரவணனாய், அவற்றையநுபவித்து ஸுகிக்க நினைக்குமதென்றபடி.

ஆ.—கஅரு. இவற்றின் ஸ்பர்சம்வேணுமோ, காணவேமுடியும்ம்ருது ப்ரக்ருதிகளுமில்லையோ வென்கிறார் மேல், (அசுணமா) இத்யாதியால். ம்ருதுப்ரக்ருதியான அசுணமாவென்கிற பக்ஷிவிசேஷம், இனியப்பாட்டு கேட்டுத் திரண்டுவந்து, பறையடிக்கக்கேட்டுப் பொட்டெனப்பட்டுக்கிடக்கு மாப்போலே, ஸ்வபோகவிதுரமாக ஸ்வாமிபோகைகபரனாய் விஷயஸ்மரணத்தில் மாய்ந்துபோம்படி ம்ருதுப்ரக்ருதியாயிருக்குமவன், இதரவிஷயங்களில் த்ருஷ்டிவிஷயமான கொடியகாட்சியிலே பீதபீதனாய் முடியும்படி யென்கிறார்.

கஅசு. ஏதத்தர்சநத்தில் முடியுமவஸ்த்தைபிறந்தமையை மூதலிக்கிறார்மேல்; "பல நீ காட்டிப்படுப்பாயோ" பஹுவிதமான த்ருஷ்டிவிஷமான விஷயங்களைக்கண்கள் பெறவாங்கிக்காட்டி முடிக்கப் பார்த்தாயோ, என்று ம்ருதுப்ரக்ருதிகள் சொல்லக்கடவதிறே யென்று.

கஅஎ. ஏதத்தோஷமறிந்தும் ப்ரவணராவாரைப்பற்ற, அறியாத வஜ்ஞரைத் திருத்தலாமென்கிறார், (அஜ்ஞனை) இத்யாதியால். விஷயாந்தரம் அநேகதோஷதுஷ்டம் தத்ப்ராவண்யமநர்த்தகரமென்றறியாத அஜ்ஞனை விஷயப்ரவணன், ஹிதம் சொன்னு விசைந்துதிருந்தும் நாஸ்

---

கஅரு. அசுணமா முடியுமாப்போலே, பகவதநுபவைகபரனாய் ம்ருதுப்ரக்ருதியா யிருக்குமவன் விஷயதர்சநத்தாலே முடியும்படி.

கஅசு. "காட்டிப்படுப்பாயோ" என்னக்கடவதிறே.

கஅஎ. அஜ்ஞனைவிஷயப்ரவணன் கேவலநாஸ்திகனைப்

---

ஜீ.—கஅரு. விஷயஸ்பர்சம் ஸ்வரூபநாசகம், விஷயப்ரவணனாய் ஸஹிக்க நினைக்குமது விபரீதஜ்ஞாநகார்ய மென்றிறே கீழ்ச்சொல்லிநின்றது; இவ்விஷயஸ்பர்சம் வேண்டா, பகவத்குணங்களிலே நைந்திருக்குமவன் இவற்றைக்காணவே முடியுமென்கிறார்மேல், (அசுணமா) என்றுதுடங்கி. அதாவது -அசுணமாவென்கிற பக்ஷி அதிமதுரமான காநச்ரவணத்தாலே நெஞ்சுநீர்ப் பண்டமாயிளகினதசையிலே அதிகடிநமான பறையையடிக்கக்கேட்டுப் பட்டுக்கிடக்குமாப்போலே யாய்த்து, பகவதநுபவமொன்றிலுமே தத்பரனாய் தத்குணரஸத்திலே நைந்து இதரவிஷயங்களின் பேர் கேட்கிலும் மாந்தும்படி ம்ருதுப்ராக்ருதியாயிருக்குமவன், பகவதேகபோகத்வரூபஸ்வரூபநாசகங்களான விஷயங்களைக் கண்டமாத்ரத்திலே யேங்கி முடியும்படியென்கை.

கஅசு. இவ்வர்த்தத்தை ஆப்தவசநத்தாலே யிசைவிக்கிறார், (காட்டி) என்றுதுடங்கி. அதாவது - அல்பரஸங்களாய் அநேகவிதங்களாயிருந்துள்ள துர்விஷயங்களைக்காட்டி, அவற்றோடு பொருந்தாதபடியாய் அவற்றுக்குப் பாங்கானநிலத்திலே யிருக்கைக்கீடான பாபத்தைப் பண்ணின வென்னை முடிக்கப்பார்க்கிறாயோ வென்றபடி.

கஅஎ. ஏவம்பூதவிஷயதோஷத்தை யறியாமையாலே யிதிலே ப்ரவணனுமவனுக்கும், இத்தையறிந்துவைத்தே ப்ரவணனு மவனுக்கும் வாசியை யருளிச்செய்கிறார் மேல், (அஜ்ஞனை) என்றுதுடங்கி. (அஜ்ஞனைவிஷயப்ரவணனு) கிறன் - விஷயங்களினுடைய தோஷபூயஸ்தையையும் ஸ்வரூபவிருத்ததையையும் அறியாதே, அவற்றையாசைப்பட்டு மேல் விழுகிறவன். (கேவல நாஸ்திகனு) கிறன்-தர்மாதர்மபரலோகசேதநேச்வராதிகளுக்கு ப்ரதிபாதகமான சாஸ்த்ரத்தில் ப்ராமாண்யபுத்தியொன்று

ஆ.—திகரைப்போலே விஷயதோஷம்சொன்னால் இசைந்து விரக்தனாய்த் திருந்தும் யோக்யதையுள்ளவன்; விஷயம் தோஷதுஷ்டம் அநர்த்தகரமென்றறிந்து அதிலே ஸக்தனாய் ஜ்ஞாநவானான விஷயப்ரவணன், சொல்லிற்றுக்கேட்டுத் திருந்துகைக்கு யோக்யதையற்ற ஆஸ்திகநாஸ்திகனைப்போலே விஷயதோஷம் சொல்லி திருத்திக்கொள்ள யோக்யதையற்றவன்.

கஅஅ. சாஸ்த்ர தர்மாதிஸர்வத்திலு மப்ராமாணிகனான கேவலநாஸ்திகனை ந்யாயோபதேசத்தாலே மெள்ள திருத்தலாம்; அவையெல்லாமுண்டென்றறிந்தும் உதாஸீநித்து யதேஷ்டம் சரிக்குமாஸ்திகநாஸ்திகனை, காலதத்த்வமுள்ளதனையும் ஸர்வசக்தியாலும் திருத்தவொண்ணாது. "అజ్ఞ స్సుఖమారాధ్య స్సుఖతరమారాధ్యతే విశేషజ్ఞః। జ్ఞానలవదుర్విదగ్ధం బ్రహ్మాపి నరం నరఞ్జయతి" "அஜ்ஞஸ்ஸுகமாராத்ய ஸ்ஸுகதரமாராத்யதே விசேஷஜ்ஞ:। ஜ்ஞாநலவதுர்விதக்த்தம் ப்ரஹ்மாபி நரம் நரஞ்ஜயதி" இறே.

கஅகூ. ஏவம்விதவிஷயங்களை விரும்புகை, (தன்னைத்தானேமுடித்துக்கொள்ளுகை) யாவது என்று ஸிம்ஹாவலோகநம்பண்ணி அவற்றால்

---

போலே; ஜ்ஞாநவானான விஷயப்ரவணன் ஆஸ்திகநாஸ்திகனைப்போலே.

கஅஅ. கேவலநாஸ்திகனைத் திருத்தலாம்; ஆஸ்திகநாஸ்திகனை யொருநாளும் திருத்தவொண்ணாது.

கஅகூ. இவையிரண்டும் ஸ்வரூபேண முடிக்குமளவன்றிக்கே

---

ஜீ.—மின்றிக்கே ஸ்வைரஸஞ்சாரபரனாய்த்திரிகிற சுத்தநாஸ்திகன். (ஜ்ஞாநவானான விஷயப்ரவணன்)கிறான்-விஷயங்களினுடைய தோஷதுஷ்டதையையும் ஸ்வரூபவிருத்ததையையு மறிந்துவைத்தே, அவற்றை விரும்பி மேல்விழுகிறவன்.-(ஆஸ்திகநாஸ்திகன்)கிறான்-தர்மாதர்மாதிஸகலப்ரதிபாதகமான சாஸ்த்ரத்தை ப்ரமாணமென்றிசைகையாலே ஆஸ்திகனென்று சொல்லலாம்படி யிருப்பானாய், அந்த சாஸ்த்ரமர்யாதையில் அடங்காதே தோற்றிற்றுச்செய்துதிரிகையாலே நாஸ்திகஸமனா யிருக்குமவன்.

கஅஅ. த்ருஷ்டாந்தபூதரான விவர்களிருவர்க்கும் விசேஷமேதென்ன வருளிச்செய்கிறார், (கேவல) இத்யாதியாலே. அதாவது - சாஸ்த்ரத்தையில்லையென்று, தோற்றிற்றுச்செய்துதிரிகிறவனை, சாஸ்த்ராஸ்திக்யம் பிறக்கைக்குறுப்பான உபதேசங்களைப்பண்ணி விதிநிஷேதவச்யனாம்படி திருத்தலாம்; சாஸ்த்ராஸ்திக்யமுடையனாய், தத்ப்ரதிபாத்யப்ரமேயங்களையும் அறிந்துவைத்து, பாபபயமின்றியே, நாஸ்திகவத் ஸ்வைரம்ஸஞ்சரிக்கிறவனைச்சொல்லியறிவிக்கத்தக்கதொன்றில்லாமையாலே யுபதேசமுகத்தாலொருநாளும் திருத்தவொண்ணாதென்கை.—இத்தால்-அஜ்ஞனான விஷயப்ரவணனை, விஷயதோஷாத்யுபதேசமுகத்தாலே விரக்தனாம்படி திருத்தலாம்; ஜ்ஞாநவானான விஷயப்ரவணனை, விஷயதோஷாதிகளை வ்யக்தமாகவறிந்துவைத்தே ப்ரவர்த்திக்கிறவனாகையாலே ததுபதேசத்தாலொருநாளும் திருத்தவரிதென்றதாய்த்து.—"అజ్ఞ స్సుఖమారాధ్య స్సుఖతరమారాధ్యతే విశేషజ్ఞః। జ్ఞానలవదుర్విదగ్ధం బ్రహ్మాపి నరం నరఞ్జయతి" "அஜ்ஞஸ்ஸுகமாராத்யஸ்ஸுகதரமாராத்யதே விசேஷஜ்ஞ:। ஜ்ஞாநலவதுர்விதக்த்தம் ப்ரஹ்மாபி நரம் நரஞ்ஜயதி" என்னக்கடவதிறே. ஆகையால், அவனிலுமிவன் நிக்ருஷ்டதமனென்றுகருத்து.

கஅகூ. (தன்னைத்தானே)என்கிற வாக்யத்தில் ஸ்வரூபநாசகங்களாகச்சொன்ன அஹங்காரத்தினுடையவும் விஷயங்களினுடையவும் க்ரௌர்

ஆ.—வரும் அநர்த்தவிசேஷத்தை யருளிச்செய்கிறார்மேல், (இவையிரண்டும்) இத்யாதியால். இப்படி யநேகதோஷதுஷ்டங்களான விவையிரண்டும் பகவச்சேஷத்வ ரூபஸ்வரூபத்தைக் கலக்கிமுடிக்குமளவன்றிக்கே, ஸ்வரூபோஜ்ஜீவநயோக்யதையுமறும்படி நித்யஸம்ஸாரியாக்கிவிடும் நிலைநின்ற பாகவதவிரோதத்தையும் மேன்மேலென விளைத்து மறுகிளை கிளையாதபடி முடிக்கும்.

கக௦. இந்த பாகவதவிரோதம் வைஷ்ணவர்களை விசேஷித்து உருமாயும்படி முடிக்குமென்கிறார்மேல், (நாமரூபம்)இத்யாதியால். வைஷ்ணவதாஸாதிநாமங்களையும் திருவிலச்சினையும் திருநாமம் முதலான வைஷ்ணவலக்ஷணரூபத்தையு முடையராயிருந்துவைத்து, உள்ளுப்போட்கராய் அஹங்காராதிக்ரஸ்தராய் அநர்த்தகரமான பாகவதவிரோதம்பண்ணிப் போருமவர்கள், வெந்து முருவுடைத்துப்போலத்தோற்றுகிற தக்த்தபடம் போலேயென்று.

ககக. இத்தை விசதீகரிக்கிறார்மேல், மடித்துச் செரியக்கொட்டின மடிப்புடவை தட்டுருவ வெந்தால், அப்போது உண்டையும் பாவுமொத்திக்கிடக்கிறது போலத்தோன்றும்; அநந்தரக்ஷணத்திலே யொருகாத்தடித்தவாறே சாம்பலும் காணவொண்ணாதபடி சிந்தாறுபட்டுப்பறந்துபோம்; அப்படியே ஆசார்யஸமாச்ரயணம்பண்ணி அழுக்கற்றொடுங்கி நாமரூபமினுக்கமுடையாரும், நிலைநின்ற பாகவதவிரோதத்தாலே சேஷத்வஸத்தாப்பசை

---

பாகவதவிரோதத்தையும் விளைத்து முடிக்கும்.

கக௦. நாமரூபங்களையுடையராய் பாகவதவிரோதம்பண்ணிப் போருமவர்கள் தக்த்தபடம்போலே.

ககக. மடிப்புடவைவெந்தா லுண்டையும் பாவுமொத்துக்கிட

---

ஜீ.—யத்தைத்தனித்தனியே யருளிச்செய்தார்கீழ்; உபயத்துக்குமுள்ளதொரு க்ரௌர்யவிசேஷத்தை தந்த்ரேண வருளிச்செய்கிறார்மேல், (இவை)என்றுதுடங்கி. அதாவது-உக்ததோஷயுக்தமான விவ்வஹங்காரமும் விஷயப்ராவண்யமுமாகிற விரண்டும், தானானவாகாரத்தாலே நின்று நசிப்பிக்குமளவன்றிக்கே, பாகவதாபசாரமாகிற மஹாநர்த்தத்தையும் விளைத்து ஸ்வரூபநாசத்தையும் பண்ணுமென்கை. (ஸ்வரூபேண)என்றது-ஸ்வேந ரூபேணவென்றபடி. அஹங்காராதிகளிலே ப்ரவணனானாலுள்ள வளவன்றிறே பாகவதாபசாரம் பண்ணினாலுள்ள பகவந்நிக்ரஹம்.

கக௦. ஆனால் பாகவதவிரோதம் விளைந்தபோதே ஸ்வரூபநாசம் பிறக்குமாகில், பாகவதவிரோதத்தைப் பண்ணிப்போராநிற்கச்செய்தே ஸ்வரூபாநுரூபமான நாமரூபங்களையுடையராய்க்கொண்டிருக்கிறபடி யெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார், (நாமரூபங்களை) என்றுதுடங்கி. அதாவது-வைஷ்ணவத்வசிஹ்நமான தாஸ்யநாமத்தையும் ததநுகுணமான ரூபத்தையுமுடையராய்க்கொண்டு, உள்ளொரு பசையின்றிக்கே அஹங்காராதிவச்யராய் பாகவதர்கள் திறத்திலே விரோதத்தைப்பண்ணிப் போருமவர்கள், உருக்குலைய வெந்திருக்கச்செய்தே, உருவுடைத்துப்போலே தோற்றியிருக்கும் தக்த்தபடத்தோடுஸத்ருசரென்கை.

ககக. தக்த்தபடத்தின்படி தன்னை தர்சிப்பிக்கிறார்மேல், (மடி)என்றுதுடங்கி. அதாவது -தட்டிமடித்திருக்கிற புடவையானது தட்டுருவ வெந்தும் வெந்திருக்கச்செய்தே உண்டையும் பாவும் முன்புபோலே யொத்திருக்கும், ஒருகாற்றுவந்து சிதற வடித்தவாறே உருக்காணவொண்ணாதபடி

ஆ.—யற வெங்கும் நாமரூபமுடையவர்போலத் தோன்றி, பத்தராவியின் சீற்றப்பெருங்காற்றடிக்க "அஸந்நேவ"ராய்ப் போவர்களென்றபடி.

௧௯௨. ஸர்வசக்தியான ஸர்வேச்வரன், நித்யவிபூதியிலிருப்புக்குலைந்து அவதரித்துத் தாழநின்றுபண்ணின பூம்யுத்தரணாதியான யானைத் தொழில்களெல்லாம், ஸ்ரீபூமிப்ரஹ்லாதவிபீஷணாதிகளை உதைத்தும், தண்டித்தும், பருஷித்தும் ஹிரண்யாக்ஷாதிகள் பண்ணின மஹாபாகவதாபசாரம் பொறாமையால் வந்த கைச்சினம் தீருகைக்காகவென்று நஞ்ஜீயரருளிச்செய்வரென்கிறார். ஆக, பாகவதாபசாரம் பண்ணினாரை ஆளிட்டன்றியே பகவான் தானே குட்டிக்கொலையாக வருத்துச் சினம் தீருமென்றபடி.

௧௯௩. "అవమానక్రియా తేషాం సంహరత్యఖిలం జగత్" "அவமாநக்ரியா தேஷாம் ஸம்ஹரத்யகிலம் ஜகத்" என்று அந்த பாகவதாபசாரந்தானே பகவான் தானும் வருந்தவேண்டாதபடி, ததீயாபசாரஸம்பந்தமுடைய ஸர்வஜகத்தையும் ஸம்ஹரிக்குமென்றாநின்றதிறே யென்கிறார்.

௧௯௪. இப்படி கொடிதான விந்த பாகவதாபசாரந்தான், ஜந்மநிரூபணம், ஜ்ஞாநநிரூபணம், வ்ருத்தநிரூபணம், ஆகாரநிரூபணம், அவயவநிரூபணம், பந்த்துநிரூபணமென்று அநேகவிதம்.

---

க்கும்; காற்றடித்தவாறே பறந்துபோம்.

௧௯௨. "ஈச்வரனவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை" என்று ஜீயரருளிச்செய்வர்.

௧௯௩. "అవమానక్రియా" "அவமாநக்ரியா."

௧௯௪. பாகவதாபசாரந்தான் அநேகவிதம்.

---

ஜீ.—பாறிப்பறந்துபோமென்கை. அப்படியே, அபசாராக்நிதக்த்தராய் வைத்து நாமரூபங்களோடே யிருக்கிறவர்களும் பகவந்நிக்ரஹவிசேஷத்தாலே பாறவடியுண்டு உருமாய்ந்து போவர்களென்றுகருத்து.

௧௯௨. பாகவதாபசாரம் பண்ணினால் ஈச்வரன் அஸஹமாநனாய் உசிததண்டம்பண்ணுமென்னுமத்தை ஆப்தவசநத்தாலே யருளிச்செய்கிறார், (ஈச்வரன்) என்றுதுடங்கி. அதாவது-ஸங்கல்பமாத்ரத்தாலே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வசக்தியான ஸர்வேச்வரன், தன்னையழியமாறி இதரஸஜாதீயனாயவதரித்துக் கைதொடனாய்நின்றுசெய்த ஹிரண்யராவணாதிநிரஸநரூபாத்யதிமாநுஷசேஷ்டிதங்களெல்லாம், ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் துடக்கமான அவ்வோபாகவதவிஷயங்களில் அவ்வவர்பண்ணினவபசாரம் ஸஹியாமையாலேயென்று, ஆப்ததமரான நஞ்ஜீயரருளிச்செய்வரென்கை.

௧௯௩. இந்த பாகவதாபசாரத்தினுடைய க்ரௌர்யத்தில் பகவதுக்தியை தர்சிப்பிக்கிறார், ("అవమానక్రియా" "அவமாநக்ரியா") என்று. "యా ప్రీతిర్మయి సంవృత్తా మద్భక్తేషు సదా స్తుతే । అవమానక్రియా తేషాం సంహరత్యఖిలం జగత్" "யா ப்ரீதிர்மயி ஸம்வ்ருத்தா மத்பக்தேஷு ஸதா ஸ்துதே। அவமாநக்ரியா தேஷாம் ஸம்ஹரத்யகிலம் ஜகத்" என்றானிறே.

௧௯௪. இப்படிப்பட்ட பாகவதாபசாரத்தினுடைய வைவித்த்யத்தை யருளிச்செய்கிறார், (பாகவதாபசாரந்தான்) என்றுதுடங்கி. (அநேகவிதம்) என்றது-ஜந்மநிரூபணம், ஜ்ஞாநநிரூபணம், வ்ருத்தநிரூபணம், ஆகாரநிரூபணம், பந்த்துநிரூபணம், வாஸநிரூபணம், இத்யாதிகளிலே பலபடிப்பட்டிருக்குமென்றபடி.

ஆ.—௧௧௫. இவற்றில் வைத்துக்கொண்டு இவையெல்லாமொரு தட்டும் தானொரு தட்டுமென்னும்படி அத்விதீயமாய் ஸத்தாநாசகரமாயிருக்கும், இந்த பாகவதர்பக்கல்பண்ணும் ப்ராஹ்மணாதியான ப்ரதமசரமஜந்மநிரூபணம்.

௧௧௬. இந்த ஜந்மநிரூபணந்தான், பூர்ணவிஷயமான அர்சாவதாரத்தில் தத்விக்ரஹோபாதாந த்ரவ்யநிரூபணஸ்ம்ருதியிலுங்காட்டில், ஸ்வஸத்தாநாசகரமாகையாலே யதிக்ரூரம்.

௧௧௭. "అర్చావతారోపాదానం వైష్ణవోత్పత్తిచింతనమ్ । మాతృయోనిపరీక్షయా స్తుల్యమాహుర్మనీషిణః" "அர்சாவதாரோபாதாநம் வைஷ்ணவோத்பத்திசிந்தநம் । மாத்ருயோநிபரீக்ஷயா ஸ்துல்யமாஹுர்மநீஷிண:" என்று வாச்யமானவற்றை பாபவிசேஷநிரூபணம்பண்ணும் சாஸ்த்ரம், மாத்ருயோநி பரீக்ஷையோடொத்த மஹாபாதகமென்று மூறையிட்டுச் சொல்லும்.

---

௧௧௫. அதிலேயொன்று அவர்கள்பக்கல் ஜந்மநிரூபணம்.

௧௧௬. இதுதான் அர்சாவதாரத்தி லுபாதாநஸ்ம்ருதியிலுங் காட்டில் க்ரூரம்.

௧௧௭. அத்தை மாத்ருயோநிபரீக்ஷையோடொக்கும் என்றுசாஸ்த்ரம் சொல்லும்.

---

ஜீ.—௧௧௫. அவற்றில் வைத்துக்கொண்டு, ஜந்மநிரூபணத்தினுடைய க்ரௌர்யத்தை யருளிச்செய்வதாக, அத்தை யுபாதாநம் பண்ணுகிறார், (அதிலேயொன்று அவர்கள்பக்கல் ஜந்மநிரூபணம்) என்று. (ஜந்மநிரூபண)மாவது-நிக்ருஷ்டகுலங்களிலே யவதீர்ணரான பாகவதர்களை, பகவதீயத்வப்ரயுக்தமான மாஹாத்ம்யத்தைப் பாராதே நிகர்ஷபுத்த்யா தத்தஜ்ஜந்மங்களை நிரூபிக்கை.

௧௧௬. இதினுடைய க்ரௌர்யந்தன்னை யருளிச்செய்கிறார், (இதுதான்) என்று துடங்கி. (இதுதான்)என்று -பாகவதஜந்மநிரூபணத்தை பராமர்சிக்கிறது. (அர்சாவதாரத்திலுபாதாநஸ்ம்ருதி) யாவது - ஆச்ரிதருகந்ததேதேனு மொருத்ரவ்யத்தைத்தனக்குத் திருமேனியாகக்கொண்டு அதிலே அப்ராக்ருததிவ்யவிக்ரஹத்தில் பண்ணும்விருப்பத்தைப்பண்ணி எழுந்தருளியிருக்கிற வைபவத்தையறியாதே நிகர்ஷபுத்திபண்ணி விக்ரஹோபாதாநத்ரவ்யமின்னதன்றோவென்று சிந்திக்கை; அதிலும்காட்டில் க்ரூரமாகையாவது - அத்தைப்பற்றவும் ஸர்வேச்வரனுக்கு அத்யந்தநிக்ரஹஹேதுவாகை.

௧௧௭. அதுதன்னினுடைய க்ரௌர்யந்தானெவ்வளவென்ன வருளிச்செய்கிறார், (அத்தை) இத்யாதியாலே. "అర్చావతారోపాదానం వైష్ణవోత్పత్తిచింతనమ్ । మాతృయోనిపరీక్షయా స్తుల్యమాహుర్మనీషిణః" "அர்சாவதாரோபாதாநம் வைஷ்ணவோத்பத்திசிந்தநம் । மாத்ருயோநிபரீக்ஷயா ஸ்துல்யமாஹுர்மநீஷிண:" என்னுகின்றதிறே. இப்படி உபயத்தையும் மாத்ருயோநிபரீக்ஷாஸாம்யமாக சாஸ்த்ரம் சொல்லிற்றேயாகிலும், அது அர்சாவதாரத்திலுபாதாநஸ்ம்ருதிக்கு நிதர்சநமாமித்தனை; வைஷ்ணவோத்பத்திசிந்தநம் அதிலும் க்ரூரமென்றிவர்க்குக்கருத்து. (மாத்ருயோநிபரீக்ஷை)யாவது-அந்யஸ்த்ரீயோநிவைலக்ஷண்யாவைலக்ஷண்யநிரூபணவாஸநையாலே இத்தையுமப்படி நிரூபிக்கை. (அத்தோடொக்கும்) என்றது - இப்படிநிரூபித்தால் அதுக்கெத்தனைபாபமுண்டு, அர்சாவதாரவிக்ரஹோபாதாநசிந்தநத்திலு மத்தனைபாபமுண்டென்றபடி.

ஆ.—௧௯௮. இந்தபாகவதாபசாரம் பண்ணினுல் வருமநர்த்தமென் என்ன, உத்தமவர்ணத்தை நீசவர்ணமாக்குமென்னுமிடத்தை மூதலிக்கிருர் மேல், (த்ரிசங்கு) இத்யாதியால். ஸசரீரஸ்வர்கம்பெறவேணுமென்று மூற்பட வஸிஷ்டரையும் பிற்படவவன் சிஷ்யர்களையுமபேக்ஷிக்க, ஆசார்யன் செய்யாததெங்களாற்செய்யமுடியாதென்ன, ஆகில், விச்வாமித்ரன்பக்கல் போவேனென்ன, நீ கர்மசண்டாலனுவாயென்று சபிக்க, இந்த பாகவதாபசாரத்தாலே மார்பிலிட்ட பரிசுத்த்தமான யஜ்ஞோபவீதந்தானே ஸ்பர்சயோக்யதையற்ற வாராய்விட்டு சண்டாலவேஷமாய்நின்ற த்ரிசங்குவென்

---

௧௯௮. த்ரிசங்குவைப்போலே கர்மசண்டாலனுய், மார்விலிட்ட யஜ்ஞோபவீதந்தானே வாராய்விடும்.

---

ஜீ.—௧௯௮. இவ்வபசாரத்துக்குபலம், தக்த்தபடம்போலே நஷ்டகல்பனுயிருந்து தேஹாவஸாநத்திலே உருமாய்ந்துபோமளவேயல்ல, இவ்வபசாரம்பண்ணினபோதே கர்மசண்டாலனுய்விடுமென்கிருர், (த்ரிசங்குவைப்போலே) என்றுதுடங்கி. அதாவது - இக்ஷ்வாகுவம்ச்யனுயிருக்கிற த்ரிசங்குவாகிற ராஜா, தன்குலகுருவாயிருக்கிற வஸிஷ்டமஹர்ஷியை, ஸசரீரஸ்வர்காவாப்த்யர்த்தமாக வென்னை யஜிப்பிக்கவேணுமென்றபேக்ஷிக்க; மஹர்ஷி, அதுநமக்கசக்யமென்ன; அங்குநின்றும் தத்புத்ரர்கள் தபஸ்ஸு பண்ணுகிறவிடத்திலேசென்று இச்செய்தியைச்சொல்லி அவர்களை மிகவுமநுவர்த்தித்து, நீங்களென்னையிப்படி யஜிப்பிக்கவேணுமென்று நிர்பந்த்திக்க; நீ துர்புத்தியாயிருந்தாய், மஹர்ஷி, 'போகாது, என்றதத்தையெங்களாலே செய்யப்போமோவென்ன; "తేషాం తద్వచనం శ్రుత్వా క్రోధపర్యాకులాక్షరమ్। స రాజా పునరేవైతానిదం వచనమబ్రవీత్ ॥ ప్రత్యాఖ్యాతోఽభగవతా గురుపుత్రైస్తథైవ చ। అన్యాం గతిం గమిష్యామి స్వస్తి వోఽస్తు తపోధనాః" "தேஷாம் தத்வசநம் ச்ருத்வா க்ரோதபர்யாகுலாக்ஷரம்। ஸ ராஜா புநரேவைதாநிதம் வசநமப்ரவீத் ॥ ப்ரத்யாக்யாதோ பகவதா குருபுத்ரைஸ்ததைவ ச। அந்யாம் கதிம் கமிஷ்யாமி ஸ்வஸ்தி வோऽஸ்து தபோதநா:" என்று அவன்க்ருத்த்தநாய், குருவானவவரும் தத்புத்ரர்களான நீங்களும் மாட்டோமென்றீர்களாகில், நான்மற்றோரிடத்திலே போகிறேன், நீங்கள ஸுகமேயிருங்கோளென்ன, "ఋషిపుత్రాస్తు తచ్ఛ్రుత్వా వాక్యం ఘోరాభిసంహితమ్। శేపుః పరమసంక్రుద్ధాశ్చణ్డాలత్వం గమిష్యసి" "ருஷிபுத்ராஸ்து தச்ச்ருத்வா வாக்யம் கோராபிஸம்ஹிதம்। சேபு:பரமஸங்க்ருத்தாச்சண்டாலத்வம் கமிஷ்யஸி" என்று ஸ்வாசார்யனையும் தத்புத்ரர்களான தங்களையுமிவன் அவமதிபண்ணிச்சொன்ன வார்த்தையைக்கேட்டு அவர்கள்மிகவும்க்ருத்த்தராய், நீசண்டாலனுகக்கடவையென்றுசபிக்க, "అథ రాత్ర్యాం వ్యతీతాయాం రాజా చణ్డాలతాం గతః। నీలవస్త్రధరో నీలః పరుషో ధ్వస్తమూర్ధజః ॥ చిత్రమాల్యాఙ్గరాగశ్చ ఆయసాభరణోఽభవత్" "அத ராத்ர்யாம் வ்யதீதாயாம் ராஜா சண்டாலதாங்கத:। நீலவஸ்த்ரதரோ நீல: பருஷோ த்வஸ்தமூர்த்தஜ:॥ சித்ரமால்யாங்கராகச்ச ஆயஸாபரணோऽபவத்" என்கிறபடியே அநந்தரம் அவன் கர்மசண்டாலனுய்விட்டானிறே. அப்படியே பாகவதாபசாரம் பண்ணினபோதே கர்மசண்டாலனுய், ப்ரஹ்மவர்ச்சஸ்த்வத்துக்குறுப்பாகமார்பிலிட்டயஜ்ஞோபவீதந்தான் சண்டாலவேஷத்துக் கடைத்தவாராய்விடுமென்கை. அங்குசாபஸித்த்தமாகையாலே ப்ரத்யக்ஷமாய்த்து; இங்குசாஸ்த்ரஸித்த்தமாகையாலே ஜ்ஞாநத்ருஷ்டிவிஷயமாகவிருக்கும். "అనాచారాన్ దురాచారానజ్ఞాతౄన్ హీనజన్మనః। మద్భక్తాన్ శ్రోత్రియో నిన్దన్ సద్యశ్చణ్డాలతాం వ్రజేత్" "அநாசா

ஆ.—கிற ராஜாவைப்போலே, மற்றுமொருவன் பாகவதாபசாரம்பண்ணினால் நீசனாய் உத்தமலக்ஷணமும் நீசலக்ஷணமாய்விடுமென்கிறார்.

௧௯௯. "[Telugu-script quotation] ''அநாசாராந் துராசாரா நஜ்ஞாத்ருந் ஹீநஜந்மந:। மத்பக்தாந் ச்ரோத்ரியோ நிந்தந் ஸத்யச்சண்டாலதாம் வ்ரஜேத்" இத்யாதிகர்மசண்டாலனென்ன விசேஷாந்திக்கு பலமருளிச்செய்கிறார் மேல்; ஜாதியாலே சண்டாலனானவனுக்கு அந்தஜந்மந்தன்னிலே ஜந்மாந்தரத்தே பகவத்கடாக்ஷமுண்டாவதொரு காலாந்தரத்திலே பாகவதனையீடேறுகைக்கு யோக்யதையுண்டு; அந்தகாலாந்தரஸம்பந்தயோக்யதையுமில்லை பாகவதாபசாரப்பட்டு கர்மசண்டாலனை விப்பாவிக்கு.

௨௦௦. அதெத்தாலேயென்ன, ஸ்ரீவைஷ்ணவத்வமாகிற உயர்ந்த நிலத்திலேயேறி, பாகவதாபசாரப் பெருங்காற்றுதள்ள, நித்யஸம்ஸாரமாகிற பாதாளத்திலே ஸ்வரூபம் தகரவிழுந்துமுடிந்த ஆரூடபதிதனாகையாலே, வைஷ்ணவனாய் பாகவதாபசாரம்பண்ணினவனுக்கு பகவதநுக்ரஹம்பெற்று ஒருகாலத்திலுமீடேற விரகில்லை யென்றுகருத்து.

௨௦௧. இப்படி யதம்பதிப்பிக்கும் பாகவதாபசாரந்தனக்குப் பெரியவன் பண்ணினால் அபசாரமில்லை, சிறியவனுக்கே வுள்ளதென்கிற அதிகாராநதிகாரரூபமான அதிகாரிநியமமில்லை.

௧௯௯. ஜாதிசண்டாலனுக்கு காலாந்தரத்திலே பாகவதனாகைக்கு யோக்யதையுண்டு; அதுவுமில்லை யிவனுக்கு.

௨௦௦. ஆரூடபதிதனாகையாலே.

௨௦௧. இதுதனக்கு அதிகாரிநியமமில்லை.

---

ஜீ.—ராந் துராசாரா நஜ்ஞாத்ருந் ஹீநஜந்மந: । மத்பக்தாந் ச்ரோத்ரியோ நிந்தந் ஸத்யச்சண்டாலதாம் வ்ரஜேத்" என்னக்கடவதிறே.

௧௯௯. சண்டாலனேயாதியாகிலும் இவனுமொருகாலத்திலே யீடேறுமென்றுநினைக்கைக் கவகாசமில்லாதபடி, ஜாதிசண்டாலனில் கர்மசண்டாலனுக்குள்ளதண்மையை யருளிச்செய்கிறார், (ஜாதிசண்டாலனுக்கு) என்றுதுடங்கி. அதாவது - ஜாத்யா சண்டாலனானவனுக்கு தஜ்ஜந்மத்திலேயாதல் ஜந்மாந்தரத்திலேயாதல் பகவத்கடாக்ஷமுள்ளதொரு காலவிசேஷத்திலே நாமரூபங்களையுடையனாய் பகவத்ஸம்பந்தநிரூபிதனாகைக்கு யோக்யதையுண்டு, அந்தயோக்யதையுமில்லை பாகவதாபசாரரூபகர்மத்தாலே சண்டாலனை விப்பாபிஷ்டனுக்கு.

௨௦௦. அதுக்கடி-பாகவதத்வமாகிற வுயர்ந்தநிலத்திலேயேறி "[Telugu-script quotation] '' "பத்மகோடிசதேநாபி நக்ஷமாமி" என்னும்படி அதிக்ரூரமான பகவந்நிக்ரஹத்துக்கு ஹேதுவான பாகவதாபசாரத்தாலே பாறவடியுண்டு அத:பதித்தவனாகையாலே யென்கை.

௨௦௧. இதுதான் ஜந்மாதிகளாலும் ஜ்ஞாநாதிகளாலும் அபக்ருஷ்டரானவர்கள் உத்க்ருஷ்டவிஷயத்தில் பண்ணுமளவிலேயோ, அவற்றாலுத்க்ருஷ்டரானவர்கள் அபக்ருஷ்டவிஷயத்தில் பண்ணுமளவிலுமொக்குமோவென்ன வருளிச்செய்கிறார், (இதுதனக்கு) இத்யாதியாலே. அதாவது பாகவதாபசாரத்துக்கு அப்படியிருப்பதோரதிகாரி நியதியில்லையென்கை.

ஆ.—உ0உ. இதுக்கு ப்ரமாணங்காட்டுகிறார்மேல், (தமர்கள்) இத்யாதியால். ஸாங்கரத்த்யயநம்பண்ணி ததீயச்ரேஷ்ட்டருமான உத்க்ருஷ்ட ஜந்மிகளேயாகிலும், உனக்கநந்யார்ஹரான ஸ்ரீவைஷ்ணவர்களை ஜந்மாதிகளையிட்டு நிந்திப்பர்களாகில், அந்த க்ஷணத்திலே பேர்த்தடியிடுவதற்கு முன்னே முகம்பார்க்க யோக்யதைபற்றவவர்கள்தாங்கள், ஒருபோலி கண்டால் சண்டாலரோடொப்பரென்றலா மத்தனையல்லது அவர்களுத்க்ருஷ்டராம்படி மிகத்தண்ணியரென்று தத்த்வதர்சியான தொண்டரடிப்பொடியாழ்வாரருளிச்செய்கையாலே, பெரியோரும் பாகவதாபசாரத்தாலே யநர்த்தப்படுவர்; இதில் சிறுமைபெருமை யில்லையென்னுமிடம் ஸித்தம்.

உ0௩. இவ்வர்த்தவிச்வாஸார்த்தமாக இதிஹாஸத்வயத்தையும் ஸ்மரிப்பிக்கிறார், (இவ்விடத்திலே) இத்யாதியால். ஒருப்ராஹ்மணபுத்ரன்வேதாத்த்யயநம்பண்ணிகுருதக்ஷிணைசெய்யவேணுமென்று அதிநிர்பந்த்திக்க, குருவும் கோபித்து எண்ணூறுபச்சைக்குதிரைக் கொண்டுவாவென்ன, தேசாந்தரபர்யடநம்பண்ணி யிளைத்துவிழுகிற தசையிலே, தனக்கு ஸப்ரஹ்மசாரியான பெரியதிருவடியை நினைக்க, அவரும்வந்து இவனை யுடன்கொண்டு, ஒருவிந்த்யத்திலேயொரு ஜ்ஞாநாதிகையுடைய திருமாளிகை

---

உ0உ. "தமர்களில் தலைவராய் சாதியந்தணர்களேலும்" என்கையாலே.

உ0௩. இவ்விடத்திலே, வைநதேயவ்ருத்தாந்தத்தையும்,

---

ஜீ.—உ0உ. இதுதனக்கு ப்ரமாணமுண்டோவென்னு மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார், (தமர்களில்) என்றுதுடங்கி. அதாவது - ஸாங்கமாக ஸகலவேதங்களையும் அத்த்யயநம்பண்ணி ததீயச்ரேஷ்ட்டருமாய் உத்க்ருஷ்டஜந்மாக்களுமாயிருந்தார்களேயாகிலும், தேவரீர் திருவடிகளில் ஸம்பந்த்தைகநிரூபகரான ஸ்ரீ வைஷ்ணவர்களை ஜந்மாதிகளையிட்டு நிந்திப்பர்களாகில், காலாந்தரே தேசாந்தரே யன்றிக்கே அப்போதே யவ்விடந்தன்னிலே யவர்கள்தாங்கள் சண்டாலரும், இவர்களுக்கொருபோலிமாத்ரமென்னும்படி அவர்களிற்காட்டி லத்யந்தநீசராவரென்று, தத்த்வயாதாத்ம்யதர்சிகளான ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வாரருளிச்செய்கையாலேயென்கை.

உ0௩. இவ்வர்த்தவிஷயமாக இரண்டு ஐதிஹ்யத்தை ஸ்மரிப்பிக்கிறார், (இவ்விடத்திலே) என்றுதுடங்கி. (வைநதேயவ்ருத்தாந்த)மாவது- விச்வாமித்ரன்பக்கலிலே வித்யைகளெல்லாமதிகரித்த காலவனென்கிற ப்ராஹ்மணன், குருதக்ஷிணையைக்கொடுத்தாலொழிய நமக்கு இவ்வித்யைகள் நிலைநில்லாதென்றுபார்த்து, நானிங்குத்தைக்கு தக்ஷிணையாகத் தரத்தக்கதேது என்றுகேட்க, நீ நமக்கொன்றும் செய்யவேண்டா, நாமுன்னுடைய சிச்ருஷையாலும் பக்தியாலும் மிகவும் ப்ரீதரானோம், இனி யுன்னுடைய இஷ்டத்திலே போயிரு என்று பலகாலும் சொன்னவளவிலும், இவனது செய்யாதே, ஸர்வதா, என்பக்கலிலே தக்ஷிணைவாங்கிக்கொள்ளவேணுமென்று அதிநிர்பந்த்தம்பண்ணுகையாலே, "కిం చిదాగతసంరమ్భో విశ్వామిత్రో உబ్రవీదిదమ్ । ఏకతశ్శ్యామకర్ణానాం శతాన్యష్టౌ తు దేహి మే । హయానాం చన్ద్రశుభ్రాణాం గచ్ఛ గాలవ మా చిరమ్" "கிஞ்சிதாகதஸம்ரம்ப்போ விச்வாமித்ரோ உப்ரவீதிதம் । ஏகதச்ச்யாமகர்ணாநாம் சதாந்யஷ்டௌது தேஹி மே । ஹயாநாம் சந்த்ரசுப்ராணாம் கச்ச காலவமாசிரம்" என்றுஅவன்குபிதனாய், இவ

ஆ.—யேறவெழுந்தருளி அவளாலேஸத்க்ருதராய், இவளிங்கேயிருப்பதே
யென்றுநினைக்க, சிறகுமுதிர்ந்து விம்மல்பொருமலாய்ப்பட, அவள் திருக்
கைகளாலே ஸ்பர்சிக்க ஸ்வஸ்த்தராய் தந்முகே குருதக்ஷிணையும் பண்
ணிவித்தாரென்கிற வைநதேயவ்ருத்தாந்தத்தையும்; ஓரயநத்தினன்றுநீரா
டி கரையேறுகிறபிள்ளைப்பிள்ளை யாழ்வானை ஆழ்வான்நல்லகாலமாயிருக்
தது, இன்றுமுதலாக த்ரிவிதகரணங்களாலும், பாகவதாபசாரம்பண்
ணேமென்று தாரைவாருமென்ன, அவருமப்படியேசெய்து திருமேனியி
லுபேக்ஷபிறந்து, ஈரத்திருப்பரிவட்டத்துடன் திருமாளிகையிலே முசி
த்துக் கண்வளர, ஆழ்வானுமாண்டானைப்பார்த்து இந்நேரமாயும் ஆழ்
வான் வந்திலரீயென்ன, அவளும்குருவின்கழுத்தில் பனங்காயாகவேதேனு
மருளிச்செய்ததுண்டோவென்ன, சிறிதுண்டென்றுஅவர் திருமாளிகை

பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு

ஜீ.—னைப்பார்த்து உடம்பெங்கும் சந்த்ரமண்டலம்போலே வெளுத்து ஒரு
செவி பச்சையாயிருக்கும் எண்ணூறுகுதிரை நமக்குக்கொண்டுவந்துதர,
என்ன, இத்தைக்கேட்டுமஹாவ்யாகுலனாய், இதுக்கினிச்செய்வதென் என்
று பஹுமுகமாகவிசாரித்து ஸர்வாபேக்ஷிதப்ரதனான ஸர்வேச்வரனை யுபா
ஸிப்போம் என்று உத்யோகிக்கிற வளவிலே, முன்பேயிவனுக்கு ஸகாவாயி
ருக்கிற பெரியதிருவடிநாயனார் இவனுக்குவந்து முன்னிற்க ; அவரைஸ்
தோத்ரம்பண்ணி, இதுக்குச்செய்யவடுப்பதென்னென்றுகேட்க ; அவரு
ன்னை நாஸிப்பூமியெங்கும் கொண்டுபோகிறேன், இருவரும் கூட ஆராய்
வோம்வாஎன்று இவனை யிடுக்கிக்கொண்டு திரிகிறவளவிலே, இனைப்பான
வாறே, இங்கேயிளைப்பாறிப் போகக்கடவோமென்று மேல்ஸமுத்ரத்திலே
ருஷபமென்கிற பர்வதத்தின்மேல் வஸிபாநிற்பாளாய் ஜ்ஞாநாநிகையாயி
ருக்கிற சாண்டிலியென்கிற பாகவதையைச் சென்றுகண்டு அபிவாத
நாதிகளைப்பண்ண, அவளத்யாதரத்தோடே மிகவும் ஸத்கரிக்க, அநந்த
ரம் விச்ராந்தராய் சயிக்கிறவளவிலே, இப்படிவிலக்ஷணையா யிருக்கிறவிவள்
ஓருவிலக்ஷணதேசங்களிலே வஸிக்கப்பெற்றதில்லை யென்று பெரியதிருவடி
நாயனார்விசாரித்து, இவளையிங்குநின்றும் நாமொரு திவ்யதேசங்களிலே
கொண்டுபோய்வைக்கக் கடவோமென்று நினைத்துக்கொண்டு கிடக்கச்செ
ய்தே, அந்த பாகவதைபிருந்த தேசத்தைக் குறையநினைத்த விவ்வபசா
ரத்தாலே சிறகுகளுமுதிர்ந்து நிச்சேஷ்டராய்விட, இத்தைக்கூடப்போன
ப்ராஹ்மணன்கண்டு "కిన్ను తే మనసాధ్యాత మశుభంపతతాంవర । నహ్యయంభవతస్స్వ
ల్పో వ్యభిచారోభవిష్యతి" "கிந்நுதேமநஸாத்த்யாத மசுபம் பததாம்வர ।
நஹ்யயம்பவதஸ்ஸ்வல்போ வ்யபிசாரோ பவிஷ்யதி" என்றேதேனும் உம்மு
டைய திருவுள்ளத்தாலே தீங்குகள் நினைத்ததுண்டோ, தேவரீருக்கு அல்
பமும் வ்யபிசாரம்வருகைக்கு யோக்யதையில்லையேயென்ன, உண்டாயிற்
றுக்காணென்று தா மந்தபாகவதைவிஷயத்தில் நினைத்தப்ரகாரத்தை யவ
னுக்கருளிச்செய்து, அநந்தரமித்தைப் பொறுக்கவேணுமென்றவளைச்செ
ன்றநுவர்த்தித்து, அவளநுக்ரஹத்தாலே அவ்வபசாரம் நீங்கி முன்புபோ
லேயானாரென்கிறது. இதுதான் ஸ்ரீக்ருஷ்ணன் ஸ்ரீதூதெழுந்தருளினபோ
து நாரதாதிமஹர்ஷிகள் பலரும் வந்திருக்கிறவளவிலே க்ருஷ்ணன் திருவு
ள்ளத்தைப்பின் செல்லுகைக்குறுப்பாக த்ருதராஷ்ட்ரனைக்குறித்து பலக
தைகளும்சொல்லி வருகிற ப்ரகரணத்திலே; ஸ்ரீநாரதபகவானநுக்ரஹித்த
தாக உத்யோகபர்வத்திலே உக்தமாகையாலே, வேதாந்தோபப்ரும்ஹண

ஆ.—க்கெழுந்தருள; அவரும் துடித்துக்கொண்டெழுந்திருந்து திருவடிகளிலேவிழுந் தஞ்ஜலித்து நிற்க, திருவுள்ளத்தில் முசிப்பென்னென்று வினவியருள, அபசாரஹேதுவான சரீரமன்றோவிடாமல் படுத்துகிறதென்ன, நல்லீரிவ்வளவநுதாபம்பிறந்ததே, காயிகம்கூடாது, மாநஸமெம்பெருமானிடையிடும், வாசிகமொன்றையும் குறிக்கொண்டிருமென்ன, அவரும் மௌனியாய்ப் போரும்படி பிள்ளைப்பிள்ளையாழ்வானுக் காழ்வான் பணித்தவார்த்தையையும் ஸ்மரிப்பதென்கிறார். ஆக நித்யஸூரிகளோடு முமுக்ஷுக்களோடு வாசியற, பாகவதாபசாரம் பரிஹரித்து வர்த்திக்கவேணுமென்றதாயிற்று.

௨௦௪. இந்த ததீயஸம்பந்தத்தாபசாரங்கள் பேறிழவுகளுக்கமைந்திருக்குமென்கிறார் மேல்; தத்த்வஜ்ஞாநமும் ததநுரூப ஸதநுஷ்டாநமுமின்றிக்கே யொழிந்தாலும், ததீய கைங்கர்யபர்யந்தமான பேற்றுக்கும்

---

ஆழ்வான் பணித்தவார்த்தையையும் ஸ்மரிப்பது.

௨௦௪. ஜ்ஞாநாநுஷ்டாநங்களை யொழிந்தாலும் பேற்றுக்கு

---

ஜீ.—ஸித்தமிறே. (பிள்ளைப்பிள்ளையாழ்வானுக் காழ்வான் பணித்த வார்த்தை) யாவது- பிள்ளைப்பிள்ளையாழ்வானை யங்கீகரித்தநாளிலே, இவராபிஜாத்யாதிகளா லுத்க்ருஷ்டராகையாலே பாகவதவிஷயங்களிலவிநயமாக வர்த்தித்துக்கொண்டு போருகிறபடியைக் கண்டு, இவர்க்கிப்பாகவதாபசாரம் இவருடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்க ளெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தி தானேமேலாய் விநாசபர்யந்தமாக்கிவிடும், அதுக்குவேலியிட்டு வைக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி ஓரயநத்திநன்று நீராடியேறினவளவிலே, இவரைப்பார்த்து எல்லாரும் தாநம்பண்ணுகிற காலத்திலே நீரும் நமக்கொருதாநம் பண்ணமாட்டீரோவென்ன, அடியேனைத்தை தாநம்பண்ணுவது எல்லாமங்குத்தையதா யிருந்ததேயென்ன அர்த்தஸ்த்திதியன்றோவது, அவ்வளவும்போராது கரணத்ரயத்தாலும் பாகவதாபசாரம் பண்ணமல் வர்த்திக்கக்கடவேனென்று நங்கையிலே உதகம்பண்ணித்தரவேணுமென்ன, அப்படியே இவருமுதகம்பண்ணிக்கொடுத்த வநந்தரம் ஒருபாகவததோஷத்தைப் பூர்வவாஸனையாலே நினைத்து நாமினிமுடிந்தோமென்று பயப்பட்டுமூடிக்கொண்டு தம் திருமாளிகையிலே கண்வளர, இவர்முன்புவரும் காலத்தில் வரக்காணுமையாலே ஆழ்வானிவர் திருமாளிகையிலே யெழுந்தருளி, ஏன்தான்! முசிப்பென் என்று வினவியருள, தாம் மநஸ்ஸால் நினைத்தத்தை விண்ணப்பம்செய்து கரணத்ரயத்தாலுமபசாரம்புகுராதபடி இத்தேஹத்தோடுவர்த்திக்கை யரின்தறதுயிராநி என்செய்யக்கடவேனென்று திருவடிகளைக்கட்டிக்கொண்டு கிடந்து க்லேசிக்க, இத்தனையநுதாப மிவர்க்குண்டாகப்பெற்றோமேயென்றுகந்தருளி, மநஸ்ஸால் நினைத்ததுக் கநுதாபமுண்டாகவே ஈச்வரன் க்ஷமித்தருளும், ப்ரத்யக்ஷ தண்டபயத்தாலே காயிகமாகவொருவரையும் நலியக்கூடாது, ஆனபின்பவையிரண்டும் உமக்குக்கழித்துத்தந்தோம், இனிவாக்கொன்றையும் நன்றாகக்குறிக்கொண்டு வர்த்தித்துப்போருமென் றருளிச்செய்தது.

௨௦௪. பகவல்லாபஹேதுவான ஜ்ஞாநாநுஷ்டாநங்களிரண்டும் பரிபூர்ணமாகவுடையானொருவனுக்கு பாகவதாபசாரமுண்டாயிற்றாகிலும், பகவானதுக்கு லகுவானதொரு தண்டங்களைப்பண்ணிக்கூட்டிக் கொண்டு விடானோ? அவையிரண்டு மஸத்ஸமமாய் அபசாரமேப்ரபலமாய் எம்பெருமானை யிழந்தேபோய்விடு மென்னலாமோவென்ன வருளிச்செய்கிறார்,

ஆ.—ஜ்ஞாநாநுஷ்ட்டாநபூர்ணரான இந்தபாகவதர் பக்கல் தர்சநஸ்பர்சநாதி ஸம்பந்தமே அந்யநிரபேக்ஷமாக வமைகிறுப்போலே, பேற்றுக்கவச்யாபேக்ஷிதங்களான இந்தஜ்ஞாநாநுஷ்ட்டாநங்கள் பூர்ணமாக உண்டானாலும் பகவத்கடாக்ஷம்துடங்கி ததீய கைங்கர்யபர்யந்தமான பேற்றினிழவுக்கு, ஸ்வஸம்பந்தமாத்ரம் கொண்டுஜ்ஜீவிப்பிக்கு மிந்தபாகவதர்பக்கலில் ஏதேனுமோ ரபசாரமே நிரபேக்ஷ ஸாதநமாகப்போரு மென்கிறுர்.

உ0ரு. ஜ்ஞாநாநுஷ்ட்டாநஹீநரும்ததீயஸம்பந்தம்கொண்டே யுஜ்ஜீவிப்பர்கள், ஜ்ஞாநாநுஷ்ட்டாநபூர்ணரும் ததபசாரலேசத்தாலே பேற்றுக்கசலாவர்களென்னுமிதில், ஜந்மவ்ருத்தாதிகளால் மினுக்கமற்ற பாகவதஸம்பந்தமுண்டானவர்களுக்குப் பேறில்லை, ஜந்மவ்ருத்தமினுக்கமுள்ள பாகவதஸம்பந்தமுண்டாகிலாயிற்று பேறுண்டாவதென்கிற நியதியும், ஜந்மவ்ருத்தாதி மினுக்கமுள்ளவர் பாகவதாபசாரம்பண்ணினால்

---

அவர்கள்பக்கல் ஸம்பந்தமே யமைகிறுப்போலே, அவையுண்டானாலு மிழவுக்கவர்கள் பக்கலபசாரமே போரும்.

உ0ரு. இதில் ஜந்மவ்ருத்தாதி நியமமில்லை.

---

றினபோது "ఏష సర్వాయుధోపేత శ్చతుర్భిస్సహ రాక్షసైః । రాక్షసోఽభ్యేతి పశ్యధ్వ మస్మాన్
హన్తుం న సంశయః" "ஏஷஸர்வாயுதோபேத ச்சதுர்ப்பிஸ்ஸஹராக்ஷஸை:|ரா
க்ஷஸோऽப்யேதிபச்யத்த்வமஸ்மாந் ஹந்தும்நஸம்சய:" என்று நமக்கெ
ல்லா மோருயிரான பெருமாளை நலிகிறவழியாலே நம்மையெல்லாரையும்
முடிப்பதாகவருகிறா னிவனென் றறுதியிட்டு முதலிகளுக்குக்காட்டி,
"రాఘవం శరణం గతః" "ராகவம்சரணம்கத:" "నివేదయత మాం క్షిప్రమ్" "நிவே
தயதமாம்க்ஷிப்ரம்" என்ற உக்திகளைக் கேட்டுவைத்தும், "వధ్యతా మేష
తీవ్రేణ దణ్డేన సచివైస్సహ । రావణస్య నృశంసస్య భ్రాతా హ్యేష విభీషణః" "வத்த்யதாமே
ஷதீவ்ரேண தண்டேநஸசிவைஸ்ஸஹ| ராவணஸ்யந்ருசம்ஸஸ்யப் ப்ராதா

ஆ.—மங்களாசாஸநம் பண்ணின ஸ்ரீஜடாயுமஹாராஜர்பக்கலிலும்; "రక్షతుత్వా మశేషాణాం భూతానాం ప్రభవో హరిః । యస్య నాభిసముద్భూతపఙ్కజాదభవజ్జగత్" "ரக்ஷதுத்வா மசேஷாணாம் பூதாநாம் ப்ரபவோ ஹரிః । யஸ்ய நாபி ஸமுத்பூதபங்கஜாதபவஜ்ஜகத்" என்று பூதநாசிரஸநம்கண்டிருக்கச் செய்தேயும், துவளுகிற முக்த்த க்ருஷ்ணனைக் கண்டு ஸகலதுரித ஹரண நிபுணனை ஸர்வேச்வரனும்மை ரக்ஷிப்பானாகவென்று கோகரீஷங்கொண்டு ரக்ஷையிட்ட கூர்வேற்கொடுந் தொழிலனை ஸ்ரீ நந்தகோபர் பக்கலிலும்; "సంస్పృశన్నాసనం శౌరేర్మహామతిరుపావిశత్" "ஸம்ஸ்ப்ருசந்நாஸநம்சௌரேர்மஹாமதிருபாவிசத்" என்று பொய்யாஸநமிடக்கண்ட பீதியாலே தாமிட்டவாஸநத்தையும் சங்கித்துத் தொட்டு அமுக்கிப்பார்க்கும் மஹாமதியான ஸ்ரீவிதுரர்பக்கலிலும்; திருவரங்கச்



ஜீ —ஹ்யேஷவிபீஷணః" என்று ராவணஸம்பந்தத்தையேபார்த்து இவனைச்சித்ரவதம்பண்ணவேணுமென்பது. "రావణేన ప్రణిహితం తమవేహి నిశాచరమ్। తస్యాహం నిగ్రహం మన్యే క్షమం క్షమవతాంవర" "ராவணேநப்ரணிஹிதம் தமவேஹி நிசாசரம் । தஸ்யாஹம்நிக்ரஹம்மந்யே க்ஷமம்க்ஷமவதாம்வர" என்று ராவணன் வரவிடவந்தவனென்றேயவனைத்திருவுள்ளம்பற்றவேணும், அவனைத்தண்டிக்கையே ப்ராப்தமென்று புத்திபண்ணநின்றேனென்பதாய், இப்புடைகளிலே பலவற்றையும்சொல்லி இவனை ஸர்வதாகைக்கொள்ளவொண்ணாதென்று ஒருநிலைநின்று, "పిశాచాన్ దానవాన్" "பிசாசாந்தாநவாந்" இத்யாதியாலே தம்முடையபலத்தைக்காட்டியும் உபோதோபாக்யாநம் கண்டீபாக்யாநம் இவையருளிச்செய்தும், தெளிவித்து பயத்தைக் கெடுத்து "ఆనయైనం హరిశ్రేష్ఠ" "ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட" என்னவெண்ணும்படி பெருமாளைக்குறைச்சாக்காக நினைத்துக்காத்துக்கொண்டும் போந்தானிறே. (மஹாராஜர்)என்கிறது ஸ்ரீஜடாயு மஹாராஜரை என்றும் சொல்லுவர்கள்; அதாவது ஸ்ரீ ஜடாயுமஹாராஜர், பிராட்டிக்காக ராவணனோடே பொருது குத்துயிராய்க்கிடக்கிற தம்மை பெருமாள்வந்து கண்டவளவிலே, ஜநஸ்த்தாநத்திலிருந்த பதிநாலாயிரம் ராக்ஷஸரையும் தனிவீரம்செய்து நின்றுகொன்ற தோள்வலியையறிந்திருக்கச்செய்தேயும், "యామోషధిమివాయుష్మన్నన్వేషసి మహావనే । సా దేవీ మమ చ ప్రాణా రావణేనోభయం హృతమ్" "யாமோஷதிமிவாயுஷ்மந் நந்வேஷஸிமஹாவநே। ஸாதேவீ மமசப்ராணா ராவணேநோபயம்ஹ்ருதம்" என்று அருமருந்து தேடுவாரடவிதோறும் தடுமாறுமாப்போலே யாவளொருத்தியை இந்தப்பரந்தகாட்டிலே தேடிக்கொண்டுதிரிகிறீர், உமக்கு நித்யம்ப்ராணஸமையானவவளு மென்னுடையப்ராணங்களு மிரண்டும் ராவணனாகிறபையலாலே யபஹ்ருதமாயிற்றுக்காணுமென்று சொல்லாநிற்கச்செய்தே, இவருடைய விரஹக்லேசத்தால் வந்ததளர்த்தியையும் ஸௌகுமார்யத்தையும் ராக்ஷஸரோட்டை வான்பகையையும் நினைத்து என்னாகத்தேடுகிறதோவென்றஞ்சி, "ఆయుష్మన్" "ஆயுஷ்மந்" என்று ஆயுஸ்ஸை ப்ரார்த்தித்தாரிறே; ஸ்ரீநந்தகோபர், பூதநாசிரஸநத்தாலே க்ருஷ்ணனுடைய திவ்யசக்தியோகத்தைக் கண்டிருக்கச்செய்தேயும், சைசவப்ரயுக்தமான ஸௌகுமார்யத்தையே பார்த்துக்கலங்கி வயிறெரிந்து "రక్షతుత్వా మశేషాణాం భూతానాం ప్రభవో హరిః। యస్య నాభిసముద్భూతపఙ్కజాదభవజ్జగత్" "ரக்ஷதுத்வாமசேஷாணாம் பூதாநாம் ப்ரபவோஹரிః । யஸ்யநாபிஸமுத்பூதபங்கஜா

ஆ.—செல்வரெழுந்தருளும்போதெல்லா முருவினவாளும் கையுமா யுணர்த்தியுடன் ஸேவிக்குமர்ச்சாவதாரப் பரிவுடைய பிள்ளையுறங்காவில்லிதாஸர் பக்கலிலும்; பெருமாள் திருவொத்தசாமததிலே நாவற்பழப்ரஸாதமும் பால்ப்ரஸாதமும் வரவிட்டருள, விருத்தமானவிவற்றை யமுதுசெய்யப் பெருமாள் திருமேனிக்கென்வருகிறதோவென்று மோஹித்தருளின உடையவர் பக்கலிலும்; ஸௌரிராஜனுக்குச்சாற்றுகிற எண்ணெய்க்காப்பு திருக்கண்களிலேவழிய கரிக்குமென்றஞ்சி முன்கையாலேதுடைத்தும், பாலமுதுசுட்டென்று ஆறியமுதுசெய்யப்பண்ணியும், ஸௌகுமார்யத்தே கண்வைக்கும் வங்கிபுரத்தாய்ச்சி பக்கலிலும் ஸ்பஷ்டமாகக்காணலாமென்கிறார்.

உசஎ. இப்படி விசேஷஜ்ஞரோடவிசேஷஜ்ஞரோடு வாசியறமங்களாசாஸநம் பண்ணுவானென்னென்ன, தத்ஸௌந்தர்யஸக்ருத்தர்சநமிப்படி

---

தாஸர் துடக்கமானவர்கள் பக்கலிலே காணலாம்.

உசஎ. இளையபெருமாளை ஸ்ரீகுஹப்பெருமாளதிசங்கை

---

ஜீ.—தபவஜ்ஜகத்" என்று ஸர்வஜகத்காரணபூதனாய் ஸகலவிரோதிநிரஸநசீலனான ஸர்வேச்வரனும்மை ரக்ஷிப்பானாகவென்று ரக்ஷையிட்டாரிறே; ஸ்ரீவிதுரர், க்ருஷ்ணனுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வாதிகளை யறிந்திருக்கச்செய்தேயும், துர்யோதநகோஷ்டியிலே யெழுந்தருளினபோது பொய்யாஸநமிட்ட படியைக்கண்டஞ்சி, ப்ரேமாந்த்ததையாலே "సంస్పృశ్యాసనం శౌరే ర్విదురస్సమహామతిః" "ஸம்ஸ்ப்ருச்யாஸநம் சௌரேர்விதுரஸ்ஸமஹாமதி:" என்று தம்முடைய திருமாளிகையில் தாமிட்டவாஸநத்தையு மதிசங்கைபண்ணி தன்கையாலே யமுக்கிப்பார்த்தாரிறே; பிள்ளையுறங்காவில்லிதாஸர், அத்தலையில் ஜ்ஞாநசக்த்யாதிகளெல்லாமறிந்து பெருமாளே நமக்கு ரக்ஷகரென்றிராநிற்கச்செய்தேயும், ப்ரேமபரவசராகையாலே பெருமாளுலாவிவரும்போது எங்கேனுமொரு சலநம்பிறக்கில் நம்ப்ராணனைவிடுமித்தனையென்று சொட்டையை யுருவிப்பிடித்துக்கொண்டு ஸேவிப்பரென்று ப்ரஸித்தமிறே. துடக்கமானவர்களென்கிறவித்தால் "స్త్రియో వృద్ధాస్తరుణ్యశ్చ సాయం ప్రాతస్సమాహితాః । సర్వాన్ దేవాన్ నమస్యన్తి రామస్యార్థే యశస్వినః" "ஸ்த்ரியோவ்ருத்தாஸ்தருண்யச்ச ஸாயம்ப்ராதஸ்ஸமாஹிதா: । ஸர்வாந்தேவாந்நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விந:" என்று திருவயோத்யாவாஸிஜநங்கள்; "యన్మఙ్గలం సుపర్ణస్య వినతాऽకల్పయత్పురా । అమృతం ప్రార్థయానస్య తత్తే భవతు మఙ్గలమ్" "யந்மங்கலம்ஸுபர்ணஸ்ய விநதாகல்பயத்புரா । அம்ருதம் ப்ரார்த்தயாநஸ்ய தத்தேபவது மங்கலம்" என்று ஸ்ரீகௌஸல்யையார்; "జాతోऽసి దేవదేవేశ శఙ్ఖచక్రగదాధర । దివ్యరూపమిదం దేవ ప్రసాదేనోపసంహర" "ஜாதோ஽ஸிதேவதேவேச சங்க்கசக்ரகதாதர । திவ்யரூபமிதம்தேவ ப்ரஸாதே நோபஸம்ஹர" என்று ஸ்ரீவஸுதேவர்; "ఉపసంహర సర్వాత్మన్ రూపమేతచ్చతుర్భుజమ్ । జానాతు మాऽవతారం తే కంసోऽయం దితిజన్మజః" "உபஸம்ஹரஸர்வாத்மந் ரூபமேதச்சதுர்ப்புஜம் । ஜாநாதுமாவதாரந்தே கம்ஸோ஽யம் திதிஜந்மஜ:" என்று தேவகிபிராட்டி முதலானாரையெல்லாம் நினைக்கிறது.

உசஎ. இவ்விஷய வைலக்ஷண்யமாரையும் மங்களாசாஸநத்திலே மூட்டுமென்னுமிடத்துக் கின்னமோருதாஹரணம் காட்டுகிறார், (இளையபெருமாளை) என்றுதுடங்கி. அதாவது ச்ருங்கிபேரபுரத்திலே யெழுந்தருளி ஸ்ரீகுஹப்பெருமாளை விஷயீகரித்தருளினவன்று, பாங்கறிந்து இளைய

ஆ.—செய்விக்குமென்னுமிடத்தைக் காட்டுகிறார்; (இளையபெருமாள்) இத்யாதியால். பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்த்தராய் ஸ்ரீகுஹப்பெருமாளைச்சங்கித் தேற்றினவில்லுடனிமையாமல் நோக்குமிளையபெருமாளை, குறும்படித்துத்திரிந்தன்றுவந்து கண்ட ஸ்ரீகுஹப்பெருமாள் ஒருதம்பி காட்டேறத்தள்ளிவிட்டான், ஒருதம்பி பின்தொடர்ந்துவந்து ஸாயுதனாய்க்கொண்டு இடம்பார்த்திராநின்றான்; இவனேதேனும் தீங்குநினைக்கிலதுக்குத் தக்கதுகாண்போமென்றுருவினவேலும்தானுமாயதிசங்கைபண்ண; ஒருவன் ஜ்ஞாதி ஒருவன் குறும்பன் இவர்களேதேனும் பொல்லாங்கு நினைத்தார்களாகி லிருவர்க்கும் தக்கதுகாண்போமென்று அவர்களிருவரையுமதிசங்கைபண்ணி பரிவரான ஸ்ரீகுஹப்பெருமாளுக்குத்தீர்ந்தவரடங்கக்கண்டகாட்சியிலே மிகவும் பரிவராய், கண்வளர்ந்தருளுகிற பெருமாளை உருவினவாயுதத்துடன் விழித்துக்கொண்டிருந்து நோக்கிற்றிறே.

பண்ண இருவரையு மதிசங்கைபண்ணி ஸ்ரீகுஹப்பெருமாள் பரிகரம் பெருமாளை நோக்கிற்றிறே.

ஜீ.—பெருமாள் படுத்துக்குடுத்த பர்ணசய்யையிலே பெருமாளும் பிராட்டியும் பள்ளிகொண்டருளாநிற்க, பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்த்தராகையாலே என்வருகிறதோவென்றஞ்சி, முதுகிலிட்ட வம்பராத்தூணியும் கட்டின விரற்சரடும் நாணியேறிட்டு நடுக்கோத்துப்பிடித்தவில்லும் தாமுமாய் நடையாடும் மதிள்போலே வளையவருகிற விளையபெருமாளைக்கண்டு, ஸ்ரீ குஹப்பெருமாள் ஒருதம்பிதாயைக்கொண்டு ராஜ்யத்தை வாங்கி கட்டினகாப்போடே காட்டிலேதள்ளிவிட்டான், இவனுமவ்வோபாதி வொருதம்பியன்றோ, தனியிடத்திலே யென்செய்யநினைத்திப்படியாயத்தமாய் நின்றானென்று தெரியாதென்றதிசங்கைபண்ணி, அப்படியேதேனுமொருதீங்குநினைக்கில் இவன்தன்னைத் தீரக்காணக்கடவோமென்று வில்லும்கோலுமாய்க்கொண்டு இவரிட்டவடியிலே யடியிட்டுநிற்க; ஸ்ரீகுஹப்பெருமாளேவல்தொழில்செய்துதிரியும் பரிகரம், அவன்ஜ்ஞாதி இவன் குறும்பனானவன்னியன் இவர்களிருவருமாக வில்விஷயத்தை என்செய்யத்தேடுகிறார்களோவென்றிருவரையு மதிசங்கைபண்ணி, அப்படி செய்யிலிவர்களை யழியச்செய்தும் நாமத்தலையை நோக்கக்கடவோமென்று தனித்தனியே கையும் வில்லுமாய்க்கொண்டு பெருமாளைரக்ஷித்ததிறே யென்கை. ஸ்ரீ பரதாழ்வானுக்கு விசேஷம் சொல்லுகிறவிடத்திலே ஸ்ரீ குஹப்பெருமாள் "నియమ్యపృష్ఠేతుతలాంగులిత్రవాన్ శరైస్సుపూర్ణావిషుధింపరంతపః । మహద్ధనుస్సజ్యమపోహ్యలక్ష్మణో నిశామతిష్ఠత్త్వరితో౽స్యకేవలమ్ ॥ తతస్త్వహఞ్చోత్తమచాపబాణభృత్ స్థితో౽భవమ్ తత్రసయత్రలక్ష్మణః । అతన్ద్రిభిర్జ్ఞాతిభిరాత్తకార్ముకైర్మహేన్ద్రకల్పం పరిపాలయంస్తదా" "நியம்யப்ருஷ்டேதுதலாங்குலித்ரவாந் சரைஸ்ஸுபூர்ணாமிஷுதிம்பரந்தப꞉ | மஹத்தநுஸ்ஸஜ்யமபோஹ்யலக்ஷ்மணோ நிசாமதிஷ்டத்த்வரிதோ௨ஸ்யகேவலம்॥ ததஸ்த்வஹஞ்சோத்தமசாபபாணப்ருத் ஸ்த்திதோ௨பவம்தத்ரஸயத்ரலக்ஷ்மண꞉| அதந்த்ரிபிர்ஜ்ஞாதிபிராத்தகார்முகைர்மஹேந்த்ரகல்பம் பரிபாலயம்ஸ்ததா" என்றற்றை ராத்ரியில் வ்ருத்தாந்தத்தைச்சொன்னானிறே.

ஆ.—உசஅ. ஸித்தார்த்தத்தை யநுஸந்திக்கிறார் மேல், (ஒருநாள்) இத்யாதியால். (ஒருநாள்) என்றது ஏகக்ஷணத்திலென்றபடி ; (முகத்தில்) என்றது - ஈடுபடுத்துகைக்கவயவைகதேசமமையுமென்றபடி ; (விழித்த) என்றது - ஈடுபடுத்துகைக்கு ஸக்ருத்தர்சநமமையுமென்றபடி ; (விழித்தவர்களை) என்றது - ஈடுபடுவாரின்னாரின்னாரென்னும் நியதியில்லையென்றபடி ; (வடிவழகுபடுத்தும் பாடாயிற்றிது) என்று ஸ்வரூபகுணங்களீடுபடுத்துமதில் வ்யாவ்ருத்தி. ஆக ஜ்ஞாஜ்ஞவிபாகமற கண்டகாட்சியிலே மங்களாசாஸநத்திலே மூட்டவற்று தத்ஸௌந்தர்யமென்றதாயிற்று.

உசகூ. கண்டகாட்சியிலே ஸ்நேஹிக்கும்படியாக இவர்களிருந்தபடியென்னென்ன, இது பெரியதொன்றோ ஆழ்வார்கள் நிலைகண்டாலென்கிறார் ; விசேஷஜ்ஞரல்லாத சக்ரவர்த்திதுடக்கமானவிவர்கள் மங்களாசாஸநத்தில் புதியதுண்டறியாதே, நமக்கு நன்மைதேடுகிற தண்ணியரான நம்முடைய கோடியிலே யுள்ளவர்களத்தனை யென்று தோற்றும்படியிறே மயர்வறமதிநலம் பெற்றவாழ்வார்கள் மங்களாசாஸநத்தில் புரையற்ற நிலை. (இவர்கள்) என்று பிராட்டி ஜநகராஜன் பிள்ளையுரங்காவில்விதாஸர் முதலானாரொழிந்தவர்களைக் காட்டுகிறதென்றே கொள்ள வேணும் ; அவர்களை (நம்முடைய கோடியிலே) என்று தண்ணிதாக

---

உசஅ. ஒருநாள்முகத்திலே விழித்தவர்களை வடிவழகுபடுத்தும் பாடாயிற்றிது.

உசகூ. இவர்கள் நம்முடைய கோடியிலே யென்னும்படியாயிற்று ஆழ்வார்கள் நிலை.

---

ஜீ.—உசஅ. ஸ்ரீகுஹப்பெருமாளுக்கும் பரிகரத்துக்கும் கண்டமாத்ரமொழிய பெருமாளுடன் முன்பு வாஸனை யில்லையிறே ; இப்படி யிருக்கச் செய்தே இவர்களுக்கிவ்வாகாரம் கூடினபடி யென்னென்ன வருளிச்செய்கிறார், (ஒருநாள்) என்று துடங்கி. அதாவது நெடுநாள் வாஸனை பண்ணுகையன்றிக்கே ஒருநாள் முகதர்சநம் பண்ணினவர்களையும், அவன் விக்ரஹவைலக்ஷண்யம் படுத்தும்படியாயிற்றிதுவென்கை. ஸதாபச்யந்தி பண்ணினாரோபாதி ஸக்ருத்தர்சநம் பண்ணினாரையும், ப்ரேமாந்தராய் அஸ்த்தானே பயசங்கையாலே அநுகூலரையு மதிசங்கை பண்ணிப்பரிந்து நோக்கும்படி பண்ணவற்றாயிறே பகவத்விக்ரஹஸௌந்தர்யமிருப்பது.

உசகூ. இன்னமு மிவ்வர்த்தத்துக் குதாஹரணமாகக்கீழ்ச்சொன்னவர்களிற்காட்டில் வ்யாவ்ருத்தரான வாழ்வார்களுடைய மங்களாசாஸநநிஷ்டையை யருளிச்செய்கிறார் ; (இவர்கள்) என்றுதுடங்கி. (இவர்கள்) என்று சக்ரவர்த்திமுதலாகக் கீழ்ச்சொன்னவதிகாரிகளையடையப் பராமர்சிக்கிறது ; ஆனால் பிராட்டியையு மொக்கச் சொல்லலாமோ வென்னில் ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வாரிலும்காட்டில் பெரியாழ்வார்க் கேற்றம் சொல்லுகிறவோபாதி, போகபரவசையான வவளிற் காட்டில் மங்களாசாஸநத்திலூற்றத்தாலே ஆழ்வார்களுக்கேற்றம் சொல்லக்குறையில்லை; ஆனாலும் (நம்முடைய கோடியிலே) என்னலாமோ வென்னில் இவ்வர்த்தநிஷ்டையி லவர்களுடைய வாதிக்யத்தை தர்சிப்பிக்கைக்காகச் சொன்னதாகையாலே விரோதமில்லை ; ஆகையாலிவ்விஷயவைலக்ஷண்ய கலுஷிதராய் இதுக்கென்வருகிறதோவென்று பரிந்து நோக்கினவர்களாகக் கீழ்ச்சொல்லப்பட்டவர்க ளெல்லாரு மென்றபடி ; (நம்முடைய

ஆ.—கினைக்க வொண்ணுமையால்; கீழெடுத்த மங்களாசாஸநாதிகாரிகள்
இவ்வாழ்வார்கள் ஸந்நிதியிலே கத்யோதகல்பரிறே; ஆகையிறே பிரித்த
ருளிச்செய்கிறது.

௨௫௰. இவ்வாழ்வார்கள்தாம் மங்களாசாஸநம் பண்ணுமிடத்து
தம்மிலொப்பர்களோவென்ன மங்களாசாஸநத்தில்வந்தால் மற்றுள்ளவாழ்
வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் பர்வத பரமாணுக்களுக்குள்ள வாசி
யுண்டு; அவர்களெல்லாரும் கூடினுலு மிவர்க்கொருபுடை யொப்பாக
மாட்டார்களென்கிருர்.

௨௫௧. அவர்களைப்பற்ற விவர்க்கித்தால்வந்த தன்னேற்ற மேதெ
ன்ன அத்தை மூதலித்துக் காட்டுகிருர், (அவர்களுக்கிது காதாசித்கம்)
இத்யாதியால் அதில் மூந்துற மங்களாசாஸநநித்யதையா லிவர்க்குவந்த
வ்யாவ்ருத்தியை யருளிச்செய்கிருர்; ஆற்றுமையால் வரும் ஸ்வஸம்ரு
த்த்யபேக்ஷாஸம்பாவனையுள்ள வவர்களுக்கு, பரஸம்ருத்த்யேகவேஷமான
விந்தமங்களாசாஸநம், எங்கேனுமொரு தசையிலே தேடிப்பிடிக்கவேண்
டும்படி காதாசித்கம்; ஸ்வஸம்ருத்த்யபேக்ஷாஸம்பாவனையற்று பரஸம்
ருத்த்யேக ப்ரயோஜநரான விவர்க்கு ஸ்வஸம்ருத்த்யந்வய கந்தம்
பொறுதவிந்த மங்களாசாஸநம் ஜ்ஞாநதசையோடநுபவதசையோடு வாசி
யற நிரந்தரமாய்ப் போருகையாலே நித்யம்; மங்களாசாஸந விச்சேத
முள்ள வவர்களைப்போலன்றே யதில்லாதவிவர்; அடியோம், பல்லாண்டு,
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டிறே.

---

௨௫௰. ஆழ்வார்க ளெல்லாரையும் போலல்லர் பெரியாழ்வார்.

௨௫௧. அவர்களுக்கிது காதாசித்கம், இவர்க்கிது நித்யம்.

---

ஜீ.—கோடியிலேயென்னும்படியாயிற்று) என்றது- இவ்விஷயத்திலே யந்வ
யித்திருக்கச்செய்தேயும் ப்ரேமாபாவத்தாலே மங்களாசாஸநத்தி லூற்ற
மற்றிருக்கிற நம்போல்வார்மாத்ரமென்று சொல்லலாம்படியாயிற் றென்ற
படி; (ஆழ்வார்கள் நிலே) என்றது- மயர்வறமதிநலம்பெற்றவர்களாகை
யாலே நிரதிசயப்ரேமயுக்தரான வாழ்வார்களுடைய மங்களாசாஸநநிஷ்ட்
டை யென்றபடி.

௨௫௰. இவ்வாழ்வார்கள் தாங்கள் மங்களாசாஸநத்தில் வந்தால்
தங்களிலொப்பர்களோ வென்னவருளிச்செய்கிருர் மேல் (ஆழ்வார்கள்)
என்று துடங்கி; அதாவது மங்களாசாஸநத்திலே மற்றுள்ள வாழ்வார்
களுக்கும் பெரியாழ்வாருக்கும் நெடுவாசி யுண்டென்கை.

௨௫௧. அவர்களைப்பற்ற விவர்க்கிதிலேற்றமேதென்ன வருளிச்செய்
கிருர், (அவர்களுக்கிது) என்று துடங்கி. அதாவது மயர்வறமதிநலம்
பெற்றமை யொத்திருக்கச்செய்தே வைரவுருக்காய் ஆண்களையும் பெண்
ணுடையுடுத்தும் பகவத்விக்ரஹ வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்தால்,
உத்தரோத்தராநுபவகாமராகா நிற்கும். மற்றை யாழ்வார்களுக்கு பரஸ
ம்ருத்தியே ப்ரயோஜநமான விந்த மங்களாசாஸந மெப்போது மொக்க
வின்றிக்கே எங்கேனுமொரு தசையிலே தேடிப்பிடிக்க வேண்டும்படியா
யிருக்கும்; தத்வைலக்ஷண்யதர்சநாநந்தரம் ததநுபவபரராகையன்றிக்கே
அஸ்தாநே பயசங்கைபண்ணி திருப்பல்லாண்டுபாடும் ப்ரேமஸ்வபாவ
ரான விவர்க்கு இந்த மங்களாசாஸநம் ஸர்வகாலவர்த்தியாய்ச் செல்லு
மென்கை.

ஆ.—உ௫உ. அவர்களைப்போலின்றெஞ்சலாமையாலே இவர்க்குண்டான வ்யாவ்ருத்தியைக்காட்டுகிறார் மேல்; ஸௌந்தர்யசபலரான வவர்களுடைய சுழித்துக்குமிழ்நீருட்டுமாழங்காலான வகாதஸௌந்தர்யந்தானே, மங்களாசாஸந சபலரானவிவர்க்கு காலூன்றிநின்று நிற்கும் மேட்டுநிலமாயிருக்கும். ஸௌந்தர்யத்தினிமைக்கு நாக்குநீட்டி யழுந்துமவர்களைப்போலன்றே அந்த ஸௌந்தர்யத்தின் மேன்மையிலேகண்வைத்து மங்களாசாஸநம் பண்ணுமிவர்.

உ௫௩. உத்தரார்த்தத்தை விசதீகரிக்கிறார் மேல்; பகவத்ஸௌந்தர்யாபிலாஷிகளாயாற்றாமை கரைபுரண்ட வவ்வாழ்வார்களுக்கு, ஸ்வப்ரயோஜநநிவ்ருத்திபலதச்சேஷத்வத்தையும் தத்ஸீமாபூமியான ததீயசேஷத்வத்தையும் "நமக்கே நலமாதலில்" என்னும்படி ஸ்வப்ரயோஜநத்திலே மூட்டி யுருவழித்து, ததீயசேஷத்வமே நிலைநின்ற வடிவான ஸ்வரூபத்தை தன்னிலேகதேசத்திலே யமிழ்த்து கரையேறவொட்டாமல் குமிழ்நீருண்ணப் பண்ணுமதான பகவத்விக்ரஹஸௌந்தர்யம்; அந்த ஸௌந்தர்யம் தன்னை வெளிவிழுங்கில் செய்வதேதென்று பீதபீதராய், "செவ்வடி செவ்வி திருக்காப்பு" என்றதுதனக்கு மங்களாசாஸநம்பண்ணுமிவர்க்கு "அடியோமோடும் நின்னோடும்" என்றும் "வடிவாய்" துடங்கி "பாஞ்சசந்நியமும் பல்லாண்டே" என்றும் ததீயமங்களாசாஸநரூபவிசேஷவ்ருத்தி பண்ணுகையாலே, தச்சேஷத்வம் ததீயசேஷத்வமாகிற உபயத்தின் வ்ருத்திக்கும் ஹேதுவாய், ததீய

---

உ௫உ. அவர்களுடைய ஆழங்கால்தானே இவர்க்குமேடாயிருக்கும்.

உ௫௩. அவர்களுக்கு உபயசேஷத்வத்தையு மழித்து ஸ்வரூபத்தைக்குமிழ்நீருண்ணப் பண்ணுமது, இவர்க்கு பய

---

ஜீ.—உ௫உ. அதுக்கு ஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார், (அவர்களுடைய) என்றுதுடங்கி; அதாவது அநுபவபரரான அவர்களை த்ருஷ்டி சித்தாபஹாரம்பண்ணி யாழங்காற்படுத்துமவனுடைய ஸௌந்தர்யந்தானே, அதுக்கென்வருகிறதோவென்றஞ்சி மேன்மேலும் காப்பிடும்படி மங்களாசாஸநபரரான விவர்க்கு, தரித்துநின்று மங்களாசாஸநம்பண்ணுகைக்கிடான நிலமாயிருக்குமென்கை.

உ௫௩. அதெங்ஙனேயென்னு மபேக்ஷையிலே யருளிச்செய்கிறார் (அவர்களுக்கு உபயசேஷத்வத்தையும்) என்றுதுடங்கி. அதாவது பகவதநுபவைகபரராய் ததலாபத்திலாற்றாமைகரைபுரளும்படியிருக்கும் மற்றை யாழ்வார்களுக்கு "கண்ணபுரமொன்றுடையானுக் கடியேனொருவர்க்குரியேனோ" என்றும் "உற்றதுமுன்னடியார்க்கடிமை" என்றுமநுஸந்திக்கும்படி, ப்ரதமமத்யமபதஸித்தமானபகவச்சேஷத்வமும் தத்காஷ்டையான பாகவதசேஷத்வமுமாகிற வுபயசேஷத்வத்தையும் "நமக்கே நலமாதலில்" என்னும்படி ஸ்வப்ரயோஜநத்திலே மூட்டியும், விளம்பரோக்ஷத்தாலே "போகுநம்பீ" "கழகமேறேல் நம்பீ" என்னும்படியாக்கியும், ஸ்வப்ரவ்ருத்தியாகாதென்னுமளவில் "உங்களோடெங்களிடை யில்லை" என்று உதறும்படிபண்ணியும், "வஞ்சிறைப்புள்" இத்யாதியாலே வெறுத்து வார்த்தைசொல்லுவித்துமழித்து, பாரதிசயகரத்வமே வடிவான ஸ்வரூபத்தை மங்களாசாஸநமென்பதொன் றறியாதபடி தன் பக்கலிலே மக்நமாகப்பண்ணுமதான பகவத்ஸௌந்தர்யம்; அந்த

ஆ.—சேஷத்வ பர்யந்த தச்ச்சேஷத்வமே வடிவான ஸ்வரூபத்தை ஸ்வப்ரயோஜந ஸ்பர்சத்தாலே யழியாதபடி, தன் ஸௌகுமார்யத்தையே காட்டி மங்களாசாஸநத்திலே மூட்டி, பரஸம்ருத்த்யேகப்ரயோஜநத்வமாகிற கரையேற்று மென்கிறார். மற்றையவர்களைப்போலே ஸ்வரூபத்தை யழிவுக்கிட்ட சரக்காக்காதே அத்தை யபிவ்ருத்தமாக்குமவரிறே யிவர்; தத்ஸௌந்தர்யம் ஸ்வாச்ரயவிஷய மங்களாசாஸநத்திலேமூட்டி தச்ச்சேஷத்வம் ததீயசேஷத்வமாம்படியும், ததீயசேஷத்வம் ஸர்வததீயவிஷய மாம்படியு மபிவ்ருத்தமாக்கி நிலைப்பித்து இவருடைய ஸ்வரூபத்தை யுஜ்ஜீவிப்பிக்குமிறே, "செவ்வடி செவ்வி திருக்காப்பு" "அடியோமோடும் நின்னோடும்" என்று தச்ச்சேஷத்வாபிவ்ருத்தியும் "வடிவாய்" இத்யாதியால் ததீயசேஷத்வாபிவ்ருத்தியும் ஸ்வோக்திஸித்தமிறே.

உ௫௪. இந்த மங்களாசாஸநைகயாத்ரையாலு மிவர்க்குண்டான வ்யாவ்ருத்தியை யருளிச்செய்கிறார்; ஸௌகுமார்ய தர்சநத்தால் தமக்கு வந்த பயம் கெடவேணுமென்று அவன் காட்டுகிற மல்லநிரஸநப்ரபலபுஜ லக்ஷ்மீ திவ்யாயுதங்களாகிற பயநிவர்த்தகங்கள் தமக்கு என்வருகிறதோ வென்று மிகவும்பயப்பட்டு மங்களாசாஸநம்பண்ணுவது; கைவல்யைச்வர்யார்த்திகளாகிற ப்ரதிகூலரையும் பகவச்சரணார்த்திகளாகிற வநுகூலரையும் "வாழாள்" துடங்கிமங்களாசாஸநத்துக் கநுகூலராக்குவது; இந்த-அபி-சப்தம் ப்ரதியோகிசமுச்சயபரம்; (ப்ரதிகூலரையு மநுகூலராக்குகை) யாவது - கைவல்யைச்வர்யார்த்திகளுடைய ஸ்வதந்த்ராபிமாந

---

வ்ருத்திக்கும் ஹேதுவாய் ஸ்வரூபத்தைக் கரையேற்றும்.

உ௫௪. பயநிவர்த்தகங்களுக்கு பயப்படுவது, ப்ரதிகூலரையு மநுகூலராக்கிக்கொள்ளுவது, அதீதகாலங்களி லபதாநங்களுக் குத்தரகாலத்திலே வயிறெரிவது, ப்ராப்த்

---

ஜீ.—ஸௌந்தர்யதர்சநத்தில்அநுபவத்தில்நெஞ்சுசெல்லாதேஅதுக்கென் வருகிறதோவென்று வயிறெரிந்து காப்பிடுமவரான விவர்க்கு "உன்செவ்வடிசெவ்விதிருக்காப்பு" "மங்கையும் பல்லாண்டு" "சுடராழியும் பல்லாண்டு" "அப்பாஞ்சசந்நியமும் பல்லாண்டு" என்று தத்விஷயத்துக்கும் ததீயவிஷயத்துக்கும் மங்களாசாஸநம்பண்ணிவிக்கையாலே உபய சேஷத்வ வ்ருத்திக்கும் ஹேதுவாய், ஸ்வரூபத்தை தன்பக்கல் மக்நமாகாதபடி நடத்துமென்றபடி. ஆக வவர்களுக்கப்படி ஸ்வரூபத்தைக் குமிழ்நீருண்ணப்பண்ணுகிற வவனுடைய ஸௌந்தர்யமும் இவர்க்கிப்படி செய்கையாலே, அவர்களுடைய வாழுங்கால்தானே யிவர்க்கு மேடாயிருக்கையால் அவர்களுக்குப்போலே காதாசித்கமாகை யன்றிக்கே, மங்களாசாஸந மிவர்க்குநித்யமாய்ச் செல்லுமென்றதாயிற்று.

உ௫௪. மற்றையாழ்வார்களுக்கு மங்களாசாஸநம் காதாசித்கமாகச்செய்தே, இவர்க்குநித்யமாகைக்கு நிதாநமின்னதென்று தர்சிப்பித்தார்கீழ்; இதுதா னிவர்க்கு நித்யமாகச்செல்லும்படி தன்னை வ்யக்தமாக வருளிச்செய்கிறார் மேல் (பயநிவர்த்தகங்களுக்கு) என்றுதுடங்கி. அதாவது தன் ஸௌகுமார்யத்தைக்கண்டு கலங்கி இவ்விஷயத்துக்கென் வருகிறதோவென்று மறுகுகிற இவர்பயத்தைப் பரிஹரிக்கைக்காக, மல்லவர்க்கத்தை யநாயாஸேந வழித்ததோள்வலியைக்காட்ட இந்தத்தோள்வலியைநினைத்து மதியாதே யஸுரராக்ஷஸயுத்தத்திலேபுகி லென்னாகக்கடவதென்று அதுதனக்கு பயப்பட்டு மங்களாசாஸநம்பண்ணுவது;

ஆ.—ஸ்வபோக்த்ருத்வரூபவிப்ரதிபத்தியையும், தேஹாத்மாபிமாந தத
நுபந்த்திபோக்த்ருத்வ விப்ரதிபத்தியையும் போக்கி, அவர்களைமங்களா
சாஸநத்துக்கர்ஹராக்குகை; அநுகூலரை யநுகூலராக்குகை யாவது-
ஸாதநாந்தரஸங்கஸ்வகதஸ்வீகாரஸ்வப்ரயோஜநகைங்கர்யரூபவிப்ரதிபத்
திகளைப்போக்கி மங்களாசாஸநத்துக் கர்ஹராக்குகை; ஸ்வகதஸ்
வீகாராதி ப்ராதிகூல்யத்தைப்பற்ற இவர்களையும் ஸாக்ஷாத்ப்ரதிகூல
ரோடே யவிபக்தராக்குகிறாரென்று மருளிச்செய்வர். "இலங்கைபா
ழாளாகப் படைப்பொருதானுக்கு" இத்யாதியாலே - ராவணவதாதி
யான திவ்யாபதாநங்களுக்கு வர்த்தமாநதத்துத்தரகாலத்திலே தத்தத்
ஸமகாலத்திலேபோல வயிறெரிந்து, தத்ததவஸாதநிவ்ருத்த்யர்த்தமாக
மங்களாசாஸநம்பண்ணுவது; பகவத்ப்ராப்திபலமான கைங்கர்யத்துக்
கெல்லை "சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே" என்று பரஸம்ருத்த்
யேக ஸ்வரூபமான விந்த மங்களாசாஸநமென்பது; ஸதாபச்யந்திபண்
ணுநின்றுகொண்டு உந்நித்ரதாம்ரேக்ஷணராய் அநிமிஷரான வாழ்
வார்களைச் சங்கித்துப்பார்த்து "உறகலுறகல்" என்றுணர்த்தவுண
ர்த்த உறங்குகிறதாமஸரை யுணர்த்துமாபோலே பலகாலம் நியமித்தெ
ழுப்புவதாய், என்வருகிறதோவென்றஞ்சி மங்களாசாஸநம்பண்ணுமிது
வே தேஹயாத்ரையும் காலயாத்ரையுமாய் நடந்துபோரும். இத்தாலும்

திபலமு மிதுவேயென்பது, அநிமிஷரைப்பார்த்து
"உறகலுறகல்" என்பதாய்க்கொண்டு இதுதானே

ஜீ.—உண்டானவமங்களங்கள் போகைக்குமில்லாதமங்களங்களுண்டாகை
க்கும் தன் கடாக்ஷமே யமைந்திருக்கிறவிவள் "அகலகில்லேனிறையும்"
என்று நம்மைப்பிரியமாட்டாதேயிருக்க, நமக்குவருவதொரு வமங்களங்க
ளுண்டோ என்செய்யப்படுகிறீரென்று லக்ஷ்மீஸம்பந்தத்தைக் காட்ட,
இச்சேர்த்திதனக் கொருதீங்குவரில் செய்வதென்னென்றஞ்சி, "மங்கையும்
பல்லாண்டு" என்று மங்களாசாஸநம்பண்ணுவது; இந்த பயத்தைப்பரிஹ
ரிக்கைக்காக இச்சேர்த்திக்கொரு தீங்குவாராதபடி கல்மதிளிட்டாப்போ
லே யிருக்கிற விவர்களைப்பாரீரென்று இரண்டிடத்திலு மேந்தினவாழ்வார்
களைக்காட்ட, அவர்கள் தங்களுக்கொரு தீங்குவரில் செய்வதென்னென்ற
ஞ்சி, "சுடராழியும்பல்லாண்டு" "அப்பாஞ்சசந்நியமும் பல்லாண்டு" என்
று மங்களாசாஸநம்பண்ணுவது; அநந்யப்ரயோஜநதயா அநுகூலரான பக
வச்சரணார்த்திகளை மங்களாசாஸநத்துக்குத் துணையாகக் கூட்டிக்கொண்
டவளவால் பர்யாப்தி பிறவாமையாலே, ப்ரயோஜநாந்தர பரதயா ப்ரதி
கூலரான கேவலரையும் ஐச்வர்யார்த்திகளையும் திருத்தி மங்களாசாஸ
நத்துக் காளாம்படி யநுகூலராக்கிக்கொள்வது; "இலங்கைபாழா
ளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டுகூறுதுமே" இத்யாதியாலே
கீழ்க்கழிந்தகாலத்தி லவன்செய்தவபதாநங்களுக்கு பிற்காலத்திலே
ஸமகாலத்தில்போலே வயிறெரிந்து மங்களாசாஸநம்பண்ணுவது; "சூழ்
ந்திருந்தேத்துவர் பல்லாண்டே" என்று பகவத்ப்ராப்திக்கு பலமு மந்த
மங்களாசாஸநமே யென்பது; "స్నేహాదస్థానరక్షావ్యసనిభిరభయం శార్ఙ్గచక్రాసిము
ఖ్యైః" "ஸ்நேஹாதஸ்த்தாநரக்ஷாவ்யஸநிபிரபயம் சார்ங்கசக்ராஸிமுக்
யை:" என்கிறபடியே அஸ்த்தாநேரக்ஷாவ்யஸநிகளாகையாலே அநிமி
ஷரா யிருக்கிற திவ்யாயுதாழ்வார்கள் முதலானாரைப்பார்த்து குணவித்
தராய் நஞ்சுண்டாரைப்போலே உந்தாமையறியாதிருத்தல் அநுபவத்
திலே யழுந்து கைங்கர்யபரராயிருத்தல்செய்யாதே உணர்ந்துநோக்குங்

ஆ.—பகவத்குணாநுஸந்தாநமு மநுபவமும் யாத்ரையாய்ப்போருமாழ்வார்களிற்காட்டி லிவர்க்குண்டான வ்யாவ்ருத்தி காட்டப்பட்டது.

உருரு. ப்ரதிகூலருமநுகூலராம்படி யுபதேசித்துத்திருத்துகை மற்றையாழ்வார்களுக்குமுண்டேயென்ன, மங்களாசாஸநார்த்தமாக உபதேசித்துத்திருத்துகை வேதாந்த நிர்ணேதாக்களுபயர்க்குமே யுள்ளதொன்றென்கிறார் மேல் (அல்லாதவர்கள்) இத்யாதியால். பரோபதேசம்பண்ணு மல்லாதவாழ்வார்களைப்போலே "திருக்குருகூரதனை யுளங்கொள் ஞாநத்துவைம்மினும்மை யுய்யக்கொண்டு போகுறிலே" என்றுபதேசம் கேட்கிறஸம்ஸாரிகள் தனிமையைத் தவிர்க்கைக்காகவும்; "உழந்தினியாரைக் கொண்டென்னுசாகோ-என் நெஞ்சினுருமங்கேயொழிந்தார்" என்றுபதேசிக்கிற தங்களுடைய நெஞ்சின் தனிமையைத்தவிர்க்கைக்காகவும் பரோபதேசம் பண்ணுகையன்றியே, "ஆளுமாளாராழியும் சங்கும் சுமப்பார்தாம்" என்று பூவேந்தினாப்போலே யேந்துகிற திவ்யாயுதங்களும் தலைச்சுமையாகத்தோற்றுகிற வுபதேச்யவஸ்துவின்ஸௌகுமார்யமறிந்து தம்மைப்போலே மங்களாசாஸநம் பண்ணுவாரில்லாமையாலென்கிற தனிமையைத்தவிர்ப்பித்து, மங்களாசாஸநம் பண்ணுவார் பலருண்டாகவாயிற்று ஸமந்வயாவிரோதஸாதநபலரூபமான வத்யாயசதுஷ்டயாகாரவேதாந்தத்தின் யதார்த்தநிர்ணயகபாஷ்யத்தை யருளிச்செய்த பாஷ்யகாரரும், வேண்டிய வேதங்களோதி வேதாந்த நிர்ணயம்பண்ணின விவ்வாழ்வாரும், அநுகூலப்ரதிகூல விபாகமறமறையாம லுபதேசிப்பதும்.

---

யாத்ரையாய் நடக்கும்.

உருரு. அல்லாதவர்களைப்போலே கேட்கிறவர்களுடையவும் சொல்லுகிறவர்களுடையவும் தனிமையைத்தவிர்க்கை யன்றிக்கே, ஆளுமாளாரென்கிறவனுடைய தனிமை

---

ஜீ.—கோளென்று பலகாலும்சொல்லுவதாய்க்கொண்டு, இம்மங்களாசாஸநமே வ்ருத்தியாய்ச் செல்லுமென்கை.

உருரு. இப்படி மங்களாசாஸநத்துக்காள்தேடி ப்ரதிகூலரை யநுகூலராக்குகைக்குப் பண்ணுகிறவுபதேசம் திருப்பல்லாண்டொன்றிலுமன்றேவுள்ளது, மேலிவருபதேசித்தவிடங்களில் அல்லாதாருபதேசத்திற்காட்டில் வ்யாவ்ருத்தி என்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார், (அல்லாதவர்களைப்போலே) என்றுதுடங்கி. அதாவது பரோபதேசத்தில் வந்தால் மற்றுள்ள வாழ்வார்களையும் ஆசார்யர்களையும்போலே உபதேசிக்கிறவர்த்தம் கேட்கிற ஸம்ஸாரிகளுடையஅநாத்யஜ்ஞாநத்தாலே நற்றுணையான பகவத்விஷயத்தை யகன்றுதிரிகையால் வந்ததனிமையையும், வக்தாக்களான தங்களுடைய பகவத்குணாநுஸந்தாநதசையில் போதயந்த: பரஸ்பரம்பண்ணுகைக் குசாத்துணையில்லாமையால் வந்ததனிமையையும் தவிர்க்கை ப்ரயோஜநமாக உபதேசிக்கையன்றிக்கே, ஸௌகுமார்யாநுஸந்தாநத்தாலே வயிறுமறுகின வாழ்வார் ஆராய்ந்துபார்த்தவிடத்தில் அடையவந்யபராய்த்தோற்றுகையாலேஉபயவிபூதியிலும் பரிகைக்காளில்லை, தம் வாசியறிந்து பரிந்துநோக்குகைக்கும் ஓராளுமாளுகிறிலர்என்று பேசும்படியிருக்கிற நிரதிசய ஸௌகுமார்யயுக்தனான ஸர்வேச்வரனுடைய தனிமை தீர மங்களாசாஸநத்துக்கிவர்களாளாகவேணுமென்று இதுவேப்ரயோஜநமாகவாயிற்று ப்ராமாணிகரான வாசார்யர்களில் பாஷ்யகாரரும் மயர்வறமதிநலமருளப்பெற்றவர்களில் இவ்வாழ்வாரும் உபதேசித்தருளுவரென்கை. ஆகையாலிவ்வாழ்வார் ப்ரதிகூலரையநுகூலராக வுபதேசிக்குமிட

ஆ.—ஆக ச்ரோதாக்களான ஸம்ஸாரிகளுக்கு முபதேஷ்டாக்களான தங்களுக்கும் ஸஹாயம்வேண்டி யுபதேசிக்கிற மற்றை யாழ்வார்களைப்பற்ற உபதேச்யவஸ்துவின் சீர்மையறிந்து மங்களாசாஸநத்துக்கு ஸஹாயம் வேண்டி யுபதேசிக்குமிவர் வ்யாவ்ருத்தரென்றபடி.

உருசு. ஸத்தாதி ஹேதுவிசேஷத்தாலு மவர்களிலிவர்க்குண்டான தன்னேற்றத்தைக் காட்டுகிறார் மேல், (அல்லாதார்க்குஸத்தா) இத்யாதியால். பகவத்தர்சநாநுபவ கைங்கர்யாபிலாஷிகளான மற்றையாழ்வார்களுக்கு, "அவர் வீதியொருநாள்" "காணவாராய்" என்று ஜாலகரந்த்ரத்தாலே யொருக்கால் காணவமையும் தரிக்கைக்கென்கிற ஸக்ருத்தர்சநத்தாலே ஸத்தையும், முடிச்சோதி துடக்கமானவநுபவத்தாலும் ஒழிவில் காலம்துடக்கமான கைங்கர்யங்களாலும், ஸத்தாதர்மமான

---

யைத் தவிர்க்கைக்காகவாயிற்று பாஷ்யகாரரு மிவரு முபதேசிப்பது.

உருசு. அல்லாதார்க்கு ஸத்தாஸம்ருத்திகள் தர்சநாநுபவ

---

ஜீ.—மெல்லாம் மங்களாசாஸநார்த்தமாகவென்னக்குறையில்லையென்று கருத்து. எம்பெருமானாரென்னாதே பாஷ்யகாரரென்றது ஸ்ரீபாஷ்யமுகத்தாலே வேதாந்ததாத்பர்ய நிர்ணயம்பண்ணியருளினவரென்னும் வைபவம் தோற்றுகைக்காக.

உருசு. மயர்வற மதிநலம் பெற்றவர்களெல்லார்க்கும் ஸத்தாஸம்ருத்திகள் பகவத்தர்சநாநுபவகைங்கர்யங்களாலேயாகவன்றோ தோற்றுகிறது, அவ்வாகாராமிவர்க்கு மெவ்வாறோ, அப்போதைக்கு மங்களாசாஸநமேயாத்ரையாக நடக்குமென்னுமிது கூடும்படியென் என்கிறசங்கையிலே யருளிச்செய்கிறார், (அல்லாதார்க்கு) என்றுதுடங்கி. ஸத்தை, யாவது - தாங்களுளராகை; இது பகவத்தர்சநாநுபவ கைங்கர்யகாமரான மற்றையாழ்வார்களுக்கு, அவனைக்காணாதபோது தரிக்கமாட்டாதே "காணவாராய்" என்று கூப்பிடுகையாலே தத்தர்சநத்தாலேயாயிருக்கும்; "அவராவிதுவாராமுன் - அவர்வீதியொருநாள் - அருளாழிப்புட்கடவீர்" என்று எங்கள்ஸத்தை கிடக்கைக்கு ஜாலகரந்த்ரத்தாலேயாகிலு மொருக்கால் காணும்படி எங்கள் தெருவேயொருநாள் போகவமையுமென்று சொல்லுகையாலே தர்சநமே ஸத்தாஹேதுவென்னுமிடம் ஸித்தமிறே. (ஸம்ருத்தி) (ஸம்ருத்தி) யாவது - உளராயிருக்கிற மாத்ரமன்றிக்கே மேலுண்டாய்ச்செல்லும் தழைப்பு; அதவர்களுக்கு "அந்தாமத்தன்பு" "முடிச்சோதி" துடக்கமானவற்றில்போலுண்டான வநுபவத்தாலும் ஒழிவில் காலத்திற்படியே செய்யுங் கைங்கர்யத்தாலுமாயிருக்கும்.—, அன்றிக்கே தர்சநாநுபவங்களிரண்டாலும் ஸத்தையும், கைங்கர்யத்தாலே ஸம்ருத்தியுமாகச் சொல்லவுமாம்.—, அங்ஙனுமன்றிக்கே (அந்த ஸத்தை ப்ராவண்யகார்யமான வநுபவமில்லாத போதுகுலையும்) என்றிவர் தாமேகீழே யருளிச்செய்கையாலும் நாளைவிநியோகம் கொள்ளுகிறோமென்னில் அழுகவும்கூட ஸத்தையில்லை யென்று கைங்கர்யம் ஸத்தாஹேதுவாக வநுஸந்த்தாநத்திலே சொல்லுகையாலும், "கண்டுகளிப்பன்" என்று தர்சநந்தான் ஸம்ருத்திஹேதுவாகவும் தோற்றுகையாலும், ஸத்தைக்கும் ஸம்ருத்திக்கும் மூன்றும் காரணமென்னவுமாம். மயர்வற மதிநலம்பெற்ற வன்றுமுதல் பகவத்ஸௌகுமார்யாதிகளைக்கண்டு இவற்றுக்கென்வருகிறதோவென்று வயிறெரிந்து

ஆ.—பரைகபோக்யத்வரூபசேஷத்வரூப ஸம்ருத்த்தியு முண்டாம். ஸௌகுமார்யைகதர்சிகளான விவ்வாழ்வார்க்கு "அடியோம்" என்று ஸத்தையும் "சூழ்ந்திருந்தேத்துவர்" என்று ஸம்ருத்த்தியும், "பல்லாண்டு" என்கிற மங்களாசாஸநத்தாலேயுண்டாம்.

உருஎ. அவர்களுக்கு தத்தர்சநாதிகளால் பிறக்குமவையெல்லாமிவர்க்கு மங்களாசாஸநத்தாலே பிறக்கிறதிறே, "தானுகந்தவூரெல்லாம்" என்று பரமபதாதிகளைப்பற்றவு மவனுகந்திருக்கும் கோயில் முதலான வுகந்தருளின நிலங்களின் வைலக்ஷண்யத்தை ப்ரீதிபுரஸ்ஸரமாக வநுஸந்தித்தால், "உண்ணுநாள் பசியாவதொன்றில்லை" "உண்ணுநாளில்லை யுறக்கமுந்தானில்லை" என்று சரீரஸ்த்திதிஹேதுவான ஆஹாரம், தல்லகுதாஹேதுவான வுறக்கமும் மூச்சாடுகையன்றியே, மங்களாசாஸநமே யுபயயாத்ரையுமான விவ்வாழ்வாருடைய மறுவற்ற சரமயாத்ரையே, வெறுமூணுமுறக்கமுமே யாத்ரையாய் மங்களாசாஸநத்தின் சீர்மையறியாதே "பல்லாண்டு" என்று மேலெழுப்பாவிக்கும் நமக்கெல்லார்க்கும் அவரருளாலே நிரந்தரயாத்ரையாகவேணும்.

உருஅ. வேறுதாரகாந்தரமற்று நிரந்தரமங்களாசாஸநமே தாரகமானவிவருடைய சரமாதிகாரம் பரமசரமாதிகாரி ப்ரார்த்தநீயமென்றதாயிற்று. ஆக நித்யமங்களாசாஸநமும், அத்தால் வருமுபயசேஷத்வவ்ரு

கைங்கர்யங்களாலே; இவர்க்கு மங்களாசாஸநத்தாலே.

உருஎ. உகந்தருளின நிலங்களை யநுஸந்தித்தால் ஊணுமுறக்கமு மின்றிக்கே இவருடையயாத்ரையே நமக்கெல்லார்க்கும் யாத்ரையாகவேணும்.

உருஅ. ஆகையாலே மங்களாசாஸநம்

---

ஜீ.—மங்களாசாஸநாபிநிவிஷ்டரான விவர்க்கு, மங்களாசாஸநவிச்சேதமவில் தாமுளராக மாட்டாமையாலும், அப்படி யவிச்சிந்நமாய்ச் செல்லுகைதானே தழைப்புக்குடலா யிருக்கையாலும், ஸத்தையும் ஸம்ருத்த்தியு மிரண்டும் மங்களாசாஸநத்தாலேயாயிருக்கும். ஆகையாலிவர்க்கு மங்களாசாஸநம் நித்யமாய்ச்செல்லத் தட்டில்லையென்றுகருத்து.

உருஎ. ஆக மங்களாசாஸநத்தில் பெரியாழ்வார்க்குண்டான அநவரத நிஷ்டையைதர்சிப்பித்தார்கீழ்; இனிமேலவருடையயாத்ரையே நமக்கெல்லார்க்கும் யாத்ரையாகவேணுமென்று (உகந்தருளின நிலங்களிலாதராதிசயமும் மங்களாசாஸநமும்) என்று முன்பு நிகசர்யையினுக்தமான மங்களாசாஸநத்தினுடைய அவச்யகர்த்தவ்யதையை யருளிச்செய்கிறார், (உகந்தருளின நிலங்களை) என்றுதுடங்கி. அதாவது அத்யந்தஸுகுமாரனான ஸர்வேச்வரன் ஆச்ரிதஸுலபத்வார்த்தமாகத்தன்னையமைத்துக்கொண்டு "தானுகந்தவூர்" என்னும்படி தானத்யாதரத்தைப்பண்ணி வர்த்திக்கும் கோயில் திருமலை முதலான திவ்யதேசங்களை யநுஸந்தித்தால், அபாயபஹுளமான தேசமாகையாலே இங்கெழுந்தருளி நிற்கிற நிலைக்கு ஏதேனுமொரு தீங்குகள்வரி லென்னாகக்கடவதென்னும் வயிறெரிச்சலாலே, ஆஹார நித்ரைகளிலு மந்வயமின்றிக்கே நிரதிசயப்ரேமயுக்தரான விவ்வாழ்வாருடைய நிரந்தர மங்களாசாஸநயாத்ரையே சேஷபூதரான நமக்கெல்லார்க்கும் யாத்ரையாகவேணுமென்கை.

உருஅ. உக்தார்த்தத்தை நிகமித்தருளுகிறார், (ஆகையால்) என்றுதுடங்கி. அதாவது இப்படி சேஷபூதரானவர்களுக்கெல்லா மவச்யகர்த்

ஆ.—த்தியும், அதுவேதேஹயாத்ரையாகையும், அதுக்காள் தேடிப்பி டிக்கையும், அதுவேஸத்தாஸம்ருத்திஹேதுவாகையும், அதுதானெல் லேநிலத்திலேயாகையுமான தன்னேற்றமுடையபெரியாழ்வார், மற்றையாழ் வார்களில் வ்யாவ்ருத்தர்; இவருடையவ்ருத்தியே ஸத்ப்ரார்த்தநீயை யாகையாலே நிரதிசயஸௌகுமாரசேஷிவிஷய நித்யமங்களாசாஸநமே தத்ஸௌகுமார்யாநுஸந்தாநஜநித ப்ரேமபரவசசேஷபூதசரமஸ்வரூபா நுகுணமத்தனை; ஸ்வரூபவிருத்தமல்லவென்று ப்ரஸ்துதமானமங்களா சாஸநத்தை நிகமித்தருளுகிறார்.

உருகூ. இப்படி நிரசர்யாநுஸந்தாநத்தில் ப்ரஸ்துதமானமங்க ளாசாஸநத்தைப்பரீக்ஷித்துநிர்ணயித்தருளி, உடனே ப்ரஸ்துதரான ஸஹ வாஸயோக்யரான வநுகூலருடைய லக்ஷணத்தை யருளிச்செய்கிறார் மேல், (இனி யநுகூலராவார்) இத்யாதியால். (இனி) என்றது-அர்த் தாந்தரஸூசகம்; ஞாநாதிவர்த்தகராய்க்கொண்டு ஸஹவாஸயோக்ய ரான வநுகூலராவார், தத்த்வத்ரயத்தை விஷயீகரிக்கும் தத்த்வஜ்ஞாநம் அதிலீச்வரதத்த்வைகவிஷயையான பக்திதத்த்வத்வயவிஷயையான நிஸ் ப்ருஹத்வரூப வைராக்யமென்கிற வைஷ்ணவாலங்காரமானவிவை, இவர் களுக்கிவற்றிலொவ்வொன்றிலேயோ நிலைநின்றவதிகாரமென்ன மூன்றி லும் தனித்தனியே நினைக்கும்படி யிட்டுமாறினாப்போலே மூன்றின் ஸமு

---

ஸ்வரூபாநுகுணம்.

உருகூ. அநுகூலராகிறார் ஞாநபக்திவைராக்யங்களிட்டு மாறி

---

ஜீ.—தவ்யமாயிருப்பதொன்றாகையால், மங்களாசாஸநம் ஸ்வரூபத்துக்கு ச்சேருமென்கை. சேஷவஸ்துவாகில் சேஷிக்கதிசயத்தைவிளைத்தே தன் ஸ்வரூபஸித்தியாகையாலே, சேஷிக்கதிசயத்தையாசாஸிக்கிறவித்து சே ஷபூதனான விவனுடைய ஸ்வரூபத்துக்கநுகுணமிறே.

உருகூ. இப்படி நிரசர்யையிலுக்தமான மங்களாசாஸநத்தினுடைய ஸ்வரூபவிருத்தத்வசங்கையைப் பரிஹரித்தவநந்தரம், அநுகூலஸஹவா ஸமென்றவிடத்திற்சொன்ன வநுகூலருடைய லக்ஷணத்தை யருளிச்செய் கிறார், (அநுகூலர்) என்றுதுடங்கி. (அநுகூலராகிறார்) என்றது-ஞாநாதி வர்த்தகராகையாலே ஸஹவாஸயோக்யராகக் கீழ்ச்சொல்லப்பட்ட வநு கூலராகிறாரென்றபடி; (ஞாநபக்திவைராக்யங்களாவன) தத்த்வயாதாத் ம்யஞாநமும் பகவதேகவிஷயையானபக்தியும் ததுபயகார்யமாய் வரும் பகவத்வ்யதிரிக்த விஷயவிரக்தியும்; இவைதான் வைஷ்ணவாலங்காரங் களிறே; இவற்றையிட்டிறே வைஷ்ணவர்களுக்கேற்றம் சொல்லுவது; ஆகையிறே நாதமுனிகளுடைய திவ்யவைபவத்தை யருளிச்செய்கிற ஆள வந்தார் "అచిన్త్యాద్భుతాక్లిష్టజ్ఞానవైరాగ్యరాశయే । అగాధభగవద్భక్తిసిన్ధవే" "அசிந் த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாநவைராக்யராசயே । அகாதபகவத்பக்திஸிந் தவே" என்றருளிச்செய்தது; (இட்டுமாறினாப்போலே) என்றது-ஒரு பதார்த்த மிருந்தபாத்ரத்திலே பதார்த்தாந்தரத்தையிட்டு முன்பிருந் தத்தை மாற்றினால் அதுவேயுள்ளதாய் தோற்றுமாபோலே, இந்த ஜ்ஞாநாதிகள் மூன்றும் ஏகாச்ரயகதமா யிருக்கச்செய்தே இவற்றி லோரொன்றையே பார்க்குமளவில் ஒன்றையிட்டு மற்றையவற்றைமாற்றி னாப்போலே இதுவே யிவ்வாச்ரயத்தி லுள்ளதென்று தோற்றும்படியிரு க்கை; (வடிவிலே தொடைகொள்ளலாம்படி யிருக்கை) யாவது இவர் கள் வடிவுகண்டபோதே இவற்றோடிவர்களுக்குண்டான ஸம்பந்தம் க்ரஹிக்கலாம்படியிருக்கை ; த்யாஜ்யோபாதேய விவேகபூர்வகமான

ஆ.—தாயரூபமானவடிவிலே வகைக்துகாணலாம்படி புறவெள்ளமிடவிருக்கும்பரமார்த்தர்;ஞாநாநுரூபமான ப்ராப்த்யலாபத்தாலும் பக்த்யநுரூபமான வநுபவாலாபத்தாலும் வைராக்யாநுரூபமான விரோதிநிவ்ருத்த்யலாபத்தாலும், ''உடன்கூடுவதென்றுகொலோ'' ''அதனிற்பெரியவென்னவா'' ''பொல்லாவாக்கையின்புணர்வினையறுக்கலறு'' என்று பெருமிடறுசெய்து கூப்பிடுமார்த்யதிசயமுடையவர் ''காணக்கருதுமென்கண்'' ''பொன்னிப்பேராறுபோல்வரும்கண்ணநீர்'' ''உருவொடுபேரல்லாற்காணுக்கண்'' என்று திருக்கண்களிலும், ''எம்பெருமான்தன்னையேற்றி'' ''அரங்கவோவென்றழைக்கும்'' ''வாயவனையல்லதுவாழ்த்தாது'' என்று திருப்பவளத்திலும், ''தாளும்தடக்கையும்கூப்பி'' ''கையாரத்தொழுவார்தோள்'' ''தோளவனையல்லாற்றொழா'' என்று திருக்கைகளிலும் மற்றுமுள்ள வவயவங்களிலும் ஞாநாதிகள்வகைந்து காணலாயிருக்குமிறே.

உசுO. இவர்களுடன் ஸஹவஸித்தால் வருவதேதென்ன, இந்த ஜ்ஞாநாதிகளில்லாத குறைதீருமென்கிறார் மேல் (ஒருசெய்) இத்யாதியால். உடையவனுகந்து மடைவிடவே விளையுமதான நல்லதொருசெய்யில் அரைவயிறுபடாமல் நிரம்ப நிரந்தரம் நீர்நின்றால், உடையவனுபேக்ஷிக்க வுலருமசல்செய் அருகணைந்தவாசிதோற்ற வறட்சிகெடப் பொசிந்துகாட்டுமாபோலே, ரக்ஷகசேஷியினுபேக்ஷையடியாக ஜ்ஞாநாதிபசையற்ற சுஷ்கஸம்ஸாரிகளுக்கும், அந்தரக்ஷகனுடைய க்ருபாகடாக்ஷத்தாலே பூர்ணஜ்ஞாநபக்தி வைராக்ய ராசிகளான ஸ்ரீவைஷ்ண ஸ்ரீமான்களோட்டை தர்சநஸ்பர்சந மாத்ரத்தாலே ஜ்ஞாநாதிபசையில்லாமை யாகிற வுருவுதல்தீர்ந்து அவைபொசிந்த நெஞ்சப்பெருஞ்செய்யை

---

னுப்போலே, வடிவிலே தொடைகொள்ளலாம்படியிருக்கும் பரமார்த்தர்.

உசுO. ஒருசெய் நிரம்ப நீர் நின்றால் அசல்செய்பொசிந்து காட்டுமாபோலே, இவையில்லாதார்க்கு மிவர்களோட்டை

ஜீ.—பரிமாற்றத்தாலே,ஜ்ஞாநம்வடிவிலேதொடைகொள்ளலாம்;''[illegible]'' ''ஆஹ்லாதசீதநேத்ராம்பு:'' ''காலுமெழா கண்ணநீரு நில்லா'' இத்யாதிப்படியே யிருக்கையாலே பக்திவடிவிலே தொடைகொள்ளலாம்; இதரவிஷயங்களைக் கடைக்கணியாம லிருக்கையாலே வைராக்யம்வடிவிலே தொடைகொள்ளலாம்.—, அன்றிக்கே ஜ்ஞாநபக்தி வைராக்யங்கள் மூன்றும் நவநவோந்மேஷசாலிகளாய் வருகையாலே அபூர்வமான ஜ்ஞாநாதிகளையிட்டு பூர்வத்திலவற்றை மாற்றினுப்போலே, தங்கள் வடிவிலே யிவைகாணலாம்படியிருக்கும் பரமார்த்தரென்னவுமாம். (பரமார்த்தர்) என்றது - ஸம்ஸாரத்தில் பொருந்தாமையாலும் பகவத் விஷயத்தைக் கிட்டப்பெறுமையாலும் இனி யிதுக்குமேலில்லை யென்னும் படியான ஆர்த்தியையுடையவர்க ளென்கை.

உசுO. இவர்களோட்டைஸஹவாஸத்தால் ஸிதத்திக்குமதேதென்ன வருளிச்செய்கிறார் மேல், (ஒருசெய்) என்றுதுடங்கி. அதாவது ஒருவயலிலே நிறையநீர்நின்றால் நீரற்றுருவிக்கிடக்கிறவசல்வயல் ததாஸத்தியால் வந்தபொசிவாலே வாட்டமற்றுக்கிடக்குமாபோலே, ஜ்ஞாநபக்திவைராக்யங்களாகிற விவையில்லாமையாலேஸ்வரூபமுருவிக்கிடக்கிறவர்களுக்கும் இவற்றால்பரிபூர்ணரானவிவர்களோட்டைஸஹவாஸரூபஸம்பந்தத்தாலே

ஆ.—யுடையராகக் கடவதாயிருக்கு மென்கிறார். இத்தா லநுகூலரோடே ஸஹவஸிக்கவே அவர்களுடையஸ்வபாவம் தன்னடையே தனக்குண்டா மென்றபடி.

உ௬௧. ஆகிலிவர்களுடன் ஸஹவஸிக்கும் சிலர்க்கு இவை யிப்போ துண்டாகக் காண்கிறோமில்லையென்ன, இப்போது மறைந்திருந்ததாகி லும் சரமகாலத்திலே வெளிப்படுமென்கிறார் மேல், (ஆறுநீர்) இத்யாதி யால். ஆறு வற்றியிருந்ததேயாகிலும் புதுநீர்வரவு இன்றுநாளையென் றணித்தானால், அந்தவண்ணிமைக்கீடாக மணல்சிளைந்துகாட்டுகை முத லான குறித்தவடையாளங்க ளுண்டாமாபோலே, முன்பிவைதோன்ற லின்றியே யிருந்ததாகிலும், பகவத்ப்ராப்திகாலமணித்தானவாறே விச ததம ஜ்ஞாநபக்திவைராக்யங்களாகிற விந்த விலக்ஷண ஸ்வபாவவிசே ஷங்கள் நிர்யத்நமாக நினைவறத்தன்னடையே ப்ராப்திஸூசகமாய்க் கொண்டு சரமபாகமாம்படி விளையக்கடவதாயிருக்குமென்கிறார். அநு கூலஸஹவாஸ மப்போது பலித்ததில்லையேயாகிலும், ப்ராப்திகாலத்திலே பலியாதொழியாதென்றபடி.

உ௬உ. ப்ராப்திகாலமணித்தாகவணித்தாக க்ஷணந்தோறும் புதுக் கணித்து விளைந்துவருகிற ஜ்ஞாநபக்திவைராக்யங்களைக்கொண்டு, இனி சரீராந்தரமில்லை, இதுவேசரமசரீரம், பேறுதப்பாதென்று சங்கித்துப் போன தனக்கே ஸம்சயமற வறுதியிடலாம்படி விசதமாயிருக்கும்.

---

ஸம்பந்தத்தாலே வுருவுதல் தீரக்கடவதா யிருக்கும்.

உ௬௧. ஆறு நீர் வரவணித்தானால் அதுக்கீடான வடையாள ங்க ளுண்டாமாபோலே, ப்ராப்தியணித்தானவாறே இந்த ஸ்வபாவவிசேஷங்கள் தன்னடையேவிளையக் கடவதாயிருக்கும்.

உ௬உ. இவற்றைக்கொண்டு சரமசரீரமென்று தனக்கேயறுதி யிடலாயிருக்கும்.

---

ஜீ.—இவற்றிலேசிறிதக்வயமுண்டாய் இவை நேராகவில்லாமையா லுண் டான வுருவுதல் தீரக்கடவதாயிருக்குமென்கை.

உ௬௧. ஏதத்ஸஹவாஸத்தால் இப்படி உருவுதல்தீர்ந்து கிடக்கு மளவோவென்னில் இவ்வளவுமன்று, இந்த ஸ்வபாவவிசேஷங்கள் ப்ராப்தி க்குமாக விளைந்தறுமென்கிறார். (ஆறுநீர்) என்றுதுடங்கி. அதாவது- வற்றிக்கிடக்கிறவாறு நீர்வரத் தாஸந்நமானவாறே தத்ஸூசகமான மண ல்பொசிகைமுதலான வடையாளங்களுண்டாமாபோலே, பகவத்ப்ராப்தி யாஸந்நையானவாறே தத்ஸூசகமான விந்தஜ்ஞாநாதிஸ்வபாவவிசேஷங் கள் ஸ்வயமேவ விளையக்கடவதாயிருக்குமென்கை.

உ௬உ. இவை யிப்படிவிளைந்து வரப்புக்கால் ப்ராப்தியணித்தென்று தோற்றியிருக்குமோவென்ன வருளிச்செய்கிறார், (இவற்றைக்கொண்டு) என்றுதுடங்கி. அதாவது இப்படி மேன்மேலும் புதுக்கணித்து விளைந்து வருகிற ஜ்ஞாநபக்திவைராக்யங்களைக்கொண்டு, இனி நமக்கொருசரீர பரிக்ரஹமில்லை இது சரமசரீரமென்று தன் மநஸ்ஸுக்கே நிச்சயித்துக் கொள்ளலாயிருக்கு மென்கை.

ஆ.—உசுரு. ஆக வநுகூலலக்ஷணமும் தத்ஸஹவாஸபலமு மருளிச்செய்து, ஸஹவாஸநிவ்ருத்தி விஷயமாக நிகசர்யாநுஸந்த்தாநத்தாலே யெடுத்த ப்ரதிகூலவகையை இன்னதென்றும் இவர்களுக்குத்தேச்யாதிபேத மின்னதென்று மருளிச்செய்கிறார், (இனி ப்ரதிகூலராகிறார்) இத்யாதியால். ஜ்ஞாநாதிநாசகராய்க்கொண்டு ஸஹவாஸயோக்யரல்லாத ப்ரதிகூலராவார், ப்ரக்ருத்யாத்மவிவேகமற்ற தேஹாத்மாபிமானிகளும், ஆத்மபரமாத்மவிவேகமற்ற ஸ்வதந்த்ரரும், ப்ராப்தசேஷசேஷிவிவேகமற்ற வந்யசேஷபூதரும், ஸித்தோபாயாபாயவிவேகமற்ற வுபாயாந்தரநிஷ்டரும், அநுரூபப்ரயோஜநாப்ரயோஜநவிவேகமற்ற ஸ்வப்ரயோஜநபரரும்.

உசுச. ஸ்வரூபத்தைஜடமென்றும் ஸ்வதந்த்ரமென்று மந்யசேஷமென்றும், ப்ராப்யம் ஸ்வயத்நஸாத்யமென்றும் ஸ்வார்த்தமென்றும்

---

உசுரு. ப்ரதிகூலராகிறார் தேஹாத்மாபிமானிகளும் ஸ்வதந்த்ரரு மந்யசேஷபூதரு முபாயாந்தரநிஷ்டரும் ஸ்வப்ரயோஜநபரரும்.

உசுச. இவர்களுக்குத்தேச்யரும்

---

ஜீ.—உசுரு. ஆக இப்படிஸஹவாஸவிஷயமாக நிகசர்யையில் சொன்ன வநுகூலருடையலக்ஷணத்தையும் தத்ஸஹவாஸபலத்தையு மருளிச்செய்து, ததநந்தரம் ஸஹவாஸநிவ்ருத்தி விஷயமாகச்சொன்ன ப்ரதிகூலரின்னாரென்னுமிட மருளிச்செய்கிறார் மேல், (ப்ரதிகூலராகிறார்) என்றுதுடங்கி (ப்ரதிகூலராகிறார்) என்றது - ஜ்ஞாநாதி நாசகராகையாலே ஸஹவாஸயோக்யரல்லாராகக் கீழ்ச்சொன்ன ப்ரதிகூலராகிறாரென்றபடி ; (தேஹாத்மாபிமானிகள்) இத்யாதி. (தேஹாத்மாபிமானிகள்) ஆகிறார் காண்கிற தேஹத்துக்கவ்வருகோராத்மாவுண்டென்றறியாதே தேஹத்திலேயஹம்புத்தியைப்பண்ணி இத்தையேயாத்மாவாக வபிமாநித்திருக்குமவர்கள் ; (ஸ்வதந்த்ரராகிறார்) தேஹாதிரிக்தமான வாத்மவஸ்துவை யறிந்திருக்கச்செய்தே அத்தை தனக்குரித்தாகவேநினைத்து ஒருவிஷயத்திலும் சேஷத்வத்துக்கிசையாதவர்கள் ; (அந்யசேஷபூத) ராகிறார் சேஷத்வத்தை யிசைந்திருக்கச்செய்தே அத்தை யப்ராப்தவிஷயங்களிலே விநியோகித்திருக்குமவர்கள் ; (உபாயாந்தரநிஷ்ட) ராகிறார் ப்ராப்தசேஷிவிஷய சேஷத்வத்தையுடையராய்வைத்தே தத்ப்ராப்த்யுபாயம் தச்சரணாரவிந்தசரணாகதியென்றிருக்கை யன்றிக்கே, கர்மாத்யுபாயங்களைப்பற்றி நிற்கிறவர்கள் ; (ஸ்வப்ரயோஜநபர) ராகிறார் ப்ராப்தசேஷிசரணகமலங்களை யுபாயமாகப்பற்றி யிருக்கச்செய்தே, தாங்கள் பற்றினபற்றை யுபாயமாகநினைத்தும், உபேயமானகைங்கர்யத்தை ஸ்வபோக்யமாக நினைத்துமிருக்குமவர்கள். இப்படி யிருக்கிறவிவர்கள் ப்ரணவத்தில் த்ருதீயாக்ஷரத்தாலே ஆத்மாவினுடைய தேஹாதிரிக்தத்தையும், ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தியாலே பகவச்சேஷத்வத்தையும், மத்த்யமாக்ஷரத்தாலே ததநந்யார்ஹத்வத்தையும், மத்த்யமபதத்தாலே அநந்யசரணத்வத்தையும், சரமபதத்தாலே அநந்யபோக்யத்வத்தையும் தர்சித்திருக்கு மதிகாரிக்கு ப்ரதிகூலரிறே.

உசுச. இந்த ப்ராதிகூல்யத்தை யுபபாதிக்கைக்காக இவர்களுடைய விப்ரதிபத்தி நிபந்த்தநமான உத்தேச்யாதிபேதங்களை யருளிச்செய்கிறார் மேல், (இவர்களுக்கு) என்றுதுடங்கி. (உத்தேச்ய) ராகிறார் ஆதரணீயர்;

ஆ.—வருகிற விப்ரதிபத்தியாலே ப்ரதிகூலகோடிகடிதரான விவர்களுக்கு, ஸ்வாபிமதப்ரதரானவுத்தேச்யரும் ஸ்வாபிமதோபாயங்களும் ஸ்வாபிமதோபேயங்களும் தாமஸாதிகுணாநுகுணமாக பேதித்திருக்குமென்று.

உகரு. ஸங்க்ரஹித்தத்தை விவரிக்கிறார் மேல், (தேஹாத்மாபிமானிகளுக்குத்தேச்யர்) இத்யாதியால். ஆத்மவிஷயஜ்ஞாநகந்தமற்ற தேஹாத்மாபிமானிகளுக்கு ஸ்வாநுரூபமான வுத்தேச்யர் பாலும்சோறுமிட்டு தேஹவர்த்தகரான மரணதர்மிகளான மநுஷ்யர்; தேஹபோகோபாயம் நநதாங்யார்த்தம், அர்த்தஸாத்யமான வுபேயம் ஸ்நாநபோஜநலேபநாதிவிஷயாநுபவம் பண்ணுகையாகிற ஐஹிகபோகம்; பரமாத்மவிஷயபாரதந்த்ர்யஜ்ஞாநமற்ற ஸ்வதந்த்ரர்க்கு ஸ்வாநுரூபோத்தேச்யர் அல்பாஸ்த்திரமான ஸ்வர்காதிப்ரஹ்மலோகாந்தமான போகப்ரதரான வக்நீந்த்ராதிகள், ததுபாயம் "కామతస్సుకృతం కర్మ ప్రవృత్తిముపదిశ్యతే। ప్రవర్తకఞ్చ స్వర్గాది ఫలసాధనముచ్యతే" "காமதஸ்ஸுக்ருதம்கர்ம ப்ரவ்ருத்திமுபதிச்யதே। ப்ரவர்த்தகஞ்சஸ்வர்காதி பலஸாதநமுச்யதே" என்கிற பலாபிஸந்தியுக்தப்ரவ்ருத்தி கர்மாநுஷ்டாநம், ததுபேயம் அல்பாஸ்த்திரமான ஸ்வர்க்காதிபோகம்; பகவச்சேஷத்வதூஷகரான ததந்ய

---

உபாயோபேயங்களும் பேதித்திருக்கும்.

உகரு. தேஹாத்மாபிமானிகளுக்குத்தேச்யர் தேஹவர்த்தகரான மநுஷ்யர்கள், உபாயமர்த்தம், உபேயமைஹிகபோகம்; ஸ்வதந்த்ரர்க்குத்தேச்யர் ஸ்வர்காதிபோகப்ரதர், உபாயம் கர்மாநுஷ்டாநம், உபேயம் ஸ்வர்காதிபோகம்; அந்யசேஷபூதர்க்குத்தேச்யர் ப்ரஹ்ம

---

ஜீ.—அவர்களாகிறார் இவ்விடத்தில் ஸ்வாபிமதப்ரதரானவர்கள்; (உபாயங்க) ளாவன-ஸ்வாபிமதபுருஷார்த்தஸாதநங்கள்; (உபேயங்க)ளாவன ஸ்வாபிமதபுருஷார்த்தங்கள்; இவை (பேதித்திருக்கை) யாவது - தத்தத்விப்ரதிபத்த்யநுகுணமாக வேறுபட்டிருக்கை.

உகரு. அதுதன்னையடைவே யுபபாதிக்கிறார் மேல் (தேஹாத்மாபிமானிகளுக்கு) என்றுதுடங்கி. அதாவது தேஹத்தையே தானாகவபிமானித்திருக்கிறவர்களுக் குத்தேச்யர் தாரகபோஷகபோக்யபதார்த்தங்களையிட்டு தேஹத்தை நன்றாகவளர்த்துக்கொண்டுபோருமநுஷ்யர். அபிமதஸித்திக்குபாயம் ஸுவர்ணாதியானதநம், அபிமதமானவுபேயம் இஹலோகத்திலுண்டான ஸ்த்ர்யந்நபாநாதிவிஷயாநுபவம்; தேஹாதிரிக்தனாயிருப்பானொராத்மாவுளன் அவன்தான் ஜ்ஞாத்ருத்வகர்த்ருத்வபோக்த்ருத்வ யுக்தனாயிருக்குமென்கிறமாத்ரத்தை சாஸ்த்ரமுகத்தாலேயறிந்து தங்களை ஸ்வதந்த்ரராக நினைத்திருக்குமவர்களுக்குத்தேச்யர் அநுஷ்டித்தஸாதநத்துக்கு அநுகுணமாக ஸ்வர்காத்யாமுஷ்மிகபோகங்களைக்கொடுக்கு மக்நீந்த்ராதிகளான தேவதைகள், உபாயம் "జ్యోతిష్టోమేన స్వర్గకామో యజేత" "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்ககாமோயஜேத" இத்யாதிகளாலே சொல்லப்படுகிற பலாபிஸந்திஸஹிதமான யாகாதிகர்மாநுஷ்டாநம், உபேயம் ஐஹிகபோகாத்விலக்ஷணமான ஸ்வர்காத்யநுபவம்; ஜகத்து "దైవాధీనమ్" "தைவாதீநம்" என்னுமத்தை சாஸ்த்ரங்களில் கேட்கையாலே சேஷத்வத்தை யிசைந்துவைத்தே அத்தைப்பரதேவதாபர்யந்தமாகப்போகவறியாதே ஆபாதப்ரதீதிஸித்தங்களிலே ஒன்றைப்பற்றிநிற்குமந்யசேஷபூதர்க்குத்தேச்யர் ஜகத்

ஆ.—சேஷபூதர்க்கு ஸ்வாநுரூபோத்தேச்யர் ஸ்ருஜ்யத்வ ஸம்ஹார்யத்வ கர்மவச்யத்வமுடைய க்ஷேத்ரஜ்ஞரான ப்ரஹ்மருத்ராதிகள், தத்ப்ராப்த்யுபாயம் துஷ்கரமான தத்ஸமாச்ரயணம், தத்பலமானவுபேயம் அந்த ப்ரஹ்ம ருத்ராதிகளுடன் ஸாம்ஸாரிகபோகாநுபவம் பண்ணுகையாகிற தத்ஸாயுஜ்யம்; ஸாத்த்யோபாயாந்தரநிஷ்டர்க்குபாஸ்யனான வுத்தேச்யன் அக்நீந்த்ராதி தேவதாந்தர்யாமியானஸர்வேச்வரன், தத்ப்ராப்த்யுபாயம் பலாபிஸந்த்திரஹிதகர்மயோகம் இந்த்ரியோபரதிபூர்வகஜ்ஞாநயோகம் தது்பயஸாத்த்யமான வவிச்ச்சிந்நஸ்ம்ருதிரூபபக்தியோகமென்கிறவிவை. இவர்களுக்குபேயம் "సో౽శ్నుతే సర్వాన్ కామాన్ సహ బ్రహ్మణా విపశ్చితేతి" "ஸோஉச்நுதேஸர்வாந்காமாந் ஸஹப்ரஹ்மணாவிபச்சிதேதி" என்கிற

---

ருத்ராதிகள், உபாயம் தத்ஸமாச்ரயணம், உபேயம் தத் ஸாயுஜ்யம்; உபாயாந்தர நிஷ்டர்க்குத்தேச்யன் தேவ தாந்தர்யாமியான ஸர்வேச்வரன், உபாயம் கர்மஜ்ஞாந பக்திகள், உபேயம் பகவதநுபவம்; ஸ்வப்ரயோஜந பரர்க்குத்தேச்யன் நெஞ்சினுல் நினைப்பானெவனென்

ஜீ.—ஸர்காதிகர்த்ருதயாபரத்வ புத்த்யர்ஹரான ப்ரஹ்மருத்ராதிகள், உபாயம் துராராதரானவர்கள் பக்கல்பண்ணும் துஷ்கரஸமாச்ரயணம், உபேயம் அவர்களோடு ஸமாநபோக்யனாகையாகிற ஸாயுஜ்யம், "సాయుజ్యముభయోరత్ర భోక్తవ్యస్యావిశిష్టతా। సార్ష్టితా తత్ర భోగ్యస్య తారతమ్యవిహీనతా" "ஸாயுஜ்யமுபயோரத்ர போக்தவ்யஸ்யாவிசிஷ்டதா | ஸார்ஷ்டிதாதத்ரபோக்யஸ்ய தாரதம்யவிஹீநதா" என்னக்கடவதிறே; ஆத்மஸ்வரூபம் பகவதநந்யார்ஹசேஷமென்னுமிடத்தை வேதாந்தமுகேந வறிந்துவைத்தே அபிமதலாபத்துக்கவன்தன்னையே உபாயமாகப் பரிக்ரஹிக்க வறியாதே உபாயாந்தர நிஷ்டரானவர்களுக்குத்தேச்யன் அக்நீந்த்ராதிதேவதைகளுக் கந்தர்யாமியான வீச்வரன்; இது கர்மயோகத்துக்கு ஸ்வரஸம், ஜ்ஞாநயோகபக்தியோகங்களுக்கு அஸாதாரண விக்ரஹவிஷயத்வ முண்டேயாகிலும் கர்மாநுஷ்டாநம் தளமாகவெழுந்திருந்தவையாகையாலும் கர்மாராத்த்யனானவனே ஸ்வாஸாதாரணவிக்ரஹ விசிஷ்டவேஷத்தை நமக்கு ப்ரகாசிப்பித்தானென்னும் நினைவு நடக்கையாலும், தேவதாந்தர்யாமியே உத்தேச்யனாகச் சொல்லுகிறதென்று கொள்ளவேணும். உபாயம் தனித்தனிமோக்ஷஸாதநதயாசாஸ்த்ரஸித்தங்களான கர்மஜ்ஞாநபக்தியோகங்கள்; இவை தனித்தனி யுபாயமாமிடத்தில் ஓரொன்றுக்கு மற்றையவையிரண்டு மங்கமாயிருக்கும், "జ్ఞానభక్త్యన్వితం కర్మ జనకాదిషు దృశ్యతే। కర్మభక్త్యన్వితం జ్ఞానం ప్రాయేణ భరతాదిషు॥ కర్మజ్ఞానాన్వితా భక్తిః ప్రహ్లాదప్రముఖాశ్రయా" "ஜ்ஞாநபக்த்யந்விதம்கர்ம ஜநகாதிஷு த்ருச்யதே | கர்மபக்த்யந்விதம்ஜ்ஞாநம் ப்ராயேணபரதாதிஷு || கர்மஜ்ஞாநாந்விதாபக்தி: ப்ரஹ்லாத ப்ரமுகாச்ரயா" என்னக்கடவதிறே.—, அன்றிக்கே (கர்மஜ்ஞாநபக்திகள்) என்கிறவிடத்தில் வேதாந்தமர்யாதையாலே கர்மஜ்ஞாநாநுக்ருஹீதையான பக்தியே யுபாயமாய் ததங்கதயா கர்மஜ்ஞாநங்களையுபாயமென்றுபசரித்துச் சொல்லுகிறதாகவுமாம். உபேயம் "సో౽శ్నుతే సర్వాన్ కామాన్ సహ బ్రహ్మణా విపశ్చితా" "ஸோஉச்நுதேஸர்வாந்காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதா" இத்யாதிச்ருதிகளாலும், "నిరస్తాతిశయాహ్లాద సుఖభావైకలక్షణా। భేషజం భగవత్ప్రాప్తిరేకాన్తాత్యన్తికీ మతా" "நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுக

ஆ.—நிரந்தராநந்த நிர்ப்பரபகவதநுபவம்; பரைகப்ரயோஜநத்வ தூஷக ஸ்வப்ரயோஜநபராானப்ரபந்நர்க்கு ப்ரபத்தவ்யனுண வுத்தேச்யன் "நெஞ்சினால் நினைப்பானெவனவனுகும்நீள்கடல்வண்ணன்" என்றுச்சிதருகந்தவடிவுகொண்டு எளியனாய் நிற்கிற வர்ச்சாவதாரமான வெம்பெருமான், இவர்களுக்குபாயமஹறங்காரகர்ப்பமான ஸ்வகீயஸ்வீகாரம், ஏததுபேயம் ஸ்வபோக்த்ருத்வகர்ப்பமான ஸ்வார்த்தகைங்கர்யம்.

உகூகூ. ஆக ஈத்ருசப்ரதிகூலருடைய வுத்தேச்யாதி விபாகத்தை யருளிச்செய்து, இவர்களில் நிக்ரஹாநுக்ரஹயோக்யரின்னுரென்றும், இவர்கள் கர்மவிநாசஹேது வின்னதென்றுமருளிச்செய்கிறார் மேல் (முதற்சொன்ன) இத்யாதியால். தேஹாத்மாபிமாநி ஸ்வதந்த்ரர் அந்ய சேஷபூதர் என்று ஸஹபடநயோக்யராய் முதற்சொன்ன நேரேப்ரதிகூலரான மூவரும், தேஹாதிவிலக்ஷணமாய் பகவத்பரதந்த்ரமாய் ததேகசேஷமாயிருக்கும் ஸ்வரூபமென்றுதெளிந்து ஐஹிகாமுஷ்மிகபோகங்களைக் குறித்து தேவதாந்தரங்களைக் காற்கடைகொண்டிருக்கும் விலக்ஷணர்க்கு "எங்கள்குழுவினிற்புகுதலொட்டோம்" என்று தங்கள் திரள்புகுரவொட்டாமல் தள்ளிக்கதவடைத்து காணில்கண்புதைக்கையாகிற நிக்ரஹத்துக்கு நேரேயிலக்கு; அந்யப்ரயோஜநத்வேந ஸஹபடநயோக்யரான வுபாயாந்தரபரரும் ஸ்வப்ரயோஜநபரருமாகிற பூர்வோக்தரில் வ்யாவ்ருத்தரான மற்றையிருவரும் முமுக்ஷுக்களாகையாலே

---

கிறவன்; உபாயம் ஸ்வகீயஸ்வீகாரம், உபேயம் ஸ்வார்த்தகைங்கர்யம்.

உகூகூ. முதல்சொன்னமூவரும் நிக்ரஹத்துக்கிலக்கு,

---

ஜீ.—பாவைகலக்ஷண | பேஷஜம்பகவத்ப்ராப்திரேகாந்தாத்யந்திகீமதா" இத்யாதி ச்ருத்யுபப்ரும்ஹணங்களாலும் சொல்லப்படுகிற நிரதிசயாநந்தரூப பகவதநுபவம்; இந்தச்லோகத்தில் "ஃ[illegible]" "பகவத்ப்ராப்திஃ" என்கிறவிது பகவதநுபவமாகவிறே நம்மாசார்யர்கள் ஸ்வப்ரபந்தங்களிலே யருளிச்செய்தது; கர்மாத்யுபாயங்களில் துஷ்கரத்வபுத்தியாலே யவற்றைவிட்டு ஸுகரத்வபுத்த்யா ப்ரபத்தியிலேயிழிந்த ஸ்வப்ரயோஜநபரர்க்குத்தேச்யன் "நெஞ்சினால் நினைப்பானெவன்". என்கிறபடியே ஆச்ரிதர் தங்கள் நெஞ்சாலே யாதொருத்ரவ்யத்தை தனக்குத் திருமேனியாகக் கோலினுர்கள் அத்தையே தனக்குத்திருமேனியாக வபிமானித்து அதிலே யப்ராக்ருதவிக்ரஹத்தில் பண்ணுமாதரத்தைப் பண்ணிக்கொண்டு அத்யந்தஸுலபனுயிருக்கிறவர்ச்சாவதாரமான ஸர்வேச்வரன்; உபாயம் அநிஷ்ட நிவ்ருத்திக்குமிஷ்டப்ராப்திக்குமவனை யுபாயமாகநினைத்துத்தான்பற்றினபற்று, உபேயம் தனக்குகப்பாகப்பண்ணும் கைங்கர்யம்.

உகூகூ. ஆக உத்தேச்யாதிபேதத்தாலே அவர்களுக்குண்டான வந்யோந்யவிசேஷத்தைத்தர்சிப்பித்தார்கீழ்; இவர்களில் பகவத்விஷயத்தோடு வொட்டற நின்றமூவர்க்கும், பகவத்விஷயத்தையேபற்றிநின்றவிருவர்க்குமுண்டான விசேஷத்தைத்தர்சிப்பிக்கிறார் மேல், (முதற்சொன்னமூவரும்) என்றுதுடங்கி. அதாவது தேஹாத்மாபிமாநமும் ஸ்வஸ்வாதந்த்ர்யமு மந்யசேஷத்வமுமாகிற விவற்றுக்கவ்வருகொன்றறியாமையாலே பகவதந்வயகந்தரஹிதரான மூவரும், "[illegible]" "க்ஷிபாமி" என்கிற பகவந்நிக்ரஹத்துக்கு விஷயம்; ப்ரக்ருதேஃபரமாய் பகவதநந்யார்ஹசேஷமான ஸ்வரூபத்தையறிந்து பகவதநுபவகைங்கர்யங்களைப்

ஆ.—தர்சந ஸ்பர்சந ஸம்பாஷணாத்யநுக்ரஹத்துக்கிலக்கு.—, அன்றியே மூவரு மிருவரும் பகவந்நிக்ரஹாநுக்ரஹங்களுக் கிலக்கென்று மருளிச் செய்வர்.

உ௱எ. தத்தந்நியநிக்ரஹத்துக் கிலக்கான வம்மூவருடைய வநாதி காலார்ஜித ஸதஸத்கர்மமும் தத்தத்பலஸுகதுக்காநுபவ விநாச்யம்; அல்பாநுக்ரஹத்துக்கிலக்கான நாலாமதிகாரிக்கு, அஸத்கர்மத்தளவு "ధర్మేణపాపమపనుదతి" "தர்மேணபாபமபநுததி" என்கிறபடியே ப்ராயச்சித்தவிநாச்யம்; ப்ராயச்சித்தஸாத்யமல்லாத ஸதஸத்கர்மமிரண்டும் பகவத்ப்ரஸாதவிநாச்யமென்று கருத்து. அநுக்ரஹவிசேஷத்துக் கிலக்கான வஞ்சாமதிகாரிக்கு, "నకశ్చిన్నాపరాధ్యతి" "நகச்சிந்நாபராத்யதி" என்று அபராதபயநிவ்ருத்திஹேதுபூதமான புருஷகாரவிநாச்யம். அநிஷ்டநிவர்த்தகத்வம் ஸித்தோபாயகார்யமாகிலும் ஆச்ரயணவிரோதி நிவ்ருத்திமாத்ரம் தத்ஸங்கல்பமடியாகப்புருஷகாரகார்ய மென்னலாமிறே.

---

மற்றையிருவரு மநுக்ரஹத்துக்கிலக்கு.

உ௱எ. மூவருடையவும் கர்மமநுபவவிநாச்யம், நாலாமதிகாரிக்கு ப்ராயச்சித்தவிநாச்யம், அஞ்சாமதிகாரிக்கு புருஷகாரவிநாச்யம்.

---

ஜீ.—புருஷார்த்தமாகக் கொள்ளுகையாலே அநந்யப்ரயோஜநராய், கர்மஜ்ஞாநாதிகளான உபாயாந்தரங்களிலும் ப்ரபதநத்திலும் நிஷ்டரான விருவரும் "దదామి" "ததாமி" "మోక్షయిష్యామి" "மோக்ஷயிஷ்யாமி" என்கிறபகவதநுக்ரஹத்துக்கு விஷயமென்கை.

உ௱எ. இவர்களுக்கு கர்மவிநாசஹேதுபேதத்தால் வந்தவிசேஷங்களைத்தர்சிப்பிக்கிறார் மேல் (மூவருடையவும்) என்றுதுடங்கி. அதாவது நிக்ரஹத்துக்கிலக்கான மூவருடையவும் அநாதிகாலார்ஜிதமான ஸதஸத்கர்மம், "అవశ్యమనుభోక్తవ్యం కృతంకర్మశుభాశుభమ్ । నాభుక్తంక్షీయతేకర్మ కల్పకోటిశతైరపి" "அவச்யமநுபோக்தவ்யம் க்ருதம்கர்மசுபாசுபம் | நாபுக்தம் க்ஷீயதேகர்ம கல்பகோடிசதைரபி" என்கிறபடியே அவச்யம் தத்பலமுள்ளதநுபவித்தாலன்றி நசியாமையாலே அநுபவவிநாச்ய மென்கிறார்; அநுக்ரஹத்துக்கிலக்காகச்சொன்ன விருவரிலும்வைத்துக்கொண்டு உபாயாந்தரநிஷ்டனை நாலாமதிகாரிக்கு, கர்மஜ்ஞாநபக்திகளாகிற வுபாவிசேஷங்களிலொன்றை யநுஷ்டித்தால் அத்தை ப்ராயச்சித்தஸ்தாநீயமாக்கி ஈச்வரன் ஸர்வகர்மங்களையும் கழிக்கையாலே கர்மம் ப்ராயச்சித்த விநாச்யமென்கிறார்; ப்ரபதநநிஷ்டனை அஞ்சாமதிகாரிக்கு ஆச்ரயணவேளையிலே அநாதிகாலக்ருதாபராதபீதனாய் அவற்றையடைய ஈச்வரன் பொறுக்கைக்குறுப்பாகப் பிராட்டியைப் புருஷகாரமாக முன்னிட்டாச்ரயிக்கையாலே அவளுக்காகவிவனுடைய வபராதத்தையெல்லாம் பொறுத்தங்கீகரித்து இவனுடைய வகிலகர்மங்களையும் தள்ளிப்போகடுகையாலே புருஷகாரவிநாச்ய மென்கிறார்.

ஆ.—உசுஅ. புருஷகாரஸாபேக்ஷத்வத்தால் வந்த ஸித்தோபாயத்தின் நைரபேக்ஷ்யஹாநியைப்பரிஹரிக்கிறார்மேல் ; நிரபேக்ஷமான ஸித்தோபாயம் சரணவரணரூபஸ்வீகாரகாலத்தில் ஸ்வீகர்த்தாவாயிருப்பானொரு புருஷஸாபேக்ஷமாய்; ஸ்வீகரிப்பிக்குமதொரு புருஷகார ஸாபேக்ஷமுமாயிருக்கும் ; ஸ்வீகர்த்தாவில்லாவிடில் ஸ்வீகாரந்தானில்லை, புருஷகாரமில்லாவிடில் ஸ்வீகாராதிகாரமில்லை. ஸ்வீகாரானந்தரபாவியான வநிஷ்டநிவ்ருத்திபூர்வகேஷ்டப்ராப்தியைப் பண்ணுகையாகிற கார்யகாலத்தில், புருஷபுருஷகாரரூபோபயநிரபேக்ஷமாயிருக்கும் ; கார்யகாலத்தில் ஸஹகாரிஸாபேக்ஷமுண்டாகிலிறே தந்நைரபேக்ஷ்யபங்கம்வருவது.

உசுகூ. இப்படி ஸ்வப்ரயோஜநபரரடங்க ப்ரதிகூலரென்னில் "நமக்கே நலமாதலில்" என்னு மாழ்வார்களையும் ப்ரதிகூலரென்னவேண்டிவாராதோவென்றுசங்கித்து ப்ரதிகூலவகையைச்சொல்லுகிறது;

உசுஅ. உபாயம் ஸ்வீகாரகாலத்தில் புருஷஸாபேக்ஷமுமாய் புருஷகாரஸாபேக்ஷமுமா யிருக்கும் ; கார்யகாலத்திலுபய நிரபேக்ஷமாயிருக்கும்.

உசுகூ. ஸ்வப்ரயோஜநபரரெல்லாரையும் ப்ரதிகூலராக நினைக்கலாமோ வென்னில் ;

ஜீ.—உசுஅ. இப்படி புருஷகாரஸாபேக்ஷமென்னில் உபாயத்தினுடைய நைரபேக்ஷ்யஹாநிவாராதோ வென்கிறசங்கையிலே யருளிச்செய்கிறார், (உபாயம்) என்றுதுடங்கி. அதாவது ஸஹாயாந்தர ஸம்ஸர்காஸஹமான ஸித்தோபாயம், சரணவரணரூப ஸ்வீகாரகாலத்தில் ஸ்வீகர்த்தாவான புருஷனையும் ஸ்வீகரிப்பிக்கும் புருஷகாரத்தையு மபேக்ஷித்திருக்கும் ; ஸ்வீக்ருதமானதானிவனுக் கநிஷ்டநிவ்ருத்திபூர்வகேஷ்டப்ராப்தியைப் பண்ணுகையாகிற கார்யகாலத்தில், புருஷனும் புருஷகாரமுமாகிற வுபயத்தையு மபேக்ஷியாதே தானேசெய்து தலைக்கட்டுமென்கை ; கார்யகாலத்தில் ஸஹகாரிஸாபேக்ஷமுண்டாகிலிறே யுபாயத்தினுடைய நைரபேக்ஷ்யத்துக்கு ஹாநிவருவதென்றுகருத்து.

உசுகூ. ஸ்வப்ரயோஜநபரரை (ப்ரதிகூலர்) என்று அவிசேஷேண வருளிச்செய்தாரிறே ; இந்த ஸ்வப்ரயோஜநபரதை அநுகூலாக்ரேஸரரான வாழ்வார்கள் பக்கலிலும் தோற்றியிருக்கையாலே தந்நிபந்தநமானப்ராதிகூல்ய மவர்கள்பக்கல் வாராதபடி பரிஹரிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, தத்விஷயசங்கையை யநுவதிக்கிறார், (ஸ்வப்ரயோஜநபரரெல்லாரையும்) என்று துடங்கி. "நமக்கேநலமாதலில்" என்றும் "நாம் கண்டுகந்து கூத்தாட ஞாலத்தூடேநடவாயே" என்றும் "கண்டு நானுன்னையுகக்க" என்று மித்யாதிவசநங்களாலும், மடலெடுக்கைமுதலான ப்ரவ்ருத்திகளாலும் ஆழ்வார்களுக்கு மிக்த ஸ்வப்ரயோஜநபரத்வமுண்டாகத்தோற்றுகின்றதிறே; ஆனபின்பு ஸ்வப்ரயோஜநபரரெல்லாரையும் ப்ரதிகூலரென்று சொல்லப்பார்க்கில் ஆழ்வார்களையு மப்படிநினைக்கவேண்டி வாராதோவென்று சங்கைக்கபிப்ராயம்.

ஆ.—உஎ೦. இங்கு ப்ராதிகூல்யஹேதுவான ஸ்வப்ரயோஜநமென்கிறது சேஷத்வாச்ரயமான ஸ்வரூபத்துக்கு ஸ்வபோக்த்ருத்வபுத்திரூப தோஷஜந்யமான ஸ்வப்ரயோஜநத்வத்தை.

உஎக. ஆகையாலந்தஸ்வப்ரயோஜநபரரை ப்ரதிகூலரென்னக்குறையில்லை.

உஎஉ. சேஷத்வவிஷயமான பகவத்விஷயத்தின் விக்ரஹவைலக்ஷண்யமாகிற தோஷத்தாலே வருமதான ஸ்வப்ரயோஜநத்வம், சேஷபூதனை விவனுல் ஸ்வபோக்யத்வாநுஸந்தாநம்பண்ணி வருந்தி த்யஜிக்கத்தேடினும் துஸ்த்யஜமாயிறே யிருப்பதென்று பரிஹரிக்கிருர். ஆக ஸ்வரூபதோஷமடியாகவந்த ப்ராதிகூல்யஹேதுவான ஸ்வப்ரயோஜநத்வம் ஸ்வரூபஜ்ஞாநம்பிறக்கவே விட்டுப்போம்; விஷயதோஷமடியாகவந்த ஆநுகூல்யாதிசயஹேதுவான ஸ்வப்ரயோஜநத்வம், விஷயதோஷம்

---

உஎ೦. இங்கு ஸ்வப்ரயோஜநமென்கிறது ஆச்ரயதோஷஜந்யமானத்தை.

உஎக. ஆகையாலே தோஷமில்லை.

உஎஉ. விஷயதோஷத்தால் வருமவையெல்லாம்

---

ஜீ.—உஎ೦. அத்தைப்பரிஹரிக்கிருர், (இங்கு) என்றுதுடங்கி. அதாவது ப்ரதிகூலமாகச்சொல்லுகிறவிவ்விடத்தில் ஸ்வப்ரயோஜநமென்கிறது, அநுபவகைங்கர்யங்களுக்காச்ரயமான சேதநனுடைய அவித்யாதிதோஷத்தால்வந்த ஸ்வப்ரயோஜநத்தையென்கை. இத்தை(ஆச்ரயதோஷஜந்யம்) என்றேதுக்குகையாலே ஆழ்வார்களுடைய ஸ்வப்ரயோஜநம் விஷயதோஷஜந்யமென்று கருத்து. இதுதன்னை(விஷயதோஷத்தால்வருமவை)என்கிறவாக்யத்திலே வ்யக்தமாக வருளிச்செய்கிருரிறே.

௩௩௬. இனி ஆசார்யனும் சிஷ்யனும் தந்தாமுக்கு வ்யவஸ்திதங்களான வாத்மரக்ஷண தேஹரக்ஷணங்களைப் பண்ணுமிடத்தில் அவச்யம்பரிஹரணீயங்களானவிரோதிகளை யருளிச்செய்கிறார், (ஆசார்யன் ஆத்மரக்ஷணம் பண்ணுமிடத்தில்) என்றுதுடங்கி அதாவது ஹிதபரனானவாசார்யன் ஸ்வோபதேசாதிகளாலே சிஷ்யாத்மரக்ஷணம்பண்ணுமிடத்தில், நான்ரக்ஷித்துக்கொண்டு போருகிறேனென்கிற வஹங்காரம், ஆசார்யபரதந்த்ரமாகிற தன்னதிகாரவிரோதி; ப்ரியபரனானசிஷ்யன் த்ரவ்யாதிகளாலே யாசார்யதேஹரக்ஷணம் பண்ணுமிடத்தில், என்னுடைய த்ரவ்யங்களாலும் கரணங்களாலும் இப்படி ரக்ஷித்துக்கொண்டுபோருகிறேனென்கிற மமகாரம், சரீரார்த்தப்ராணாதிகளெல்லா மாசார்யசேஷமென்றிருக்கக்கடவ தன்னதிகாரவிரோதியென்கை.

௩௩௭. ஆசார்யனுக்கும் சிஷ்யனுக்கும் தந்தாமுடைய தேஹரக்ஷணதசையில் ப்ரதிபத்திவிசேஷங்களை வகுத்தருளிச்செய்கிறார்மேல், (ஆசார்யன் தன்னுடையதேஹரக்ஷணம் தன்வஸ்துவைக்கொண்டு பண்ணக்கடவன்) என்றது- “శరీరమర్థంప్రాణంచ సద్గురుభ్యోనివేదయేత్” “சரீரமர்த்தம் ப்ராணம்ச ஸத்குருப்ப்யோநிவேதயேத்” என்கிறபடியேசிஷ்யஸர்வஸ்வமும்

ஆ.—சுத்தவஸ்துவைக்கொண்டு கூசாமல்பண்ணக்கடவன்; அவனென்ன
தென்றபிமானிக்கும் ஹீநவஸ்துவைக்கொண்டு பண்ணக்கடவனல்லன்.
ஆசார்யனுக்கு ஸ்வம்மான சிஷ்யன் தேஹதாரண ப்ரதீத்யா புண்ணு
க்குமருந்துபோலப்பண்ணும் ஸ்வதேஹரக்ஷணம், ஸ்வகீய மாசார்யஸ்வ
மென்னும் ப்ரதிபத்திமுற்றி மதீயத்வ ப்ரதிபத்திகந்தமற்றவாசார்யவஸ்
துவான ஸ்வவஸ்துவைக்கொண்டு, அவனுடைமையைப்பாழே யிறைக்கி
றோமென்னும் ப்ரதிபத்தியுடன்நிர்வேதித்தேபண்ணக்கடவன்; ஸ்வத்ரவ்
யம்கொண்டு ஸ்வதேஹரக்ஷணம் பண்ணுகிறோமென்று ப்ரமிக்கக்கடவ
னல்லன்.

௩௩௮. அஹங்காரமமகாரகந்தஸ்பர்சம்பொருதவாசார்யன், தது
பயதூஷிதனாய் நான் என் வஸ்துவைக்கொடுக்கிறேனென்று ப்ரமித்துக்
கொடுக்கும் துரபிமாநசிஷ்யனுடைய வஸ்ப்ருச்யமான ஹீநவஸ்துவை
மறந்தும்கொள்ளக்கடவனல்லன்; அம்ருதத்தே விஷத்தைக்கலப்பாரை
ப்போலே, துரபிமாநதூஷிதனானசிஷ்யன், ஸ்வாபிமாநோச்சிஷ்டநீச
வஸ்துவை, ஹீநாபிமாநகந்தம்பொருத ம்ருதுப்ரக்ருதியான வாசா
ர்யனுக்கு லஜ்ஜாபயமின்றிக்கே கொடுக்கக்கடவனல்லன்.

சிஷ்யன் ஸ்வதேஹரக்ஷணம் ஆசார்யன் வஸ்துவைக்
கொண்டு பண்ணக்கடவன்.

௩௩௮. ஆசார்யன் சிஷ்யன் வஸ்துவைக்கொள்ளக் கடவன
ல்லன்; சிஷ்யன் தன்வஸ்துவைக்கொடுக்கக் கடவன
ல்லன்.

ஜீ.—அடியிலேஸமர்ப்பிதமாகையாலே, ஸ்வதேஹரக்ஷணத்துக்குறுப்பாக
வவன்காலோசிதமாக கிஞ்சித்கரிக்குமிவற்றை அவனதென்னும் நினைவின்
றிக்கே தன்னதென்றேவாங்கி விநியோகம்கொள்ளக்கடவனென்கை;
(சிஷ்யன் ஸ்வதேஹரக்ஷணமாசார்யன் வஸ்துவைக்கொண்டு பண்ணக்
கடவன்) என்றது - தனக்கோருடைமை யின்றிக்கே ஸகலமுமாசார்ய
சேஷமாகையாலே, ஸ்வதேஹரக்ஷணத்துக்குறுப்பாக விநியோகம் கொள்
ளுமவற்றை ஆசார்யனுடைமையென்று ப்ரதிபத்திபண்ணி விநியோகம்
கொள்ளக்கடவனென்கை.

௩௩௮. ஆசார்யதேஹரக்ஷணத்தில் வந்தால் சிஷ்யன் தனக்குள்ள
தெல்லா மங்குற்றையுடைமையென்னும் நினைவாலே கொடுக்கையும் ஆசா
ர்யனும் தாத்ருசவஸ்துவைவாங்குகையுமொழிய, சிஷ்யனுடைய மமதா
தூஷிதமானவஸ்துவை இருவரும் கொள்ளவும் கொடுக்கவும் கடவர்க
ளல்லரென்கிறார், (ஆசார்யன் சிஷ்யன்வஸ்துவை) என்றுதுடங்கி, (சிஷ்
யன்வஸ்துவைக்கொள்ளக்கடவனல்லன்) என்றது - இவன் மதீயமென்றபி
மானித்திருக்கும் வஸ்துவைமறந்து மங்கீகரிக்கக்கடவனல்லனென்கை,
(சிஷ்யன்தன்வஸ்துவைக்கொடுக்கக்கடவனல்லன்) என்றது - ஸ்வகீயமென்
றபிமானித்திருக்கும் வஸ்துவை அஹங்காரமமகாரஸ்பர்சமுள்ளவை விஷ
மென்று வெருவியிருக்கும் ம்ருதுப்ரக்ருதியானவாசார்யனுக்கு விஷத்தை
யிடுமாபோலே ஸமர்ப்பிக்கக்கடவனல்லனென்கை.

ஆ.—௩௩௯. என்னதென்றபிமானிக்கும் சிஷ்யவஸ்துவை யுபேக்ஷி
யாதே சபலனாய் கூசாமல் கைக்கொள்ளில் உபயவிபூதிமானைப்பற்றின பூர்
ணைச்வர்யமுடையதான், அல்பைச்வர்யமுமற்று மிடியனும்; நித்யதரித்
ரனான சிஷ்யன், ஸ்வகீயமாகச்சிலவற்றை யபிமானித்து ஸ்வாமியான
வாசார்யனுக்கு நிர்ப்பயனாய்க்கொடுக்கில், ப்ரஹ்மஸ்வாபஹாரியான கோ
யில் கள்ளனும்; ''குருரேவபரம்ப்ரஹ்மா'' விறே.

௩௪௦. தம்தாம்ஸ்வரூபஹாநிகரமான கொள்கொடையுண்டாகில்,
சேஷசேஷிகளானசிஷ்யாசார்ய நித்யஸம்பந்தம் மீண்டுபொறுத்த வொ
ண்ணாதபடிகுலையும்;

௩௪௧. ஆசார்யஸ்வம்மானசிஷ்யன் ஸ்வகீயமென்பதொன்றில்லாத
பெருமிடிய னாகையாலே, ஸ்வாமியானவாசார்யனுக்கு ஒன்றையும்
கொடான்; உபயவிபூத்யைச்வர்யவானான பூர்ணனாகையாலே ஆசார்

---

௩௩௯. கொள்ளில் மிடியனும், கொடுக்கில் கள்ளனும்.

௩௪௦. கொள்கொடையுண்டானால் ஸம்பந்தம்குலையும்.

௩௪௧. இவன் மிடியனாகையாலே கொடான், அவன் பூர்ண

---

ஜீ.—௩௩௯. அப்படிகொள்ளுதல் கொடுத்தல் வருவதென்னென்ன
வருளிச்செய்கிறார், (கொள்ளில்) என்றுதுடங்கி. அதாவது - சிஷ்யன் என்
னதென்றிருக்கும்வஸ்துவை சாபலத்தாலே ஸ்வீகரிக்கில், ஈச்வரன் அகி
லபரநிர்வாஹகனாய்ப் போருகையாலே நமக்கென்னகுறையுண்டென்றிருக்
கும் பூர்ணனானதான், தேஹயாத்ரைக்குங்கூட முதலற்ற தரித்திரனாய்
விடும், என்னதென்றுபுத்திபண்ணி ஒன்றையாசார்யனுக்குக்கொடுக்கில்
"శరీరమర్థం" ''சரீரமர்த்தம்'' இத்யாதிப்படியே அடியிலேஸமர்ப்பிதமா
கையாலே ததீயமாயிருக்கிறவதிலே மதீயத்வபுத்திபண்ணுகையாலே
ஆசார்யஸ்வாபஹாரியாய் விடுமென்கை.

௩௪௦. இவ்வளவேயன்று ஸம்பந்தஹாநியும் வருமென்கிறார், (கொ
ள்கொடை) என்றுதுடங்கி. அதாவது சிஷ்யாசார்யத்வமாகிற ஸம்பந்த
முண்டானால், சேஷபூதனானசிஷ்யன் "శరీరమర్థం" ''சரீரமர்த்தம்'' இத்யா
திப்படியே ஸர்வமுமங்குற்றையதென்னும் நினைவாலே ஸமர்ப்பிக்கையும்,
அப்படிஸமர்ப்பித்தவற்றை சேஷியானவாசார்யனங்கீகரிக்கையும் முறை
யாயிருக்க, இவன் தன்னதென்று அபிமானித்தவற்றை ஆசார்யன்ஸ்வீக
ரிக்கையும், இவனென்னதென்று அபிமானித்ததொன்றை யாசார்யனுக்கு
ஸமர்ப்பிக்கையுமாகிற முறைகேடான கொள்கொடையுண்டானபோது,
சிஷ்யாசார்யத்வரூபஸம்பந்தம் குலைந்துவிடுமென்கை.

௩௪௧. இப்படி* தாரித்ர்யாபஹாரங்கள் வருவதும் ஸம்பந்தம்குலைவ
தும் கொள்கொடைதானுண்டாகிலிறே, அதுதானவர்கள் செய்யார்க
ளென்னுமிடத்தை ஸஹேதுகமாக வருளிச்செய்கிறார், (இவன்) என்று
துடங்கி. அதாவது சிஷ்யனானவிவன் ஸகலமுமாசார்யஸ்வம், நம்மதென்று
ஸமர்ப்பிக்கலாவதொன்றுமில்லை, என்றிருக்கும் மிடியனாகையாலே, நாமங்
குற்றைக்கொன்றைக் கொடுக்கிறோமென்றுகொடான்; ஆசார்யனானவன்
ஈச்வரன் ஸகலபரநிர்வாஹகனாய் நடத்திக்கொண்டு போருகையாலே நமக்

---

* தாரித்ர்ய த்ரவ்யாபஹாரங்கள் என்று பாடாந்தரம்.

ஆ.—யன் இவன் துரபிமாநதூஷிதமொன்றையும் கைக்கொள்ளான்; இப்படி கொள்கொடையில்லாமை யுபயஸ்வரூபஸித்தம்.

ருசஉ. இதுக்கு யோக்யதைதானுண்டாகிலிறே ஸம்பந்தம்குலைவது, என்று ஆதானதானநிவர்த்தக பூர்த்திதாரித்ர்ய பலத்தையருளிச்செய்கிறார் மேல்; ப்ராக்ருதவஸ்துக்களில் நிரபேக்ஷனானவவ்வாசார்யனுக்கு தந்நைரபேக்ஷ்யஹேதுவான பூர்த்தியாலே, ப்ராக்ருதப்ரயோஜநநிஸ்ப்ருஹத்வமே வேஷமான ஸ்வாஸாதாரணஸ்வரூப மபங்குரமாக ஜீவித்தது; ஸ்வகீயவஸ்துஸத்பாவப்ரதிபத்திலேசமற்றவிந்தசிஷ்யனுக்கு ஸ்வகீயபுத்திராஹித்யஹேதுவான ததீயபுத்த்யா வந்த மிடியாலே, ஸ்வகீயயோக்யதாகந்தமற்ற ததீயமான ஸ்வரூபம் நசியாமல் ஜீவித்தது.

ருசங. ஆக ஹிதப்ரியபரத்வாதிகளான சிஷ்யாசார்ய ஸாதாரணாஸாதாரணவ்ருத்தி விசேஷங்களை யருளிச்செய்து, மேல்சிஷ்யஸாதாரணமான ப்ரவ்ருத்திநிவ்ருத்திவிசேஷங்களை யருளிச்செய்கிறார், (ஆனால் சிஷ்யனாசார்யனுக்கு) இத்யாதியால். இப்படி நித்யதரித்ரனானல் உபகாரஸ்ம்ருதிமானான சிஷ்யன்மஹோபகாரகனானவாசார்யனுக்கு ஸ்வரூபஸித்த்யர்த்தமாகப் பண்ணுமுபகார மேதேனு மொன்றுமில்லையோவென்னில்,

ருசச. ஸ்வரூபஜ்ஞனான சிஷ்யன் நினைவாலேயில்லை, க்ருதஜ்ஞனானவாசார்யன் நினைவாலேயுண்டு.

---

னுகையாலே கொள்ளான்.

ருசஉ. அவனுக்குப் பூர்த்தியாலே ஸ்வரூபம் ஜீவித்தது. இவனுக்கு மிடியாலே ஸ்வரூபம்ஜீவித்தது.

ருசங. ஆனல் சிஷ்யன் ஆசார்யனுக்குப்பண்ணு முபகாரம் ஒன்றுமில்லையோவென்னில்.

ருசச. ஆசார்யன் நினைவாலேயுண்டு.

---

ஜீ.—கினி என்னகுறையுண்டென்றிருக்கும் பரிபூர்ணனா யிருக்கையாலே, இவனபிமாந துஷ்டமானவை யொன்றையுமங்கீகரியா னென்கை.

ருசஉ. இந்தப் பூர்த்தி தாரித்ர்யங்களா லிருவருக்கும் பலித்தவற்றை யருளிச்செய்கிறார், (அவனுக்கு) என்றுதுடங்கி. அதாவது ஆசார்யனுக்கு இவனபிமாந துஷ்டமானவை யொன்றையும் கொள்ளாமைக்குடலான பூர்த்தியாலே ஆசார்யத்வமாகிற ஸ்வரூபம் ஜீவித்தது; சிஷ்யனானவிவனுக்கு ஸ்வகீயத்வபுத்த்யா ஒன்றையும்ஸமர்ப்பிக்கைக்கு யோக்யதையில்லாத ஸகலமும், ததீயத்வ ப்ரதிபத்திஸித்ததாரித்ர்யத்தாலே சிஷ்யத்வமாகிற ஸ்வரூபம் ஜீவித்ததென்கை.

ருசங. இனி சிஷ்யனாசார்யனுக்குப் பண்ணுமுபகார மின்னதென்றருளிச்செய்வதாக தத்விஷயப்ரச்நத்தை யநுவதிக்கிறார், (ஆனல் சிஷ்யனாசார்யனுக்குப் பண்ணுமுபகார மொன்றுமில்லையோவென்னில்) என்று அதாவது - இப்படிகொள்கொடைகளுக்கு யோக்யதையில்லை யாகிலும் உபகாரஸ்ம்ருதியுடைய சிஷ்யன் மஹோபகாரகனான வாசார்யனுக்குப் பண்ணு முபகாரமொன்று மில்லையோவென்னிலென்கை.

ருசச. அதுக்குத்தரமருளிச்செய்கிறார், (ஆசார்யன்நினைவாலேயுண்டு) என்று. அதாவது ஸ்வரூபஜ்ஞனான சிஷ்யன்நினைவால் ஒருக்காலுமொன்றுமில்லை; ஸ்வக்ருஷிபலஸந்துஷ்டனான வாசார்யன்நினைவாலேயுண்டென்கை.

ஆ,—௩சரு. அவன் நினைவாலுண்டாமுபகாரமாவது திருமந்த்ரார்த்தமான ததீயசேஷத்வபர்யந்தஸ்வரூபஜ்ஞாநம், ததநுரூபமாய் ச்லோகார்த்தமான உபாயவ்யவஸாயம், தத்ஸித்தமாய்த்வயார்த்தமான உபேயப்ரேமமும், இத்தவுபேயநிஷ்டராய்மந்த்ரத்ரயார்த்தாநுஸந்தாதாக்களான ச்ரேஷ்ட நிர்மலஸமாசாரமானவிவை, இவன்செய்யுமுபகாரமாகவாசார்யன் நினைத்திருக்குமவை யென்கிறார்.

௩சசு. இப்படி ப்ரவ்ருத்திரூபமான வுபகாரமேயல்ல, நிவ்ருத்திரூபமான வுபகாரமுமுண்டென்கிறார் மேல், (ஆசார்யப்ரீத்யர்த்தம்) இத்யாதியால். தன்னநுஷ்டாநம் கண்டுகக்கும்பரமசேஷியானவாசார்யப்ரீத்யர்த்தமாக, தத்ப்ரீதியே புருஷார்த்தமான விநதசிஷ்யனுக்கு ஸ்வரூபஹாநிபரிஹாரார்த்தமாக வவச்யம் தவிரவேண்டுவது; ப்ரதாநமான பகவத்ரவ்யத்தை நிர்ப்பயனுயபஹரிக்கையும், பெருமிடறுசெய்து விரும்பியமுது செய்யும் பகவத்போஜநத்தை மிடறுபிடித்துவிலக்குகையும், "[illegible]" "குரோரவஜ்ஞயாம்ருத்யு:", என்று ஸ்வரூபத்தின் மிடற்றையுருக்கும் ம்ருத்யுவானகுருபரிபவமும், "[illegible]" "மந்த்ராவஜ்ஞாதரித்ரதா", என்னும் ஜ்ஞாநாதிஸம்பத்தினடியற்ற மிடியையுண்டாக்குமதான மந்த்ரபரிபவமும், "[illegible]" "ஸயாதிநரகம்கோரம்", என்று கோரநரகபதநஹேதுவானதேவதாபரிபவமு மாகிறவிவையாயிற்றென்றுத்தேசித்து;

௩சஎ. அத்தை விசதீகரிக்கிறார்மேல்; நிஷித்ததகோட்யுக்ததத்தைப் பற்றவும் கொடிதானபகவத்த்ரவ்யத்தை யபஹரிக்கை யாவது - தத்பரதந்த்ரனுய்வைத்து தத்ஸ்வாதந்த்ர்யத்தை யேறிட்டுக்கொள்ளுகையும், தத

சசு. அதாவது ஜ்ஞாந வ்யவஸாயப்ரேம ஸமாசாரங்கள்.
௩சசு. ஆசார்ய ப்ரீத்யர்த்தமாக இவனுக்குத்தவிரவேண்டுவது பகவத்த்ரவ்யத்தை யபஹரிக்கையும்,பகவத்போஜநத்தை விலக்குகையும், குருமந்த்ரதேவதாபரிபவமும்.
௩சஎ. பகவத்த்ரவ்யாபஹாரமாவது ஸ்வாதந்த்ர்யமும் அந்யசேஷத்வமும்,பகவத்போஜநத்தைவிலக்குகையாவது

ஜீ,—௩சரு. அதேதென்ன வருளிச்செய்கிறார், (அதாவது) என்று துடங்கி. (ஜ்ஞாநவ்யவஸாய ப்ரேமசமாசாரங்க) ளாவன - ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநமும், ததநுரூபங்களான வுபாயாத்யவஸாயமும், உபேயப்ரேமமும், இவைமூன்றுக்கு மநுரூபமான ஸம்யக்அநுஷ்டாநமும். இத்தால் திருமந்த்ரத்தில் பதத்ரயத்தாலும் ப்ரதிபாதிக்கப்படுகிறஸ்வரூபோபாய புருஷார்த்தங்களில் ஜ்ஞாநவ்யவஸாயப்ரேமங்களையும், ததநுரூபாநுஷ்டாநங்களையும் சொல்லுகிறது.

௩சசு. ஆசார்யனுக் குகப்பாகவிவன்பண்ணும் கைங்கர்யந்தான் ப்ரவ்ருத்திநிவ்ருத்திரூபமா யிருக்கையாலே. ப்ரவ்ருத்திரூபமானவற்றை யருளிச்செய்தவநந்தரம், நிவ்ருத்திரூபமானவற்றை யருளிச்செய்கிறார் மேல் (ஆசார்யப்ரீத்யர்த்தமாகவிவனுக்குத்தவிரவேண்டுவது) என்றுதுடங்கி. (பகவத் த்ரவ்யத்தை)இத்யாதியாலே அவைதன்னை யுத்தேசிக்கிறார்.

௩சஎ. இப்படி யுத்தேசித்தவற்றின் ப்ரகாரங்களையடைவே விசதீகரிக்கிறார்மேல்,(பகவத்ரவ்யாபஹார)மாவது என்றுதுடங்கி. (பகவத்த்ரவ்யமென்கிறது) "பிறர் நன்பொருள்" என்னும்படி ஸ்ரீ கௌஸ்துபம்போலே ஈச்வரனுக்கு ஸ்ப்ருஹணீயமான வாத்மத்ரவ்யத்தை ; (ஸ்வாதந்த்ர்ய)

ஆ.—நந்யார்ஹசேஷபூதனுய்வைத்து ததந்யசேஷமென்று ப்ரமிக்கையு
மாகிற ஸ்வாதந்த்ர்யமும் அந்யசேஷத்வமு மென்கிறூர்;

"ஹ்ருத்ஸ்தம்" "அஹம்" என்றத்தைப்பற்றவுமினிதான பகவத்போஜநத்
தைக் கையைப்பிடித்து விலக்குகையாவது-தாத்வர்த்தஸித்தமானவந்த
ஸர்வரக்ஷகனுடைய நிருபாதிக ரக்ஷகத்வத்தை, ஸ்வரக்ஷணுந்வய ரூப
புறங்கையாலடித்து விலக்குகை; ரக்ஷகனுக்கு ரக்ஷகத்வமேயிறே ஜீவநம்;

௩௪அ. ரக்ஷணமேஜீ[illegible]மான வந்த ஸர்வரக்ஷகனுடைய ஸர்வவித
ரக்ஷணக்ரமம் அந்யர் ரக்ஷகரல்ல எம்பெருமானேரக்ஷகனென்று ப்ரதி
பாதிக்கிற ப்ரபந்நபரித்ராண மென்கிற திவ்யப்ரபந்தத்திலே, [ஈச்வரன்
மாதாபிதாக்கள் கைவிட்ட வவஸ்த்தையிலும் "பின்னுநின்றடியேனுக்குற்
றுனய் வளர்த்து" என்கிறபடியே தன்னுருக்கெடுத்து வேற்றுருக்கொண்
டுதான் முகங்காட்டி இன்சொல்சொல்லியும், என்றுதுடங்கி. இவனெல்லா
ருக்கும் ரக்ஷகன்] என்கிறதளவாக ஸுஸ்பஷ்டமாகச்சொன்னேம், அங்கே

அவனுடையரக்ஷகத்வத்தைவிலக்குகை.

௩௪அ. அவனுடைய ரக்ஷகத்வக்ரமம் ப்ரபந்நபரித்ராணத்தி
லேசொன்னேம். குருபரிபவமாவது கேட்டவர்த்தத்
தின்படி யநுஷ்டியாதொழிகையும், அநதிகாரிகளுக்
குபதேசிக்கையும். மந்த்ரபரிபவமாவது அர்த்தத்தில்

ஜீ.—மாவது - சேஷத்வைக நிரூபணீயமானவற்றை தனக்குரித்தாக நினை
த்திருக்கை;(அந்யசேஷத்வ) மாவது-பகவதேகசேஷமானவற்றை ததிதர
சேஷமாக நினைத்திருக்கை; இதுதான் மாதாபித்ராதி தேவதாந்தரபர
யந்தமாயிருக்கும்; இவையிரண்டும் ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தியாலும்
மத்யமாக்ஷரத்தாலும் கழிக்கப்படுகிறவையிறே, இதுதன்னை "[illegible]"
"கிம்தேந நக்ருதம்பாபம் சோரேணாத்மாபஹா
ரிணா" என்று ஸகலபாபமூலமாகச் சொல்லாநின்றதிறே;

(பகவத்போஜநம்) இத்யாதி.—ரக்ஷணத்தை பகவத்போஜந
மென்கிறது ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணம் அவனுக்கு பசித்தவனுக்
கூண்போலே தாரகமாயிருக்கையாலே; "மண்ணும் விண்ணுமெல்லா
முடனுண்ட" என்கிறவிடத்தில் [ரக்ஷணமவனுக்கு தாரகமாயிருக்கை
யாலே "உண்ட" என்கிறது, இல்லையாகில் காக்குமென்ன வமையும்]
என்றிறே நம்பிள்ளை யருளிச்செய்தது; ஏவம்பூதமானவவனுடைய ரக்ஷ
கத்வத்தை விலக்குகையாவது - "அவரக்ஷணே" என்கிறதாதுவாலே
நிருபாதிக ஸர்வரக்ஷகனுகச்சொல்லப்படுகிற வவனுக்கு ரக்ஷிக்கவிடமறும்
படி ஸ்வயத்நத்தாலேயாதல் பிறராலேயாதல் தன்னை ரக்ஷிக்கையிலே
ப்ரவ்ருத்தனுகை; இதுதான் பகவதேகரக்ஷ்யத்வ ப்ரதிபாதகமானநமஸ்
ஸாலே கழிக்கப்படுகிறதிறே.

௩௪அ. அவன் ரக்ஷித்தருளும் க்ரமந்தானென்னென்ன வருளிச்
செய்கிறூர், (அவனுடைய) என்றுதுடங்கி. அதாவது ஸர்வரக்ஷகனானவவ
னுடைய ரக்ஷகத்வக்ரமம் ப்ரபந்நபரித்ராணமென்கிற ப்ரபந்தத்திலே
விசதமாகச்சொன்னேம் அங்கேகண்டுகொள்வதென்கை. அதிலே அவனை
யொழிந்தாரடங்கலும் ரக்ஷகரல்லரென்னுமத்தை ப்ரதிபாதித்தவநந்த
ரம் [ஈச்வரன் மாதாபிதாக்கள் கைவிட்டவவஸ்த்தையிலும் "பின்னுநின்
றடியேனுக் குற்றுனய்வளர்த்து" என்கிறபடியேதன்னுருக்கெடுத்து வேற்
றுருக்கொண்டு தாய் முகங்காட்டி இன்சொல் சொல்லியும், என்றுதுடங்கி,

ஆ.—கண்டுகொள்வதென்கிறார். "గురురేవ పరం బ్రహ్మ" "குருரேவபரம்ப்ரஹ்ம" என்கிற வஜ்ஞாநாந்தகாரநிரஸக குருவிஷயத்தில் பண்ணும்பரிபவமாவது - அவனருளிச்செய்யக்கேட்ட தத்வ ரஹஸ்ய தாத்பர்யார்த்தத்தின்படியே ச்ரேஷ்ட்டஸமாசாரத்தை யநுஷ்ட்டியாதொழிகையும், கேட்டும் நாஸ்திகராய்துர்மாநிகளான வநதிகாரிகளுக்குத் தான் கேட்டதாத்பர்யார்த்தங்களைப் பாழ்ங்கிலேயுகுத்துபதேசிக்கையும்;

ஸதாசார்ய னுபதேசிக்கக்கேட்ட திருமந்த்ரபரிபவமாவது-ஔதார்ய நிபந்தநமான வதின் யதார்த்தத்தில் விஸ்ம்ருதியும், துர்மாநித்வ நிபந்தநமான தத்விபரீதார்த்த ப்ரதிபத்திபண்ணுகையும்;

திருமந்த்ர ப்ரதிபாத்ய தேவதாபரிபவமாவது - "தூமலர்தூவி" "வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்க" என்கிற அஞ்சலிஸ்துதிமநநஸாதநமாய்க்கொண்டுவரும் தத்கைங்கர்யோபகரணமான அந்த கரணத்ரயத்தையும், ததிதரரை "நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும் நீதியல்லாதன செய்தும்" இப்படி அப்ராப்த விஷயங்களிலே ப்ரவணமாக்குகையும்; "மால்கொண்டசிந்தையராய் நாத்தழும்பெழ நாரணாவென்று

---

விஸ்ம்ருதியும், விபரீதார்த்த ப்ரதிபத்தியும். தேவதாபரிபவமாவது - கரணத்ரயத்தையு மப்ராப்தவிஷயங்களிலே ப்ரவணமாக்குகையும், தத்விஷயத்தில் ப்ரவணமாக்காதொழிகையும்.

ஜீ.—இவனேயெல்லார்க்கும் ரக்ஷகன்] என்கிறதளவாக வவனுடையரக்ஷகத்வக்ரமத்தை ஸாவ்யக்தமாக வருளிச்செய்தாரிறே; (குருபரிபவம்) இத்யாதி (கேட்டவர்த்தத்தின்படி யநுஷ்ட்டியாதொழிகை) யாவது-ஸ்வோஜ்ஜீவநார்த்தமாக வவனருளிச்செய்யக்கேட்ட த்யாஜ்யோபாதேயரூபமான வர்த்தவிசேஷங்களுக்குத் தகுதியாயிருந்துள்ள த்யாகஸ்வீகாரரூபமான வநுஷ்ட்டாநத்தைப் பண்ணுதொழிகை; (அநதிகாரிகளுக்குபதேசிக்கை) யாவது - தனக்குத்தஞ்சமாக வவனுபதேசித்த ஸாரார்த்தங்களை நாஸ்திக்யாதிகளாலே இதுக்கநதிகாரிக ளல்லாதவர்களுக்குக்க்யாதிலாபாதிகளை நச்சியுபதேசிக்கை;

(மந்த்ரபரிபவம்) இத்யாதி. (அர்த்தத்தில் விஸ்ம்ருதி) யாவது - ஆசார்யன் அந்தமந்த்ரத்துக்கருளிச்செய்த யதார்த்தங்களைப் பலகாலு மநுஸந்தித்து நோக்கிக்கொண்டு போருகையன்றிக்கே ஔதாஸீந்யத்தாலே மறந்துவிடுகை; (விபரீதார்த்த ப்ரதிபத்தி) யாவது - ஆசார்யனருளிச்செய்த ப்ரகாரமன்றிக்கே மந்த்ரத்துக்கு விபரீதமாயிருக்குமர்த்தங்களை இதுக்கர்த்தமென்று ப்ராந்தியாலே ப்ரபத்திபண்ணியிருக்கை;

(தேவதாபரிபவம்) இத்யாதி. (கரணத்ரயத்தையு மப்ராப்தவிஷயங்களிலே ப்ரவணமாக்குகை) யாவது - "విచిత్రా దేహసంపత్తి రీశ్వరాయ నివేదితుమ్" "விசித்ராதேஹஸம்பத்தி ரீச்வராயநிவேதிதும்" "மாயவன்தன்னை வணங்கவைத்த கரணமிவை" என்கிறபடியே பகவத்பரிசர்யார்த்தமாக ஸ்ருஷ்டங்களாய் "உன்சின்னமும் திருமூர்த்தியும் சிந்தித்தேத்திக்கைதொழுவே" என்கிறபடியே அவனை நினைக்கைக்கும் ஸ்துதிக்கைக்கும் வணங்குகைக்கு முறுப்பான மநோவாக்காயங்களை, ஸ்வரூபப்ராப்த மல்லாத ஹேயவிஷயங்களிலே மேட்டில் நீர் பள்ளத்திலே ழுமாபோலேப்ரவணமாம்படிபண்ணுகை; (தத்விஷயத்தில் ப்ரவணமாக்காதொழிகை) யாவது- "மால்கொண்டசிந்தையராய்" "நாத்தழும்பெழ நாரணாவென்றழைத்து

ஆ.—அழைத்து மெய்தழும்பத்தொழுது" இப்படி ஸ்வரூபப்ராப்தமுமாய் நிரதிசயபோக்யமுமான விலக்ஷணதத்விஷயத்தில் மீட்கவொண்ணாதபடி ப்ரவணமாக்கா தொழிகையும்.

௧௪௯. ஆக ஸதாசார்யப்ரீத்யர்த்தமாக ஸச்சிஷ்யனுடைய கர்த்தவ்யாகர்த்தவ்யங்களை யருளிச்செய்து, யாவந்மோக்ஷமிவனுக்கு ஆசார்யவிஷயத்தில் உண்டாகவேண்டுவதான வுபகாரஸ்ம்ருதிவிசேஷத்தை யருளிச்செய்கிறார் மேல், (இவனுக்கு சரீராவஸாநத்தளவும்) இத்யாதியால். ஆசார்யனிஷ்டாநிஷ்டமே தனக்கிஷ்டாநிஷ்டமாம்படி பரிபாகம் பிறந்த வித்த சிஷ்யனுக்கு, ஆசார்யஸமாச்ரயணத்திலே உருமாய்ந்து போக விரோதிஸ்மரண மநுவர்த்திக்கும் சரீராவஸாநத்தளவும், என்னுடைய துஷ்டமானமநஸ்ஸை விநஷ்டமாக்கினாய், அநந்யப்ரயோஜநமாக வநுகூலவ்ருத்தியைப்பண்ணும் நல்லமநஸ்ஸைத்தந்தாய், என்றாசார்யன் செய்த வுபகாரஸ்ம்ருதி யொழியாமல் நடக்கவேணும். அங்குப் போனால் "గోపజనం స్మరన్నిదం" "கோபஜநம் ஸ்மரந்நிதம்" என்று ஸம்ஸாரஸ்ம்ருதிலேசம் கூடாமையால், "தீமனங்கெடுத்தாய்" என்று விரோதிஸ்மரணஹேதுவான வுபகாரஸ்ம்ருதிகூடாது; "பிரானிருந்தமைகாட்டினீர்" என்று ப்ராப்யாநுபவ ஜநிதோபகாரஸ்ம்ருதியளவிறே யங்குகூடுவது; முமுக்ஷுதசையில் நிவர்த்யவிரோதி ஸ்மரணம் நடக்கும், முக்ததசையில் நிவ்ருத்தஸர்வ விரோதிஸ்மரணம்கூடாது; "மருவித்தொழும் மநமேதந்தாய்" என்கிறமோக்ஷஹேதுவான நெஞ்சின்ஆநுகூல்யாகாரம் ததீயத்வாகாரேணவங்கும் ஸ்ம்ருதிவிஷயமாயிருக்க, அத்தையும் சரீராவஸாநத்தளவிலே யொதுக்கினது அதின் பக்தஹேதுவான ப்ராதிகூல்யாகாரப்ரதிபோகியான வாநுகூல்யாகாரஸ்மரணம் சரீராவஸாநத்துக்கு மேல் கூடாதென்னுமத்தைப் பற்ற; கேவலததீயத்வாகாரேண வுண்டான வாநுகூல்யாகாரமிறே யங்குப்ரகாசிப்பது.

---

௧௪௯. இவனுக்கு சரீராவஸாநத்தளவும்ஆசார்யவிஷயத்தில் "என்னைத்தீமனம்கெடுத்தாய்" "மருவித்தொழும் மனமேதந்தாய்" என்றுபகாரஸ்ம்ருதி நடக்கவேணும்.

---

ஜீ.—மெய்தழும்பத்தொழு தேத்தி" இத்யாதிகளில் சொல்லுகிறபடியே ஸ்வரூபப்ராப்தமான வவ்விஷயத்தில் மண்டிவிழும்படிபண்ணுவியாதொழிகை. ஆக "మన్త్రే తద్దేవతాయాం చ తథా మన్త్రప్రదే గురౌ । త్రిషు భక్తిస్సదా కార్యా" "மந்த்ரே தத்தேவதாயாம்ச ததாமந்த்ரப்ரதே குரௌ । த்ரிஷுபக்திஸ்ஸதாகார்யா" என்றும், "మన్త్రనాథం గురుం మన్త్రం సమత్వేనానుభావయేత్" "மந்த்ரநாதம்குரும்மந்த்ரம் ஸமத்வேநாநுபாவயேத்" என்றும் பூஜ்யமாகச்சொல்லப்படுகிற விம்மூன்று விஷயத்தையும் பரிபவிக்கையாவதிவை யாயிற்று.

௧௪௯. ஆக விப்படி யாசார்யப்ரீத்யர்த்தமாகச் செய்யவேண்டுமவையும் தவிரவேண்டுமவையு மருளிச்செய்தாராய் நின்றார்; இன்னமு மிவனுக்கபேக்ஷிதமா யிருப்பதொன்றை யருளிச்செய்கிறார் மேல், (இவனுக்கு) என்று தொடங்கி. அதாவது இவ்வதிகாரிக்குச் சரீரத்தோடிருக்கும் காலமித்தனையும் மஹோபகாரகனான வாசார்யன்பக்கல் என்னுடைய தீயமநஸ்ஸைப்போக்கினாய், அநந்யப்ரயோஜநமாக வநுகூலவ்ருத்திகளைப்பண்ணும் மநஸ்ஸைத்தந்தாய், என்று உபகாரஸ்ம்ருதி யநுவர்த்திக்கவேணுமென்கை.

ஆ.—௩௫௦. அவன் கெடுத்தமநஸ்ஸின் தீமையைவிவரிக்கிறார் மேல், மநநஸாதநமான மநஸ்ஸுக்கு பகவந்நிவர்த்திதமான தீமையாவது-தனக்குண்டாய்வருகிற சமதமாத்யாத்மகுணத்தையும், தோஷயோக்யதாஸ்பர்சமற்ற பகவத்பாகவத விஷயங்களிலே இல்லாத தோஷங்களையும், அஹங்காராபசாரங்க ளபிவ்ருத்த்தமாம்படி நினைக்கை.

௩௫௧. தத்ததிய மித்யாப்ரதீதிதோஷம் நினையாதொழிகிறதும், தனக்குள்ளசமதமாதிகுணங்களையில்லையென்று நினைக்குமாபோலே அவர்களுக்குண்டாயிருக்க இல்லையென்று மறைத்துநினையாதொழிகிறதன்று;

---

௩௫௦. மநஸ்ஸுக்குத் தீமையாவது ஸ்வகுணத்தையும், பகவத்பாகவததோஷத்தையும் நினைக்கை.

௩௫௧. தோஷம் நினையாதொழிகிறது குணம்போலே

ஜீ.—௩௫௦. மநஸ்ஸுக்குத் தீமையாவதேதென்னுமாகாங்க்ஷையிலேயருளிச்செய்கிறார்மேல், (மநஸ்ஸுக்கு)என்றுதுடங்கி. (ஸ்வகுணத்தை நினைக்கை) யாவது - சமதமாத்யாத்மகுணங்கள் தனக்குண்டானாலும் "நிறையொன்றுமிலேன்" "நலந்தானொன்றுமிலேன்" என்கிறபடியே நமக்கோராத்மகுணமுமில்லையென்று தன் வெறுமையை யநுஸந்திக்க வேண்டியிருக்க, இவையெல்லாம் நமக்கிப்போதுண்டென்றுதனக்குண்டான ஸத்குணங்களைப் போரப்பொலியநினைக்கை; பகவானுடையதோஷத்தை நினைக்கையாவது - தனக்கு பரதந்த்ரமான விவ்வாத்மவஸ்துவை தன்னுபேக்ஷையாலே அநாதிகாலம் கர்மத்தை வ்யாஜமாக்கிக் கைவிட்டிருந்தவன், அவ்வளவுமன்றிக்கே நிர்த்தயரைப்போலே யதாகர்மபலதாயியாய் நிரயங்களிலே தள்ளியறுத்தறுத்துத் தீர்த்துமவன் கைக்கொண்டாலும், நிரங்குசஸ்வதந்த்ரனாகையாலே இன்னபோதின்னபடி செய்யுமென்று விச்வஸிக்கவொண்ணாதவன் என்றாப்போலவும், க்ருஷ்ணாவதாரத்தில் ஸ்வைரவிஹாரங்களையிட்டு தர்மஸம்ஸ்தாபகம் பண்ணப்பிறந்தவனுக்கு இங்ஙன்செய்கை முறைமையாயிருந்ததில்லையோ என்றாப்போலவும் நினைக்கை; அல்லது ஸமஸ்தகல்யாணகுணாத்மகமான விஷயத்தில் நினைக்கலாவதொருதோஷமில்லையிறே; இனி (பாகவததோஷத்தை நினைக்கை) யாவது-திருமேனியோடேயிருக்கையாலே மேலெழத்தோற்றுகிற வ்யாபாரங்களையிட்டு ப்ரக்ருதிவச்யர் அஹங்காரக்ரஸ்தரென்றாப்போலே நினைக்கை; ஆகவிது (ஸ்வகுணத்தையும் பகவத்பாகவத தோஷத்தையும் நினைக்கை) யாவது.

௩௫௧. ஆனால் தனக்குச்சிலகுணமுண்டாயிருக்கஅதுநினைக்கலாகாதென்கிறாப்போலே, அத்தலைக்கும்சிலதோஷமுண்டாயிருக்க நினைக்கலாகாதென்கிறதோவென்ன வருளிச்செய்கிறார், (தோஷம்நினையாதொழிகிறது) என்றுதுடங்கி. அதாவது பகவத்பாகவதவிஷயங்களில் தோஷம் நினையாதொழிகிறது தனக்கு குணமுண்டாயிருக்க வதுநினையாதொழிகிறாப்போலே, உண்டாயிருக்க நினையாதொழிகிறதன்று; முதலிலே இவ்விஷயங்களில் அதில்லாமையாலேயென்கை. எங்ஙனேயென்னில் ஸர்வமுக்திப்ரஸங்கம் வாராதபடி தானிட்டகட்டளையிலே யங்கீகரிக்கைக்காக "ஒன்றியொன்றியுலகம்படைத்தான்" என்றும், "எதிர்சூழல்புக்கு" என்றும் சொல்லுகிறபடியே ஸகலாத்மாக்களுடைய வுஜ்ஜீவநத்துக்கு ஸ்ருஷ்ட்யவதாராதிகளாலே க்ருஷிபண்ணிக்கொண்டுபோருகையாலே, அநாதிகாலமுபேக்ஷகனாய் கைவிட்டிருந்தானென்னவொண்ணாது; நிர்த்

ஆ.—அவர்கள்பக்கல்தோஷ ஸத்பாவ ஸ்பர்சந்தானில்லாமையாலே இல்லையென்றுநினைக்கிறவித்தனை—, அன்றியே அவர்கள்பக்கல்தோஷம்நினையா தொழிகிறது தனக்குதோஷம் போவதற்குமுன்பு அவர்கள்பக்கலுண்டானகுணங்கள் நினையாதாப்போலே, இப்போதுண்டான தோஷங்களை நினையாதொழிகிறானன்று ; இல்லாமையாலே நினையாதொழிகிறானென்று மருளிச்செய்வர்கள்.—, அவர்களுக்கு தோஷகுணங்க ளிரண்டுமுண்டாய் அதில் தோஷத்தை நினையாதொழிகிறானென்று மருளிச்செய்வர்கள்.

௩௫உ. இப்படி நிர்த்தோஷரானவர்கள் பக்கலிலே இல்லாததோஷமுண்டென்று ப்ரமித்துநினைக்கில், அவர்கள்பக்கல் தோன்றுகிறதோஷம், நிர்த்தோஷதையில் முக்யரானவர்கள் தோஷமன்று ; தோஷதர்சநம் பண்ணுகிற ஸ்வதோஷமத்தனை. "పరస్యాన్యస్య దృశ్యతే" "பரம்தூராந்ய முக்யேஷு" விறே.

யுண்டா யிருக்கவன்று ; இல்லாமையாலே.

௩௫உ, தோஷமுண்டென்று நினைக்கிலது பரதோஷமன்று, ஸ்வதோஷம்.

ஜீ.—தயரைப்போலே கர்மாநுகுணமாகத் தண்டிக்கிறதும் மண்தின்னப்ரஜையைநாக்கிலேகுறியிட்டஞ்சப்பண்ணும்மாதாவைப்போலேஹிதபரனுய்ச் செய்கையாலே யுஜ்ஜீவநத்துக்குடலாமித்தனை ; நிரங்குசஸ்வாதந்த்ர்யம் பூர்வம் பந்தஹேதுவாய்ப்போந்ததேயாகிலும் க்ருபாபரதந்த்ரனு யங்கீகரித்தபின்பு, நித்யஸம்ஸாரிகளை நித்யஸூரிகளோடு ஸமாநபோகபாகியாக்குமளவில் நிவாரகரறச்செய்கைக்குறுப்பா மித்தனையாகையாலே ச்லாக்யமாமித்தனை. க்ருஷ்ணவதாரத்தில் ஸ்வைரவிஹாரம் "అది మే బ్రహ్మచర్యం స్యాత్" "யதிமேப்ரஹ்மசர்யம்ஸ்யாத்" என்கிறபடியே தனக்கிந்தபோகத்தி லொட்டில்லாமையை வெளியிடுகைக்காகவும், "గోప్యః కామాత్" "கோப்ய: காமாத்" என்கிறபடியே அவ்வழியாலே யவர்களைத்தன்பக்கல் ப்ரவணராக்கி யுத்தரிப்பிக்கைக்காகவும் செய்ததாகையாலே குணமித்தனையல்லது குற்றமன்று. இனி பாகவதர்களும் "குற்றமின்றிக்குணம்பெருக்கி" என்கிறபடியே நிர்த்தோஷராய் நிரவதிகுணராயிருக்கையாலே உள்ளுறவாராய்ந்துபார்த்தால் அவர்கள் பக்கலிலும் காணலாவதொரு தோஷமில்லையிறே. மற்று மிப்புடைகளிலே பகவத்பாகவதவிஷயங்களில் தோஷங்கள் தோற்றித்தாகில் பரிஹாரங்கள் கண்டுகொள்வது. இவையெல்லாம் திருவுள்ளம்பற்றியாயிற்று (இல்லாமையாலே) என்றிவரருளிச்

௩௫உ. (தோஷமில்லை) என்று ஸ்வபக்ஷத்தாலே ஸாதித்தார்கீழ்; இனி பரபக்ஷத்தாலே தோஷஸத்பாவத்தை யங்கீகரித்துக்கொண்டு தத்பரிஹாரத்தை யருளிச்செய்கிறார் மேல், (தோஷமுண்டு) என்று துடங்கி. அதாவது கீழ்ச்சொன்னபடியன்றிக்கே பகவத்பாகவதவிஷயங்களில் தோஷமுண்டென்று நினைக்கில் அவர்கள்பக்கல் தனக்குத்தோற்றுகிறதோஷம் அவர்கள் தோஷமன்று ; தத்த்ரஷ்டாவான தன்னுடைய **தோஷமென்கை.**

ஆ.—௩௫௩. பரதோஷம் ஸ்வதோஷமானபடி யென்னென்னில் ளொரு ப்ரச்நம்பண்ணி;

௩௫௪. அவர்கள்பக்கலில்லாத தோஷங்களைக்காண்கிற ஸ்வசித்த தோஷத்தாலும், அவர்களுக்குண்டானதோஷம் தன்னதாம்படி அவர்களுடன் தனக்குண்டான பந்தவிசேஷத்தாலுமென் றுத்தரமருளிச்செய்கிறார், த்விசந்த்ரதர்சநமூலம் ஸ்வதோஷமாளுப்போலவும், மாத்ருதோஷம் புத்ரனதாமாபோலவும், இங்குதத்தோஷதர்சநம் ஸ்வதோஷமாய் விடுமிறே.

௩௫௫. இவன் த்ருஷ்டிதோஷமற்றபோது சந்த்ரைகத்வமேதோற்றுமாபோலே, தத்தோஷதர்சநமூலமான ஸ்வதோஷமில்லையாகில், ஸ்வநிர்த்தோஷத்வஸூசகையான தத்குணப்ரதிபத்தி, தோஷப்ரதிபத்தி கலசாதபடி முடியநடக்கும்.

௩௫௬. நிர்த்தோஷகுணபூர்ண ததீயர்பக்கல் குணப்ரதிபத்தி நடந்ததில்லையாகில், தத்தோஷக்ரஹண ரூபதோஷஜ்ஞானமே மஹாபாத

௩௫௩. ஸ்வதோஷமானபடி யென்னென்னில்.

௩௫௪. ஸ்வதோஷத்தாலும் பந்தத்தாலும்.

௩௫௫. ஸ்வதோஷமில்லையாகில் குணப்ரதிபத்தி நடக்கும்.

௩௫௬. நடந்ததில்லையாகில் தோஷஜ்ஞானமே

ஜீ.—௩௫௩. அது ஸ்வதோஷமானபடியை ஸாதிக்கைக்காக தத்விஷயப்ரச்நத்தை யநுவதிக்கிறார், (ஸ்வதோஷமானபடி யென்னென்னில்) என்று. பரகதமாய்த்தோற்றுகிற வது ஸ்வதோஷமானபடி யெங்ஙனே யென்னி லென்றபடி.

௩௫௪. அதுக்குத்தர மருளிச்செய்கிறார், (ஸ்வதோஷத்தாலும்) இத்யாதியாலே. அதாவது காசாதிதுஷ்டத்ருஷ்டிமானுக்கு சந்த்ரத்வித்வாதிகள் தோற்றுமாபோலே, நிர்த்தோஷமான விஷயங்களிலே தோஷம்தோன்றும்படியான துர்வாஸநாதுஷ்டசித்ததையாகிற ஸ்வதோஷத்தாலும், புத்ராதிகள்தோஷம் பித்ராதிகளதாமாபோலே அவர்களுக்குண்டானதோஷம் தன்னதாம்படி அவர்களோடு தனக்குண்டான பந்தவிசேஷத்தாலுமென்கை. (ஸ்வதோஷத்தாலும்) என்கிறவிது அத்தலையில் தோஷாபாவத்தைப்பற்றிச் சொல்லுகிறது; மற்றையது தோஷவத்தையை யங்கீகரித்துக்கொண்டு சொல்லுகிறது.

௩௫௫. (ஸ்வதோஷத்தாலே) என்னலாவது தோஷம்தானுண்டாமிலன்றோவென்ன வருளிச்செய்கிறார், (தோஷமில்லையாகில்) என்று துடங்கி. அதாவது சந்த்ரத்வித்வதர்சநஹேதுவான சக்ஷுர்தோஷமில்லாதபோது சந்த்ரைகத்வமே தோற்றுமாபோலே, தோஷதர்சநஹேதுவான ஸ்வசித்ததோஷமில்லாதபோது, பகவத்பாகவதவிஷயங்களில் குணப்ரதிபத்தியே நடக்குமென்கை. அது நடவாமையால் தோஷமுண்டென்று கொள்ளவேணுமென்று கருத்து.

௩௫௬. நடந்ததில்லையாகில் வரும்தோஷமென்னென்ன வருளிச்செய்கிறார், (நடந்ததில்லையாகில்) என்றுதுடங்கி. அதாவது குணப்ரதிபத்தி நடவாதொழிந்தால் தோஷப்ரதிபத்தியிறே நடப்பது; அந்ததோஷஜ்ஞானம் தானே இவனுக்கு பகவந்நிக்ரஹஹேதுவான தோஷமாம். இதடி

ஆ.—காதிதோஷங்களைப்பற்றவும் மஹாதோஷமாம்; அத்தால் வருமதொருதோஷாந்தரமுண்டென்னவேண்டா.

ஙருஎ. இந்ததோஷதர்சநத்துக்கு விசேஷிப்பதோரவஸரமில்லை.

ஙருஅ. அதெத்தாலேயென்ன "நீசனேன் நிறையொன்றுமிலேன்" இத்யாதிஸ்வதோஷாநுஸந்தாநத்துக்கும், அந்ததோஷமேபச்சையாக "என்னையாள்வாய்" "எம்மையாளும்பரமர்" என்றங்கீகரித்தடிமைகொள்ளுகிற பகவத்பாகவதகுணாநுஸந்தாநத்துக்கும் மேலுள்ளகால

---

தோஷமாம்.

ஙருஎ. இது தனக்கவஸரமில்லை,

ஙருஅ. ஸ்வதோஷத்துக்கும்.பகவத்பாகவதகுணங்களுக்குமே

---

ஜீ.—யாக வேறொருதோஷமுண்டாமென்னவேண்டாவென்கை. இத்தாலிதவச்யம் பரிஹரணீயமென்னுமிடம் சொல்லிற்றாயிற்று.

ஙருஎ. இதுதானெல்லாம் சொல்லவேண்டுவது இது தனக்கவகாசமிவனுக்குண்டாலிறே யென்கிறார் மேல், (இதுதனக்கவஸரமில்லை) என்று. அதாவது பகவத்பாகவததோஷசிந்தநமாகிறவிது தனக்கு அவஸரந்தானிவனுக்குமுதலிலே யில்லையென்கை.

ஙருஅ. அதெத்தாலேயென்ன வருளிச்செய்கிறார், (ஸ்வதோஷத்துக்கும்) என்றுதுடங்கி. அதாவது (நீசனேன்நிறையொன்றுமிலேன்) "பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பு மிந்நின்றநீர்மை" "అమర్యాదఃక్షుద్రః" "విద్వేషమానమదరాగవిలోభమోహతృష్ణాజ్ఞానభూమిః" "అతిక్రామన్నాజ్ఞాన్తవ విధినిషేధేషు భవతేస్వయభిద్రుహ్యన్నార్ద్రీకృతిభిరపి భక్తాయసతతమ్ । అజానన్ జానన్వాభవదసహనీయాగసిరతః" "శ్రీరఙ్గేశత్వద్గుణానామివాస్మద్దోషాణాంకః పారదృశ్వా యతోహమ్" "அமர்யாதஃக்ஷுத்ர:" "வித்வேஷமாநமதராகவிலோபமோஹாத்யஜ்ஞாநபூமி:" "அதிக்ராமந்நாஜ்ஞாந்தவவிதிநிஷேதேஷு பவதேப்யபித்ருஹ்யந்வாக்த்திக்ருதிபிரபி பக்தாயஸததம் । அஜாநந்ஜாநந்வாபவதஸஹநீயாகஸிரத:" "ஸ்ரீரங்கேசத்வத்குணாநாமிவாஸ்மத்தோஷாணாங் கஃ பாரத்ருச்வாயதோஹம்" இத்யாதிகளில் சொல்லுகிறபடியே அநவதிகமானதன்னுடைய தோஷாநுஸந்தாநத்துக்கும்; அந்ததோஷத்தைப் பாராமலங்கீகரித்தருளின பகவானுடையவும் "வேதம்வல்லார்களைக்கொண்டு" என்றும் "బోధయన్తః పరస్పరమ్" "போதயந்த:பரஸ்பரம்" என்றும் "அவனடியார் சிறுமாமனிசராயென்னையாண்டாரிங்கேதிரியநுமாவிரைநாண்மலரடிக்கீழ்ப்புகுதல்-உறுமோ" என்றும்சொல்லுகிறபடியே புருஷகாரமுமுசாத்துணையும் ப்ராப்யருமான பாகவதர்களுடையவும், "సమస్తకల్యాణగుణామృతోదధిః" "అసఙ్ఖ్యేయకల్యాణగుణగణౌఘమహార్ణవ" "యథారత్నానిజలధేరసఙ్ఖ్యేయానిపుత్రక । తథాగుణాహ్యనన్తస్య అసఙ్ఖ్యేయామహాత్మనః" "నాహంసమర్థోభగవత్ప్రియాణాం వక్తుంగుణాన్ పద్మభువోప్యగమ్యాన్" "ஸமஸ்தகல்யாண குணாம்ருதோததி:" "அஸங்க்யேயகல்யாணகுணகணௌகமஹார்ணவ" "யதாரத்நாநிஜலதேரஸங்க்யேயாநிபுத்ரக । ததாகுணாஹ்யநந்தஸ்ய அஸங்க்யேயாமஹாத்மந:" "நாஹம்ஸமர்த்தோபகவத்ப்ரியாணாம் வக்தும்குணாந்பத்மபுவோப்யகம்யாந்" என்றும் சொல்லுகிறபடியே அஸங்க்யேயமாயிருந்துள்ள குணாநுஸந்தாநங்களுக்குமேகாலம்போந்து மற்றொன்றுக் கவகாசமில்லாமையாலே யென்கை. (இவர் ஸ்ரீதோஷம்

ஆ,—மெல்லாம்போந்து, தோஷதர்சநத்துக்கு சேஷிக்கும் காலகலைக தேசமுமில்லாமையாலே யென்கிறார்.

௩௫௯. இப்படி தத்ததீயரி லில்லாததோஷங்களையன்றோ நினைக்கலாகாது, ஸம்ஸாரிகளுடைய வுள்ளதோஷங்களை நினைக்கலாமேயென்ன; அநாதிகாலமேபிடித்து நாம்பட்டதுபட்டுத் திரிகிற ஸம்ஸாரிகளுக்குண்டாம் தோஷம், அவர்களைத்துறக்க விரகற்ற நம்முடையதோஷமென்றிருக்கக்கடவ னென்கிறார்.

௩௬௦. அதுக்கு ஹேதுவென்னென்ன, தத்தோஷம் ஸ்வதோஷமென்றிருக்கிறவதுக்கும் ஹேது நாராயணத்வ ப்ரயுக்த ஸம்பந்தஜ்ஞாநம். ஏகசரீரத்தில்பற்றின வேகதேசத்வக்தோஷமவ்வளவுக்கே தோஷமாயிராதிறே, "[illegible]" "தாநிஸர்வாணிதத்வபு:" என்று ஸர்வமுமவன் சரீரமிறே.

---

காலம்போருகையாலே.

௩௫௯. ஸம்ஸாரிகள்தோஷம் ஸ்வதோஷமென்று நினைக்கக் கடவன்.

௩௬௦. அதுக்குஹேது பந்தஜ்ஞாநம்.

ஜீ.—போருகையாலே) என்கையாலே ஸ்வகுணஸ்மரணத்துக்கவகாசமில்லையென்னுமிடமு மர்த்தாத்ஸித்தமிறே.

௩௫௯. ஆக (மநஸ்ஸுக்கு நந்திமையாவது)என்றுதுடங்கி. இவ்வளவும் பகவத்பாகவததோஷஸ்மரணமாகாதென்னுமிடமும், அவர்களுடைய நைர்தோஷ்யமும், தோஷமுண்டென்றுநினைக்கில்அது தத்தோஷமன்றுஸ்வதோஷமென்றும், அது ஸ்வதோஷமாகைக்கு நிதாநங்களும், ஸ்வதோஷாபாவசங்கைக்குத்தரமும், தோஷப்ரதிபத்திநடக்கி லதுதானேயிவனுக்குமஹாதோஷமென்றும், ஸ்வதோஷபகவத்பாகவதகுணாநுஸந்தாநத்துக்கே காலம்போருகையாலிதுதனக் கிவனுக்கவஸரமில்லையென்றுமருளிச்செய்தார்கீழ்; இப்படி தனக்குத்தேச்யமான பகவத்பாகவத விஷயங்களில் தோஷம் நினையாமலும், நினைத்தானாகிலுமது தன்னுடைய தோஷமாக நினைத்திருக்கவேணுமென் றருளிச்செய்த ப்ரஸங்கத்திலே, ஸம்ஸாரிகள் தோஷவிஷயாநுஸந்தாநமு மின்னபடியாகவேணு மென்கிறார் மேல், (ஸம்ஸாரிகள்) என்றுதுடங்கி. அதாவது ஸம்ஸாரிகளுக்குண்டான பகவத்வைமுக்யம் அநாத்மந்யாத்மபுத்தி யஸ்வேஸ்வபுத்திமுதலான தோஷம்கண்டால் அந்ததோஷங்களையிட்டவர்களை யிகழ்ந்து இவர்களுக்கும் நமக்கும் பணியென்னென்றிராதே, அவர்களுடையதோஷம் தன்னுடையதோஷமென் றநுஸந்தித்திருக்கக்கடவனென்கை.

௩௬௦. அதுக்கு ஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார், (அதுக்கு ஹேதுபந்தஜ்ஞாநம்) என்று. அதாவது தனக்குசேஷிகளானபகவத்பாகவதர்கள்தோஷம் ஸ்வதோஷமாக வநுஸந்திக்கைக்குஹேது அவர்களோடு தனக்குண்டான ஸம்பந்தஜ்ஞாநமானாப்போலே, ஸம்ஸாரிகள் தோஷத்தை தன்னுடையதோஷமாக வநுஸந்திக்கைக்கு ஹேது, நாராயணத்வ ப்ரயுக்தமான ஸம்பந்தஜ்ஞாநமென்கை. எல்லார்க்கு மீச்வரனோடு ஸம்பந்தமொத்திருக்கையாலே அவ்வழியாலே தனக்குமவர்களுக்கும் ஸம்பந்தமுண்டாகையாலே, தனக்கவர்ஜநீயரான ப்ரக்ருதிபந்துக்களுக்குவந்ததோஷம்தனக்குவந்ததாக நினைத்திருக்குமோபாதி, ஸம்ஸாரிகளுக்குண்டானதோஷம் தன்னுடையதோஷமென்றே நினைக்கக்குறையில்லையிறே.

ஆ.—௩௫௧. தத்தோஷதர்சநமும் தத்ஸ்வகீயத்வபுத்தியும் காதாசித்கமாக வருமத்தனை யென்கிறார் மேல்; திருக்கடல் மல்லையிலே தங்களைப்பெறவேணுமென்று தரையில்கிடக்கிற ஸுசீலஸுலபவிஷயத்தைப்ராக்ருதவஸ்துக்களோடொக்கவாகிலும் ஒருகால் ஸ்மரியாதே வன்னெஞ்சராய்க்கெட விருக்கிறஸம்ஸாரிகளை, க்ஷணகாலமும் நாமும் நம்முடைய ஸம்பந்த ஸம்பந்திகளும் ஸ்மரியோமென்று அத்யவஸித்திருக்கையாலே, அந்த ஸம்ஸாரிகள்தோஷம்தா னிவர்களுக்கு முதலிலேதோன்றுது.

௩௫௨. "சொன்னால்விரோதம்" "ஒருநாயகம்" "கொண்டபெண்டீர்" இத்யாதிகளிலே ஸம்ஸாரிகள் குற்றம்தோற்றினதுமையுண்டேயென்ன, அப்படியங்கங்கவர்கள்தோஷம் தோன்றுவது அஸேவ்யஸேவாதி தோஷநிவர்த்தநார்த்தமாக வென்கிறார்.

௩௫௩. அவர்கள்பண்ணும்தோஷம் நம்மதென்று பொரிபுறந்தடவலாமத்தனையல்லது, தனக்கவர்கள் பண்ணும்குற்றங்களை நினையாதொழியக்கூடாதேயென்ன, அத்தையுமிவ்வதிகாரிநினைக்கக்கடவனல்ல னென்கிறார் மேல், (பிராட்டி) இத்யாதியால். அபிமதாந்தரங்களுடன் பேசிப்

---

௩௫௧. "இறைப்பொழுதுமெண்ணோம்" என்கையாலே அது தான் தோன்றுது.

௩௫௨. தோன்றுவது நிவர்த்தநார்த்தமாக.

௩௫௩. பிராட்டி ராக்ஷஸிகள்குற்றம் பெருமாளுக்கும் திருவடிக்கும் அறிவியாதாப்போலே, தனக்கு பிறர்செய்த

---

ஜீ.—௩௫௧. இதுதான்வேண்டுவது அவர்கள்தோஷம் தானிவனுக்குத்தோன்றிலிறே, அதுதான் முதலிலே யிவனுக்குத்தோன்றுதென்கிறார் மேல் (இறைப்பொழுதுமெண்ணோம்) என்றுதுடங்கி. அதாவது "கடல்மல்லைத்தலசயநத்துறைவாரை யெண்ணாதேயிருப்பாரை யிறைப்பொழுதுமெண்ணோமே" என்று பரமபதத்திலே நித்யஸூரிகள் பரிந்துபரிசர்யை பண்ணவிருக்கும் பெருமையையுடையனுய்வைத்து, திருக்கடல்மல்லையிலே வந்து தங்களைப்பெறுகைக்காக தரைக்கிடைக்கிடக்கிற நீர்மையையுடையவனை, இதொரு நீர்மையிருக்கும்படி யென்னென்று அந்நீர்மையிலே தோற்று அநவரதாநுஸந்தாநம்பண்ணவேண்டியிருக்க, அவனிடையாட்டம்கொண்டு காரியமற்று, கேவலதேஹபோஷணைக பராயிருக்கிற ஸம்ஸாரிகளை க்ஷணகாலமும் நினையோமென்கையாலே, ஸம்ஸாரிகள் தோஷம்தான் இவ்வதிகாரிக்குத்தோன்றுதென்கை. திருமங்கையாழ்வாரருளிச்செய்தவிது ஸ்ரீவைஷ்ணவர்களெல்லார்க்கு மொக்குமிறே.

௩௫௨. (தோன்றுது) என்னப்போமோ "சொன்னால் விரோதம்" "ஒருநாயகம்" "கொண்டபெண்டீர்" இத்யாதியிலே ஆழ்வார்க்கு முட்பட ஸம்ஸாரிகள்குற்றம் தோன்றிற்றில்லையோவென்ன வருளிச்செய்கிறார், (தோன்றுவது) என்றுதுடங்கி. அதாவது ஸம்ஸாரிகள் தோஷம் தோன்றுவது அந்ததோஷங்களினின்றும் அவர்களை நிவர்த்திப்பிக்கைக்காகவென்கை. "சொன்னால்விரோதம்" முதலானவற்றால் ஆழ்வாருமதில் திருவுள்ளம்வைத்தது அஸேவ்யஸேவாதிகளினின்று மவர்களை நிவர்த்திப்பிக்கைக்காகவிறே; அதெல்லார்க்குமொக்குமென்று கருத்து.

௩௫௩. ஆக விவ்வதிகாரி ஸம்ஸாரிகள் தோஷம் கண்டாலநுஸந்திக்கும் ப்ரகாரமும், தத்தோஷந்தா னிவனுக்குத்தோன்றுதென்னுமிடமும், தோன்றுவது இன்னதுக்காகவென்று மருளிச்செய்தார்கீழ்; இப்படி காகாசித்கமாகத்தோன்றும் ஸம்ஸாரிகள் தோஷங்களை

ஆ.—பாடாற்றுகிறபிராட்டி, தன்னை தர்ஜந பர்த்ஸநாதிகளைப்பண்ணி விடாமல்நலிந்த க்ரூரராக்ஷஸிகள் குற்றம், விரோதியையுமாற்றாமையையு மறுத்துஉடன்கொண்டெழுந்தருளுகிறபெருமாளுக்கும், விரோதிகளுமாற் றாமையும் நலிகிறதசையிலே யுதவி யாச்வாஸிப்பித்த திருவடிக்கும், நெஞ் சில்கிடந்ததடைய வருளிச்செய்கிறவளவிலும்மறக்குமறிவியாதாப்போலே, குற்றங்காண்கை ஜ்ஞாநத்தமான தனக்குசிர்ஸபந்த்தமாகப் பிறர் மிகத்தரம் செய்யும் குற்றங்களை "செய்த குற்றம் நற்றமாகவேகொள்ளும் பெருமான்" என்றும் "எம்பெருமான் தான்தெரியவொப்பொழுது மென்மனத்தே யிருக்கின் றானே" என்றும் "தன்னைநுழைந்திடம்கோயில்கொண்ட பகவத்பாகவதவிஷ யங்களில்" "நீக்குறுனைச்சென்றேதோம்" என்று மறந்து மறிவிக்கக் கடவனல்லன்.

௩௬௩. அறிவிக்க வுரியவனுமுட்படமறையாதின்று லிவனுக்குச் சொல்லவேண்டாவிறே யென்கிறார் மேல்; "சூழ்ந்தடியார்" இத்யாதி யால் ஸம்ஸாரிகளையடையத் திருத்திக்கொண்போரக்கடவனென்று நித்ய ஸூரிகள்நடுவே ப்ரதிஜ்ஞைபண்ணி அநேகாவதாரமாய் நாட்டில் பிற ந்துகாட்டுகிற சீலரூபசரிதங்களுக்கு மொருவருமெட்டுப்படாமல் தரை யைமோதி பரமபதத்திலேசென்று புகிருக்கொள்ள, நித்யஸூரிகளுடைய வெதிரேவந்து சுற்றுமுற்றும்சூழ்ந்து ப்ரதிஜ்ஞாநுகுணமாக தேவர்பின் பொருவரும் திருந்திவரக்கண்டிலோம் இதுக்கடி யென்னென்றிரப்புடன் நிர்ப்பந்திக்கப்புக்கால், திருந்தினார்கள் திருந்தினார்களில்லை வருகிறார்கள் வருகிறார்களில்லை. என்றிரண்டும் சொல்லமாட்டாமல், மற்றுமறுமாற்றம் காணாமல் சுற்றுமுற்றும் பரக்கவிழித்து தேடாநின்றதசையிலும், சொல் லுவார்போல் திருவதரம் ஸ்ப்புரிப்பது முறுவல்செய்வது வழியைக்கடைக் கணிப்பது ப்ரதிஜ்ஞையின்வெற்றி நிலைகாட்டுவதாய்க்கொண்டுபெருவாழ்வு வாழ்வர், இப்புறப்பூச்சான பாவனையறிந்து திருந்தாமல்போனகுற்றவாள

குற்றங்களை பகவத்பாகவதவிஷயங்களி லறிவிக்கக் கடவனல்லன்.

௩௬௪, அறிவிக்கவுரியவனாகப்பட வாய்திறவாதே, ஸர்வஜ்ஞ

ஜீ.—நினைத்தும், தன்பிவர்த்தகனுயும் போருமளவன்றிக்கே, ஸ்வவிஷயத் திலே குற்றங்களைச்செய்தால் இவனிருக்கவடுக்கும்படி யருளிச்செய்கிறார் மேல், (பிராட்டி) என்றுதுடங்கி. அதாவது ஏகாக்ஷீ ஏககர்ணீ முத லான வெழுநூறுராக்ஷஸிகள் ஏகதிவஸம்போலே பத்துமாஸம் தர்ஜந பர்த்ஸநம்பண்ணவிருந்த பிராட்டி, இவர்களப்படிச்செய்த குற்றத்தை, பகவத்விஷயமான பெருமாளுக்கும் பாகவதவிஷயமான திருவடிக்குமறி வியாதாப்போலே, தன்விஷயமாகப்பிறர்செய்த குற்றங்களை, பகவத்விஷய த்திலாதல் பாகவதவிஷயத்திலாதல் மறந்தும் விண்ணப்பம் செய்யக்க டவ னல்லனென்கை.

௩௬௪. இதுக்கிம்புர்ப்பாய ஸித்தமாம்படி ஈச்வரன்படியை யரு ளிச்செய்கிறார், (அறிவிக்கவுரியவன்) என்றுதுடங்கி. அதாவது "எதிர் சூழல்புக்கு" என்கிறபடியே தன்னுடைய சீலஸௌலப்யாதிகளைக்காட்டி. ஸம்ஸாரிசேதநரைத் தப்பாமலகப்படுத்திக்கொள்ளுவதாக வந்தவதரித்து, தமக்கடியார் வேணுமென்றபேக்ஷித்தால் அவர்களப்படி யநுகூலராய்த் தோன்றுதொழிந்தாலும், இவர்கள் செய்தபடி செய்கிறார்கள் நாமிவர்களு க்குறுப்பாகப்பெற்றோமிறேயென்று அதுதானேபோக்யமாகவிருப்பர், அது க்குமேல்அவர்கள் வைமுக்க்யம்பண்ணினார்களென்று அவர்கள்குற்றத்தை

ஆ.—குண்டோவென்ன, அத்தரங்கர்க்குள்ளது சொல்லவேண்டினவின்றும் குணம் சொல்லத்தேடுவித்தனையல்லது, குற்றஞ்சொல்ல நாவெழாமல் ப்ரபுத்வங்கொண்டாடி வாய்திறவாதிருப்பதன்றி பிறர் குற்றஞ்சொல்லில் பிணைக்குவரும் செய்பவரையை ஸர்வசக்தித்வத்தாலும் திறக்கமாட்டாமல் போக்கடியற்றுகிற்பர் என்று செய்நார் செய்தகுற்றம் அறிவிக்கவுரிய ஸ்வாமியானவனும் முட்பட்டுத்தன் வாய்திறக்கமாட்டாதே, உபயவிபூதிமானுனதன்னை யுள்ளபடியானகாத்தவித்திருக்கும் ஸர்வஜ்ஞனை, நித்யஸூரிகளுக்கு நாயகத்துக்கு விழ்விப்பிறைக்கும் என்னுமிஷ்டகங்க ஸாமக்ர்யத்தி பூர்ணம் சொல்லாநின்றதிறே. பிறர்குற்றம் கண்டாலறிவிக்க அரியவனல்லாத ஸர்வஜ்ஞனை அறிவிக்கக்கடவனல்லாவென்னும்படி சொல்லவேணுமோ என்றபடி.

௩௬௫. இப்படி தத்ததியவிஷயங்களுக்கு அறிவிக்கவொண்ணாதவளவேயோ, தம்மளவானவில் க்ஷமாதிகளுமுண்டாகவேணும் மிவனுக்கென்கிறார்மேல்; அவனுக்கு அஸஹ்யங்களான பாருஷ்யாதியான அபராதங்களை தீரக்கழியச்செய்தவர்கள் பக்கல் “[illegible]” “சக்தானாம் பூஷணம் க்ஷமா” என்று தக்கதுசெய்ய சக்தனாயிருக்கக் காணக்கண்ணிட்டிருக்கையாகிற பொறையும்; இவர்களாவில் எம்பெருமான் திருவுள்ளம் கன்றில் செய்வதென்னென்றுபராங்குசஸங்கல்பானுகூலையானக்ருபையும்; அவர்கள் குற்றத்துக்கிலக்கான சரீரத்தைப்பார்த்து உமக்கித்தனையும் வேணுமென்கிறசிரிப்பும் ;—, அன்றியே கடலிலுகக்கொள்ளும் கொசுகு போலே இத்தலையில்குற்றமெல்லாம் முகக்கொண்டு நீர்சொல்லீரோ பின்னையென்று குற்றஞ்செய்தாரைக் கண்டாங்கேக்ஷமசிரிப்பும்; குற்றஞ்சொல்லச்சொல்லக்கேட்டு இவை சிலநிருமன்காணிக்கைபெற்றோமென்று மேல்மேலும் பாசஞ்செய்கிறவுகப்பும்; தாமிதுக்குமுன்பு அறியாதகுற்றங்களையு மறிவித்துபகரிக்கிற இவர்களுக்கு எத்தைக்கொடுப்பதென்னப்பண்ணு முபகாரஸ்ம்ருதியும், அவர்கள் குற்றஞ்செய்தபோதெல்லாம் குறையாமல் நடக்கவேணுமென்கிறார். இவை யொன்றிலொன்று அதிகமான

விஷயங்களுக்குடை நிறைந்துமென்று நின்றதிறே.

௩௬௫. குற்றஞ்செய்தவர்கள் பக்கல்,

ஜீ.—தனியிருப்பிலே பிராட்டிக்கு மருளிச்செய்பவரென்கிற “சூழ்ந்தடியார்” என்கிறபாட்டிலே சேதனர்செய்தகுற்றங்களை தன் திருவுள்ளத்துக்குகந்தவர்களுடன் அறிவிக்கைக்கு ப்ராப்தனான ஸர்வேச்வரனும் முட்பட தன் திருப்பவளம் திறந்தருளிச்செய்யாதே, தானருளிச்செய்யாதொழிந்தாலும் அறியவல்ல ஸர்வஜ்ஞவிஷயங்களுக்கும் மறைக்குமென்று சொல்லாநின்றதிறேயென்கை. இத்தாலை லுட்பட இப்படிமறைபயாநின்றவிவனுக்குப் பின்னைசொல்லவேணுமோ வென்றபடி.

௩௬௬. இப்படி உத்தேச்யவிஷயங்களி லறிவியாதிருக்கும் மாத்ரமும்போராது, குற்றஞ்செய்தவர்கள் விஷயமாக க்ஷமாதயாதிகளும் நடக்கவேணுமென்கிறார் மேல், (குற்றஞ்செய்தவர்கள்பக்கல்) என்றுதுடங்கி. (பொறை) யாவது - அவர்கள் செய்தகுற்றத்துக்கு தாமொருப்ரதிக்ரியை பண்ணுதல் நெஞ்சிலேகன்றியிருத்தல் செய்யாமையாகிற வபராதஸஹத்வம்; (க்ருபை) யாவது - நம்பொறுத்திருந்தோமாகிலு மெம்பெருமானுசிததண்டம் பண்ணவன்றோ புகுகிறான் ஐயோ இனி யிதுக்கென் செய்வோமென்கிற பரதுக்க ஸஹிஷ்ணுத்வம்; (சிரிப்)பாவது - அத்ருஷ்டவிரோதமாக இவர்களால் செய்யலாவதொன்றில்லையிறே, பாருஷ்யாதிமுகத்தாலே க்யாதிலாபாதி . த்ருஷ்டவிரோதங்களிலே [illegible]

ஆ.—ஜ்ஞாநபரிபாகவிசேஷங்கள். பட்டர் ஒருநாள்பெருமாள்ஸந்நிதியிலே தோஷாநுஸந்தாநம்பண்ணாநிற்க, சிலர் செவிபொறுக்க ஒண்ணாத பருஷோக்தி பண்ணக்கேட்டு சாத்தின திருவாழி மோதிரத்தையும் திருப்பரியட்டத்தையும் கொடுத்தருளி, முதலிகளைப்பார்த்து பருஷித்ததுக்கஞ்சிக்கொடுத்தேனன்று, நாமறியாததோஷங்களையும் பெருமாள் திருச்செவி சாத்தும்படிசொன்ன வுபகாரத்தைப்பற்றக்கொடுத்தே னத்தனை; இவர்கள்செய்த வுபகாரத்துக்கு நாமுகந்தத்தைக்கொடுக்கப்பெறுதே, க்ராமஸௌகரமுகந்தத்தைக் கொடுப்பாரைப்போலே இவர்களுகப்பைப் பின்சென்று இவற்றைக்கொடுத்தே னத்தனை யென்றருளிச்செய்தாரென்று இவ்விடத்திலே பிள்ளையருளிச்செய்வர். ஆக ஸதாசார்ய விசேஷகடாக்ஷத்தாலே மநோதோஷமற்ற ஸச்சிஷ்யன், ஸ்வகுணபரதோஷக்ரஹணரூபதோஷகந்தமற்றிருக்கு மென்றதாயிற்று. பரமாப்தவிகஸிதஜ்ஞாநஸ்ப்புரணரூப சேஷத்வலக்ஷணமான சிஷ்யத்வம் ஸத்தா நிபந்தநமாயுமுபதேசநிபந்தநமாயும் ஸர்வாத்ம ஸாதாரணமாயிருக்கும்; இதில் ததேகபாரதந்த்ர்யையான பிராட்டி துடங்கி மிதுநபாரதந்த்ரரான நித்யஸூரிகளுக்கு நித்யவிகஸிதஜ்ஞாநஸ்ப்புரண சேஷத்வமுண்டாகையாலே ஸத்தா நிபந்தந சிஷ்யத்வமுண்டு; தத்ததீயபாரதந்த்ரரான முக்தர்க்கும் தத்ஸங்கல்பபாரதந்த்ரரான பத்தர்க்கும் அநாதிஸங்கல்ப ஸிந்த்த ததுபாயபாவ காதாசித்க கடாக்ஷாபேநசங்களாலே விகஸிதாவிகஸித ஜ்ஞாநஸ்ப்புரணரூப சேஷத்வமுண்டாகையால் உபதேசத்வ நிபந்த்தந சிஷ்யத்வமுண்டு; இனி நித்யபத்தர்க்கும் தத்ஸங்கல்போபாதி நிருத்த்த தத்ஸ்ப்புரணயோக்யதையுண்டு; இனி லக்ஷ்மீப்ரப்ருதி குருபரம்பரைக்கு ஸ்வஸ்வகுருசிஷ்யத்வமே நிலைநின்றவேஷமாய் கடாக்ஷாபதேசாதிஸித்தமான வாசார்யத்வம் பரமகுருவின் விசேஷாதிஷ்டாந ப்ரகர்ஷஸ்ப்புரணநிபந்தநமாய் வருமித்தனை; "அகல்விசும்பும் நிலனுமிருளார் வினைகெடச்செங்கோல் நடாவுதிர்" என்றுபயவிபூதியிலுமுள்ள வநுபவஹர்ஷபாரவச்யாயதாக்ரஹணரூபமான வஜ்ஞாநத்வய நிராஸகனான பரமகுருவின் சிஷ்யரல்லாதாரில்லை. இனி நாராயணாசார்யனுடைய நரரூப சிஷ்யபாவனை ஏககாலீந ப்ராதுர்ப்பாவாந்தர்த்தாநாதி பேதமுடைத்தாகையால் பிந்நகாலீநஜந்மமரணாதிகளையுடைய வ்யதிரிக்த சிஷ்யாசார்ய ஸ்வரூபைக்ய நிதர்சநமாகாது; ஸர்வசக்தியும் பாவனை

---

பொறையும் க்ருபையும் சிரிப்பு முகப்பு

---

ஜீ.—களால்செய்யலாவது; அப்படிசிலவற்றைச்செய்தால் தங்களோபாதி நாமுமிவற்றிலே சபலராய்இவற்றினுடைய ஹாநியைப்பற்றநெஞ்சாறல்பட்டு தளர்வுதோமென் றிருந்தார்களாகாதே இவர்களறிவிலித்தனமிருந்தபடியென்னென்றுபண்ணும் ஹாஸ்யம்; (உகப்) பாவது - அவர்கள் பண்ணும் பரிபவாதிகளுக்கு விஷயமான சரீரத்தை தனக்குசத்ருவாகவும், அவர்கள் ஹாநிபண்ணும் த்ருஷ்டபதார்த்தங்கள் தனக்குப்ரதிகூலங்களாகவும் நினைத்திருக்கையாலே, தன்னுடைய சத்ருவிஷயமாக ஒருவன் பரிபவாதிகளைப்பண்ணுதல் தனக்கு ப்ரதிகூலங்களானவற்றைப் போக்குதல்செய்தாலுகக்குமாபோலே, அவர்களளவில்பிறக்கும் ப்ரீதி; (உபகாரஸ்ம்ருதி) யாவது-நம்முடையதோஷங்களை நாம் மறந்திருக்கும் தசைகளிலே யுணர்த்தியும், நமக்கிவ்விருப்பில் நசையறும்படியான செறுப்புக்களைச்செய்தும், இவர்கள் நமக்குப்பண்ணுகிற வுபகாரமென்தா னென்றிருக்கும் க்ருதஜ்ஞதை; (நடக்கவேணும்) என்றது - இவை யித்தனையும் குற்றம் செய்தவர்விஷயத்திலே இவனுக்கவச்யமுண்டாய்ப் போரவேணுமென்று

ஆ.—மாத்ரம்கொண்டு ததைக்யம்கொள்ளில் ஸுகதுஃக்கஜந்மமரணாதிபேதம் தத்தேதுவான கர்மகர்த்ருபேதம் தத்பலாநுபவபேதம் உபயர்க்குமின்றியே யொழியவேணும்; முக்ததசையில் சிஷ்யத்வபஞ்சகமான "ஸ்ஸ்வ ஸ்ராட்பவதி" "ஸஸ்ஸ்வராட்ப்பவதி" என்கிற ஸ்வாதந்த்ர்யோக்தி கர்மபாரதந்த்ர்யநிவ்ருத்திபர மத்தனை, அத்தசையில் சிஷ்யத்வமில்லையென்னில் "பிரானிருந்தமைகாட்டினீர்" இத்யாதிஸித்த ததுபகாரஸ்ம்ருதியங்கின்றியே யொழியவேணும்; இப்படி யுபயதசையிலு மழியாதவிந்த சிஷ்யத்வம்தான் கேவல சிஷ்யத்வம் ஆசார்யத்வவிசிஷ்டசிஷ்யத்வமென்றிரண்டு; விசிஷ்டசிஷ்யத்வம் ஸாக்ஷாச்சிஷ்யத்வம் பரம்பரையா சிஷ்யத்வமென்றிரண்டு; கேவலவிசிஷ்டரூப சிஷ்யத்வம்தான் ஆசார்யஸ்வரூபப்ரதாநசிஷ்யத்வம் விக்ரஹப்ரதாநசிஷ்யத்வமென்றிரண்டு; ஸ்வரூபப்ரதாநசிஷ்யத்வம் தான் மஹத்வப்ரதாந சிஷ்யத்வம் ஸுலபத்வப்ரதாந சிஷ்யத்வமென்றிரண்டு; விக்ரஹப்ரதாந சிஷ்யத்வம்தான் சரணப்ரதாந சிஷ்யத்வம் தத்ஸம்பந்திப்ரதாநசிஷ்யத்வமென்றிரண்டு; இந்த வுபயப்ரதாநசிஷ்யத்வம்தான் உபாயப்ரதாநசிஷ்யத்வம் உபேயப்ரதாநசிஷ்யத்வமென்றிரண்டு; உபாயப்ரதாநசிஷ்யத்வம் தான் அங்கோபாய ப்ரதாந சிஷ்யத்வம் ஸ்வதந்த்ரோபாயப்ரதாநசிஷ்யத்வமென்றிரண்டு; உபேயப்ரதாநசிஷ்யத்வம்தான் ப்ரதமோபேய ப்ரதாநசிஷ்யத்வம் சரமோபேய ப்ரதாந சிஷ்யத்வமென்றிரண்டு; ஏவம்விதமானவிதில் பகவத்விஷயத்தில் ஆசார்யத்வப்ரதிபத்தி நடக்கும் சிஷ்யத்வம் ஆழ்வார்களது, ஆசார்யவிஷயத்தில் பகவத்ப்ரதிபத்தி நடக்கும் சிஷ்யத்வம் ஸ்ரீ மதுரகவியாழ்வார் முதலான வாசார்யர்களது. ஆக விப்ரகரணத்தால் சிஷ்யனுக்குண்டாம் ஸத்குணாத்யவஸாயவிசேஷமும், சிஷ்யாசார்யர்களுக்குண்டாம் ஸாதாரணாஸாதாரண வ்ருத்திவிசேஷமும், ஆசார்யப்ரீத்யர்த்தமாக சிஷ்யனுக்குண்டாம் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திவிசேஷமும், ஆசார்யோபகாரஸ்ம்ருதிஹேது சிஷ்யசித்நதோஷநிவ்ருத்தியும் சொல்லப்பட்டது.

ஆறுப்ரகரணங்களில் நான்காவதான ஸதாசார்யாநுவர்த்தந ப்ரகரணம் முற்றிற்று.

முபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்.

ஆறுப்ரகரணங்களில் நான்காவதான ஸதாசார்யாநுவர்த்தந ப்ரகரணம் முற்றிற்று.

ஜீ.—தோற்றுகைக்காக. ஆக விப்ரகரணத்தால் ஹிதோபதேசஸமயத்தில்விப்ரதிபத்தி விசேஷங்களும், தத்ராஹிதமாக வுபதேசிக்கவேணுமென்னுமிடமும், உபதேசஸாக்ஷாத்ப்பலமும் உபதேஷ்டாவிநாசார்யத்வமும் ஸித்திக்கும் வழிகளும், விப்ரதிபத்தியுடனுபதேசிக்கி லுபயர்க்கும் ஸ்வரூபஸித்தி யில்லாமையையும், உபதேஷ்டாவான வாசார்யனுக்கவச்யாபேக்ஷித குணத்வயமும், ஸாக்ஷாதாசார்யத்வ மின்னமந்த்ரத்தை யுபதேசித்தவனுக்கென்றும் சொல்லுகையாலே ஸதாசார்ய லக்ஷணத்தையும்; ததநந்தரம் ஸச்சிஷ்யலக்ஷணத்தையும், ததுபயருடைய பரிமாற்றங்களையும், சிஷ்யனுக்காசார்யவிஷயத்தில் "நீமனங்கெடுத்தாய்" இத்யாதிப்படியே யாவச்சரீரபாத முபகாரஸ்ம்ருதி நடக்கவேணுமென்னுமத்தையும், மநஸ்ஸுக்குத்தீமை யின்னதென்னுமிடத்தையும், அதிலுபபாதநீயாம்சத்தி லுபபாதநத்தையும், தத்ப்ரஸங்கத்திலே மற்றுமிவனுக்கபேக்ஷிதமான வர்த்தவிசேஷங்களையும் ப்ரதிபாதிக்கையாலே, கீழ்ச்சொல்லிவந்த த்வயநிஷ்ட்டனானவதிகாரிக்கு ததுபதேஷ்டாவான வாசார்யவிஷயத்தி லுண்டாகவேண்டும் ப்ரதிபத்த்யநுவர்த்தந ப்ரகாரங்களும் சொல்லப்பட்டது.

ஆறுப்ரகரணங்களில் நான்காவதான ஸதாசார்யாநுவர்த்தந ப்ரகரணம் முற்றிற்று.

ஆறுப்ரகரணங்களில் ஐந்தாவதான பகவந்நிர்ஹேதுக
க்ருபாப்ரபாவ ப்ரகரணம்.

ஆ.—கூஉஉ. ஏவம்விதசிஷ்யனுடைய ஸம்பந்தமுள்ள இவ்வதிகாரிக்கு அத்வேஷாபிமுக்யம் முதலாக ஆசார்யப்ராப்திபர்யந்தமாகப் ப்ராப்யப்ராப்திருசியுண்டாம் நன்மைகளெல்லாத்துக்கும் அடியான பகவத்ப்ரஸாதத்தின் நிர்ஹேதுகத்வத்தை வெளியிடாது மறைப்பதாகிறார் மேல், (ஸ்வதோஷாநுஸந்தாநம்) தொடங்கி (அபயஹேது வளவாக). இவனுக்கு யாவத்ப்ராப்திபர்யந்தம் வர்த்திக்கும் பயாபயகாரணம் என்னதென்கிறார் முதல்; ஸர்வத்ரகுணக்ரஹணம் பண்ணும்படி நிர்தோஷனான இவ்வதிகாரிக்கு அநாதியே பிடித்து தான் பண்ணிப்போந்த ஸ்வதோஷத்தை அநுஸந்திக்கை, இவற்றையிட்டுத் தன்னைப்ராப்யத்தைப் பெறப்போகிறேனோவென்னும் பயஹேது : அத்தோஷமேபச்சையாக அங்கீகரிக்கும் பகவத்குணத்தை

---

ஆறுப்ரகரணங்களில் ஐந்தாவதான பகவந்நிர்ஹேதுக
க்ருபாப்ரபாவ ப்ரகரணம்.

கூஉங. ஸ்வதோஷாநுஸந்தாநம் பயஹேது; பகவத்குணாநுஸந்தாநமபயஹேது.

---

ஆறுப்ரகரணங்களில் ஐந்தாவதான பகவந்நிர்ஹேதுக
க்ருபாப்ரபாவ ப்ரகரணம்.

ஜீ.—கூஉங. இனி (ஸ்வதோஷாநுஸந்தாநம் பயஹேது; பகவத்குணாநுஸந்தாநமபயஹேது) என்று தொடங்கி. (நிவர்த்யஜ்ஞாநம் பயஹேது; நிவர்த்தகஜ்ஞாநமபயஹேது) என்னுமளவாக இவ்வதிகாரிக்கு அநாதிகாலார்ஜித கர்மவிநாசகாரணமாய் அத்வேஷம் முதலாக ப்ராப்திபர்யந்தமாக நடுவுள்ள பேறுகளுக்கெல்லாம் ப்ரதாநஹேதுவான பகவந்நிர்ஹேதுக க்ருபாவைபவம் சொல்லப்புகுந்து. ஸர்வாதிகள் தோஷமும் ஸ்வதோஷமென்று நினைக்கைமுதலாக ப்ரஸக்தாநுப்ரஸக்தமாய் வந்த அர்த்தவிசேஷங்களை ப்ரதிபாதித்துத் தலைக்கட்டின அநந்தரம், கீழ் (ஸ்வதோஷத்துக்கும்) இத்யாதிவாக்யத்திலே இவனுக்கு அவஸ்ய கர்த்தவ்யமாகச் சொன்ன ஸ்வதோஷ பகவத்ப்ரபாவ தத்குணாநுஸந்தாநங்களில் வைத்துக்கொண்டு பாகவதகுணாநுஸந்தாநம் ப்ரதிபாத்யாம்சத்துக்குபயுக்தமல்லாமையாலே யத்தைவிட்டு, அதுக்குபயுக்தமான ஸ்வதோஷபகவத்குணாநுஸந்தாநங்களை பரிக்ரஹித்துக்கொண்டு அவையிரண்டுக்கும் ப்ரயோஜநமின்னதென்கிறார் மேல் (ஸ்வதோஷாநுஸந்தாநம்) என்று தொடங்கி. ஸ்வதோஷமாவது - அசாத்யகுணாதிகளும், அதுக்குமூலமான அநாதிகாலமே பிடித்து கட்டேறிக்கிடக்கிற அவித்யாதிகளும்; ஏததநுஸந்தாநமிது இதுவாக இன்னம் ஸம்ஸாரம் வரில்செய்வதென்னென்னும் பயத்துக்கு ஹேது. (பகவத்குண) மாவது - இத்தோஷத்தைப்பார்த்திகழாமலங்கீகரித்து இவற்றைப்பொறுத்து இவ்வாத்மாவைத் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளுகைக்குடலான அவனுடைய தயாக்ஷாந்த்யாதிகள்; ஏததநுஸந்தாநம் அநாதிகாலம் ஸம்ஸாரஹேதுவாய்ப்போந்த ஸ்வதோஷபலத்தைப்பார்த்து இன்னமுமப்படியாகில் செய்வதென்னென்கிற பயத்தினுடைய நிவ்ருத்திக்கு ஹேதுவென்கை. “ మరన్నస్యానాం రపరిహంస్యస్య మహతో నిహీనాచారో౽హం నృపశురశుభస్యాస్పదమపి। దయాసిన్ధో బన్ధో నిరవధికవాత్సల్యజలధే తవస్మారం స్మారం గుణగణమితీచ్ఛామి గతభీః ” “ஜாதஸ்யாபராதேந பரிஹாணிர்யஸ்ய மஹதோ நிஹீநாசாரோऽஹம் ந்ருபசுரசுபஸ்யாஸ்பதமபி। தயாஸிந்தோ

ஆ,—பநுஸந்த்திக்கவே, இனி ப்ராப்யம் கைபுகுந்ததேயன்றோவென்று நிர்ப்பயனு யிருக்கையாகிற வபயஹேது ;

௩௬௭. நிரங்குச ஸ்வதந்த்ரன் இன்னம் ஸம்ஸரிப்பிக்கில் செய்வதென்னென்றவனை நினைத்து பீதனுயும், ஜ்ஞாதியான நாம் பண்ணின தோஷம் நம்மைச்செறிக்கப்போகிறதோவென்று தன்னைமறித்து நிர்ப்பயனுயும், இப்படி பயாபயங்களிரண்டும் ஹேதுவிபர்யயம் பிறந்து மாறுடில், அநாதிகாலமேபிடித்து ஸ்வபரஸ்வரூபங்களை விப்ரதிபத்திபண்ணிப்போந்த வந்யதாஜ்ஞாநரூபையான வஜ்ஞதையே மடங்கிவித்த்திக்கதாய்விடுமென்கிருர். ஏதத்விபர்யயத்தில் தோஷ நிவர்த்தகாச்ரயசக்த்யசக்த்யஜ்ஞதை வெளிப்பட்டதாய்விடுமென்றபடி.

௩௬௮. இப்படி பகவத்குணாநுஸந்த்தாந மபயஹேதுவாகில் அநந்யகதியானவென்னை; ஸ்வாமியானவுன் ப்ராப்யமுமாய் போக்யமுமான திருவடிகிட்டாவகைகளாலே உயிர்க்கொலையாக நலிவதாக, சரணாகதனை பின்பும் ஸ்வதந்த்ரனுனநீ விசாரியாநின்றாய், கர்ப்பாதிகளிலே தள்ளி

---

௩௬௭, பயாபயங்க ளிரண்டும் மாறுடில் அஜ்ஞதையேவித்த்திக்கும்.

௩௬௮. ஆனால் "நலிவா னின்னமெண்ணுகின்றாய்" "ஆற்றங்கரைவாழ் மரம்போலஞ்சுகின்றேன்"

---

ஜீ,—பந்தோதாநிரவதிகவாத்ஸல்யஜலதே தவஸ்மாரம்ஸ்மாரம் குணகணமிதிச்சாமிகதபீ:" என்னக்கடவதிறே.

௩௬௭. இப்படி யிவ்விடத்திலே பயாபயஹேதுக்களான ஸகல தோஷஸகலகுணங்களையும் சேரச்சொல்லி யிருக்கச்செய்தே, (இழவுக்கடி கர்மம், பேற்றுக்கடிக்ருபை) என்றும் (கர்மபலம்போலேக்ருபாபலமு மநுபவித்தேயறவேணும்) என்றும் கர்மத்தையும் க்ருபையையுமே இழவுபேறுகளுக்குஹேதுவாகச் சொல்லிக்கொண்டுபோய், (பயஹேதுகர்மம், அபயஹேதுகாருண்யம்) என்று நிகமித்தது, இவையெல்லாத்திலு மிவனுக்கு ஸம்ஸாரமோக்ஷங்களுக்கு ப்ரதாநஹேதுக்க ளவையாகையாலே ; இவையிரண்டையும்பின்செல்லும் மற்றுள்ளவையுமிவையுக்கிடத்தே தானே வந்துவிடுமிறே. இவையன்றிக்கே அவன்படியை நினைத்து பயமும் தன்படியைநினைத் தபயமுமாமளவில் அறிவித்தனமே பலிக்குமென்கிருர், (பயாபயங்களிரண்டும்) என்றுதுடங்கி. அதாவது கீழ்ச்சொன்னபடி யன்றிக்கே அநாதிகாலம் தனக்கு பரதந்த்ரமான வாத்மவஸ்துவை, கர்மவ்யாஜத்தாலே ஸம்ஸரிப்பித்துப்போந்தவனன்றோ, நிரங்குச ஸ்வதந்த்ரனுனவனின்னமும் ஸம்ஸரிப்பிக்கில் செய்வதென்னென்று அவன்படியை நினைத்து பயப்படுகையும் ; முன்போலன்றிக்கே நமக்கிப்போதாத்ம குணங்களுண்டாகையால் பேற்றில் கண்ணழிவில்லையென்று தன்படியை நினைத்துபயம் கெடுகையுமாமளவில் ; தாந்தனக்குநாசகனென்று பயப்படுகையும் ஈச்வரனை ரக்ஷகனென்று பயம்கெடுகையுமாகிற ஜ்ஞாத்ருத்வ வேஷமில்லாமையாலே, அஜ்ஞதையேவித்த்திக்கும்விடுமென்கை.

௩௬௮. (அஜ்ஞதையேவித்த்திக்கும்) என்றவித்தைதத்தள்ளுகைக்காக ஆழ்வார்கள் பாசுரங்களைக்கொண்டு ப்ரத்யவஸ்த்தாநம்பண்ணினவர்கள் சங்கையை யநுவதிக்கிருர், (ஆனால்) என்றுதுடங்கி. அதாவது இப்படியாகில் தத்வவிதக்ரேஸராரானவாழ்வார்கள் "உண்ணிலாவியவைவராற் குமைதீற்றியென்னையுன் பாதபங்கயம் நண்ணிலாவகையே நலிவானின்னமெண்ணுகின்றாய்" என்றும் "காட்டிப்படுப்பாயோ" என்கிறபடியே

ஆ.—யென்னை ஸம்ஸரிப்பிக்கத் திருவுள்ளம்பற்றினாயோவென்று நீஸம்ஸாரத்தை யடியறுத்தபின்பும் வேர்ப்பறியுண்டு விழத்தளம்புகிற பெருக்காற்றிடிகரையில் வர்த்திக்கும்மரம்போலே, அநாதிக்ருததோஷப்ரவாஹதராளிதனாய் ஸ்த்திதியற்றுத்தளும்புகிறநான் பீதிபீதனாகாநின்றேனென்று பகவத்ஸ்வாதந்த்ர்யத்தை யநுஸந்தித்து, இன்னமும் ஸம்ஸரிப்பிக்கில் செய்வதென்னென்று கருக்குழிக்குக்கூப்பிடுகிற பொய்யில்பாடலான வாழ்வார் பாசுரங்களுக்கடியென்னென்னிலென்று ப்ரச்நம்பண்ணி;

௩௬௯. நிருபாதிகரக்ஷகனோடு தங்களுக்குண்டான நிருபாதிகஸம்பந்தாநுஸந்தாநமென் றுத்தரமருளிச்செய்து;

௩௭௦. இத்தை த்ருஷ்டாந்தமுகேந விசைவிக்கிறார்மேல், (ப்ரஜை தெருவில்) இத்யாதியால். பாம்ஸுக்ரீடைபண்ணுகிறப்ரஜை தான் க்ரீடிக்கிற தெருவிலே கதாகதம்பண்ணா நின்றிடறிக்கால்நொந்து ஸ்வக்ருஹத்திலே யழுதுகொண்டுவந்து, அந்யபரையாய்க் குனிந்து காரியம்செய்கிற தாய் முதுகிலே அவளிடறுவித்தாளாகநினைத்துக் குத்துமாபோலே, முக்த்தனான பத்தசேதநன் ஸம்ஸாரத்தே ஸம்ஸரித்து து:க்கித்து நொந்தநோவாலே தாயிருக்கும் வண்ணமான பந்தமுடையவனே து:க்கிப்பிக்கிறானென்று குற்றமேறிடலாமிறே யென்று கர்மாத்யுபாதியற்று ஒழிக்கவொழியாதபந்துவுமாய் அறிந்து விலக்கவல்லனுமான வந்தஸர்

---

என்கிறபாசுரங்களுக்கடியென்னென்னில்.

௩௬௯. பந்தாநுஸந்தாநம்.

௩௭௦. ப்ரஜைதெருவிலேயிடறி தாய்முதுகிலே குத்துமாபோலே, நிருபாதிகபந்துவாய் சக்தனாயிருக்கிறவன் விலக்காதொழிந்தா லப்படிச்சொல்லலாமிறே.

---

ஜீ.—விஷயங்களைக்காணில் முடியும்படியானவென்னை, உள்ளேநிரந்தரவாஸம்பண்ணுகையாலே ஆந்தரசத்ருக்களாயிருக்கிற விந்த்ரியங்களைந்தாலும் நலிவுண்ணும்படிபண்ணி, ப்ராப்தமுமாய் போக்யமுமான வுன் திருவடிகளைக்கிட்டாதபடியாகவே, சரணாகதனானபின்பும் ஸம்ஸாரத்திலேவைத்து நலியவெண்ணா நின்றாயென்றும்; “மக்கள்தோற்றக்குழி தோற்றிவிப்பாய்கொலென் றின்னமாற்றங்கரைவாழ்மரம்போலஞ்சுகின்றேன்” என்று மநுஷ்யர்களுடைய கர்ப்பஸ்தாநத்திலே என்னுடைய கர்மாநுகுணமாக இன்னம் ஸம்ஸரிப்பிக்கிறாயோவென்று, இப்போதிப்போது போயிற்றென்னும்படி பயஸ்தாநமான வாற்றங்கரையிலே வர்த்திக்கிற மரம்போலே, உன்ஸ்வாதந்த்ர்யத்தை நினைத்தஞ்சாநின்றேனென்று மருளிச்செய்த பாசுரங்களுக்கு நிதாநமென்னென்னிலென்கை.

௩௬௯. அதுக்குத்தர மருளிச்செய்கிறார், (பந்தாநுஸந்தாநம்) என்று. அதாவது பேறிழவுகளிரண்டு மவனாலேயென்னலாம்படி நிருபாதிகரக்ஷகனானவனோடு தங்களுக்குண்டான ஸம்பந்தத்தினுடைய வநுஸந்தாநமென்கை.

௩௭௦. பந்தாநுஸந்தாநத்தாலே இப்படி தன்னால் வருமவற்றை அவன்குறையாகச் சொல்லலாமோவென்ன, ஆமென்னுமிடத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார், (ப்ரஜை) என்றுதுடங்கி. அதாவது க்ரீடார்த்தமாகத் தெருவிலேயோடித்திரிகிறப்ரஜை, அங்கேயிடறிக்கால் நொந்தவாறே அழுதுகொண்டகத்திலேவந்து, தனக்கிவ்வேதனைவந்தது தாயாலேயாக நினைத்து அவள் முதுகிலேகுத்துமாபோலே ஒருபாதி ப்ர

ஆ.—வேச்வரன், அநாதிகாலமேபிடித்து ஸம்ஸரித்து து:க்கித்துநிற்க, கையைப்பிடித்து விலக்காதே உதாஸீநித்தொழிந்தால், நீயேஸம்ஸரிப்பித்தாயென்றிப்படியவர்களுக்குச் சொல்லலாமிறே.

௩௭௧. தன் தோஷத்தை யவன்மேலேயேறிடலாமோவென்ன வருளிச்செய்கிறார் மேல்; ஸ்தநந்தய ப்ரஜையை ஸாபாயமான கிணற்றின் கரையினின்றும் அநயபரதையாலே வாங்காதேமறந்தொழிந்தால், . ஆராயாமலுதாஸீனித்து தாயேகிணற்றிலே தள்ளினளென்று லோகத்திலே சொல்லக்கடவதிறே; அப்படியே அஜ்ஞனை ஸம்ஸாரப்படுகுழியிலே விழாதபடிபண்ணவல்ல ஸர்வசக்தி, உதாஸீனித்துப்பார்த்திருந்தால் அவனேயதிலே தள்ளினனென்று அவன்தலையிலே தோஷமேறிடலாமிறே.

௩௭௨. விலக்கவல்ல ஸர்வசக்தியின் ஸம்ஸாராநுமதியும் அலாபஹேதுவன்றோவென்கிறார் மேல், (இவனுடைய) இத்யாதியால். ரக்ஷ்யபூதனான சேதநன் ரக்ஷ்யத்வாநுமதி அசித்வ்யாவ்ருத்திவேஷமாய் தல்லாபமாகிறபேற்றுக்கு ஹேதுவல்லாதாப்போலே, ரக்ஷகனனவனுடைய ஸம்ஸாராநுமதியும் தன்னைப்பெறாமல் ஸம்ஸரித்திழக்கைக்குடலன்று.

---

௩௭௧. ப்ரஜையைக்கிணற்றின் கரையினின்றும் வாங்காதொழிந்தால் தாயேதள்ளினளென்னக்கடவதிறே.

௩௭௨. இவனுடைய வநுமதிபேற்றுக்கு ஹேதுவல்லாதாப்போலே, அவனுடையவநுமதியு மிழவுக்கு ஹேதுவன்று.

ஜீ.—யுக்தமல்லாமையாலே ஒழிக்கவொழியாத பந்தத்தை யுடையவனுமாய், இச்சேதநனுடைய கர்மத்தோடு ப்ரக்ருதி ப்ராக்ருதங்களோடு வாசியறநலிவைத்தவிர்க்கைக்குசக்தனுமாயிருக்கிறவன், நலிவுபடவிட்டுவிலக்காதொழிந்தால், அவனிவற்றையிட்டு நலிவிக்கிறானென்னலாமிறேயென்கை.

௩௭௧. விலக்காதமாத்ரம்கொண்டு அவன் செய்தானென்னலாமோவென்ன வருளிச்செய்கிறார், (ப்ரஜையை) என்றுதுடங்கி. அதாவது கிணற்றின்கரையிலே ப்ரஜையிருக்கிற படியைக்கண்ட மாதாவானவள் அப்போதே யோடிச்சென்று கிணற்றின்கரைநின்றும் வாங்காதொழிந்தால், கிணற்றிலே ப்ரஜைவிழுந்தவளவில் தாயப்போதே சென்றெடுத்தாளாகில் இப்ரஜைவிழுமோ கிணற்றின்கரையிலிருப்பை யிவளநுமதிபண்ணி யிருக்கையாலேயன்றோ விழுந்தது, ஆனபின்பிவளன்றோ தள்ளினளென்று லோகம்சொல்லக்கடவதிறே யென்கை.

௩௭௨. ஆனால் "ꠀꠀꠀ" "அப்ரதிஷித்தமநுமதம்" என்கிறந்யாயத்தாலே விலக்காமையாவது அநுமதியாயற்றபின்பு, அவனநுமதியேபின்னை யிவனிழவுக்கு ஹேதுவென்ன வருளிச்செய்கிறார் மேல், (அவனுடைய) என்றுதுடங்கி. அதாவது ரக்ஷ்யபூதனான விவனுடைய ரக்ஷ்யத்வாநுமதி அசித்வ்யாவ்ருத்திவேஷமாகையாலே பகவல்லாபத்துக்கு ஹேதுவல்லாதவோபாதி, ரக்ஷகனனவனுடைய ஸம்ஸாராநுமதியும், ஸ்வாஜ்ஞாரூபசாஸ்த்ரமர்யாதை ஜீவிக்கைக்காக க்ரமேணங்கீகரிப்போமென்றிவன் ருசிபார்த்திருக்கிற விருப்பாகையாலே ததலாபத்துக்கு ஹேதுவன்றென்கை.

ஆ.—௧௭௧. ஆறுலேதாமென்ன, ரக்ஷ்யத்வாநுமதிஸம்ஸாராநுமதி யாகிறவிரண்டும், பரதந்த்ரஸ்வதந்த்ரரான ரக்ஷ்யரக்ஷகரிருவர்க்கும் ஸ்வ ஸ்வாநுரூபஸ்வரூபம். பகவதநுமதியைப் பின்செல்லுமநுமதி ததீந வஸ்துஸ்வரூபம், ஸ்வேச்சாசாரியின் ததநுகுணாநுமதி ஸ்வாதீநவஸ்து ஸ்வரூபம்; இவன்ருசியைப்பின்சென்று பண்ணுமநுமதி, வத்ஸலத்வஸ்வ ரூபமென்று மருளிச்செய்வர்; ஸ்வாதந்த்ர்யோத்ரேகத்தாலே யநுமதி பண்ணி ஸம்ஸரிப்பித்து துக்கிப்பிக்கை, தத்விர்த்தகஸ்வாமியின் க்ரு போத்ரேகாரணமிறே; பின்னைபேகஷியாமல் மன்னின்னவிடமெனேயிறே ப்ரத்யவாஷ்டம்பன்றுமவனும்.

௧௭௨. இப்படி யுபயாநுமதியும் ஸ்வரூபமாயற்றால் இழவுபேறுக ளுக்கடியேதென்ன, அநாதிகாலமேபிடித்து பகவத்விஷயத்தை யிழந்து திரிகைக்கடி அநாத்யவித்யாஸஞ்சிதமான ஸுக்ருதஸுக்ருதகர்மம்; இப்படி யிழந்துதிரிகிற விவனுடைய பகவல்லாபமாகிறபேற்றுக்கடி, அயுகஸம் பந்நநிபந்தந ஸௌஹார்தகார்யமான க்ருபையென்று வேதாந்தயோ ஜனையாலே தாத்பர்யத்தை யறைத்தருளுகிறாரென்றருளிச்செய்வர். சேஷி பக்கல்தோஷமேறிடாமல் இழவைஸ்வகர்மதோஷமாக வநுஸந்திக்கை, ஸ்வசேஷத்வோசித மென்று மருளிச்செய்வர்.

௧௭௩. இழவுபேறுகளிரண்டுக்கும் ஸ்வதந்த்ரனானவன் தானேயென்று கீழ்ச்சொன்னதுக்கெதிர்த்தட்டாகமற்றைப்படியான தாத்பர்யத்தைவெளி யிட்டுச்சொல்லில், பேற்றுக்குக்ருஷிபண்ணுகிறாம்மை இழவுக்கடியென்னில்

௧௭௧. இரண்டு மிருவர்க்குப் ஸ்வரூபம்.
௧௭௨. இழவுக்கடி கர்மம், பேற்றுக்கடி க்ருபை.
௧௭௩. மற்றைப்படி சொல்லி லிழவுக்கு முப்பாம்.

ஜீ.—௧௭௧. இவ்வநுமதித்வயம் பின்னைபோதாவதென்ன வருளிச் செய்கிறார், (இரண்டும்) என்றுதுடங்கி. (இருவர்க்கும்ஸ்வரூபம்) என்றது. பரதந்த்ரனும் ஸ்வதந்த்ரனுமிருக்கிற இருவர்க்கும் ஸ்வாஸாதாரணாகா ரமென்றபடி. அதாவது பரதந்த்ரனானவனுக்கு ஸ்வரக்ஷ்யத்வாநுமதி ஸ்வரூபாநுரூபமாகையாலே ஸ்வரூபம்; ஸ்வதந்த்ரனானவனுக்கு ஸ்வரக்ஷ்யவஸ்துரக்ஷணத்தில் ஸ்வாஜ்ஞாநுபசாலநாநுகுண நிர்வாஹ கார்த்தமான ஸம்ஸாராநுமதி ஸ்வாதந்த்ர்யவிஷயமாகையாலே ஸ்வ ரூபமென்கை.

௧௭௨. ஆனால் இழவுபேறுகளுக்கடி யேதென்ன வருளிச்செய்கிறார்; (இழவுக்கடி) என்றுதுடங்கி அதாவது பகவத்விஷயத்தை அநாதிகால மிழக்கைக்குஹேது "முன்செய்தமுழுவினை" என்னும்படி அநாதிகால ஸஞ்சிதமான விவனுடையகர்மம், இப்படி யிழந்துகிடக்கிறவிவன் அவ் விஷயத்தைப்பெறுகைக்குஹேது "விதிவாய்க்கின்று காப்பாரார்" என் னும்படி நிருகைய மழியப்பெருகும் பகவத்க்ருபையென்கை.

௧௭௩. இங்ஙனன்றிக்கே மாறிச்சொல்லுமளவில் வருமனர்த்தத் தை யருளிச்செய்கிறார் மேல், (மற்றைப்படி) என்றுதுடங்கி அதாவ திப் படியன்றிக்கே (பாபபுண்யங்களிரண்டும் மாறுடில்) என்கிறவிடத்திற்போலே இழவுக்கடி ஈச்வர ஸ்வாதந்த்ர்யம் பேற்றுக்கடிசேதநவெத்தனமென் கிற இழவுபேறுகளுக்கு ஹேதுவைமாற்றிச்சொல்லில் ஈச்வரனைகைவாங்கு கையாலே, அவன் திருவடிகளைப்பெறும விழந்துபோகைக் குடலாமெ ன்கை.—, அதவா (மற்றைப்படி) இத்யாதிக்கு; இழவுக்கடிசேதநகர்மம்பே ற்றுக்கடி ஈச்வரக்ருபை என்றிழவிவனும் பேறவனுமாகச் சொன்னபடி

ஆ.—இழந்தேவிடுகவென்றவன் சீற, அவனை யிழக்கைக்குறுப்பாய்விடு மென்றருளிச்செய்து.

௩௭௬. இதுக்கு நிதர்சநம்காட்டுகிறார் மேல், (எடுக்க) இத்யாதியால். ஸ்வதந்த்ரஸ்வாமி விநோதார்த்தமாக ஸ்வப்ருத்யனைக் குழியிலே தள்ளி ஸ்வஸ்நேஹத்தாலே யொக்கக்குதித்து வாரியெடாநிற்க, தள்ளினதீரே யெடுக்கவந்தீரோவென்ன, நான்செய்ததுகண்டிராமல் குற்றம்காட்டாநின்றாய்நீ யென்று ஸ்வாதந்த்ர்யத்தாலே சீறியெடாம லெறிந்துபோகைக்குறுப்பாய்விடுமிறே; அப்படி யிழவுக்கடியுமவனேயென்னில் ஸ்வதந்த்ரனானவவன் கைவிடுகைக் கூடலாமென்றதாயிற்று. உபயமுமவனாலே என்னுமது யதார்த்தமாகிலும் அதிலொன்றை ஸ்வக்ருதமென்றல்லது பரக்ருதமென்று சேஷபூதன் நினைக்கப்பெறானென்றபடி.

௩௭௭. இழவுக்குமடி யவனென்றால் அவன்சீறுமென்றறிந்தபடியென்னென்ன, அதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார், (சீற்றமுளன்) இத்யாதியால். பரதந்த்ரனானவென்னை ஸ்வதந்த்ரனான நீரே இந்நாள்வரை ஸம்ஸாரப் படுகுழியிலே தள்ளினீரென்று அடியேனுள்ளபடி விண்ணப்பம்செய்யில், எடுக்கமுயல்கிறநம்மை யிப்படிசொல்லுவதேயென்று தேவரீர்க்குச் சீற்றமுண்டாமென்ன வவ்வாய்மாறுவதற்கு முன்னே "ஆகிலும்செப்புவன்"

---

௩௭௬. எடுக்க நினைக்கிறவனைத் தள்ளினையென்கை யெடாமைக்குறுப்பிறே.

௩௭௭. சிற்றமுளமென்ன வநந்தரத்திலே யிவ்வர்த்தத்தைத்

---

ஜீ.—யன்றிக்கே, இழவுபேறுகளிரண்டுக்குமடி ஈச்வரஸ்வாதந்த்ர்யமென்று அநாதிகாலமிழந்ததுக்குமடி யவனாகச்சொல்லில் அவன் கைவாங்குகையாலே, ஒருகாலமு மவனைப்பெறாமே யிழந்துபோகைக்கூடலாய் விடு மென்னவுமாம்.

௩௭௬. இப்படிச்சொல்லுமளவில் ஈச்வரன்கைவாங்குமென்னுமத்தை லௌகிகந்யாயத்தை யுபஜீவித்துக்கொண்டு தர்சிப்பிக்கிறார். (எடுக்க நினைக்கிறவனை) என்றுதுடங்கி. அதாவது ஆழ்ந்தகிணற்றில் தன்கர்மாநுகுணமாக வநவதாநத்தாலே விழுந்தவனை, அருகு நின்றானொரு க்ருபாவானானவனெடுப்பதாக யத்நிக்கிறவளவிலே, தான் விழுகிறபோது அவனாஸந்நனென்கிற மாத்ரத்தைக்கொண்டு, அவன்தன்னைத்தள்ளினானாகநினைத்து இக்கிணற்றிலே யென்னைத்தள்ளினாயும் நீயன்றோவென்றால், நான் செய்யாதகாரியத்தை யிவன் சொல்லுவதேயென்று சீற்றமெழுந்திருந்து யெடாமல் கைவாங்குகைக்குறுப்பாமாபோலே, ஸ்வகர்மத்தாலே ஸம்ஸாரமாகிற படுகுழியிலே விழுந்துகிடக்கிறதன்னை எடுக்க நினைக்கிற க்ருபாவானான வீச்வரனை இத்தனைகாலமுமென்னை ஸம்ஸாரத்திலேதள்ளி விட்டுவைத்தாயும் நீயேயன்றால், சீறிக்கைவாங்கி பட்டது படுகிறானென்றிருந்துவிடுகைக் குறுப்பாமிறேயென்கை.

௩௭௭. அப்படி சொல்லுகை ஈச்வரனுக்கு சீற்றத்துக்குடலென்னுமிது லௌகிகந்யாயம்கொண்டு சொல்லவேணுமோ, தத்த்வதர்சிகளான திருமங்கையாழ்வார் பூர்வோக்திக்கநந்தரத்திலே தாமேயருளிச்செய்தாரிறேயென்கிறார், (சீற்றமுளன்) என்றுதுடங்கி. அதாவது "இன்னம் மக்கள்தோற்றக் குழிதோற்றுவிப்பாய்கொல்" என்று ஈச்வரன் தன்ஸ்வாதந்த்ர்யத்தாலே ஸம்ஸரிப்பிக்கிறானாகச் சொன்னவிதுகர்மாநுகுணமாக ஸம்ஸரிக்கிறவாத்மாவை ஸம்ஸாரத்தில்நின்று மெடுக்கைக்கு ஸங்கல்பிபண்ணி

ஆ'—என்று தேவரீர் சீறிலும் தேவரேஸ்வாதந்த்ர்யத்தாலே யென்னைக் கர்ப்பஜந்மாதியிலே யுழலப்பண்ணினீ ரென்னுமிவ்வர்த்தத்தை விண்ணப்பம் செய்தே விடுவனென்று சீறுமென்றறிந்ததாமே கூசாமலருளிச்செய்தாரிறே.

௩௭௮. ஸ்வதந்த்ரஸ்வாமிக்கு சீற்றமுண்டென்றறிந்தால் அஞ்சாமலித்தைச்சொல்லும்படி யென்னென்னில் என்றுசங்கித்து; ''அடையவருளாயெனக்குன்றனருளே'' என்றச்சீற்றத்தை யடக்கி யாளுமவனுடைய வின்னருளும்; ''ஆற்றங்கரைவாழ்மரம்போலஞ்சுகின்றேன்'' இத்யாதியாலே அவன் சீறுமென்றுறியிருக்கவொட்டாமல் கூப்பிடுவிக்கிற கரையற்ற ஸம்ஸாரார்த்தியும்; ''வேட்பின்புமூவேம்பன்றி யுன்னடியேன் காண்பின்னும் சேவடியன்றிநயவேன்'' என்று அவன்சீறித்தள்ளிலும் புறம்போக்கடியற்று மேல்விழும்படியான அநந்யகதித்வமும்; சீற்றமுண்டென்றறியாநிற்கவும் பயங்கெட்டுவாய்விட்டுச் சொல்லப்பண்ணும்.

தாமே யருளிச்செய்தாரிறே.

௩௭௮. சீற்றமுண்டென்றறிந்தால் சொல்லும்படி யென்னென்னில், அருளு மார்த்தியு மநந்யகதித்வமும் சொல்லப் பண்ணும்.

ஜீ.—போரு மவன்திருவுள்ளம் சீறுகைக்குடலென்று நினைத்து கீழ்விண்ணப்பம் செய்தவார்த்தையாலே திருவுள்ளத்துக்கு சீற்றமுண்டென்ன முதல்வார்த்தைக்கநந்தரத்திலே, இழவுக்கடி யவனுகச்சொல்லுகை நிக்ரஹஜநகமென்னு மிவ்வர்த்தத்தை முன்பப்படி யருளிச்செய்ததாமே யருளிச்செய்தாரென்கை.

௩௭௮. ''சீற்றமுளன்'' என்றபின்பும் ''ஆகிலும்செப்புவன்'' என்று முன்புசொன்னது தன்னையேசொல்லுகைக்கு ஹேதுவை ப்ரச்நோத்தரரூபேண ப்ரகாசிப்பிக்கிறார், (சீற்றம்) என்றுதுடங்கி. அதாவது கீழ்ச்சொன்னவித்தாலே ஈச்வரன் திருவுள்ளத்துக்கு சீற்றமுண்டென்றறிந்தால் பின்னையு மிவ்வார்த்தையைக் கூசாமல் திருமுன்பேசொல்லும்படி யெங்ஙனேயென்னில், அவன் சீற்றத்தைத்தன் ஸந்நிதியில் ஜீவிக்கவொட்டாத பரதுக்காஸஹிஷ்ணுத்வரூபையான க்ருபையும்; உன் சீற்றம் கண்டஞ்சி வாய்மூடவொட்டாதபடி கரையிழந்துசெல்லுகிற ஸம்ஸாரார்த்தியும்; சீறியெடுத்தெறியிலும் வேறுபுகலில்லாமையாகிற வநந்யகதித்வமும் சொல்லும்படிபண்ணுமென்கை. இத்திருமொழியிலே ''அடையவருளாயே'' ''நினக்குத்தன்னருளே'' ''துணியேனினிநின்னருளல்லதெனக்கு'' ''தொண்டரானவர்க்கின்னருள் செய்வாய்'' என்று பலவிடங்களிலு மவனருளையும், ''ஆற்றங்கரைவாழ் மரம்போலஞ்சுகின்றேன்'' ''காற்றத்திடைப்பட்ட கலவர்மனம்போலாற்றத்துளங்கா நிற்பன்'' ''பாம்போடொருகூரையிலே பயின்றாப்போல் தாங்காதுள்ளம்தள்ளும்'' ''இருபாடெரிகொள்ளியினுள்ளெறும்புபோ லுருகாநிற்குமென்னுள்ளம்'' ''வெள்ளத்திடைப்பட்ட நரியினம்போலே யுள்ளம்துளங்கா நிற்பன்'' என்று பல த்ருஷ்டாந்தங்களாலும் தம்முடைய வார்த்யநந்யகதித்வங்களையு மருளிச்செய்தாரிறே.

ஆ.—௩௭௧. "சீற்றமுள" என்று சீறினாலும் "பின்னும்சேவடியன்றி நயவேன்" என்று காலைக்கட்டிக்கொள்ளலாம்படி தொண்டரானவர்க்கின்னருள்செய்யும் பரமக்ருபாளுவைப் பெறப்பெற்றாலஞ்சாம னுள்ளதெல்லாம் சொல்லலாமிறே யென்கிறார்.

௩௮௦. சீறினாலும் காலைக்கட்டிக்கொள்ளலாயிருக்குமிருப்புக்கு ப்ரமாணம்காட்டுகிறார் மேல், "సతంనిపతితంభూమౌ శరణ్యశ్శరణాగతమ్। వధార్హమపికాకుత్స్థః కృపయాపర్యపాలయత్" "ஸதம்நிபதிதம்பூமௌ சரண்யச்சரணாகதம் । வதார்ஹமபிகாகுத்ஸ்த்த꞉ க்ருபயாபர்யபாலயத்" என்றுபோக்கிடம் கெட்டுவந்து விழுந்தகாகத்தை, அறுத்தறுத்துத்தீர்க்கவேண்டு மபராதமுண்டாயிருக்க, பிறந்துபடைத்த பேரையுடையரான பெருமாள் அபராதத்துக்கொரு கண்ணழிவுசெய்து க்ருபையாலே ரக்ஷித்தருளினாரிறே; "அரிசினத்தால்" இத்யாதி. வருந்திப்பெற்றுபோற்றி வளர்க்குமீன்ற தாய் தீம்புகண்டுகிளர்ந்த சினத்தாலே காலாலேயுதைத்துத்தள்ளத்தள்ள வேறுபோக்கடியற்றுப் பின்னையும் சீறியுதைக்கிற தாய்முகத்திலிரக்கத்தையே பார்த்தழாநின்று அவள் காலைத்தழுவிக்கொள்ளும் குழவிபோல,

---

௩௭௧. சீறினாலும் காலைக்கட்டிக்கொள்ளலாம்படி யிருப்பா னொருவனைப் பெற்றாலெல்லாம் சொல்லலாமிறே.

௩௮௦ "కృపయాపర్యపాలయత్" "க்ருபயாபர்யபாலயத்"

---

ஜீ.—௩௭௧. இப்படி யநந்யகதித்வாதிக ளுண்டானாலும் அவனுக்குச் சீற்றம்பிறக்கும்படி சிலவற்றைச்சொல்லலாமோவென்ன வருளிச்செய்கிறார், (சீறினாலும்) என்றுதுடங்கி; அதாவது சீறினகாலத்திலும் சீற்றத்துக்கு விஷயமானவர்களுக்குச் சென்று திருவடிகளைப்பூண்டுகொள்ளலாம்படி பரமக்ருபாவானாயிருப்பா னொருவனைப்பெற்றால் நினைத்தபடியெல்லாம்சொல்லலாமிறேயென்கை.

௩௮௦. சீறினதசையிலும் காலைக்கட்டிக்கொள்ளலா யிருக்கும்படிக்குப்ரமாணம்காட்டுகிறார், ("కృపయాపర్యపాలయత్" "க்ருபயாபர்யபாலயத்" "அரிசினத்தால்")என்று. அதாவது "సతంనిపతితంభూమౌ శరణ్యశ్శరణాగతమ్। వధార్హమపికాకుత్స్థః కృపయాపర్యపాలయత్" "ஸதம்நிபதிதம்பூமௌ சரண்யச்சரணாகதம் । வதார்ஹமபிகாகுத்ஸ்த்த꞉ க்ருபயாபர்யபாலயத்" என்றபராதத்தைத் தீரக்கழியச்செய்து ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கிலக்காய் புறம்புபுகலற்றவாறேவந்து திருவடிகளிலே விழுந்தகாகத்தை, க்ருபையாலே ரக்ஷித்தாராகையாலும்; "அரிசினத்தாலீன்றதா யகற்றிடினும் மற்றவள் தன்னருள் நினைந்தேயழுங்குழவியதுவே போன்றிருந்தேனே" என்று பெறுகைக்குவருந்தி வரங்கிடந்து பெற்றதாயானவள் இதுசெய்ததீம்பைக்கண்டு எறிந்துபொகடவேண்டும்சீற்றத்தை யுடையளாய்க்கொண்டு கிட்டவரவொட்டாமல் தள்ளிவிட்டாலும், வேறுபோக்கடியற்று சீறியெடுத்தெறிகிற வவளுடைய முகத்திரக்கத்தையே நினைத்து, அழுதுகாலைத்தழுவிக்கொள்ளும் குழவிபோல, என்னபராதத்தைக்கண் டருகுவாராதபடி தேவர் தள்ளிவிடப்பார்க்கிலும், திருவடிகளல்லது வேறுபோக்கடியற்றிருந்தேனென்று ஸ்ரீ குலசேகரப்பெருமா ளருளிச்செய்கையாலும், (சீறினாலும் காலைக்கட்டிக்கொள்ளலாம்படி யிருப்பானொருவன்) என்னுமிடம் ஸித்தமென்கை. இப்படி

ஆ.—அடியேன் செய்ததிமைகண்டு வத்ஸலரானதேவர் மலங்கத்தள் விலும் சிறித்தள்ளுகிறதேவர் திருவடிகளல்லது வேறுபோக்கடிகேட்டிருக்தேனல்லேனென்றாரிறே. இத்தால் அநுகூலப்ரதிகூலவிபாகமற சிற்றம்கண்டு மேல்விழும்படியான க்ருபாளுத்வமவனுக்குண்டானபின் சொல்லவொண்ணாததேதென்றபடி.

ஜநந்யாசார்யர் திருவடிகளே சரணம்.

"அரிசினத்தால்."

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்.

ஜீ.—யாழ்வாரருளிச்செய்த விவ்வர்த்தத்தை, "నిరాసకస్యాపి న తావదుత్సృజే మహేశ హాతుం తవ పాదపఙ్కజమ్ । రుషా నిరస్తో౽పి శిశుః స్తనన్ధయో న జాతు మాతుశ్చరణౌ జిహాసతి" "நிராஸகஸ்யாபி நதாவதுத்ஸ்ருஜே மஹேசஹாதும் தவபாதபங்கஜம் । ருஷாநிரஸ்தோ௨பி சிசுஸ்தநந்தயோ நஜாதுமாதுச்சரணௌஜிஹாஸதி" என்றுளவந்தாரருளிச்செய்தாரிறே. ஆக இவ்வளவும் (பயாபயங்களிரண்டும் மாறுடிலஜ்ஞதையே ஸித்திக்கும்) என்கிறதின் மேல்வந்த சங்காபரிஹாரங்கள் பண்ணப்பட்டது.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

த்ருதீயப்ரகரணம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# சதுர்த்த ப்ரகரணம்.

ஆ.—௱௮௧. அசேதநமான கர்மமிழுப்பிக்கமாட்டாது, பகவத்ஸ்வாதந்த்ர்யமே யிழுவுக்கடி ஸ்வதந்த்ரஸ்வாமிக்ருபையே பேற்றுக்கடியென்னுமிடத்தை யுபாயேநவருளிச்செய்து, அந்தக்ருபை யாத்ருச்சிகாதிஸாபேக்ஷமாயும் நந்நிரபேக்ஷமாயும் பேற்றுக்குடலாமென்று இருகூறுசெய்து, அதில் நிர்ஹேதுக ப்ரதீதிவிஷயமான முற்பட்டஸாபேக்ஷ க்ருபையின் கார்யவிசேஷங்களை யருளிச்செய்கிறார் மேல், (த்ரிபாத்விபூதியில்) இத்யாதியால். "త్రిపాదస్యామృతం దివి" "த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்று லீலாவிபூதியில் மும்மடங்கான த்ரிபாத்விபூதியான நித்யவிபூதியிலே, அபரிச்சிந்நாநந்தபூர்ண ஸ்வரூபாதிபரிபூர்ணாநுபவம் நிரந்தரம் நடவாநிற்கச்செய்தே, அந்தபரிபூர்ணாநுபவமடையக்கிழாறுபோ யுண்டதுருக்காட்டாதே, ஸந்நிஹிதபுத்ரன் இராநிற்க தேசாந்தரகதரான முக்தபுத்ரர்கள் பக்கலிலே, வத்ஸலனானபிதாவினுடைய புத்ரஸ்மரணக்ரஸ்தஹ்ருதயம், ஸந்நிஹிதர்பக்கல் பற்றற்று, நிரந்தர விவிதஸ்ம்ருதிரூபேண குடிகிடக்குமாபோலே, தூரஸ்த்தராயஜ்ஞரான ஸம்ஸாரிகள் பக்கலிலே

---

௱௮௧. த்ரிபாத்விபூதியிலே பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க, அதுண்ட துருக்காட்டாதே, தேசாந்த்ரகதனான புத்ரன் பக்கலிலே பித்ருஹ்ருதயம் கிடக்குமாபோலே,

---

ஜீ.—௱௮௧. இனி (பகவத்குணாநுஸந்தாநமபயஹேது) என்று நிழருளிச்செய்தத்தை விசதீகரிக்கைக்காக, ஈச்வரன் இவ்வாத்மோஜ்ஜீவநத்துக்குப்பண்ணும் க்ருஷிபரம்பரையை யருளிச்செய்கிறார், (த்ரிபாத்விபூதியிலே) என்றுதுடங்கி. "త్రిపాదస్యామృతం దివి" "த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்கையாலே நித்யவிபூதியை த்ரிபாத்விபூதி யென்னக்கடவதிறே; இதினுடைய த்ரிபாத்த்வம் பலபடியாக நிர்வஹிக்கலாயிருக்கும், எங்ஙனேயென்னில் "పాదోऽస్య విశ్వా భూతాని త్రిపాదస్యామృతం దివి" "பாதோஸ்யவிச்வாபூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்றிந்தவிபூதியில் எல்லாபூதங்களு மிவனுக்கு காலத்தொன்றென்னும்படி யல்பமாயிருக்கும்; பரமாகாசத்திலிவனுடைய நித்யமானவிபூதி த்ரிபாத்தென்னும்படி மும்மடங்காயிருக்கும்; [இந்தவிபூதித்வயவிஷயமான பாதசப்தமும் த்ரிபாச்ச்சப்தமும், அல்பமஹத்த்வங்களுக் குபலக்ஷண மித்தனையொழிய பரிச்சேதபரமன்று; லீலாவிபூதியிலண்டங்கள்தானே அஸங்க்யாதங்களாயிறே யிருப்பது] என்று தீபப்ரகாசத்திலே ஜீயரருளிச்செய்கையாலே இவ்விபூதியில் கார்யரூபப்ரதேசத்தைப்பற்ற பரமாகாசத்தில் நித்யவிபூதிமும்மடங்காயிருக்கு மென்னவுமாம்;—, அன்றிக்கே ["దివి" இத்யப்ராக்ருதம் ஸ்த்தாநமுச்யதே, த்ரிபாத்த்வஞ்ச அப்ராக்ருதைர்ப்போக்ய போகோபகரண போகஸ்த்தாநவிசேஷைர்வா, பூஷணாஸ்த்ராதிரூபேண ஜகதந்தர்கதவஸ்த்வபிமாநிபிர்நித்யை: பகவதநுபவமாத்ரபரைச்ச நித்யஸித்தைர்

ஆ.—வத்ஸலனான தன்னுடைய ஸ்நேஹாக்ருஷ்டமான திருவுள்ளம், ஸங்கிஹித நித்யமுக்தர்பக்கல் பற்றற்று ஸவாஸநமாகக் குடிபோய், "[illegible]" "ஸஹைகாகீரமேத" என்று அநந்தகோடி நித்யஸூரிகளுடனிருந்தும்

ஸம்ஸாரிகள்பக்கலிலே திருவுள்ளம்குடிபோய், இவர்களைப்பிரிந்தா லாற்றமாட்டாதே, இவர்களோடேகலந்து பரிமாறுகைக்கு கரணகளேபரங்களைக் கொடுத்து,

ஜீ.—முக்தைச்சாத்ம பிர்வாஸம்ப்பவதி] என்று ச்ருதப்ரகாசிகையிலே பட்டரருளிச்செய்தபடியே அப்ராக்ருதமாயிருந்துள்ள போக்யவிசேஷங்கள் போகோபகரணவிசேஷங்கள் போகஸ்த்தாநவிசேஷங்களாகிறமூன்றம்சங்களோடே யிருக்கையாலேயாதல், அஸ்த்ரபூஷணாத்யாயத்தில்படியே பூஷணாஸ்த்ரா திரூபத்தாலே ஜகதந்தர்க்கத வஸ்த்வபிமானிகளான நித்யரும், கேவல பகவதநுபவபரராயிருக்கும் நித்யரும் முக்தருமா யிப்படி மூன்றம்சமாயிருக்கு மாத்மாக்களையுடைத்தாகையாலேயாதல் த்ரிபாத்தென்னவுமாம். ஆக விப்படி லீலாவிபூதியில் அத்யந்தவ்யாவ்ருத்தையாகையாலே நிரதிசயஸுகாவஹையான நித்யவிபூதியிலே, (பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க) நித்யமுக்தரோடே கூடியிருந்து வேறொன்றே நிரதிசயாநந்த ஜநகமான ஸ்வரூபரூபகுண விபூதிகளெல்லாவற்றையும், யுகபதேவாநுபவிக்கையாகிற பரிபூர்ணாநுபவம் அவிச்சிந்நமாய்ச்செல்லாநிற்கவென்கை; (அதுண்டதுருக்காட்டாதே) அதாவது - அப்போதப்போது வடிவிலே யிட்டுமாறினாப்போலே புதுக்கணித்து வரப்பண்ணுமந்தவநுபவமொன்றும் வடிவில்தோற்றாதே யென்கை; (தேசாந்தரகதனான புத்ரன்பக்கலிலே பித்ருஹ்ருதயம் கிடக்குமாபோலே, ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் குடிபோய்) அதாவது - அநேகபுத்ரர்களில் வைத்துக்கொண்டு ஒருவன் ஸ்வகர்மாநுகுணமாக தேசாந்தரமேபோனால், மற்றுண்டான புத்ரர்களும் தானுமாயிருந்து ஜீவியா நிற்கச்செய்தேயும், இவர்களோபாதி யவனும்கூடியிருந்து வாழுகைக்கிட்டுப்பிறந்து வைத்து இத்தை யொழிந்துகிடக்கிறானேயென்று, தேசாந்தரகதனான வந்தபுத்ரன்பக்கலிலே பிதாவினுடைய ஹ்ருதயம்கிடக்குமாபோலே, நித்யமுக்தரும் தானும் கூடியிருந்து வாழச்செய்தே, இப்போகத்தில் ப்ராப்தியுண்டாயிருக்க இச்சேதநனித்தை யிழந்துகிடப்பதேயென்று தேசாந்தரஸ்த்தரான ஸம்ஸாரிகள்பக்கலிலே திருவுள்ளம் நேராகப்போயென்கை; (இவர்களைப்பிரிந்தா லாற்றமாட்டாதே) அதாவது - ஸம்ஹ்ருதிஸமயத்தில் ப்ராப்தியுண்டாயிருக்க, நித்யவிபூதியிலே யிஸ்ஸம்ஸாரி சேதநரைப்பிரிந்து தானிருக்குமளவில், புத்ரபௌத்ராதிகளோடேஜீவித்தவன் அவர்களையிழந்து தனியனானப்போலே "[illegible]" "ஸஹைகாகீரமேத" என்கிறபடியே அவ்விழவு ஸஹிக்கமாட்டாதே யென்கை; ஸம்ஹ்ருதராய்க்கிடக்குமளவிலும் இவர்களைச்சரீரமாகக்கொண்டு தான் சரீரியாயிருக்கச்செய்தேயும், அத்தையொரு கலவியாகநினையாதே, கரணகளேபரஸஹிதரா யவர்கள் வர்த்திக்கிறகாலத்தில் அந்தராத்மதயா ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை நிர்வஹித்துக்கொண்டிருக்கை முதலானவற்றை இவர்களோட்டே கலவியாகவும், இவர்கள் கரணகளேபர விதுரராய் அசிதவிசேஷிதராய்க்கிடக்க தான்நித்யவிபூதியிலே யிருக்குமிருப்பை இவர்களைப்பிரிந்திருக்கிற விருப்பாகவும் நினைத்திருக்கையாலே (இவர்களைப்பிரிந்தால்) என்றருளிச்செய்கிறார்; (இவர்களோடேகலந்து பரிமாறுகைக்குக்கரணகளேபரங்களைக்கொடுத்து) அதாவது - அந்தராத்மதையாலு மவதாரார்ச்சாவ

ஆ.—இந்த ஸம்ஸாரிகளைப்பிரிந்து தனிப்பட்டு, ஆற்றல்மிக்க அடக்க மற்று ஆற்றமாட்டாதே கரணசூந்யராயொடுங்கின ஸம்ஸாரிகளோடே புரையறக்கலந்து பரிமாறுகைக் குபகரணங்களான கரணகளேபரங்களை தன் க்ருபையாலே கொடுத்து; ஸ்வாச்ரயணோபகரணமான வந்தகரணகளேபரங்களைக்கொண்டு, மோக்ஷோபாயாதிகளிலே தகையற வ்யாபரிக்கைக்கீடான சிச்சக்தி ப்ரவ்ருத்திசக்தி நிவ்ருத்திசக்தியென்கிற சக்திவிசேஷங்களையும் ஹிதைஷியாய்க்கொடுத்து, தச்சக்தி விசேஷயுக்தரான இவர்களுடைய நம்மைக்காணவேண்டா கண்காண ரக்ஷிக்கிறோமென்று யாம் ஸாபிலாஷராய் நிற்கில், எங்களை ரக்ஷித்தாயாகில் உனக்குள்ளாராணையென்று ஆணையிட்டு புறங்கையாலேயடித்து, "అహం మే" "அஹம்மே" என்று விலக்குவர்களென்று திருவுள்ளம்பற்றி "నసందృశే తిష్ఠతి రూపమస్య" "நஸந்த்ருசே திஷ்டதி ரூபமஸ்ய" "கட்கிலி" என்கிறபடியே இவர்களுடைய புறக்கணிக்கும் கண்ணுக்குத்தான் விஷயமாய்த் தோற்றாதபடி, அணைப்புண்கிறதன்னையு மணைக்கிறதாயையு மறியாதே உறங்குகிற ஸ்தநந்தய ப்ரஜையை, வத்ஸலையான தாய் முன்னேயணைக்கில் முலைநெருக்குப்பட்டு நோகுமென்று முதுகிலே மெள்ளவணைத்துக் கொண்டொருபடுக்கையிலே கிடக்குமாபோலே, ஸ்வபரஸ்வரூபத்தையறியாதே அநாதிமாயயாஸுப்தனான முக்தபத்தசேதநனைத்தானறிந்த ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தமே ரக்ஷணஹேதுவாக த்யஜிக்கமாட்டாதே, "య ఆత్మని తిష్ఠన్" "ய ஆத்மநி திஷ்டன்" என்று ஸ்வரூபத்தை யுள்ளும் புறம்புமணைத்துக்கொண்டு,

---

அவற்றைக்கொண்டு வ்யாபரிக்கைக்கீடான சக்திவிசேஷங்களையும் கொடுத்து, கண்காண நிற்கிலாணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத்தோற்றாதபடி, உறங்குகிறப்ரஜையை தாய் முதுகிலே யணைத்துக்கொண்டு

---

ஜீ.—தாரங்களாலும் இவர்களோடேகலந்து பரிமாறுகைக்குறுப்பாக "వైచిత్ర్యా దేహసంపత్తిః" "விசித்ராதேஹஸம்பத்தி:" இத்யாதிப்படியே ஸ்வசரணகமல ஸமாச்ரயணோபகரணமான கரணகளேபரங்களை தயமானமனுவாய்க்கொடுத்தென்கை; (அவற்றைக்கொண்டு வ்யாபரிக்கைக்கீடான சக்திவிசேஷங்களையும் கொடுத்து) அதாவது - அந்தகரணகளேபரங்களைக்கொண்டு மவற்றையறிந்து செய்யவேண்டுமவற்றைச்செய்து தவிரவேண்டுமவற்றைத்தவிர்த்து, இப்படி வ்யாபரிக்கைக்கீடான சிச்சக்தி ப்ரவ்ருத்திசக்தி நிவ்ருத்திசக்திகளாகிற சக்திவிசேஷங்களையும் கொடுத்தென்கை, (கண்காண நிற்கிலாணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத்தோற்றாதபடி) அதாவது - இத்தனையும்செய்து ஸ்வாமித்வப்ராப்தி தோற்றவிவர்கள்கண்ணுக்கு விஷயமாய் நிற்கில், "త్వం మే" "த்வம்மே" என்றால் ஸஹியாமல் "అహం మే" "அஹம்மே" என்றும் ஸ்வதந்த்ரராகையாலே, எங்கள்கண்முகப்பில் நீ யொருக்காலும் நிற்கக்கடவையல்லையென்று திருவாணையிட்டு நிஷேதிப்பர்களென்று நினைத்து, "న చక్షుషా పశ్యతి కశ్చనైనమ్" "நசக்ஷுஷா பச்யதி கச்சநைநம்" "கட்கிலி" என்கிறபடியே யிவர்கள் கண்ணுக்கொருக்காலும் விஷயமாகாதபடியென்கை; (உறங்குகிற ப்ரஜையைத்தாய்முதுகிலே யணைத்துக்கொண்டு கிடக்குமாபோலே தானறிந்தஸம்பந்தமே ஹேதுவாக வக வாயிலேயணைத்து) அதாவது - தன்னையும் தாயையு மறியாதே கிடந்துறங்குகிற ப்ரஜையை

ஆ.—அநுபவமாகிற வாழ்ச்சியில் ஆக்ரோசமாகிற துடர்ச்சி வ்யவஹார வெற்றிக்கு நன்றென்று திருவுள்ளம்பற்றி, "ధన్వానే భి)యమానాం బిభర్తి" "பர்த் தாஸக் ப்ரியமாணேபிபர்த்தி" என்கிறபடியே இவன் ஸத்தைகுலையாதபடி க்ஷணார்த்தமும்விடாதே தாரகனாய்க்கொண்டு, தார்யமானவிவன் ஸத்தையழியாதபடிநோக்கி, ஸதஸத்கர்மபலமான ஸ்வர்க்கநரகாதி ப்ரவேசாவஸ்த்தைகளிலு மிவர்களைவிடமாட்டாம லுடன்கேடனாய், தன் வாத்ஸல்யவிஷயமான விவர்கள் ஆத்மப்ரதிகூலஹேதுவான வஸத்கர்மங்களிலே ஸ்வதந்த்தசக்திகொண்டு ப்ரவர்த்திக்கும்போது பேகணிப்பர்களென்று வாத்ஸல்யத்தாலே மீட்கமாட்டாதே ருசியைப் பின்சென்று அஸத்கர்மாநுமதி தானத்தைப்பண்ணி "ఉదాసీనవదాసీనః" "உதாஸீநவதாஸீந:" என்று ஹிதப்ரவர்த்தகனாய்க்கொண்டு உதாஸீநனன்றிக்கே யிருக்கச்செய்தேயும் நியமநாதியோக்யதை யுண்டாயிருக்க உபேக்ஷித்திருக்கு முதாஸீநரைப்போலே தோற்றவிருந்து, ஸ்வரூபாநுரூபமான ருசியிலே மூட்டுகைக்காக ஸ்வரூப விருத்தாஸத்கர்ம ருசியினின்று மிவர்களை ஸவாஸநமாக

---

கிடக்குமாபோலே, தானறிந்தஸம்பந்தமே ஹேதுவாகவிடமாட்டாதே, பகவாயிலேயணைத்துக்கொண்டு, ஆட்சியில் துடர்ச்சி நன்றென்றுவிடாதே, ஸத்தையை நோக்கி யுடன்கேடனாய், இவர்களஸத்கர்மங்களிலே

ஜீ —வத்ஸலையானவள் தானறிந்தரக்ஷ்யரக்ஷகபாவஸம்பந்தமடியாக முதுகிலேயணைத்துக்கொண்டுகிடக்குமாபோலே, அநாதிமாயயாஸுப்தராய் ஸ்வபர ஸ்வரூபங்களிலொன்றையு மறியாமல்கிடக்கிற விச்சேதநரை, சேஷியான தானறிந்த ரக்ஷ்யரக்ஷகஸம்பந்தமே ஹேதுவாகவிட க்ஷமனன்றிக்கே, "య ఆత్మని తిష్ఠన్" "யஆத்மநிதிஷ்டந்" என்கிறபடியே அந்தராத்மத்வேந விவற்றை ஸ்பர்சித்துக்கொண்டென்கை; (ஆட்சியில் துடர்ச்சிநன்றென்று விடாதே ஸத்தையைநோக்கி) அதாவது-ஒருவனுடைமையை வேறொருவனபஹரித்தாளாநிற்க உடையவனுமவைத்துடைமையையிழந்தவன் தன்னதென்னுமிடம்தோற்றப்பலநாளும் துடர்ந்துபோந்தால் பின்பு வ்யவஹாரத்தில் விஜயஹேதுவாகாநிற்குமிறே, அப்படியே "అనుభవవిభవాత్" "அநுபவவிபவாத்" என்கிற சேதநருடைய ஆட்சியிலும் நம்மதென்னுமிடம்தோற்ற ஒருதலைப்பற்றிக்கொண்டு போருகிற துடர்ச்சி ப்ரபலமென்றுநினைத்து, அந்தராத்மதயாவஸ்த்திதனான தான் இவர்களையொருக்காலும் கைவிடாதே தாரகனாய்க்கொண்டு தார்யபூதரான விவர்கள் ஸத்தையழியாமல் நோக்கியென்கை; (உடன்கேடனாய்) அதாவது - இப்படி ஸத்தாதாரகதயா ஸ்வர்க்கநரகப்ரவேசாதி ஸர்வாவஸ்த்தையிலுமிவர்களுக்குத்துணையாய்ப்போருகை;(உடன்கேடன்) என்பது - இவன்கேடு தன் கேடாயிருக்குமவனையிறே. (இவர்களஸத்கர்மங்களிலே ப்ரவர்த்திக்கும்போது மீட்கமாட்டாதே யநுமதி தானத்தைப்பண்ணி யுதாஸீநரைப்போலேயிருந்து மீட்கைக்கிடம்பார்த்து) அதாவது- "ఆదావీశ్వరదత్తయైవపురుషః స్వాతంత్ర్యశక్త్యా స్వయం తత్తజ్జ్ఞానచికీర్షాప్రయత్నాన్ ఉత్పాదయన్ వర్తతే" "ஆதாவீச்வரதத்தயைவபுருஷ: ஸ்வாதந்த்ர்யசக்த்யாஸ்வயம் தத்தத்ஜ்ஞாநசிகீர்ஷாப்ரயத்நாந்யுத்பாதயந்வர்த்ததே" என்கிறபடியே அடியிலே தான்கொடுத்த ஜ்ஞாத்ருத்வரூப ஸ்வாதந்த்ர்யசக்தியாலே ஸ்வருச்யநுகுணமாக ப்ரவ்ருத்திகளைப்பண்ணிக்கொண்டு போருகைக்குயோக்யரான விச்சேதநர், துர்வாஸநாபலத்தாலே பாபகர்மங்களிலே

ஆ.— மீட்கைக்கு அபிஸந்தி விராமமாகிற விடம்பார்த்து, திரு
முன்னிலவிக்கிற விளக்கைத் திருடுகைக்குத் தூண்டுகைவணங்கி திரு
வடிகளில் திருவாபரணங்களை யபஹரிக்கை முதலான நன்மையென்று
பேரிடலாவதொருதீமையு மவர்கள்பக்கல் ஸர்வஜ்ஞனாயும் காணாதே,
ஸர்ப்பதஷ்டனான புத்ரனைக்கூர்ந்த சஸ்த்ரம்கொண்டு நெற்றியைக்
கொத்திப்பார்த்து, ரக்தப்பசைகாணாமல், பின்னையு மொதுங்கினப்ராண
னுண்டோ வென்னும் நசையாலே சுக்கிட்டூதியும் மருந்துவார்த்தும்
மந்த்ரிப்பித்து மொருவகையாலும் ப்ராணப்பசை காணாதொழிந்தால்,
இனி யஸாத்யமிழந்தோமென்றுபரிதபித்துக்கண்ணும் கண்ணீருமாய்த்
தலையிலேகைவைத்து மீளும்பிதாவைப்போலே, சப்தாதிவிஷய ஸர்ப்பத
ஷ்டனாய் அஹங்காராதிவிஷம் தலைமண்டையிட்டு மோஹித்து சைதந்ய
மூச்சற்று அஸத்கல்பனாய்க்கிடக்கிற ஸம்ஸாரிசேதநனுடைய முக்க்யகரண
மாகிற நெற்றியைக் கூர்ந்த சாஸ்த்ரசஸ்த்ரமுகத்தாலே உபதேசமாகிற
கொத்தைக்கொத்தி மீளுமோவென்றுபார்த்தும், தாத்பர்யோபதேசமா
கிற சுக்கிட்டூதியும், அவதாரரூபமாகிற பசுமருந்துவார்த்தும், ததீயாகார

---

ப்ரவர்த்திக்கும்போது மீட்கமாட்டாதே, யநுமதி தான
த்தைப்பண்ணி யுதாஸீநரைப்போலேயிருந்து, மீட்கை
க்கிடம்பார்த்து, நன்மையென்று பேரிடலாவதொரு

---

ஜீ.— ப்ரவர்த்திக்குமளவிலும், அந்தர்யாமியான தான் நினைத்தால்
மீட்கலாயிருக்கச்செய்தேயும், அப்படிசெய்யுமளவில் ஸ்வாஜ்ஞாரூபசாஸ்
த்ரவிநியோகமறுமென்னுமத்தைப்பற்றவும், ஸர்வமுக்திப்ரஸங்கம் வருமெ
ன்னுமத்தைப்பற்றவும் மீட்கமாட்டாதே யநுமதிதானத்தைப்பண்ணி
யும், உதாஸீநனன்றிக்கே யிருக்கச்செய்தே இவர்களென்பட்டால் நல்ல
தென்றிருக்கு முதாஸீநரைப்போலே யிருந்தும், அதில் நின்று மவர்க
ளை மீட்கைக்குறுப்பாகச் சொல்லிக்கொள்ளத்தக்கதொரு நன்மையாகிற
வவகாசம்பார்த்தென்கை ; (நன்மையென்று பேரிடலாவதொரு தீமையும்
காணாதே) அதாவது - இப்படி யிடம்பார்த்துப் போருமளவில் சாஸ்த்ர
மர்யாதாநுகுணமாகவாதல் தானறிந்ததாக வாரோபித்துக்கொண்டா
தல், இவர்களையஸத்கர்மத்தி னின்றும் மீட்கைக்கவகாசமா யிருப்பதொரு
நன்மை காணாதவளவன்றிக்கே, அவ்வஸத்கர்மங்கள் தன்னிலே நன்
மையென்று பேரிட்டுக் கொள்ளலாவதொரு தீமைதானுட்படக்காணப்
பெறாதேயென்கை ; (நன்மையென்று பேரிடலாவதொருதீமை) யாவது-
பரஹிம்ஸை செய்துகொண்டு திரியாநிற்கச்செய்தே, பகவத்பாகவத
விரோதிகளாயிருப்பாரை யாத்ருச்சிகமாக ஹிம்ஸிக்கை ; விஷயப்ரவ
ணனாய் பகவத்தாஸிகளைப் பின்பற்றிப் பலகாலம் கோயில்களிலே புக்குப்
புறப்படுகை ; வயல்தின்னபசுவைத்துடர்ந்தவாறே அதொருகோயிலை
வளையவருமாகி லத்தையடிக்கையிலுண்டான வாக்ரஹத்தாலே தானும்
வளையவருகை ; நிந்தார்த்தமாக திருநாமங்களைச் சொல்லுகை முதலா
னவை. (நெற்றியைக் கொத்திப்பார்த்தா லொருவழியாலும் பசைகாணா
தொழிந்தா லப்ராப்யமென்று கண்ணநீரோடே மீளுவது) அதாவது -ஸர்ப்
பதஷ்டராய் ம்ருதகல்பரானவர்களை மந்த்ராதிகளாலே யெழுப்புகைக்கு
ப்ராணஸ்திதி பரீக்ஷார்த்தமாக நெற்றியைக் கொத்திப்பார்த்தா
லொருப்ரகாரமும் ரக்தஸ்பர்சைகாணாதவளவில், இவ்விஷயம் நமக்கினி
கைபுகுகிறானென்றிராதே இழவோடே கைவாங்கும் பந்துக்களைப்போ
லே, நன்மைகாணாதவளவில்விடாதே நன்மையென்று பேரிடலாவதொரு

ஆ.—ஸ்பர்சத்தாலே மந்த்ரிப்பித்தும், ஒருவகையாலும் நெஞ்சில்பசைசந்து காட்டும் சேஷத்வஜ்ஞாநோதயமாகிற ப்ராணப்பசைகாணுதொழிந்தால், இனி நமக்குப்ராப்யமல்ல வஸ்துவிழுந்தோமென்றநுதபித்து "సంజాతబాష్పః" "ஸஞ்சாதபாஷ்பः" என்றுருவழிந்துருகின திருவுள்ள வெள்ளமான கண்ண நீரோடே, அவதாரம் விஷ்ப்ரயோஜநமாய், வந்தவழியே தன் வீட்டேறமீளுவது; மடங்கியு மாத்மவஸ்து சபலனுன தனக்கேறப்புறப்பூச் கான ·சிறிதுவிடம்பெற்றவளவிலே, இவ னவ்வூரிவ்வூரென்று பலவூரையு மெண்ணு நிற்க திருக்கோட்டியூர் திருக்கோளூரென்றுப்போலே இவன் சிலசொல்ல, "దేశోఽయంసర్వకామధుక్" "தேசோऽயம்ஸர்வகாமதுக்" என்று ஸர்வபுருஷார்த்தங்களுக்கு மேகஸாதநமான தன்னேற்றமு டைய வென்னூரைவாயாரச்சொன்னுயென்றும்; அவரிவரென்று பலரை யும் சொல்லாநிற்க, "திருப்பேர்நகரான்" "பேராயிரமுடையான்" என்றுப்போலே யிவன் சிலசொல்ல, "ధ్రువాణిఅస్యకీర్తయోజనాః" "த்ருவா ணோ அஸ்யகீர்யோஜநாஸः" என்று ஓராயிரமாயுலகேழளிக்கும் வீறு டைய நம்பேரை யெல்லாரும் கேழ்க்கச்சொன்னுயென்றும்; ஒரு ஸ்ரீவை ஷ்ணவரை இருவர் வழிபறிக்கவேணுமென்று முன்னும் பின்னும் சென்று ஒருவரையொருவர் கண்டால் சந்தித்ததென்றவரைப் பறியாமல் போக, "పశ్యన్నపిచర్తన్త దాసస్తే" "பச்யந்நபிசச்ருண்வந்தி தாஸஸ்தே

---

தீமையும் காணுதே, நெற்றியைக் கொத்திப்பார்த்தா லொருவழியாலும் பசைகாணுதொழிந்தால், அப்ரா ப்யமென்று கண்ண நீரோடேமீளுவது; தனக்கேற விடம்பெற்றவளவிலே, என் னூரைச்சொன்னுயென் பேரைச்சொன்னுயென்னடியாரைநோக்கினுயவர்கள்

---

ஜீ.—தீமைதானுண்டோ வென்னுமளவாகப் பார்த்தவளவிலும் ஒருப்ரகா ரத்தாலு மிவர்கள்பக்கல் பசைகாணுவிட்டால் இவ்விஷயம் நமக்குப்ரா பிக்கப்படுமதல்ல இத்தையிழந்தோமென்றழுது கண்ணநீரோடே மீளுவ தென்கை;—, அன்றிக்கே(நன்மையென்று பேரிடலாவதொருதீமை)என்கி றது "శ్యేనేనాభిచరన్యజేత" "ச்யேநேநாபிசரந்யஜேத" என்றுஸ்திக்யஜநக மாக விஹிதமாகையாலே நன்மையென்று பேரிடலாயிருக்குமதாய், பர ஹிம்ஸை யாகையாலே தீமையாயிருக்கிற ச்யேநவித்த்யநுஷ்டாநத்தை யாய், அங்கீகாரத்துக்குடலானதொரு நன்மைகாணுதவளன்றிக்கே, சாஸ்த்ரமர்யாதையாலே மேல்தானுகிலு மாக்கிக்கொள்ளுகைக்கு யோ க்யமான சாஸ்த்ராஸ்திக்யத்துக் குடலான வதுதானுமுட்பட விவர்கள் பக்கல் காணப்பெறுதே யென்னவுமாம்; அப்போதைக்கு (நெற்றியைக் கொத்திப்பார்த்தால்) இத்யாதியால் ஜ்ஞாதஸுக்ருதயோக்யதை யில் லாமையாலே அஜ்ஞாதஸுக்ருதந்தானுண்டோ வென்றுராய்ந்து அதுவு மில்லாமையாலே ஒருவழியாலு மங்கீகாரயோக்யதையற்று இழவோடே மீளும்படிசொல்லுகிறது; (தனக்கேற விடம்பெற்றவளவில்) அதாவது-இப் படி மீண்டாப்போலே மீண்டுவிடுகையன்றிக்கே இவர்களை யுஜ்ஜீவிப்பிக் கைக் கவகாசம்பார்த்துத்திரியும் தனக்கேறவவகாசம்பெற்ற வளவிலென் கை;(என்னூரைச்சொன்னுய்) இத்யாதி என்றுப்போலே (சிலவற்றையே றிட்டு) அதாவது - அவ்வூரிவ்வூரென்றிவன் பலவூர்களையும் சொல்லாநிற்க, கோயில் திருமலைமுதலாகத்தானுகந்தவூர்களிலே யேதேனுமொன்றைச் சொன்னுலம்மாத்ரமே பற்றுசாக என்னுடையவூரைச் சொன்னுயென்றும்;

ஆ.—ஷாம்மஹாமுநே" என்று தர்சநீயரான நம்மடியாரைக்கண்டு பறியாமல் நோக்கினாயென்றும்; தன் தோட்டம் கழனிக்குப் பாய்கிற மடையிலே வழிநடந்து விடாய்த்தாரொரு ஸ்ரீ வைஷ்ணவர் ஸ்ரீபாதத்தை நனைத்தல் கொப்பளித்தல்செய்ய, "తదీయారాధనంపరమ్" "పూజనీయావిశేషతః" "ததீயாராதநம்பரம்" "பூஜநீயாவிசேஷதঃ" என்று நம்மைப்பற்றவும் பூஜ்யரான நம்மடியார் வழியில்விடாயை நாமறியத்தீர்த்தா யென்றும்; தனக்காகவிரிவுண்டாகக்கட்டின இறப்புவாரத்தே ஒருநாளொரு ஸ்ரீவைஷ்ணவ ரொதுங்கிப்போக, "ప్రవేశయిత్వాస్వగృహమ్" "ப்ரவேசயித்வாஸ்வக்ருஹம்" என்று ப்ரார்த்தித்துக்கொண்டு புகரவேண்டுமவர் வரக் கண்ணழியாமலொதுங்க நிழலைப்பண்ணிக்கொடுத்தாயென்றும்; இது முதலாகவவனறியாதன சிலவற்றை அவன் தலையிலேயேறிட்டு, அவனகப்பட்டு நிற்கும்படி மடிமாங்காயிட்டு, நம்முடையவனென்று பிடித்து, பொன்னில் அதிலுப்த்தனான பொன்வாணியன் ஆரேனும் பரீக்ஷிக்கைக்குக்காட்டின பொன்னை ஒன்றிரண்டுரையிலே நெடும்பொன்க்ரஸிக்கு முரைகல்லிலே உடையவனறியாதபடி மிஞ்சவுரைத்து, ஸூக்ஷ்மகநககண க்ராஹகத்வமுள்ள த்ரவத்ரவ்ய விசேஷமான மெழுகாலே உரைகல்லிலொன்றும் சேஷியாதபடி துவட்டியெடுத்துருக்கி, கால் பொன்னுயிற்று கழஞ்சுபொன்னுயிற்றென்று மல்பமல்பமாகச் சிலதிரட்டுமாபோலே, ஆத்மலுப்த்தனான ஸர்வேச்வரனும் அநாதியேபிடித்து அந்தாதியாய் வருகிறஜந்மபரம்பரைகள்தோறும் என்னடியாரை நோக்கினாயென்கிற யாத்ருச்சிகம்,

---

விடாயைத்தீர்த்தா யவர்களுக்கொதுங்க நிழலைக்கொடுத்தா யென்றாப்போலே சிலவற்றை யேறிட்டு, மடிமாங்காயிட்டு, பொன்வாணியன் பொன்னை உரைகல்லிலே யுரைத்து மெழுகாலேயெடுத்து கால்கழஞ் சென்று திரட்டுமாபோலே, ஜந்மபரம்பரைகள் தோறும்,

---

ஜீ.—அவரிவரென்றாப்போலே சொல்லாநிற்க, ஒருவன்பேரைச் சொல்லுகிறதாகதிருநாமங்களிலே யொன்றைச்சொன்னால் அவ்வளவைக்கொண்டு என்பேரைச்சொன்னாயென்றும்; சிலபாகவதர்காட்டிலேவழிபோகாநிற்க அவர்களை ஹிம்ஸித்து கையிலுள்ள தபஹரிப்பதாக வழிபறிக்காரருத்யோகிக்கிறவளவிலே, ஸ்வகார்யத்திலே போகிறானொருசேவகன் அவர்கள்பின்னே தோன்ற, அவனை தத்ரக்ஷணார்த்தமாக வருகிறானாக நினைத்து அவர்கள் பயப்பட்டுப்பறியாதொழிய, அதுபற்றாசாக அந்தசேவகனையென்னடியாரை நோக்கினாயென்றும்; ஒருவன் கர்மகாலத்திலே தன் வயல்நீயப்புக்கவாறே நீருள்ளவிடத்தில் நின்று வயலிலேவர நெடுந்தூரத்திலே துலையிட்டிறையாநிற்க, மருபூமியிலே நெடுந்தூரம்நடந்து இத்தனை ஜலம்பெறில் நம்ப்ராணன் தரிக்குமென்னும்படி யிளைத்துவருகிறார்கள் சிலபாகவதர் அவனறியாமலந்நீரிலே தங்கள் ஸ்ரீபாதம் முதலானவற்றை விளக்கி யிளைப்பாறிப்போனால் அதடியாக யென்னடியார் விடாயைத்தீர்த்தாயென்றும்; ஒருவன் தனக்கு சூதுசதுரங்கம்போருகைக்கும் காற்றபேக்ஷிதமானபோது வந்திருக்கைக்கும் இவற்றுக்காகப் புறந்திண்ணைகட்டிவைக்க, வர்ஷபீடிதரா யங்கேயொதுங்குவோமென்று வருகிறார் சிலபாகவத ரங்கேயொதுங்கியிருந்துபோக, தாவந்மாத்ரத்தாலே யென்னடியார்க்கொதுங்க நிழலைக்கொடுத்தாயென்றும்; இப்புடைகளிலே சிலவற்றையவர்களறியாதிருக்கத்தானே யாரோபித்தென்கை; (மடிமாங்காயிடுகை) யாவது -

ஆ.—என்பேரைச்சொன்னாயென்கிற ப்ராஸங்கிகம், விடாய்தீர்க்கையொதுங்க நிழல் கொடுக்கையாகிற வாநுஷங்கிகமென்கிற செய்தவனறியாமல் தானறிந்ததேயாய்ப்பார்க்கில் பசையற்ற ஸுக்ருதவிசேஷங்களை சாஸ்த்ராதிகளாலன்றிக்கே தானேகல்பித்து, கல்பிக்கிற தானேகல்ப்யங்களானவவற்றை அல்பமநேகமாம்படி யொன்றுபத்தாக்கி மேல் மேலன நடத்திக்கொண்டுபோரும்; ஸ்ப்ருஹணீயமான வாத்மவஸ்துவை தர்மஸாதநமாம் சரீரமாகிற வுரைகல்லிலேபற்றி ஸம்ஸரிக்கையாகிற வுரையுரைத்து, க்ருபார்த்ரசித்தமாகிற மெழுகாலே யாத்ருச்சிக ஸுக்ருதமாகிற பொற்கள் பற்றையெடுத்து, தன் த்ருஷ்ணாவிசேஷத்தாலே யுருக்கி, ஒவ்வொரு ஸுக்ருதலவமாகத்தானே தானேபெருக்கி, அதுபற்றாசாக விவனைப்பெற்று வாழுமயலுமிறே ஆக ஸ்வாதந்த்ர்ய வெழுச்சியையடக்கி யாளவல்லக்ருபாகுணம் பூர்ணாநுபவத்தைப்போலி வழிக்கும் பரதுஃக்கத்தை ஸ்மரிப்பித்து அவர்களுக்கு வேண்டுவதெல்லாம் செய்வித்து அவர்களைக் கைக்கொள்ளுகைக்குப் பற்றாசாக சிலவற்றைத் தானேகல்பிக்கும்படி பண்ணி அவனைப்படாதது படுத்துமென்றபடி. சேதநனறியாததொன்றையிடுக்கி அங்கீகரிக்குமளவுகொண்டு இத்தையிழுகியெடுத்தது நிர்ஹேதுகமென்றருளிச்செய்வர்.

௩௮௨. இந்த யாத்ருச்சிக ஸுக்ருதம் பலஹேதுவாகக்கண்டவிடமுண்டோவென்ன, லலிதாசரிதாதிகளிலே யாத்ருச்சிகஸுக்ருதம்

---

யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகமாநுஷங்கிகமென்கிற ஸுக்ருதவிசேஷங்களைக் கற்பித்துக்கொண்டு, தானே யவற்றை யொன்றுபத்தாக்கி நடத்திக்கொண்டுபோரும்.

௩௮௨. லலிதாசரிதாதிகளிலே

---

ஜீ.—மாங்காயிடாமல் வெறுமனே வழிபோகிறவன் மடியிலே மாங்காயை மறைத்துக்கொண்டு சென்றிட்டு மாங்காய் களவுகண்டாயென்கை; இது வலிய வாரோபிக்குமதுக்கு த்ருஷ்டாந்தம்; பொன்வாணியன், இத்யாதி, ஒன்றுபத்தாக்கி நடத்திக்கொண்டு போரும்) அதாவது - பொன்வாணியம் செய்வானொருவன் ஆரேனும் பரீக்ஷிக்கைக்குக் காட்டினபொன்னை உரைகல்லிலேயுரைத்து ஒன்றும்சேராதபடி மெழுகாலே யொத்தியெடுத்து, காள்வட்டத்துடனே கால்பொன்னாயிற்று கழஞ்சுபொன்னாயிற்று என்றுதிரட்டுமாபோலே, ஒருஜந்மமிரண்டு ஜந்மத்தளவன்றிக்கே சேதநருடைய ஜந்மபரம்பரைகள் தோறும், விடாயைத்தீர்த்தா யொதுங்க நிழலைக்கொடுத்தாய் என்றாப்போலே யுண்டாக்கும் யாத்ருச்சிகம், ஊரைச்சொன்னாய் பேரைச்சொன்னாய் என்றாப்போலேவரும்ப்ராஸங்கிகம், அடியாரைநோக்கினாய் யென்றாப்போலே யுண்டாமாநுஷங்கிகமென்கிற ஸுக்ருதவிசேஷங்கள், சாஸ்த்ரவிஹிதமும் சேதநவிதிதமுமன்றியிருக்கத்தானேகல்பித்தும்; கல்பிதமானவைதன்னை யொன்றையநேகமாக்கி நடத்திக்கொண்டு போருமென்கை.

௩௮௨. இவ்வஜ்ஞாத ஸுக்ருதமடியாக ஈச்வரனங்கீகரிக்குமென்னுமது காணலாமிடமுண்டோவென்ன, (லலிதாசரிதாதிகளிலே இவ்வர்த்தம் சுருக்கமொழியக்காணலாம்) என்கிறார். அதாவது - விதர்ப்பராஜஸுதையாய் காசீராஜமஹிஷியான லலிதை, ஸபத்நிகளான முன்னூறு ஸ்த்ரீகளில்காட்டில் ஆபிரூப்ய மதிவச்யபர்த்ருமத்தை தேஹதேஜஸ்ஸு ஸர்வகுணஸம்பத்தி இவையுடையளாய், அஹோராத்ர விபாகமற

ஆ.—பலிக்குமென்னுமிவ்வர்த்தம்அதிவிசதமாம்படி சுருக்கமொழிய விஸ்தரேணக் காணலாமென்கிறார்; காசிராஜனுடைய சாருவர்மாவினுடைய மஹிஷியான லலிதையை, நாயகனுக்கத்யந்தாபிமதையுமாய் அபிரூபையுமாய் தீபாரோபணகைங்கர்ய நிரதையுமாய்ப் போருகிறவிதுக்குக் காரணமென்னென்று ஸபத்நிகள்கேட்க, தேவி யாற்றங்கரையிலே எம்பெருமான் கோயிலிலே ஸௌவீரராஜபுரோஹிதனான மைத்ரேயனேற்றின திருவிளக்கை அங்கேவர்த்திக்கிற பெண்ணெலியான தான் கவ்வாநிற்க,

## இவ்வர்த்தம் சுருக்கமொழியக்காணலாம்.

ஜீ.—பகவத்ஸந்நிதியிலே அநேகம் திருவிளக்கேற்றி அதிலே நிரதையாய்ப்போருகிறபடியைக்கண்டு, உனக்கிவ்வாபிரூப்யாதிகளுக்கும் தீபாரோபண கைங்கர்யப்ராவண்யத்துக்கும் காரணமென்னென்று ஸபத்நிகள் கேட்க, அவள் ஜாதிஸ்ம்ருதியோடே பிறந்தவளாகையாலே "తదేషా కథయామ్యేతద్యద్వృత్తం మమశోభనాః" "ததேஷா கதயாம்யேதத்யத்வ்ருத்தம் மமசோபநா:" என்றுதுடங்கி. "సౌవీరరాజస్య పురా మైత్రేయోఽభూత్పురోహితః । తేనచాయతనం విష్ణోః కారితం దేవికాతటే ॥ అహన్యహని శుశ్రూషాం పుష్పధూపాంబులేపనైః । దీపదానాదిభిశ్చైవ చక్రే తత్ర వసన్ ద్విజః" "ஸௌவீரராஜஸ்யபுரா மைத்ரேயோऽபூத்புரோஹித: । தேநசாயதநம்விஷ்ணோ: காரிதம்தேவிகாதடே ॥ அஹந்யஹநிசுச்ரூஷாம் புஷ்பதூபாம்புலேபநை: । தீபதாநாதிபிச்சைவ சக்ரேதத்ர வஸந்த்விஜ:" என்று ஸௌவீரராஜ புரோஹிதனான மைத்ரேயன், தேவி யாற்றங்கரையிலே ஓரெம்பெருமான் கோயிலையுண்டாக்கி, அங்கே நாள்தோறும் ஸகல கைங்கர்யங்களையும் பண்ணி வர்த்தித்தபடியையும்; "కార్తికే దీపితో దీప ఉపాత్తస్తేన చైకదా । ఆసీన్నిర్వాణభూయిష్ఠో దేవస్య పురతో నిశి ॥ దేవతాయతనే చాసం తత్రాహమపి మూషికా । ప్రదీపవర్తిగ్రహణే కృతబుద్ధిర్వరాననాః ॥ గృహీతా చ మయా వర్తిః పృషదంశోఽరరావ చ । నష్టా చాహం తతస్తస్య మార్జాలస్య భయాతురా ॥ వక్త్రప్రాన్తేన నశ్యన్త్యా స దీపః ప్రేరితో మయా । జజ్వాల పూర్వవద్దీప్త్యా తస్మిన్నాయతనే పునః" "கார்த்திகேதீபிதோதீப உபாத்தஸ்தேநசைகதா । ஆஸீந்நிர்வாணபூயிஷ்டோ தேவஸ்யபுரதோநிசி ॥ தேவதாயதநேசாஸம் தத்ராஹமபிமூஷிகா । ப்ரதீபவர்த்திக்ரஹணே க்ருதபுத்திர்வராநநா: ॥ க்ருஹீதாசமயாவர்த்தி: ப்ருஷதம்சோரராவச । நஷ்டாசாஹம்ததஸ்தஸ்ய மார்ஜாலஸ்யபயாதுரா ॥ வக்த்ரப்ராந்தேநநச்யந்த்யா ஸதீப:ப்ரேரிதோமயா । ஜஜ்வாலபூர்வவத்தீப்த்யா தஸ்மிந்நாயதநேபுந:" என்று கார்த்திகைமாஸத்திலே அவனந்தவெம்பெருமான் ஸந்நிதியிலேற்றின திருவிளக்கவியத் தேடுகிறவளவிலே, அக்கோயிலிலே ஒருபெண்ணெலியாய்க்கொண்டு வர்த்திக்கிற தான் அத்திருவிளக்கில் திரியைக்கவ்விக்கொண்டு போவதாகநினைத்துச் சென்று கவ்வினவளவிலே, ஒருபூனைகத்தின குரலைக்கேட்டஞ்சி மரணத்தை யடையாநிற்க, அப்போதுபயத்தாலே நடுங்குகிற தன் மூஞ்சியாலே யத்திரிதூண்டப்பட்டு முன்புபோலே யத்திருவிளக்கு பளபளத்தெரிந்தபடியையும், "మృతా చాహం తతో జాతా వైదర్భీ రాజకన్యకా । జాతిస్మరా కాన్తిమతీ భవతీనాం పరాగుణైః" "ம்ருதாசாஹம்ததோஜாதா வைதர்ப்பீராஜகந்யகா । ஜாதிஸ்மராகாந்திமதீ பவதீநாம்பராகுணை:" என்றநந்தரம் தான் மரித்து விதர்ப்பராஜனுக்கு புத்ரியாய் ஜாதிஸ்ம்ருத்யாதிகளோடே பிறந்தபடியையும், "ఏష ప్రభావో దీపస్య కార్తికే మాసి శోభనాః । దత్తస్య విష్ణ్వాయతనే యస్యేయం వ్యుష్టిరుత్తమా ॥ అసఙ్కల్పితమప్యస్య ప్రేరణం యత్కృతం మయా । విష్ణ్వాయతనదీపస్య తస్యైతద్భుజ్యతే ఫలమ్ ॥

ஆ.—ஒருபூனைவந்து என்கழுத்தைக் கவ்வி ஏங்கிச்சாகிறவென்கடுங்குகிற மூஞ்சி அத்திரியைவாங்கி அவிக்கிறவிளக்குபளபளத்தெரிய, அதின் பலமாகவிந்தன்மைகளெல்லாமுண்டாயிற்றென்று அவர்களுக்குலலிதைசொன்னாளென்கிற லலிதாசரிதத்திலும், "దేవతాయతనే చాసం తత్రాహమమూషికా । ప్రదీపవర్తిహరణే కృతబుద్ధిర్వరాననాః" "தேவதாயதநேசாஸம் தத்ராஹமபிமூஷிகா । ப்ரதீபவர்த்திஹரணே க்ருதபுத்திர்வராநநா:" என்றித்யாதியால் இவ்வர்த்தம் விஸ்தரேணக்காணலாமிறே. ஆதி சப்தத்துக்கு ஸுவ்ரதோபாக்யானத்தையு மருளிச்செய்வர், தத்த்வவித்தானவொரு ப்ராஹ்மணன் புத்ரியானஸுவ்ரதை மாதாபித்ருவியோகத்தாலே ப்ரலாபிக்க, ஒருப்ராஹ்மண வேஷத்தைக்கொண்டு தர்மராஜன் நீசோகிக்கவேண்டா இதுனக்கு பூர்வார்ஜிதபலம்காண், நீ பூர்வஜந்மத்திலே ஸுசந்தரியென்பாளொருவேச்யை,உன்னுடன் ஸம்ஸர்க்கித்துக்கொண்டிருக்கிற

ஜீ.—తతో జాతిస్మృతిర్జన్మ మానుష్యం శోభనం వపుః। ఐశ్వర్యం పతిత్వే సర్వాసాం కిం పునర్దీపదాయినామ్" "ஏஷப்ரபாவோதீபஸ்ய கார்த்திகேமாஸிசோபந:। தத்தஸ்யவிஷ்ணவாயதநேயஸ்யேயம்வ்யுஷ்டிருத்தமா ॥ அஸங்கல்பிதமப்யஸ்ய ப்ரேரணம்யத்க்ருதம்மயா । விஷ்ணவாயதநதீபஸ்ய தஸ்யைதத்புஜ்யதேபலம் ॥ ததோஜாதிஸ்ம்ருதிர்ஜந்ம மாநுஷ்யம்சோபநம்வபு: । வச்யம்பதிர்மேஸர்வாஸாம் கிம்புநர்தீபதாயிநாம்" என்றந்த வஜ்ஞாதஸுக்ருதபலமாக தனக்கிவ்வேற்றங்களெல்லா முண்டானபடியையும் சொன்னாளென்று ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலே லலிதாசரிதம் விஸ்தரேணசொல்லப்பட்டதிறே. இனி ஆதிசப்தத்தாலே தத்த்வவித்தாயிருப்பானொருப்ராஹ்மணனுடைய புத்ரியானஸுவ்ரதை, அதிபால்யத்திலே மாத்ருஹீனையாய் அது தோற்றுதபடி பரமதயாளுவான பிதா வர்த்தித்துக்கொண்டுபோர வளர்ந்து, இனியொருவர்கையிலே ப்ரதாநம்பண்ண ப்ராப்தமென்னுமளவிலே, அந்த பிதாவும் மரிக்கையாலே யதிவசோகார்த்தையாய், "యేనసంవర్ధితా బాలా యేనాస్మి పరిరక్షితా । తేనపిత్రా వియుక్తాహం నజీవేయం కథఞ్చన ॥ నద్యాం వా పతిష్యామి సమిద్ధే వాహుతాశనే । పర్వతాద్వా పతిష్యామి పితృహీనా నిరాశ్రయా" "யேநஸம்வர்த்திதாபாலா யேநாஸ்மிபரிரக்ஷிதா । தேநபித்ராவியுக்தாஹம் நஜீவேயம்கதஞ்சந ॥ நத்யாம்வாநிபதிஷ்யாமி ஸமித்தேவாஹுதாசநே । பர்வதாத்வாபதிஷ்யாமி பித்ருஹீநாநிராச்ரயா" என்று தேஹத்யாகோத்யுக்தையான வளவிலே "అగస్త్యకరుణావిష్టో యమస్సర్వహితే రతః । స విప్రో బ్రాహ్మణో భూత్వా ప్రావాచేదం వచస్తథా" "ஆகஸ்த்யகருணாவிஷ்டோ யமஸ்ஸர்வஹிதேரத: । ஸ்தவிரோப்ராஹ்மணோபூத்வா ப்ராவாசேதம்வசஸ்ததா" என்கிறபடியே ஸர்வப்ராணிகளுடையவும் ஹிதத்திலே நிரதனாயிருக்கும் யமன், க்ருபாவிஷ்டனாயொரு வ்ருத்தப்ராஹ்மணவேஷத்தைக்கொண்டுவந்து, "అలం బాలే విశాలాక్షి రోదనేనాతివిహ్వలే । నభూయః ప్రాప్యతే తాత స్తస్మాన్నార్హసి శోచితుమ్" "அலம்பாலேவிசாலாக்ஷி ரோதநேநாதிவிஹ்வலே। நபூய:ப்ராப்யதேதாதஸ்தஸ்மாந்நார்ஹஸி சோசிதும்" இத்யாதியாலே யிவளுடைய சோகாபநோதநத்தைப்பண்ணி "తస్మాత్త్వం దుఃఖముత్సృజ్య శ్రోతుమర్హసి సువ్రతే । పితృభ్యాం విప్రయోగోయం యేనాభూత్కర్మణా తవ" "தஸ்மாத்த்வம் து:க்கமுத்ஸ்ருஜ்யச்ரோதுமர்ஹஸிஸுவ்ரதே। பித்ருப்யாம்விப்ரயோகோயம் யேநாபூத்கர்மணாதவ" என்று ஆகையாலுன்னுடைய து:க்கத்தைவிட்டு இந்த மாதாபித்ருவியோகம் உன்னுடைய யாதொருகர்மத்தாலே யுண்டாயிற்று அத்

ஆ.—ப்ராஹ்மணபுத்ரனை மற்றொருவன் ஹிம்ஸிக்க, அவனுடைய மாதாபிதாக்கள்புத்ரனைக்கொல்லுவித்த நீ இனியொருஜந்மத்தில்தாயையும் தகப்பனையுமிழந்து தபிப்பாயென்றுசபிக்க, அத்தாலே காணுனக்கிந்தசோகம் வந்ததென்ன, அந்தபாபியான நானுத்தமஜந்மத்திலேபிறக்கைக்குக் காரணமென்னென்ன, உன் வாசல் திண்ணையிலே யொதுங்கினவொரு ஸ்ரீவைஷ்ணவனைப் பாடிகாப்பார் கள்ளனென்று கட்டாநிற்க, நீ வந்துஅந்தக் கட்டுவிடுவித்து அவரை யுன் அகத்திலேகொண்டுபுக்கு ஆச்வாஸிப்பித்தாய், அத்தாலே யிதுனக் குண்டாயிற்றதென்றுசொல்லி யவன் போக, "వేశ్యాపాపసమాచారా పరద్రవ్యాపహారిణీ । విష్ణుభక్తంసమాశ్వాస్య విముక్తాకర్మబన్ధనైః"

---

ஜீ.—தைச்சொல்லக்கேளென்று தான்சொல்லி, "పురాత్వంసున్దరీనామ వేశ్యాపరమసున్దరీ। నృత్తగీతాదినిపుణా వీణావేణువిచక్షణా" "புராத்வம்ஸுந்தரீநாம வேச்யாபரமஸுந்தரீ। ந்ருத்தகீதாதிநிபுணா வீணாவேணுவிசக்ஷணா" என்று துடங்கி நீ பூர்வஜந்மத்தில் ஸுந்தரியென்பாளொருவேச்யை, உன்னாலேவசீக்ருதனாயுன்னுடனே ஸம்ஸர்கித்துப் போருவானொரு ப்ராஹ்மணபுத்ரனை உன் நிமித்தமாக ஸ்பர்த்தையாலே ஒரு சூத்ரன்வதிக்க, அவனுடைய மாதாபிதாக்கள் எங்கள்புத்ரனைக் கொல்லுவித்த நீ இனியொருஜந்மத்தில் மாதாபிதாக்களை யிழந்து மறுகிப்பரிதபிப்பாயென்று சபித்தபடியாலேகாணுனக்கிந்த சோகம்வந்ததென்ன, ஆனாலிந்தபாபியான நானுத்தமஜந்மத்திலே பிறக்கைக்கு ஹேதுவென்னென்று கேட்க "శ్రుణుతస్యమహాప్రాజ్ఞే నిమిత్తఙ్గతతోమమ। యేనత్వంబ్రాహ్మణస్యాస్య కులేజాతామహాత్మనః" "ச்ருணுதஸ்யமஹாப்ராஜ்ஞே நிமித்தங்கததோமம। யேநத்வம்ப்ராஹ்மணஸ்யாஸ்ய குலேஜாதாமஹாத்மந:" என்றுதுடங்கி ஜ்ஞாநாதிகனாயொன்றிலும்பற்றற்று ஸர்வத்ர ஸமதர்சியாய் பகவத்த்யாநபரனாய் க்ராமைகராத்ரந்யாயத்தாலே யெங்கும் ஸஞ்சரிப்பானொரு பாகவதன் ஒரு ராத்ரி யுன்வாசல் புறத்திண்ணையிலே யொதுங்கினவளவிலே, தலாரிக்காரரவனைக்கள்ளனென்று பிடித்துக்கட்ட, அவ்வளவிலே நீயோடிச்சென்று அக்கட்டைவிடுவித்து அந்தபாகவதனை உன் க்ருஹத்திலேகொண்டுபுக்காச்வஸிப்பித்தாய், அத்தாலே இதுனக்குண்டாயிற்றென்று இதிஹாஸஸமுச்சயத்திலே சொல்லப்பட்ட ஸுவ்ரதோபாக்யாநமும்; இன்னமுமொருஸ்த்ரீ யமபடராலே யத்யந்த பீடிதையாய் ஆகாசத்திலே ரக்ஷகாபேக்ஷதோற்றக் கூப்பிட்டுக்கொண்டு வாராநிற்க, அச்வத்ததீர்த்தத்திலே சிரகாலம் தபஸ்ஸுபண்ணியிருந்த மாதலி அத்தைக்கண்டு க்ருபைபண்ணி தானொருநாள் செய்ததப:பலத்தை யவளுக்குக்கொடுக்க, அப்போதே யமபடரும் பந்துபூதராய் யாம்யமார்க்கமும் ஸுகோத்தரமாய் யாதநாசரீரமும்போய் விலக்ஷணசரீரமாய் இவளையும்கொண்டு அவர்கள் யமஸந்நிதியிலே சென்றவளவில் "పితేవ ధర్మరాజోఽభూత్తస్యాస్తత్ప్రియదర్శనః। సాన్త్వయన్సమహాతేజా వ్యాజహారచతాంప్రతి" "பிதேவதர்மராஜோऽபூத்தஸ்யாஸ்தத்ப்ரியதர்சந:। ஸாந்த்வயந்ஸமஹாதேஜா வ்யாஜஹாரசதாம்ப்ரதி" என்று பித்ருவத்ப்ரஸந்நவதநனாய் இவளைக்குறித்து இன்சொல்லுச்சொல்லி யமன் "భద్రేత్వయాసుష్ఠుకృతం నకిఞ్చిదిహవిద్యతే। ఇతోద్వాదశజన్మాన్తే త్వాంకశ్చిత్పుణ్యఆవిశత్ ॥ విష్ణుభక్తోనివాసార్థం రాత్ర్యాంతుతవవేశ్మని। తత్సన్నిధానపభావ స్తవసాధుసమాగమః ॥ సాహివైబ్రహ్మవిదుషీ శ్రీమద్రఙ్గముపాశ్రితా। తత్రతీర్థోత్తమం శ్రీమద్వశ్వత్థంనామసంశ్రితా ॥ ధర్మజ్ఞాధర్మపరమా యస్యాస్తేసఙ్గమోఽభవత్" "பத்ரேத்வயா ஸுஷ்ட்டுக்ருதம் நகிஞ்சிதிஹவித்யதே। இதோத்வாதசஜந்மாந்தே த்வாம்

ஆ.—"வேச்யாபாபஸமாசாரா பரத்ரவ்யாபஹாரிணீ। விஷ்ணுபக்தம்ஸமாச்வாஸ்ய விமுக்தாகர்மபந்தனை:" என்றந்த வஜ்ஞாதஸுக்ருதமே ஹேதுவாக முக்தையாளென்றதிறே ஸௌவ்ரதோபாக்யானத்திலே. உபயாக்யானத்திலும் ஸாதநபுத்தியாலந்தபலப்ராப்தியொக்கும்.

௩௮௩. இத்தை நிர்ஹேதுகமென்பார் மந்தாதிகாரிக ளென்கிறார், (அஜ்ஞர்) இத்யாதியால். ஸ்வயத்நகந்தாஸஹஸ்வபாரதந்த்ர்யத்திலஜ்ஞரான மநுஷ்யர்கள், இந்தயாத்ருச்சிகாதிகளை வாளாதருகையாகிற நிர்ஹேதுக மென்றிருப்பர்கள்.—, அன்றியே (வாளார்) என்று பாடமாய் வாள் வலியாகிற ஸ்வசக்தியாலே இத்தைப்பெற்றோமென் றிருப்பர்கள் என்றும் யோஜிப்பர்கள்.

---

௩௮௩. அஜ்ஞரான மநுஷ்யர்கள் வாளாதந்தா னென்றிருப்பர்கள்.

ஜீ.—கச்சித்ஸித்தஆவிசத்॥ விஷ்ணுபக்தோநிவாஸார்த்தம் ராத்ர்யாம்துதவவேச்மநி। தத்ஸந்நிதாநப்ரபவ ஸ்தவஸாதுஸமாகம:॥ ஸாஹிவைப்ரஹ்மவிதுஷீ ஸ்ரீமத்ரங்கமுபாச்ரிதா। தத்ரதீர்த்தோத்தமம் ஸ்ரீமதச்வத்தம் நாமஸம்ச்ரிதா॥ தர்மஜ்ஞாதர்மபரமா யஸ்யாஸ்தேஸங்கமோஉபவத்" என்று மாதலியினுடைய வங்கீகாரமுனக்கு வருகைக்குறுப்பாக நீ யறியச்செய்ததொரு நன்மையில்லை; இஜ்ஜந்மத்துக்கு பன்னிரண்டாம்ஜந்மத்திலே யொருராத்ரி யுன்னுடைய க்ருஹத்திலே தங்கிப்போகைக்காக ஒருபாகவதன்வந்துன்னைக்கிட்டி யிருந்துபோனான், தத்ஸந்நிதாநத்தாலே யுண்டானதுகா ணுனக்கிந்தஸாதுஸமாகமமென்று முன்பே யுண்டானதோ ரஜ்ஞாதஸுக்ருதத்தை இவள்பேற்றுக்கடியாகச் சொன்னானென்கிற காருடபுராணத்திலே கோயில் மாஹாத்ம்யத்தில் கதையும் முதலானவற்றைச்சொல்லுகிறது. (சுருக்கமொழியக்காணலாம்) என்றது-விஸ்தரேணக்காணலா மென்றபடி. இவ்வஜ்ஞாத ஸுக்ருதங்களடியான பகவத்கடாக்ஷமே இவர்களுக்கிவ்வோபலங்கள் வருகைக்கு ஹேதுவாகையாலே அஜ்ஞாத ஸுக்ருதங்களைப்பற்றாசாகக்கொண்டு ஈச்வரனங்கீகரிக்குமென்னுமிதுக் கிவை யுதாஹரணமாகலாமிறே.

௩௮௩. ஆக ஸர்வேச்வரன் தந்நிர்ஹேதுக க்ருபையாலே ஸம்ஸாரி சேதநரை யுஜ்ஜீவிப்பிக்கையிலே யுத்யுக்தனாய், கரணகளேபர ப்ரதாநாதிகளைப்பண்ணி ஸ்வாஜ்ஞாரூப சாஸ்த்ராநுகுணமாக விவர்கள்பக்கலிலே சிலஸுக்ருதவிசேஷம் கண்டங்கீகரிக்கலாம் வழியுண்டோவென்றுபார்த்து, ததபாவத்தில் ஸர்வமுக்திப்ரஸங்கமும் வைஷம்யநைர்க்ருண்யமும் வாராமைக்காக அஜ்ஞாதஸுக்ருதங்களைத் தானேகல்பித்து, அவைதன்னை ஜந்மபரம்பரைகள்தோறு மொன்றுபத்தாக்கி நடத்திக்கொண்டு போரும்படியை விஸ்தரேண வருளிச்செய்து, அஜ்ஞாதஸுக்ருத மங்கிகாரஹேதுவாம்படியையும் தர்சிப்பித்தாராய் நின்றார்கீழ்; இந்நிர்ஹேதுக விஷயீகார வாசியறியாதவர்கள் இதுக்கிசைந்துவைத்தே ஏததநுஸந்தாநே வித்தராகாமலிருப்பர்க ளென்கிறார் மேல், (அஜ்ஞரான மநுஷ்யர்கள்) என்றுதுடங்கி. (அஜ்ஞ) ராகிறார் நிர்ஹேதுகவிஷயீகார வைபவமறியாதவர்கள், (வாளாதந்தானென் றிருப்பர்கள்) என்றது-இப்படி யுபகரித்தருளுவதேயென்று தலைசித்து ஈடுபடவேண்டியிருக்க, அது செய்யாமல் வெறுமனேயுபகரித்தா னென்கிற மாத்ரத்தை யநுஸந்தித்திருந்து விடுவர்களென்றபடி.

ஆ.—௧௮௪. இனி ஜ்ஞாநாதிக ரீடுபட்டிருக்கும் ஸாக்ஷாந்நிர்ஹேதுகத்வத்தை யருளிச்செய்கிறார்; பாதந்த்ரவிசேஷண ஸ்வரூபம் ஸ்வதந்த்ர விசேஷ்யைகசரண்ய மென்னும் ஜ்ஞாநவான்கள், (''இன்றென்னைப்பொருளாக்கித் தன்னையென்னுள்வைத்தான்'') இத்யாதி. தானங்கிகரிக்கநினைத்தவின்று அவஸ்துவானவென்னை வஸ்துவாக்கி, நித்யஸூரிகளுக்கும் மேலானதன்னை நித்யஸம்ஸாரிகளுக்கும் கீழானவெனக்கும் த்யாஜ்யமான நெஞ்சிலே சவித்துவைத்தான், தலையோடேமுடிந்தேனே, கண்டேனென்று வந்தேனே, எந்தநன்மைசெய்தேனுகத்தீமைசெய்யு மென்னெஞ்சில் பெருப்பேறுபெற்று விளங்குகிறது; உதிரக்கையனுய் பாஹிம்ஸார்த்தமாகத்திரியா நிற்கச்செய்தே மத்யே நினைவறவந்துஜ்ஜீவிப்பித்துக் கொள்ளுகிறஸ்வாமீ; நான் கனுக்கண்டறியாத தத்வார்த்தங்களை யறிவித்து அஜ்ஞாதஜ்ஞாபகம் பண்ணுகிற ஸ்வாமியே சேஷியான நீ பண்ணினவுபகாரம் சேஷபூதனுனவென்று லறியலாயிருந்ததோ; அஸத்தானவென்னை ஸத்தாக்கி ஸத்தையை நிலைநிட்டாயே; க்ரூரமநஸ்ஸை நினைவறக்கெடுத்

௧௮௪. ஜ்ஞாநவான்கள் ''இன்றென்னைப்பொருளாக்கித் தன்னையென்னுள்வைத்தான் எந்நன்றிசெய்தேனு வென்னெஞ்சில் திகழ்வதுவே'' ''நடுவேவந்துய்யக்கொள்கின்றநாதன்'' ''அறியாதன வறிவித்தவத்தா நீ செய்தன வடியேனறியேனே'' ''பொருளல்லாதவென்னைப்

ஜீ.—௧௮௪. இதின் வாசியறிந்தவர்க ளீடுபடும்படியை யருளிச்செய்கிறார், (ஜ்ஞாநவான்கள்) என்று தொடங்கி. (ஜ்ஞாநவான்க) ளாகிறார் - நிர்ஹேதுகவிஷயீகார வைபவத்தை யுள்ளபடியறியுமவர்கள், (''இன்றென்னைப் பொருளாக்கித் தன்னையென்னுள் வைத்தான்'') இத்யாதி. அநாதிகால மவஸ்துவாய்க்கிடந்தவென்னை இன்றுவஸ்துவாக்கி நித்யஸூரிகளுக்கு மவ்வருகான தன்னை நித்யஸம்ஸாரிகளுக் கிவ்வருகான வென்னுடைய ஹேயமான நெஞ்சிலேவைத்தான், பெரியவுடையாரைப்போலே தலையோடேமுடிந்தேனே, திருவடியைப்போலே ''ப்ரஹ்ருஷ்டேந'' ''த்ருஷ்டாஸீதா'' என்றுவந்தேனே; அன்றிக்கே தன்னுடைய வாஜ்ஞாநுவர்த்தநம் பண்ணினேனும்படி விஹிதகர்மங்களை யநுஷ்டித்தேனோ; என்ன நன்மைசெய்தேனுக வென்னெஞ்சிலேபுகுந்துபெருப்பேறுபெற்றானுய் விளங்குகிறது; விஷயப்ரவணனுய்ப போகாநிற்க நடுவேவந் துஜ்ஜீவிப்பியாநின்றஸ்வாமீ; எனக்கு அஜ்ஞாதஜ்ஞாபகத்தைப்பண்ணி ஸ்வாமியான நீ சேஷபூதனுன வென்பக்கல் பண்ணினவுபகாரம், உபகரித்த நீ யறியிலறியுமித்தனை யென்னுல் சொல்லித்தலைக்கட்டப்போமோ; ''அஸந்நேவ'' ''அஸந்நேவ'' என்கிறபடியே யஸத்கல்பனுய்க் கிடந்தவென்னை ''ஸந்தமேநம்'' ''ஸந்தமேநம்'' என்கிறபடியே ஸத்தாவானுயொரு வஸ்துவாம்படிபண்ணி அந்தஸத்தை நிலைநிற்கும்படி கைங்கர்யத்தையும் கொண்டருளினுய்; அம்ருதத்தையும் விஷத்தையுமொக்க விரும்புவாரைப்போலே உன்னையுமுகந்துக்ஷுத்ரவிஷயங்களையு முகக்கும்பொல்லாதநெஞ்சைப்போக்கினுய்; அநந்யப்ரயோஜநமாய்க்கொண் டுன்னையே யநுபவிக்கும் மநஸ்ஸைத்தந்தாய்; என்றவன் நிர்ஹேதுகமாகப்பண்ணின வுபகாரவிஷயங்களை யநுஸந்தித்து தலைசீய்த்நிடுபடா நிற்பர்களென்கை.—, அன்றிக்கே (அஜ்ஞர்) இத்யாதிக்கு (வாளார்தந்தார்) என்று பாடமாகில், இப்படி ஸர்வேச்வரன் தந்நிர்ஹேதுக க்ருபையாலே தங்களையுஜ்ஜீவிப்பிக்க க்ருஷி

ஆ.—தாய். அநந்யப்ரயோஜந ஸூமநஸ்ஸை நினைவறத்தந்தாயென்று தலையிலொரு ஹேதுகந்தமற தானறிந்தஸம்பந்தமே ஹேதுவாக வங்கிகரித்தானென்று தலைசீய்த்திடேபடாநிற்பர்கள். இது ஜ்ஞாநாதிகர் நினைத்திருக்கும் ஸாக்ஷாந்நிர்ஹேதுகமென்கிறார்.

௩௮௫. அஜ்ஞர் பேற்றுக்கடி. யஜ்ஞாதமானவசேதநன், ஜ்ஞாநவான்கள் பேற்றுக்கடி விஜ்ஞாதமான பரமசேதநமென்று திருவுள்ளம் பற்றி, இதுக்கிதிஹாஸமருளிச்செய்கிறார் மேல். (பாஷ்யகாரர்) இத்யாதியால். வேதாந்ததாத்பர்ய மிரண்டும் ஸாம்ராஜ்யம்பண்ணும் நல்லடிக்காலமான ஸ்ரீபாஷ்யகாரர்காலத்திலே, இவ்வர்த்தம் வெளிப்படுகிற நன்னாளானவொருநாள் அங்காதுஞ்சோராமேயாள்கின்ற வுபய விபூத்யைச்வர்யமுடையபெருமாள் பெரும் அளியுடன் திருவாசலிலேபுறப்பட்டருளும் தனையும் புறப்பாடழகு ஸேவிக்கவேணுமென்று வழிபார்த்து, பெருமாளுக்குத்தக்க பெரிய திருமண்டபத்துக்குக்கீழாக, உடையவரை ஸேவித்துக்கொண்டொருமிடறான முதலிகளெல்லாரும் ஒருவர் கீழிலே யொருவரொதுங்கித்திரள பகவத்குணாநுஸந்தாநம் பண்ணிக்கொண்டிருந்தவளவிலே, ஒரு ஸ்ரீவைஷ்ணவரெழுந்திருந்து இத்திரளை ஸேவிக்கப்பெற்றோம் இதொரு ஸுக்ருதமிருந்தபடியென்னென்ன, மற்றொரு ஸ்ரீவைஷ்ணவர் ப்ரபாகரபூர்வதேவரைக்கல்பித்தாப்போலே இவரொரு ஸுக்ருததேவரைக் கல்பிப்பதேயென்று இங்ஙனே ஸஹேதுக நிர்ஹேதுக விஷயமாக

---

பொருளாக்கி யடிமைகொண்டாய்" என்னைத் திமனங் கெடுத்தாய்" "மருவித்தொழும் மனமேதந்தாய்" யென்றிடப்படா நிற்பர்கள்.

௩௮௫. பாஷ்யகாரர்காலத்திலே ஒருநாள் பெருமாள் புறப்பட்டருளுந்தனையும்பார்த்து, பெரியதிருமண்டபத்துக்குக் கீழாக முதலிகளெல்லாரும் திரளவிருந்த வளவிலே

---

ஜீ.—பண்ணிக்கொண்டுவரும் ப்ரகாரத்தையறியாத மநுஷ்யர், வாள்வலியாலே ஜீவித்துத்திரிவார் தங்களுக்குவந்ததொரு ஸம்ருத்தியை நம்முடைய வாளார்தந்தாரென்று நினைத்திருக்குமாபோலே, நிர்ஹேதுகமாகவந்த பகவதங்கீகாரத்தை தங்கள் ஸுக்ருதபலத்தாலே வந்ததாக நினைத்திருப்பர்களென்று பொருளாகக்கடவது. அப்போதைக்கு ஸகலமுமவனருளாலேவந்ததென்று தெளியக்கண்டவர்கள், அவன் நிர்ஹேதுகமாகப்பண்ணின வுபகாரவிசேஷங்களை யநுஸந்தித்து ஈடுபடும்படியையருளிச்செய்கிறாரென்று மேலில் வாக்யத்துக்குஸங்கதி.

௩௮௫. இந்நிர்ஹேதுக விஷயீகாரஸ்தாபகமானதோரைதிஹ்யத்தைஸ்மரிப்பிக்கிறார், (பாஷ்யகாரர்காலத்திலே) என்றுதுடங்கி. அதாவது ஸகலவேதாந்த தாத்பர்யார்த்தங்களெல்லாம் ஸம்சய விபர்யயமற நடந்துசெல்லுகிற நல்லடிக்காலமான பாஷ்யகாரர் காலத்திலே, ஒருநாள் பெருமாள் புறப்பட்டருளும் தனையும்பார்த்து பெரியதிருமண்டபத்துக்குக் கீழாக ஜ்ஞாநாதிகரான முதலிகளெல்லாரும் திரளவிருந்தவளவிலே, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் இது நெடுங்கால மார்வாசலிலே யவர்கள் புறப்பாடுப்பார்த்திருந்தோமோயென்று தெரியாது, இன்று வகுத்தசேஷியானபெருமாள் புறப்பாடுபார்த்து வந்திருக்கவென்னஸுக்ருதம் பண்ணினோமென்ன, தத்ப்ரஸங்கத்திலே நித்யஸம்ஸாரியாய்ப் போந்தவனுக்கு பகவத்விஷயத்தில் ருசிபிறக்கைக் கடியென்னென்று விசாரிக்கச்செய்தே, யாத்ருச்சிக

ஆ.—இவ்வர்த்தம் ப்ரஸங்காத் ப்ரஸ்துதமானவளவிலே, ஸாத்யமாய் அசேதநமாய் புறப்பூச்சான ஸுக்ருதத்தையன்றுகாணுமவர் சொல்லு கிறது, ஸித்தமாய் பரமசேதநமாய் வைரம்பற்றின அநந்தன்மேல்கிடந்த வெம்புண்ணியமான வடிவுபட்ட ஸாக்ஷாத்ஸுக்ருதத்தைக்காணுமவர் சொல்லுகிறதென்று உடையவரருளிச்செய்த நிர்ஹேதுகஸ்தாபகமான தாத்பர்யவார்த்தையை, அநதிகாரிகள்செவிபடாதபடி ஸ்மரிப்பதென்கிறார்.

௩௮௬. இப்படி ஸ்வஸம்பந்தமே ஹேதுவாக நிர்ஹேதுககடா க்ஷம் பண்ணவல்ல பரமசேதநனாகையாலே ஸர்வாங்கீகார ப்ரஸங்க பரி ஹாரார்த்தமாக, சேதநரால் அஜ்ஞாதமான யாத்ருச்சிகாதி துச்ச நன்மைகளையே சேதநாங்கீகாரப் பற்றாசாகக்கொண்டு இடம்பெற்றவிடங் களிலே கடாக்ஷியாநிற்கும், ஸர்வமுக்திப்ரஸங்கம் பரிஹரிக்கவேண்டுகை யாலேயென்று. ஆகையாலுமிங்ஙனம் யோஜிப்பர்கள்.—, ஸாக்ஷாந்நிர் ஹேதுகத்வோக்தி ஸித்ததாத்பர்யத்தை ப்ராதிதிக நிர்ஹேதுகத்வ ஸூசிகவேதாந்த யோஜனையாலே மறைத்தருளுகிறாரென்று மருளிச் செய்வர்.

௩௮௭. இந்த யாத்ருச்சிகாதிகள்தானிவனுக்குண்டாகிறதன்று அவ னடியாக வுண்டாயிற்ற தித்தனையென்கிறார் மேல்; இந்த யாத்ருச்சிகா

இவ்வர்த்தம்ப்ரஸ்துதமாக, பின்புபிறந்தவார்த்தைகளை ஸ்மரிப்பது.

௩௮௬. ஆகையாலஜ்ஞாதமான நன்மைகளையே பற்றாசாகக் கொண்டு கடாக்ஷியாநிற்கும்.

௩௮௭. இவையும்கூட விவனுக்கு விளையும்படியிறே

ஜீ.—ஸுக்ருதமென்ன அஜ்ஞாதஸுக்ருதமென்ன பிறந்ததாய் அவ்வள விலேகிடாம்பிப்பெருமாளிருந்தவர் நமக்குபகவத்விஷயம்போலே ஸுக்ருத தேவரென்னு மொருவருண்டோ வாச்ரயணியரென்ன, பிள்ளை திருநறையூர றையர் ஸுக்ருதமென்று சொல்லுகிறது நினைக்கிறவிஷயம்தன்னைக்கா ணென்றருளிச்செய்ய, ஆக விப்படிப்பின்பு பிறந்தவார்த்தைகளை யிவ்வி டத்திலே நினைப்பதென்றபடி. இக்கதைதான் "தருதுயரம்தடாயேல்" என்கிறபாட்டில் வ்யாக்யானத்திலே ஸங்க்ரஹேண பூர்வர்களருளிச் செய்து வைத்தார்களிறே. இத்தாலஜ்ஞாத ஸுக்ருதமுண்டாயிற்றாகிலு மது பலஹேதுவன்று; அத்தை வ்யாஜமாக்கி யங்கீகரிக்குமீச்வரனே பல ஹேதுவென்றதாயிற்று.

௩௮௬. கீழுக்தமான வர்த்தத்தை நிகமிக்கிறார், (ஆகையால்) என்றுதுடங்கி. அதாவது கீழ்ச்சொன்னப்ரகாரத்தாலே ஸர்வமுக்திப்ர ஸங்காதிகள் வாராமைக்காக விச்சேதநனறியாமல் விளையுமவையான சில ஸுக்ருதவிசேஷங்களையே, இவனையங்கீகரிக்கைக்குப் பற்றாசாகப் பிடித்துக்கொண்டு விசேஷகடாக்ஷத்தைப் பண்ணாநிற்குமென்கை.

௩௮௭. இப்படி யஜ்ஞாத ஸுக்ருதங்களையாகிலும் ஹேதுவாகக் கொண்டு கடாக்ஷிக்குமளவில், அங்கீகாரம் ஸஹேதுகமாகாதோவென்ன வருளிச்செய்கிறார், (இவையும்கூட) என்றுதுடங்கி. அதாவதிந்தயாத்ரு ச்சிகாதி ஸுக்ருதங்களுமுட்பட இவனுக்குண்டாம்படியிறே இவற்றுக் கும் யோக்யதையில்லாதபடி கரணகளேபர விதுரனாய்க்கிடந்த விவன் தன்னை, ஸ்ருஷ்டிகாலத்திலே கரணாதிகளைக்கொடுத்தவனுண்டாக்கிற் றென்கை. இத்தால் கடாக்ஷஹேதுவாகச்சொன்ன யாத்ருச்சிகாதிகளு

ஆ.—திகள் முற்பட காலக்ரமேண விளையும்படியிறே யிவற்றுக்கும் யோக்யதையற்ற வெறுவியனான விவன்றன்னை அநாதியேபிடித்து விசித்ரசக்தியுக்தன் விரகிட்டு ஸ்ருஷ்டித்தது.

௱௮௮. யாத்ருச்சிகாதிகளும் விளையும்படி சேதநனுக்கு ஈச்வரனே றக்கோலி ரக்ஷிக்கிற ரக்ஷகஸ்வபாவமாகிற விதுதன்னை நிரூபித்தால், தச்சரீரபூதனான விவனுக்கு புத்திபூர்வகமாகவும் இவனுக்கொன்றும் செய்யவேண்டாதபடியாயிருக்கும்.

ஆ.—பாகவதாசார்யகைங்கர்ய மௌபாதிகமென் றிருப்பர்கள், ஆசார்ய சேஷத்வ ப்ரதாநர் ஆசார்யகைங்கர்யம் நிருபாதிகம் பகவத்ப்பாகவத கைங்கர்ய மௌபாதிகமென் றிருப்பர்கள். ப்ரதமசேஷத்வப்ரதாநர்க்கு பகவத் கைங்கர்யத்தில் ஸத்தாநிபந்தநத்வ புத்தியும் ததீயாசார்ய கைங்கர்யங்களில் ததீயத்வோபதேசிகத்வ நிபந்தநபுத்தியும் நடக்கும்; சரம சேஷத்வ ப்ரதாநர்க்கு ஆசார்யகைங்கர்யத்தில் ஸத்தாநிபந்தந புத்தியும் பகவத்ப்பாகவத கைங்கர்யங்களில் ஸ்வசேஷிப்ரீதி நிபந்தநபுத்தியும் நடக்கும். பகவச்சேஷத்வ ப்ரதாநர்க்கெல்லை பாகவதகைங்கர்யம், ஆசார்யசேஷத்வ ப்ரதாநர்க்கெல்லை பகவத் ப்பாகவத கைங்கர்யம்; ஆக கைங்கர்யத்ரயமு மவர்ஜநீயம். ப்ரதமசேஷத்வ ப்ரதாநர்க்கு சரமாந்வயம் பாகல்காயிட்டுண்டு பால்வார்த்துண்பாரைப்போலே; சரம சேஷத்வ ப்ரதாநர்க்கு ப்ரதமாந்வயம் பாலும் பழமுமாகவுண்டு ஹரீதகி ஸேவிப்பாரைப்போலே யென்றருளிச்செய்வர். ஆக ப்ரதமமத்யம சரமரூப பர்வக்ரமமாக வருளிச்செய்கிறவிது ஜ்ஞாநபரிபாகாநுகுணமாக தத் கைங்கர்யம் ரஸித்துவருமென்றும், ஒன்றிலொன்றுஸாரமாய் ருசிக்குமென்றும், ஸ்வப்ராதாந்யமான வம்சபேதமொழிய ஸ்வப்ராப்யாகாரபேதமான வம்சபேதமில்லையென்றும் திருவுள்ளம்பற்றியிறே பர்வத்தைமாறடி யருளிச்செய்கைக்கடி ச்ருதஸாபேக்ஷதையைப்பற்ற வென்றருளிச்செய்வர்.—, அன்றியே சரமசேஷத்வ ப்ரதாநர்க்கு ஸத்தாநிபந்தந ப்ரதமபர்வம் ஸதாசார்யகைங்கர்யம், மத்யமபர்வம் தத்ப்ரதபகவத்கைங்கர்யம், சரமபர்வம் தநுபயப்ராபக பாகவதகைங்கர்ய மென்றிங்ஙனே யதாந்வயமாகவும் யோஜிப்பர்கள்; இது (சரமபர்வம் வரக்கடவது) என்கிற மேலுக்குச் சேராது.

௪௧௩. இந்த வாசார்யகைங்கர்யம் பரமபுருஷார்த்த சரமமாய் வருமென்கிறார்; "పరంజ్యోతిరుపసమ్పద్య స్వేనరూపేణాఽభినిష్పద్యతే" "பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்று பகவத்ஸாம்யாபத்தியை வேதாந்தசாஸ்த்ரம் பரமபுருஷார்த்தமாகச் சொல்லாநிற்க, பகவத்

---

சரமபர்வம் பாகவதகைங்கர்யம்.

௪௧௩. ஸ்வரூபப்ராப்தியை சாஸ்த்ரம் புருஷார்த்தமாகச் சொல்லாநிற்க,

ஜீ.—கைங்கர்யமாவது- ஆசார்யபரனென்றுகக்குமவர்களாய்ஆசார்யவைபவஜ்ஞாபகராயாசார்யகைங்கர்யத்தி னேற்றமறியு மவர்களானபாகவதர்களெல்லார்க்கு முகப்பாகப்பண்ணு மாசார்யகைங்கர்யம். ஆக வாசார்யப்ரீதிவிஷயமான பகவத்கைங்கர்யத்தை யாசார்யகைங்கர்யமென்றும், பகவத்ப்ரீதிவிஷயமான பாகவதகைங்கர்யத்தை பகவத்கைங்கர்யமென்றும், பாகவதப்ரீதிவிஷயமான வாசார்யகைங்கர்யத்தை பாகவதகைங்கர்யமென்றும் சொல்லிற்றாயிற்று. ஆகையாலாசார்யகைங்கர்யம் ப்ராப்யமென்றுசொன்னவிதில் குறையில்லையென்று கருத்து.

௪௧௩. இப்படி யாசார்யகைங்கர்யமே சரமபர்வம் என்று சாஸ்த்ரம் சொல்லாநிருக்கச்செய்தே இதுவருகிறவழிதானென்னென்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார், (ஸ்வரூபப்ராப்தியை) என்றுதுடங்கி. அதாவது- "పరంజ్యోతిరుపసమ్పద్య స్వేనరూపేణాభినిష్పద్యతే" "பரம்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்று பரப்ராப்தி பூர்விகையா யநாதிகர்ம நிபந்தநாசித்ஸம்பந்தத்தாலே மலாவகுண்டித மணிப்ரபை

ஆ.—ப்ராப்தி பலமாய்க்கொண்டு "ஸ்உஸ்நு தேஸர்வாந்காமாந்" "ஏகதாபவதி" இத்யாதிஸித்த பகவதநுபவஜநித ப்ரீதிகாரிதகைங்கர்யம் புருஷார்த்தமாய் வருகிறுப்போலே, ப்ராப்திபலகைங்கர்யமாகிற ஸாத்யத்திறுடைய தத்ப்ரதிஸம்பந்தி ப்ரீதிவர்த்தக வ்ருத்தித்தேஹதுவாய்க்கொண்டு மத்யமபர்வமான பாகவத கைங்கர்யமும், தத்ப்ரீத்யதிசய ஸம்பந்தத்த விசேஷவ்ருத்திஹேதுவாய்க் கொண்டு சரமபர்வமான வாசார்யகைங்கர்யமும், ராகப்ராப்தமாகத்தன்னடையே வரக்கடவதென்கிறுர்.

௪௧௪. சரம கைங்கர்யாதிகாரத்தினருமையை யருளிச்செய்கிறுர் மேல்; இந்த சரமபர்வமான வாசார்யகைங்கர்யம் தான், ஏதத்ருசிப்ரதிபந்தக ப்ராபல்யத்தாலே மிகவும்துர்லபம்.

௪௧௫. இதின் துர்லபத்வத்தை விவரிக்கிறுர் மேல்; உபதேசாதிகளால் மீட்கவொண்ணுதபடி க்ஷுத்ரவிஷய ப்ரவணனுனவனுக்கு விடில் முடிவனென்னும்படியான வவ்விஷயத்தை, தோஷதுஷ்டமப்ராப்தமென்றுவிட்டு விலக்ஷணமாய் ப்ராப்தமானபூர்ண பகவத்விஷயத்திலேவருந்தி வருகைக்குள்ள வருமைபோலன்று, தன்னிலேகதேசத்திலே சுழியாறுபடுத்து மபரிமிதபோக்யதம ஸ்வரூபாதியையுடைய ப்ரதமபர்வமான பகவத் விஷயதத்கைங்கர்யங்களிலாழங்கால் படுகையைவிட்டு, ததிஷ்டதமமான

---

ப்ராப்திபலமாய்க்கொண்டு கைங்கர்யம் வருகிறுப்போலே, ஸாத்யவிவ்ருத்தியாய்க்கொண்டு சரமபர்வம் வரக்கடவது.

௪௧௪. இதுதான் துர்லபம்.

௪௧௫. விஷயப்ரவணனுக் கத்தைவிட்டு பகவத்விஷயத்திலே வருகைக்குள்ள வருமைபோலன்று, ப்ரதமபர்வத்தை

---

ஜீ.—போலே திரோஹிதமான ஸ்வாஸாதாரணுகாரத்தினுடைய வாவிர்ப்பாவரூபையான ப்ராப்தியே வேதாந்தசாஸ்த்ரம் புருஷார்த்தமாகச் சொல்லாநிற்க, இப்படி யாவிர்ப்பூதமான ஸ்வரூபத்தையுடையவாத்மா, சேஷத்வைக நிரூபணீயதயா சேஷிவிஷய கிஞ்சித்காரத்தாலல்லது செல்லாதபடியாயிருக்கையாலே, அந்த ஸ்வரூபப்ராப்தி பலமாய்க்கொண்டு பகவதநுபவஜநித ப்ரீதிகாரித கைங்கர்யம் வருகிறுப்போலே, சேஷியான பகவானுக்கு ஸ்வவிஷயகிஞ்சித்காரத்திலும் ஸ்வகீயவிஷய கிஞ்சித்கார முகப்பாகையாலே, அந்தபகவத்கைங்கர்யமாகிற ஸாத்யத்தின் வ்ருத்திரூபமாய்க்கொண்டு மத்யமபர்வமான பாகவதகைங்கர்யம் வரக்கடவதாய், அந்த பாகவதரெல்லார்க்கும் ஸ்வவிஷய கிஞ்சித்காரத்திலும் தனக்குபகாரகனுன வாசார்யவிஷயத்தில் கிஞ்சித்காரமே யுகப்பாகையாலே அந்த ஸாத்யத்தினுடைய விசேஷவ்ருத்தியாய்க்கொண்டு சரமபர்வமான வாசார்ய கைங்கர்யம் வரக்கடவதென்கை.

௪௧௪. இந்த சரமபர்வலாபத்தி னருமையைத்தர்சிப்பிக்கிறுர் மேல், (இதுதான் துர்லபம்) என்று.

௪௧௫. இது தன்னை விவரிக்கிறுர் மேல், (விஷயப்ரவணனுக்கு) என்று துடங்கி. அதாவது க்ஷுத்ரவிஷயங்களின் புறப்பூச்சான வைலக்ஷண்யத்திலே பிடுபட்டு மீட்கவொண்ணுதபடி யவற்றிலே ப்ரவணனுய் நின்றவனுக்கு அவற்றைக் கைவிட்டு வகுத்த விஷயமான பகவத் விஷயத்திலே வருகைக்குள்ள வருமைபோலன்று "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரியான" பகவத்விஷய ப்ரவணனுய் தத்கைங்கர்ய நிரதனுனவனுக்கு ப்ரதம

ஆ.—சரமபர்வமாகிற வாசார்யவிஷயதத்கைங்கர்யங்களிலே, தத்ப்ரீத்யநிசயத்தைப்பின்சென்று பிற்காலியாமல் வருகைக்குள்ளவருமை.

௪௧௬. வாழ்க்கைப்பட்டசிறுபெண் தாய்தமப்பனையும் பிறந்தகத்தையும்விட்டு புரிந்து கடைக்கணிசிப்பது கண்ணநீர் மல்குவதாய்க்கொண்டு பர்த்தாவின்பின் புக்ககத்துக்குப் போகிறவருமையுண்டிறே யிதிலும்; அவ்வருமையை விவரிக்கிறார் மேல்; அந்த க்ஷுத்ரவிஷயங்களில் மாம்ஸாஸ்ருகாதிமயத்வ துர்க்கந்த்ததூஷிஷ்டத்வாதி தோஷதர்சநத்தாலேயருவறுத்து அவற்றினின்றும் மெள்ள மீளலாம்; நிரவதிகதேஜோமயத்வ நிரவதிகஸுகந்த்தத்வாதி திவ்யகுணபூர்ணமாய் த்ருஷ்டிசித்தாபஹாரியான பகவத்விஷயத்தில் சிலதோஷம்கண்டதாய் விடவொண்ணாது. "సజ్జ్యాతుం నైవశక్యన్తే గుణాదోషాశ్చ శార్ఙ్గిణః । అనన్త్యాత్ప్రథమోరాశి రభావాదేవపశ్చిమః" "ஸங்க்யாதும்நைவசக்யந்தே குணதோஷாச்சசார்ங்கிண: । ஆநந்த்யாத்ப்ரதமோராசி ரபாவாதேவபச்சிம:" என்று தோஷஸத்ப்பாவாபாவஸித்த்த நிர்தோஷத்தாலே தோஷதர்சநம்பண்ண யோக்யதையு மற்றவிஷயமிறேயிது.

௪௧௭. "கடியன்கொடியன்" இத்யாதியால் சொல்லுகிறவாற்றாமையில் தோற்றும் சிலதோஷமுண்டானாலும் "என் நெஞ்சமவனென்றே கிடக்கும்" என்னும்படி மேல்விழப்பண்ணும் குணம்போலே மேல் விழப்பண்ணும் குண முபாதேயமாயிருக்கும்.

---

விட்டு சரமபர்வத்திலே வருகைக்குள்ளவருமை.

௪௧௬. அங்கு தோஷதர்சநத்தாலே மீளலாம்; இங்கதுசெய்யவொண்ணாது.

௪௧௭. தோஷமுண்டானாலும் குணம்போலே யுபாதேயமாயிருக்கும்.

---

ஜீ.—பர்வமானவற்றை விட்டு சரமபர்வமான வாசார்ய கைங்கர்யத்திலே வருகைக்குள்ள வருமையென்றபடி.

௪௧௬. அதெங்ஙனே யென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார், (அங்கு) என்று துடங்கி. அதாவது க்ஷுத்ர விஷயங்களில் தேஹதோஷாதிகளுமல்பாஸ்த்திரத்வாதிதோஷங்களுமுண்டாயிருக்கையாலே அவற்றை தர்சிக்கவே யருவறுத்து மீளலாயிருக்கும்; விலக்ஷணவிக்ரஹயுக்தமாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகமாய் நித்யமாயபரிச்சேத்யமானவிவ்விஷயத்தில் தோஷகந்த்தமில்லாமையாலே, தோஷதர்சநம்பண்ணி மீளப்போகாமைதன்கை. "సజ్జ్యాతుం నైవశక్యన్తే గుణాదోషాశ్చ శార్ఙ్గిణః । అనన్త్యాత్ప్రథమోరాశి రభావాదేవపశ్చిమః" "ஸங்க்க்யாதும்நைவசக்யந்தே குணதோஷாச்சசார்ங்கிண: । ஆநந்த்யாத்ப்ரதமோராசி ரபாவாதேவபச்சிம:" என்னக்கடவதிறே.

௪௧௭. க்ஷுத்ர விஷயங்களுக்குச் சொல்லுகிற தோஷமொன்றுமிங்குச் சொல்லலாவதில்லையே யாகிலும், ஸ்வவிஷயபக்தி பரவசர்க்கு ஸம்ச்லேஷ ஸுகத்தை யுருவகடத்தாதேவிச்லேஷித்து துக்கத்தைவிளைக்கையாலே "கடியன் கொடியன்" இத்யாதிப்படியே சொல்லலாம்படிதோற்றுவன சிலதோஷமுண்டே, அது தான் மீளுகைக்குடலாமோ வென்னவருளிச்செய்கிறார், (தோஷமுண்டானால்) என்று துடங்கி. அதாவது அப்படி யாற்றாமையாலே தோற்றுவன சில தோஷமுண்டானாலும், "கொடியவென்னெஞ்ச மவனென்றே கிடக்கும்" என்று அவை தன்னை விரும்பி மேல் விழும்படி யிருக்கையாலே ஹேயமாயிராது; விஷயத்தை விரும்பி மேல் விழுகைக்குடலான குணம்போலே உபாதேயமாயிருக்குமென்கை.

ஆ.—௪௧அ. குணமுபாதேயமாமத்தனை யல்லது, தோஷமுபாதேயமா மோவென்ன ; குணமுபாதேயமாய் தோஷமநுபாதேயமாய் லோகஸ்வ பாவம்போலன்றியே, இந்த பகவத்விஷயத்திலே குணதோஷவிபாகமற விரண்டு முபாதேயமாம்படி லோகஸ்வபாவ விபரீதமாய்க்கொண்டு வ்யாவ் ருத்தமாயிறே யிருப்பதென்கிறார்.

௪௧௯. ஆச்ரயணவைலக்ஷண்யம் தோஷகுணவிபாகமறுக்குமென் கிறார் மேல் ; விலக்ஷணபகவத்குணம் தத்ப்ரவணர்க் குபாதேயமாகைக் கீடான ப்ராப்தாபிமதசேஷியைப்பற்றி நிற்கையாகிறஹேது, தத்தோஷம் போலத்தோற்றுகிற வற்றுக்குமுண்டிறே ; அபிமதவிலக்ஷண விஷயதோ ஷ மபிமதமாமித்தனையிறே.

௪௨௦. பிறர் தோஷம்சொல்லக்கேட்கவும் பொறுத விஷயஸ்வபா வத்தை யறியும் விசேஷவசநார்த்தத்தைக் காட்டுகிறார் மேல், (நிர்க்க்ரு ணன்) இத்யாதியால். "எனதவளவண்ணர்தகவுகளே" என்றிங்ஙனே யிருந்தின சுத்தஸ்வபாவருடைய க்ருபைகள், இங்ஙனொத்த க்ருபா ளுக்க ளுண்டாகவே பெண்பிறந்தார்க்கினி வாழலாமிறே என்றுபெண் பிள்ளை யாற்றாமைகண்டு திருத்தாயார் நிர்க்க்ருணனென்றுசொல்லி வாய்

---

௪௧அ. லோகவிபரீதமாயிறே யிருப்பது.

௪௧௯. குண முபாதேயமாகைக்கீடானஹேது தோஷத்துக்கு முண்டிறே.

௪௨௦. நிர்க்க்ருணனென்ன வாய் மூடுவதற்குமுன்னே க்க்ரு ணவானென்று சொல்லும்படியாயிருந்ததிறே.

---

ஜீ.—௪௧அ. லோகத்தில் தோஷம் ஹேயமாய் குணமுபாதேயமாயன் றோ யிருப்பது, தோஷம் குணம்போலே யுபாதேயமாமோவென்ன வருளி ச்செய்கிறார், (லோகவிபரீதம்) என்று துடங்கி. அதாவது தோஷம் விடு கைக்குடலாய் குணம் பற்றுகைக்குடலாயிருக்கும் லோக ப்ரக்ரியை யன்றி யே, தோஷமும் குணம்போலே யுபாதேயமாயிறே யிவ்விஷயத்திலிருப்ப தென்கை.

௪௧௯. எல்லாஞ் செய்தாலும் தோஷம் குணம்போலே யுபாதேய மாகக்கூடுமோ வென்னு மாகாங்க்ஷயிலே யருளிச்செய்கிறார், (குணமு பாதேயமாகைக்கு என்றுதுடங்கி. அதாவது பகவத்குணம் தத்ப்ரவண ர்க்குபாதேயமாகைக்கீடான ப்ராப்தசேஷித்வமாகிற ஹேது, அவ்விஷ யத்தில் தோற்றுகிற தோஷத்துக்கு முண்டிறே யென்கை, இத்தால வன் பக்கலுள்ளதென்னுமத்தாலே குணமுபாதேயமாகிறவோபாதி அவ ன் பக்கலுள்ளதென்னுமத்தைப்பற்ற தோஷமு முபாதேயமாகக் குறை யில்லை யென்றதாயிற்று. இப்படி யாகையால் தோஷமுண்டானாலுமது மீளுகைக்குடலாகாதென்று கருத்து.

௪௨௦. விச்லேஷதசையில் தோற்றும் நைர்க்க்ருண்யாதி தோஷத் தை யங்கீகரித்து, அது தான் குணவதுபாதேயமா யிருக்கும்படியை யரு ளிச் செய்தார் கீழ் ; அந்த நைர்க்க்ருண்யாதி தோஷம் தான் முதலிலே யிவ்விஷயத்திலில்லை யென்னுமிடத்தை அபியுக்த வசநங்களாலே தர்சிப் பிக்கிறார் மேல், அதில் முதலிலே ஆழ்வாருடைய வசநத்தைத் தர்சிப் பிக்கிறார், (௨௭௵௯௯) (நிர்க்க்ருணன்) என்று துடங்கி. அதாவது "என த வளவண்ணர் தகவுகளே" என்று எங்ஙனேயிருந்தின சுத்தஸ்வபாவரான வும்முடைய க்ருபைகள், காட்டிலே யிப்படி ருஜுக்களுமாய் பரதுःக்காஸ

ஆ.—மூடுவதற்குமுன்னே, "தகவுடையவனேயென்னும்" என்றவள் வாயைப்புதைத்தாப்போலே நித்யக்ருபையை நிரூபகமாகவுடையவனென்று க்க்ருணவானென்று சொல்லும்படியே நிர்தோஷஸகலகுண ஸம்பூர்ணமாயிறே விஷயமிருப்பது.

௬௨௧. குணஹாநி சொல்லப்புக அத்தைத்தள்ளியிப்படிகுணம்சொல்லப்பண்ணிற்று "தகவுடையவன் க்ருபையாலேசென்று" "பின்னும்மிக விரும்பும்" என்று ஸ்நேஹமும் "பிரானென்னும்" என்றுபகாரஸ்ம்ருதியு முடனே நடந்ததிறே. தோஷச்ரவணவேளையிலே குணக்ரஹணம் பண்ணுவித்தமைக்கு நெஞ்சாறல் படவேண்டினவிஷயமிறே.

௬௨௨. "ఖ్యాతః ప్రాజ్ఞః కృతజ్ఞశ్చ సానుక్రోశశ్చ రాఘవః । సద్వృత్తో నిరనుక్రోశః శంకే మద్భాగ్యసంక్షయాత్" "க்க்யாதஃப்ராஜ்ஞஃக்ருதஜ்ஞஶ்ச ஸாநுக்ரோசச்ச ராகவஃ। ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோசஃ சங்கேமத்ப்பாக்ய ஸம்க்ஷயாத்" என்று நாச்சியார் "నిరనుక్రోశశ్శంకే" "நிரநுக்ரோசச்சங்கே" என்று பெருமாளை நிர்க்க்ருணராகச்சங்கித்து நெஞ்சுநிறைந்தது வாய்கொள்ளாமல்சொல்லுமாற்றாமை கரைபுரண்ட வவஸ்த்தையிலும், "మద్భాగ్యసంక్షయాత్" "மத்ப்பாக்யஸம்க்ஷயாத்" இப்படி சங்கிக்கைக்கடியென்பாக்யஹாநியென்று சங்காகாரணத்தை குணைகஸ்மரணம்பண்ணாத ஸ்வகதமாகவிறே சொல்லித்தலைக்கட்டுவது.—"నమన్త్రరాయా నసమాతురస్య దోషో నరాజ్ఞో నచరాఘవస్య । మత్పాపమేవాత్ర నిమిత్తమాసీ ద్వనప్రవేశే రఘునన్దనస్య" "நமந்த்ரராயாநசமாதுரஸ்யா தோஷோநராஜ்ஞோ நசராகவஸ்ய । மத்பாபமேவாத்ரநிமித்தமாஸீத்வநப்ரவேசே ரகுநந்தநஸ்ய" என்று நம்மைக்கைவிட்டுப்போன

---

௬௨௧. இப்படி சொல்லும்படிபண்ணிற்று க்ருபையாலே யென்று ஸ்நேஹமு முபகாரஸ்ம்ருதியும் நடந்ததிறே.

௬௨௨. நிர்க்க்ருணனாக சங்கித்துச் சொல்லுமவஸ்த்தையிலும் காரணத்தை ஸ்வகதமாகவிறே சொல்லிற்று.

---

ஜீ.—ஹிஷ்ணுக்களுமாயிருப்பார் சில தார்மிகர் நடையாட அபலைகளுக்கு அழகியதாகக் குடிக்கிடக்கலாயிருந்ததென்று பெண்பிள்ளை யாற்றாமைக்குதவாததுகொண்டு திருத்தாயார் நிர்க்க்ருணனென்னவாய்மூடுவதற்கு முன்னே அவள் வாயைப்பொதைத்தாப்போலே "தகவுடையவனே" என்று கெடுவாய் ஆகாரத்தில் தகவு மறுக்குமோ, அது நம் குற்றம்காணென்று க்க்ருணவத்தையைச் சொல்லும்படியாயிருந்ததிறேயென்றபடி.

௬௨௧. இவ்வுக்திதான் தாயார் சொன்ன குணஹாநிக்கு ஒரு பரிஹாரம் பண்ணினமாத்ரமோ ஸஹ்ருதயமாகச் சொன்னதோ வென்கிற சங்கையிலே அதின் ஸஹ்ருதயத்வத்தை மூதலிக்கிறார், (இப்படி) என்று துடங்கி. அதாவது குணஹாநி சொன்னத்தைத் தள்ளி குணம் சொல்லும்படி பண்ணிற்று க்ருபையாலே யென்று "மிக விரும்பும்" என்று ஸ்நேஹமும், "பிரான்" என்றுபகார ஸ்ம்ருதியும் நடந்ததிறே; ஆகையால் "தகவுடையவனே" என்றவிது ஸஹ்ருதயோக்தியென்கை.

௬௨௨. அநந்தரம் பிராட்டியுடைய வசநத்தைத் தர்சிப்பிக்கிறார், (நிர்க்க்ருணனாக) என்று துடங்கி. அதாவது பிரிவாற்றாமையிலே பெருக்க நலங்கின ஸ்ரீ ஜநகராஜன் திருமகள் பெருமாள் தன்னாற்றாமைக்குதவ வந்து முகம் காட்டப்பெறாத வின்னாப்போலே, "ఖ్యాతః ప్రాజ్ఞః కృతజ్ఞశ్చ సానుక్రోశశ్చ రాఘవః । సద్వృత్తో నిరనుక్రోశః శంకే" "க்க்யாதஃப்ராஜ்ஞஃக்ருதஜ்ஞஶ்ச ஸாநுக்ரோசச்ச ராகவஃ। ஸத்வ்ருத்தோநிரநுக்ரோசஃசங்கே" என்று பெருமாளை

ஆ.—நைர்க்ருண்யதோஷம் பெருமாளுக்குண்டென்று சங்கித்துச்சொல்லும் தத்விச்லேஷ கலுஷசித்தராகிற அவஸ்த்தையிலும், வாகமநகாரண தோஷத்தை "మత్పాపమేవ" "மத்பாபமேவ" என்று ஸ்வகதமாகவிறே ஸ்ரீபரதாழ்வான் சொல்லுவதென்று மருளிச்செய்வர்.

௪௨௩. ஆக தோஷமுண்டென்று வாய்கூப்புவதற்கு முன்னே தத்பரிஹாரமாக குணமுண்டென்றே சொல்லித்தரிக்க வேண்டும்படியாய், தோஷமுண்டென்று சங்கிக்கைதான் ஸ்வதோஷமாம்படியாய், தோஷமுண்டேயாகிலு மதுதானுபாதேயமாம்படி யிருக்கும் விஷயமாகையாலே, தோஷங்கண்டு மீளலாம் விஷயமல்லவென்று பின்னேசேர்த்தி, ப்ரதமபர்வ விரோதியை யறுக்கும் தத்குணம்போலன்று சரம பர்வ விரோதியான தத்தோஷமென்கிறார் மேல், (గుణదోష) (குணதோஷம்) இத்யாதியால். அந்த பகவத்விஷயத்தின் ஸ்வரூப குணமும் ரூப ஸௌந்தர்ய

௪௨௩. குணதோஷங்களிரண்டும் க்ஷுத்ர புருஷார்த்தத்தையும்

ஜீ.—நிர்க்ருணனுகச்சங்கித்துச் சொல்லுகிற வவஸ்த்தையிலும், "మద్భాగ్యసంక్షయాత్" "மத்பாக்யஸம்க்ஷயாத்" என்றிப்படி சங்கிக்கைக்கடியென்னுடைய பாக்யஹாநியென்கையாலே சங்காகாரணத்தை ஸ்வகதமாக விறே சொல்லிற்றென்கை.

௪௨௩. (ப்ரதம பர்வத்தை விட்டு) என்கிற விடத்தில் அர்த்தாதுக்தமான பகவத் ஸம்ச்லேஷமும், (தோஷமுண்டானாலும்) என்கிற விடத்தில் அர்த்தாதுக்தமான பகவத்விச்லேஷமுமாகிற விவை யிரண்டும் செய்யுமத்தை யருளிச்செய்கிறார், (குணதோஷங்களிரண்டும்) என்று தொடங்கி. குணமாவது ஸ்வஸௌந்தர்யாதிகளை யாச்ரிதற்கு முற்றூட்டாக வநுபவிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கும் கலவி; தோஷமாவது அவ்வநுபவாலாபத்தாலே யவர்கள் கண்ணுஞ்சுழலை யிட்டுத்துடிக்க தான் முகம் காட்டாதிருக்கை யாகிறபிரிவு; (இவை யிரண்டும் க்ஷுத்ர புருஷார்த்தத்தையும் புருஷார்த்தகாஷ்டையையும் குலைக்கையாவது) ஒரொன்றே யிரண்டையும் குலைக்கை; இதில் குணமிரண்டையும் குலைக்கையாவது—"மால் பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு" என்றும் "மனைப்பால் பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம் துறந்தார் தொழுதாரத்தோள்" என்றும் தத்விஷய வைலக்ஷண்யத்தாலே க்ஷுத்ரவிஷய வைராக்யத்தைப் பிறப்பிக்கையாலே, க்ஷுத்ர புருஷார்த்தாந்வயத்தைக் குலைக்கையும், பயிலுஞ்சுடரொளியிலே ததீயசேஷத்வத்திலே யூன்றின வாழ்வாரை அந்தத்ததீயருடைய ஸ்வரூப நிரூபகத்வேந ப்ரஸ்துதமான தத்ஸௌந்தர்ய சீலாதிகளாலே ததீயதாஸ்ய ரஸத்தை மறந்து அவனை யநுபவிக்கையி லாசை கரைபுரண்ட வநந்தரம் திருவாய்மொழியிலே தாமும் தம்முடைய கரண க்ராமங்களும் பெருவிடாய்ப் பட்டுக்கூப்பிடும்படி பண்ணினப்போலே, வேறொன்றுக்காகப் புகுந்தாலும் தன்னை யொழிய புறம்பொன்றுக்காளாகாதபடி பண்ணும் "* த்ருஷ்டிசித்தாபஹாரியானவன் பக்கலிலே சுழியாறுபடுத்தி புருஷார்த்த காஷ்டையான ததீயசேஷத்வத்தில் நிலையைக் குலைக்கையும். தோஷ மிரண்டையும் குலைக்கையாவது—அநுபவாலாபக்லேசத்தாலே ஸர்வகாலமும் தன் பக்கலிலே மனஸ்ஸாய் "உண்டறியாளுறக்கம் பேணாள்" "பந்தோடு கழல் மருவாள் பைங்கிளியும் பாலூட்டாள் பாவை பேணாள்" என்கிறபடியே முன்பநுபவித்துப்போந்த ப்ராக்ருத போகங்களாகிற க்ஷுத்ர புருஷார்த்தங்களில் பொருந்

ஆ.—தோஷமுமாகிறவிரண்டிலும் வைத்துக்கொண்டு, குணம் அல்பாஸ்த்திரமானக்ஷுத்ர புருஷார்த்தங்களைக்கவ்விநிற்கிற நிலையைக்குலைத்து தன் பக்கலிலே வர வசீகரிக்கும்; அழகாகிற தோஷம் பகவத்கைங்கர்ய புருஷார்த்த காஷ்ட்டையான வாசார்ய கைங்கர்யத்தைப் பற்றிநிற்கிற நிலையைக் குலைத்து தன் பக்கலிலே சுழித்தழுத்தும்.

சஉச. ஸௌந்தர்யத்தின் சரம புருஷார்த்த பஞ்சகத்வத்தை மூதலிக்கிறார் மேல்; "शत्रुघ्नो नित्यशत्रुघ्नः" "சத்ருக்க்நோ நித்யசத்ருக்க்நः" என்று பரதாநுவ்ருத்தி விரோதியான ராமஸௌந்தர்யமாகிற நித்யசத்ருவை ஜயித்திருக்கும் ஸ்ரீசத்ருக்க்நாழ்வானென்னும்படி சரமகைங்கர்யநித்ய சத்ருவாயிறே பகவத் ஸௌந்தர்ய மிருப்பதென்கிறார். "एवं रूपभगवद्दोषः" "ஏவம் ரூபபகவத்தோஷம்" சரமத்தில் வரவொட்டாமல் சுழியாறு

---

புருஷார்த்தகாஷ்ட்டையையும் குலைக்கும்.

சஉச. நித்யசத்ருவாயிறே யிருப்பது.

---

ஜீ—தாமையை விளைக்கையும்; "அவனடியார் சிறுமாமனிசராயென்னையாண்டாரிங்கே திரிய—செந்தாமரைக்கட்டிருக்குறளன்நறுமாவிரை நாண்மலரடிக்கீழ்ப்புகுதல்—உறுமோபாவி யேனுக்கு" என்றும் "தனிமாத்தெய்வத்தளிரடிக்கீழ்ப் புகுதலன்றி யவனடியார் நனிமாக்கலவி யின்பமே நாளும் வாய்க்க நங்கட்கே" என்று மிப்படி தத்விஷய ஸம்ச்லேஷ ரஸம்வேண்டாதபடி ததீயவிஷய ஸம்ச்லேஷ ரஸமே யமையுமென்றிருக்குமவர்களையும், அந்தத்ததீயருடனே கூடி யிருந்தாலும் அவர்கள் பக்கல்நெஞ்சற்று, அவனை யநுபவிக்கையிலாசையாலே "காணவாராய்" "காணுமாறருளாய்" என்று கூப்பிடுவது, "வெஞ்சிறைப்புள்" இத்யாதிகளாலே அவர்கள் தங்களோடே வெறுத்து வார்த்தை சொல்லுவதாம்படி பண்ணுகையாலே, புருஷார்த்த காஷ்ட்டையில் நெஞ்சு பற்றாதபடி பண்ணுகையும்.

சஉச. இதில் க்ஷுத்ர புருஷார்த்தத்தைக் குலைக்குமென்ற விது தன் பக்கலிலே யகப்பட்டாரைப் புறம்பொரு விஷயமறியாதபடிபண்ணு மிவ்விஷயத்தின் ஸ்வபாவம் சொல்லுகைக்காகக் கூப்பிட்டுக்கொண்ட வித்தனை, புருஷார்த்த காஷ்ட்டையைக் குலைக்குமென்னு மதுவே யிவ்விடத்தில பேக்ஷிதம்; ஆனபின்பு க்ஷுத்ரபுருஷார்த்த பஞ்சகத்வம் ப்ராஸங்கிகமாகையாலே, அத்தைவிட்டு ப்ராகரணிகமான சரம புருஷார்த்தபஞ்சகத்வத்தை மூதலிக்கிறார். (நித்ய சத்ருவாயிறே யிருப்பது) என்று. அதாவது, "शत्रुघ्नो नित्यशत्रुघ्नः" "சத்ருக்க்நோ நித்யசத்ருக்க்நः" என்று பெருமாளுக்கு அபிமதவிஷயமான ஸ்ரீபரதாழ்வானையே தமக்குத்தேச்யமாகப் பற்றி அவனையல்லதறியாதே யருக்கும் ஸ்ரீசத்ருக்நாழ்வான் பரதாநுவ்ருத்திக்கு விரோதியான ராமஸௌந்தர்யமாகிற நித்ய சத்ருவை ஜயித்திருக்குமென்கையாலே, ததீயகைங்கர்ய நிஷ்ட்டனுக்கு நித்யசத்ருவாயிறே பகவத்ஸௌந்தர்ய மிருப்பதென்கை. ஆகையாலிப்படிவிலக்ஷணமான விஷயத்தில் ஸம்ச்லேஷ விச்லேஷங்களிரண்டும் புருஷார்த்த காஷ்ட்டையைக் குலைக்குமென்னக்குறையில்லை யென்று கருத்து.—அன்றிக்கே கீழ்ச்சொன்ன குணதோஷங்களிரண்டும் செய்யுமத்தை யருளிச்செய்கிறார், (குணதோஷங்களிரண்டும்) என்று துடங்கி. குணமாவது—(இங்கது செய்யவொண்ணாது) என்கிற விடத்தில் சொன்ன "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரியான ஸௌந்தர்யசீலாதிகள்; தோஷமாவது—குணம்போலே யுபாதேயமாயிருக்கும்) என்கிற விடத்தில் சொன்ன "கடியன் கொடியன்" இத்

ஆ.—படுத்தி தன் பக்கலிலே சுழலப்பண்ணுமதாகையாலே சரமபர்வமான வாசார்ய கைங்கர்யம் துர்லபம்; அதமுக்குண்ணும லவ்வளவும் வரப்பெறில் அலப்ப்ய லாபம், இது ப்ரதம பர்வாக்வயபல சரம ப்ராப்யமென்று கீழே ஸம்பந்தம்.

சஉ௫. மேலிக்த ப்ராப்யாநுரூபமான ப்ராபக நிர்ணயம் பண்ணுகிறார், (இப்படி ப்ராப்யம்) இத்யாதியால். சரம பர்வ மாசார்ய கைங்கர்யமென்றிப்படி ஸ்வரூபாநுரூபப்ராப்யத்தை தாத்பர்ய சாஸ்த்ர ச்ரவணத்தாலே ஸம்சயமற வறுதி யிட்டால் இந்த சரமப்ராப்யத்துக்கு சரமமாய்க் கொண்டு ஸத்ருசமாக வேணுமிறே தத்ப்ராபகம்.

சஉ௬. ப்ராப்ய ப்ராபக மிரண்டு மேகவிஷயத்தில் கொள்ளாதபோது; சரம ப்ராப்ய ப்ராபகங்களிரண்டுக்கும் ப்ராப்யமே ப்ராபகமான வைக்ய

---

சஉ௫. இப்படி ப்ராப்யத்தை யறுதி யிட்டால், அதுக்கு ஸத்ருசமாக வேணுமிறே ப்ராபகம்.

சஉ௬. அல்லாதபோது ப்ராப்யப்ராபகங்களுக்கைக்யமில்லை.

---

ஜீ.—யாதிகள். (இரண்டும் க்ஷுத்ரபுருஷார்த்தத்தையும் புருஷார்த்த காஷ்ட்டையையும் குலைக்கும்) என்றது—ஒரொன்றே யிரண்டையும் செய்யுமென்றபடி. குணமிரண்டையும் செய்கையாவது "மனைப்பால் பிறந்தார்பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம் துறந்தார் தொழுதாரத்தோள்" இத்யாதிகளில் சொல்லுகிறபடியே க்ஷுத்ர புருஷார்த்தத்தைக் குலைக்கையும், ஸ்வவைலக்ஷண்யத்தாலே ஆழங்கால் படுத்தி புருஷார்த்த காஷ்ட்டையான ததீயசேஷத்வ நிலையைக் குலைக்கையும்; தோஷமிரண்டையும் குலைக்கையாவது—குணம்போலே யுபாதேயமாய் "*அவனென்றே கிடக்கும்படி பண்ணுகையாலே யூணுறக்கம் பந்துகழல் முதலானவற்றில் பொருந்தாமையை விளைத்து க்ஷுத்ர புருஷார்த்தத்தைக் குலைக்கையும், "சிறுமாமனிசராயென்னையாண்டாரிங்கே திரிய—நறுமாவிரை நாண்மலரடிக்கீழ்ப் புகுதல்—உறுமோ" என்னும்படியான புருஷார்த்த காஷ்ட்டையைக் குலைக்கையுமென்றிங்ஙனே யோஜிக்கவுமாம். இந்த யோஜனைக்கு (நித்யசத்ரு) என்கிறது ஸௌந்தர்யாதிகுணவிசிஷ்டவஸ்து விஷயமாகக் கடவது. அங்ஙனுமன்றிக்கே குணம் புருஷார்த்த காஷ்ட்டையைக் குலைக்குமென்னுமதுக்கும் தோஷம் க்ஷுத்ர புருஷார்த்தத்தைக் குலைக்குமென்னுமதுக்கும், பூர்வயோஜனைகளில் சொன்னபடியே பொருளாகக் கடவது. இவ்விஷயஸ்வபாவமிதுவாகையாலே சரம பர்வமான வாசார்ய கைங்கர்யமாகிற விதுதான் துர்லபமென்று ஸிம்ஹாவலோகநந்யாயத்தாலே கீழோடேயந்வயம்.

சஉ௫. (ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்ந்திருக்க வேணுமிறேப்ராபகம்) என்றுவிதில் ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யம் சரமபர்வமான வாசார்யகைங்கர்யமென்று நிர்ணயித்தாராய் நின்றார்கீழ்; இந்த ப்ராப்யாநுரூபமான ப்ராபகநிர்ணயம் பண்ணுகிறார் மேல், (இப்படி ப்ராப்யத்தை யறுதியிட்டால்) என்றுதுடங்கி. அதாவது இப்படி யாசார்ய கைங்கர்யமே ப்ராப்யமென்றறுதி யிட்டால் இந்த ப்ராப்யத்துக்குத் தகுதியாக வேணுமிறே யேதத்ப்ராபகமென்கை. இத்தாலாசார்யகைங்கர்யமாகிற சரமப்ராப்யத்துக்கு ஆசார்யனே ப்ராபகனாக வேணுமென்றபடி.

சஉ௬. இப்படி யல்லாதபோதுவரும் ஹாநியேதென்ன வருளிச்செய்கிறார், (அல்லாதபோது) என்றுதுடங்கி. அதாவது இப்படியிப்ராப்யத்துக்கு

ஆ.—மில்லே; ப்ராப்ய மொன்றும் ப்ராபக மொன்றுமாய் விடும்; புல்லேக் காட்டி யழைத்துப் புல்லேயிடுவாரைப் போலே பல ஸாதநங்களிரண்டுக்கும் பேதமில்லாமை சரம பர்வத்துக்கு மொக்குமிறே. இவ்வர்த்தத்தைப் ''பேறொன்று மற்றில்லே'' என்கிற பாட்டிலே அமுதனரு மருளிச்செய்தார், ''[illegible]'' ''உபாயோபேயபாவேந'' என்றித்யாதி சாஸ்த்ர வசநமுமுண்டு.

௪௨௭. கீழே (உபாயம் தன்னைப் பொறுக்கும்) என்றீச்வரனை யுபாயமென்று சொல்லிவைத்து, ஆசார்யனை யுபாயமென்று கொள்ளுகைக்கடி தத்ஸுலபத்வ ஸுக்ருடத்வங்களைப் பற்ற வென்கிறுர் மேல், (ஈச்வரனைப் பற்றுகை) இத்யாதியால். நிரங்குச ஸ்வதந்த்ரனை வீச்வரனை ஸுலபோபாயமாகப் பற்றுகை, ஸ்வதந்த்ரனு யிருப்பானெருருவன் கையைப்பிடித்து வேண்டிக்கொண்டு கார்யம் கொள்ளுமோபாதி, அவன் திமிறி யுதறுகைக்குடலாய்விடும்; ஸ்வாசார்ய பரதந்த்ரனுமாய் க்ருபாபரதந்த்ரனுமான ஸ்வாசார்யனை யுபாயமாகப் பற்றுகை, க்ருபாளுவான ஸுலபனுடைய காலேப்பிடித்து வேண்டிக்கொண்டு தன் கார்யம் கொள்ளுமோபாதி, இளகெஞ்சனுய்நின்றபோதே யபேக்ஷிதம் செய்து தலைக்கட்டுகைக்குடலாய்விடும். —,அன்றியே ஈச்வரனென்று ப்ரபத்திவிஷயமாகச் சொன்னவர்ச்சாவதார

௪௨௭. ஈச்வரனைப் பற்றுகை கையைப் பிடித்துக்காரியம் கொள்ளுமோபாதி;

ஜீ.—ஸத்ருசமாம்படி யாசார்யனை ப்ராபகமாகக் கொள்ளாதே ஈச்வரனை ப்ராபகமாகக்கொள்ளும்போது ப்ராப்யத்துக்கும் ப்ராபகத்துக்கும் தன்னிலைக்யமில்லையென்கை. ப்ரதம பர்வத்துக்குண்டான ப்ராப்யப்ராபகைக்யம் சரமபர்வத்துக்கு மொக்குமிறே; ஆகையிறே பிள்ளையமுதனர் ''பேறொன்றுமற்றில்லை நின் சரணன்றி யப்பேறளித்தற்கா றொன்றுமில்லை மற்றச் சரணன்றி'' என்று ப்ராப்ய ப்ராபகங்களிரண்டு மேகவிஷயமேயாக வருளிச்செய்தது.

௪௨௭. இப்ரபந்தத்தில் உபக்ரமமேபிடித்து (ஸ்வதந்த்ரனை) இத்யாதி வாக்யத்தளவும், ஸித்தோபாயதயா ஸகலசாஸ்த்ரஸித்தனை வீச்வரனை பரமோபாயமாகவும், ஆசார்ய னஜ்ஞாத ஜ்ஞாபகமுகேநோபகாரகனுகவுமிறே சொல்லிப்போந்தது; இப்போ தீச்வரனைவிட் டாசார்யனை யுபாயமென்னுமளவில் சாஸ்த்ரவிரோதமும் ஸ்வோக்திவிரோதமும் ஸம்பவியாதோ, ஈச்வரனையுபாயமாகப் பற்றுமதில்காட்டில் ஆசார்யனை யுபாயமாகப்பற்றினல் வருமேற்றந்தா னேதோவென்கி றசங்கையின்மேலே யருளிச்செய்கிறுர், (ஈச்வரனைப்பற்றுகை) என்றுதுடங்கி. அதாவது ஈச்வரனைப்பற்றுகை அவன் கையைப்பிடித்துக் காரியம்கொள்ளுமோபாதி; ஆசார்யனைப்பற்றுகை அவன்காலைப்பிடித்துக் காரியம்கொள்ளுமோபாதியென்கை. இங்ங னருளிச்செய்தது ஈச்வரவிஷயத்தோடு ஆசார்ய விஷயத்துக்குண்டான வசக்யத்வமும், அவ்விஷயத்தைப்பற்றுமதில் இவ்விஷயத்தைப் பற்றுமதுக்குண்டான கார்யஸித்தியி லமோகத்வமும் தோற்றுகைக்காக; அதெங்ஙனேயென்னில் சரணத்வோக்தியாலே தத சக்யத்வம் ஸம்ப்ரதிபந்நம். (ஈச்வரனைப்பற்றுகை யவன்கையைப்பிடித்துக்காரியம்கொள்ளுமோபாதி) என்கையாலே மஹாப்ரபுவாயிருப்பானெருருவனை வசீகரித்துக்காரியம்கொள்ளுவானெருருவன் அவன் கையைப்பிடித்து வேண்டிக்கொண்டு காரியம்கொள்ளப்பார்க்குமளவில் நீர்மையாலே

ஆ.—விக்ரஹமாய் அது கையினுடைய ஸ்த்தாநத்திலேயாய், இந்த வாசார்யவிஷயம் திருவடிகளுடைய ஸ்த்தாநத்திலேயாய் இரண்டுக்கு மவயவிபகவத்ஸ்வரூபமாய், அதில் கரஸ்த்தாநீயமான ஸுலபவிஷயத்தைப் பற்றுமதில் காட்டில் சரணஸ்த்தாநீயமான ஸுலபபகவத்விஷயத்தைப் பற்றுமதே ஸூசகமாய் ஸுத்ருடமுமாயிருக்கு மென்றுமருளிச்செய்வர்.

சஉஅ. இப்படி யாச்ரயண ஸுலபனுமளவேயன்றி ஆசார்யனுபயர்க்கு முபகாரகனு யிருக்குமென்கிறார் மேல், (ஆசார்யன்) இத்யாதியால். இப்படி யாச்ரயணஸுலபனான வாசார்யந்தான் சேஷசேஷி ஸாபேக்ஷராண சேஷி சேஷபூதரிருவர்க்கும் மஹோபகாரகன்.

சஉக. அதெங்ஙனே யென்ன ஸ்ருஷ்ட்யவதாரங்களி லொருவஸ்துவு மெட்டுப்படாமல் இழவாளனு யிடம்பார்த்துத் திரிகிற வீச்வரனுக்கு,

---

ஆசார்யனைப் பற்றுகை காலைப்பிடித்துக் காரியம் கொள்ளுமோபாதி.

சஉஅ. ஆசார்ய னிருவர்க்கு முபகாரகன்.

சஉக. ஈச்வரனுக்கு சேஷவஸ்துவை யுபகரித்தான் ;

---

ஜீ,—நெஞ்சிளகிக்காரியம் செய்யவுமாய், ஸ்வாதந்த்ர்யத்தாலே யுதறிவிடவுமா யிருக்கையாலே இன்னபடி யென்றறுதியிட வொண்ணுதாபோலே, ஆச்ரிதனைவிவனுடைய வபேக்ஷிதம் தன்னுடையக்ருபையாலே நெஞ்சிளகிக்காரியம்செய்யில் பலிக்கும்படியாய், ஸ்வாதந்த்ர்யத்தாலே முறுகிச்செய்யாதொழியில் விபலிக்கும்படியா யிருக்கையாலும் ; (ஆசார்யனைப்பற்றுகை யவன்காலைப்பிடித்துக்காரியம்கொள்ளுமோபாதி) என்கையாலே அப்படி ப்ரபுவானவன் தன்னையே காலைப்பிடித்து வேண்டிக்கொண்டு காரியம்கொள்ளுமளவில் தயாபரவசனுய் காரியம்செய்தல்லது நில்லாமையாலே தப்பாமல்காரியம் ஸித்திக்குமாபோலே, ஆச்ரிதனை விவனுடையவபேக்ஷித மறுதியாகப்பலிக்கும்படி யிருக்கையாலும் அமோகத்வம் ஸம்ப்ரதிபந்நம்.

சஉஅ. ஆக ப்ராப்யநிர்ணயத்தைப்பண்ணி (இதுக்குஸத்ருசமாக வேணுமிறே ப்ராபகம்) என்றவித்தாலே ஆசார்யகைங்கர்யமாகிற சரமப்ராப்யத்துக்கு ஆசார்யனே ஸத்ருசோபாயமென்னுமத்தை ப்ரதிபாதித்து, அப்படி யன்றிக்கே ஈச்வரனை யுபாயமாகக்கொள்ளுமளவில் வரும் விரோதம்காட்டி, ஆசார்யனுக்கு ப்ராப்யத்வமீச்வரனோடந்வயத்தாலேயாமோபாதி ப்ராபகத்வமும் ததநந்யத்வ நிபந்தநமென்னுமத்தையும், ஈச்வரனைப்பற்றுமதி லிவனைப்பற்றுமதுக்குள்ள வேற்றத்தையு மருளிச்செய்தார்கீழ் ; இனிமேல் பலஹேதுக்களாலு மாசார்யவைபவத்தை ப்ரகாசிப்பிக்கிறார் இவ்விஷயத்தை யுபாயமாகப்பற்றுமவர்களுக்கு ருசிவிச்வாஸங்கள் விளைக்கைக்குறுப்பாக ; அதில் ப்ரதமத்திலே யீச்வரசேதநர்களிருவர்க்கு மிவனுபகாரகனுனமையை யருளிச்செய்கிறார், (ஆசார்யன்) என்றுதுடங்கி. அதாவது இப்படியுபாயமாகக் கீழ்ச்சொல்லப்பட்டவாசார்யன், சேஷிசேஷபூதரான வீச்வரசேதநரிருவர்க்கு மபிமதவஸ்துக்களைக்கொடுத்த வுபகாரகனென்கை.

சஉக. இரண்டுதலைக்கு மிவனுபகரித்தவை யிவையென்றருளிச்செய்கிறார், (ஈச்வரனுக்கு) என்றுதுடங்கி. அதாவது மேன்மேலும் ஸ்ருஷ்ட்யவதாராதிகளைப்பண்ணி வசீகரிக்கப் பார்த்தவிடத்திலும் ஓராத்மவஸ்துவு மெட்டுப்படாமையாலே இழவாளனுயிருக்கிற வீச்வரனுக்கு, சேஷ

ஆ.—ஸ்ரீகௌஸ்துபம்போல ஸ்ப்ருஹணீயமாய்சரீரதயாசேஷமான வாத்ம வஸ்துவை "* வன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே கண்டெடுத்துக் கழுவி அவன் திருக்கையிலே யுபகரித்தான்; அநாத்யவித்யையினாலே திரோஹிதஸ்வப்ரகாசனாய் ஸ்வாபாவிக சேஷத்வ முருவழிந்து அஸத்கல்பனான சேதநனுக்கு, ப்ராப்த நிரதிசய போக்ய சேஷியை *கையிற்கனி யென்ன யுபகரித்தான். வஸ்து கெடுத்துத் தேடி யுழலுகிற வஸ்துமானுக்கு, அவ்வஸ்துவைக் கொடுத்துபகரித்தான், கண் கெட்டமிடியனுக்கு கண்ணைக்கொடுத்து மஹாநிதியைக்காட்டி யுபகரித்தான், சேஷிக்கு சரீரத்தை யுபகரித்தான். சேஷபூதனுக்கு ப்ராணனை யுபகரித்தான். ஸாபேக்ஷனுக்கு நிரபேக்ஷவஸ்துவை யுபகரித்தான். நிரபேக்ஷனுக்கு ஸாபேக்ஷவஸ்துவை யுபகரித்தான். ஆக சேஷ சேஷிகளிருவர்க்கும் ஆசார்யோபகார ஸ்ம்ருதி பண்ணிக்கொண்டு அவன் சொல்லுற்றுச் செய்யும் பரதந்த்ரர்.

௨௩0. இவ்வேற்றத்தைக் கண்ட ஸ்வதந்த்ரனான வீச்வரன் தானும் பரதந்த்ரசேஷித்வமாகிற வாசார்யசேஷித்வத்தை நாக்கு நீருற வாசைப்பட்டுப் பேகணித்திருக்கும்; நாமுமிப்படி யுபகரிக்கும்படியான குருத்வம் பெற்று வாழப் பெறுவதுகாணென்றிறுமாந்திருக்குமாபோலே.

௨௩௧. இப்படி யாசார்யத்வத்தை யாசைப்பட்டிருக்கையாலேயிறே, மறுவற்ற பரதந்த்ரசேஷி நிறையான குருபரம்பரையிலே ஸ்வதந்த்ரசேஷித்வ மிறுமாப்பை மறைத்துக்கொண்டு மெள்ள வொரு தலையிலே யந்வயித்ததும்; ஆசார்யக்ருத்யத்தை நாச்சியார் விழித்து விழித்து பாவித்

---

சேதநனுக்கு சேஷியையுபகரித்தான்.

௨௩0. ஈச்வரன் தானு மாசார்யத்வத்தை யாசைப்பட்டிருக்கும்,

௨௩௧. ஆகையிறே குருபரம்பரையிலே யந்வயித்ததும்

---

ஜீ.—மான வாத்மவஸ்துவை அஜ்ஞாத ஜ்ஞாபநமுகேந திருத்தி இஷ்டவிநியோகார்ஹமாம்படிக் கைப்படுத்தினான்; பகவத் ஜ்ஞாநாபாவத்தாலே அநாதிகால மஸத்கல்பனாய்க் கிடந்தசேதநனுக்கு, பகவத்ஸம்பந்தத்தை யறிவித்து விசேஷியானவவனைக் காட்டிக்கொடுத்தா னென்கை. இத்தா லாசார்யனுடைய சேதநேச்வரர்களிருவர்க்கு முபகாரகனாகையாகிற வைபவம்சொல்லப்பட்டது.

௨௩0. இன்னமு மொருப்ரகாரத்தாலே யாசார்யவைபவத்தை ப்ரகாசிப்பிக்கிறார் (ஈச்வரன்தானும்) என்றுதுடங்கி. அதாவது இதுக்கிட்டுப்பிறவாதவீச்வரன் தானு மிவ்வாசார்யத்வத்தி னேற்றத்தைப்பற்ற விதிலேமிகவும் ச்ரத்தைபண்ணி யிருக்குமென்கை.

௨௩௧. அதெங்கேகண்டதென்னு மபேக்ஷையிலே யத்தைமூதலிக்கிறார், (ஆகையிறே) என்றுதுடங்கி. அதாவது ஆசார்யத்வத்தை யாசைப்பட்டிருக்கையாலே யிறே, "సదాచార్యవంశో జ్ఞేయః । ఆచార్యాణామసావసావిత్యా భగవత్తః" "ஸதாசார்யவம்சோஜ்ஞேயः । ஆசார்யாணாமஸாவஸாவித்யா பகவத்த:" என்னும்படி குருபரம்பரையிலே த்வயோபதேஷ்ட்ருத்வேநாந்வயித்ததும், ஆசார்யக்ருத்யத்தை யேறிட்டுக்கொண்டு அர்ஜுநனுக்கு றித்து தத்வவிவேகாதி சரமோபாய பர்யந்தார்த்த ப்ரதிபாதிகையான

ஆ.—தேறிட்டுக்கொண்டு ஸ்ரீநிதோபநிஷதாசார்யனும் சரம ச்லோகைக ஸாரவதியான ஸ்ரீகீதையையும், வஸிஷ்ட்டசிஷ்யனும் சரமச்லோகோக்த சரணாகதிப்ரபாவபரமான வபயப்ரதாநத்தையும், அநதிகாரிகளும் கேட்கும்படி ப்ரகாசமாக வருளிச்செய்ததுமென்கிறார்.

௩௩௨. இப்படி ஈச்வரனு மாசைப்படும்படியான தன்னேற்றமுடைய மஹோபகாரகனான வாசார்யனுக்கு, அவனுபகரித்த வுபயவிபூதிக்கும் விபூதிமானுக்கும், ஸத்ருசமாக ப்ரத்யுபகாரம் மிடியனான விவனால் பண்ணலாவது - நித்யவிபூதித்வயமும் லீலாவிபூதித்வயமுமாகிற விபூதிசதுஷ்டயமும், உபய விபூதிமானான வீச்வரத்விதவமுமாகிற வகடிதமுண்டாகிலென்கிறார் மேல், ''యోదద్యాద్భగవద్జ్ఞానమ్ కుర్యాద్ధర్మోపసేవనమ్ । కృత్స్నాం వా పృథివీం దద్యాన్న తత్తుల్యం కథఞ్చన'' ''யோதத்யாத்ப் பகவத்ஜ்ஞாநம் குர்யாத்த்தர்மோபஸேவநம் । க்ருத்ஸ்நாம்வா ப்ருதிவீம் தத்யாந் நதத்துல்யம் கதஞ்சந'' விறே.

௩௩௩. இப்படி ப்ரத்யுபகாரமற்ற மஹோபகாரகனான வாசார்யனுபகரிக்கும் ஸ்வதந்த்ரனான வீச்வரனோடு சேதநனுக்குண்டான சேஷசேஷி ஸம்பந்தம், அநாதிஸம்ஸாரஸம்பந்தத்துக்கும் மத்யேவரும் ஸம்ஸார

---

ஸ்ரீகீதையு மபயப்ரதாநமு மருளிச்செய்ததும்.

௩௩௨. ஆசார்யனுக்கு ஸத்ருசப்ரத்யுபகாரம் பண்ணலாவது விபூதிசதுஷ்டயமு மீச்வரத்வயமு முண்டாகில்.

௩௩௩. ஈச்வரஸம்பந்தம் பந்தமோக்ஷங்க ளிரண்டுக்கும்

---

ஜீ.—ஸ்ரீகீதையருளிச்செய்ததும், ஸ்ரீவிபீஷணாழ்வான்நிமித்தமாக ''సకృదేవ ప్రపన్నాయ తవాస్మీతి చ యాచతే। అభయం సర్వభూతేభ్యో దదామ్యేతద్వ్రతం మమ'' ''ஸக்ருதேவப்ரபந்நாய தவாஸ்மீதிசயாசதே । அபயம்ஸர்வபூதேப்ப்யோ ததாம்யேதத்வ்ரதம்மம'' என் றபயப்ரதாந மருளிச்செய்ததுமென்கை. இத்தாலீச்வரனு மாசைப்படும்படியன்றோ வாசார்யத்வத்தின்பெருமையென் றாசார்யவைபவம் சொல்லிற்றாயிற்று.

௩௩௨. இன்னமு மொருவழியாலே யாசார்யவைபவத்தைத்தர்சிப்பிக்கிறார், (ஆசார்யனுக்கு) என்றுதுடங்கி. அதாவது உபயவிபூதியையும் விபூதிமானான வீச்வரனையும் தானிட்டதுவழக்காம்படி பண்ணிக்கொடுத்த வாசார்யன் பண்ணின வுபகாரத்துக்கு ஸத்ருசமாக ப்ரத்யுபகாரம் பண்ணலாவது, இப்படியே யின்னமு மிரண்டுவிபூதியும் விபூதிமானா யிருப்பானொரீச்வரனும் வேறேயுண்டாகிலென்கை. ''యోదద్యాద్భగవద్జ్ఞానం కుర్యాద్ధర్మోపసేవనమ్ । కృత్స్నాం వా పృథివీం దద్యాన్న తత్తుల్యం కథఞ్చన'' ''யோதத்யாத்ப்பகவத்ஜ்ஞாநம் குர்யாத்த்தர்மோபஸேவநம் । க்ருத்ஸ்நாம்வாப்ருதிவீம்தத்யாந் நதத்துல்யம்கதஞ்சந'' என்றாரிறே. இத்தாலாசார்யனுடைய ப்ரத்யுபகாராவகாசரஹித மஹோபகாரகத்வமாகிற வைபவம் சொல்லிற்றாயிற்று.

௩௩௩. இன்னமு மொருமுகத்தாலே யாசார்யவைபவத்தை யருளிச்செய்கிறார், (ஈச்வரஸம்பந்தம்) என்றுதுடங்கி. இவ்விடத்தில் (ஈச்வரஸம்பந்தம்) என்கிறது - (ஈச்வரனைப்பற்றுகை) என்றுகீழ்ச்சொன்ன ததாச்ரய ரூபஸம்பந்தத்தை; அது (பந்தமோக்ஷங்க ளிரண்டுக்கும் பொதுவாகை) யாவது - கர்மாநுகுணமாக ஸம்ஸரிப்பிக்கவும் காருண்யாநுகுணமாக முக்தனாக்கவும் வல்லநிரங்குச ஸ்வதந்த்ரனோடுண்டான

ஆ.—மோக்ஷத்துக்கும் மத்யஸ்த்தமாய்க் கொண்டு பொதுவா யகியத மாயிருக்கும்; ஈச்வரனுபகரித்த மஹோபகாரகனை ஸதாசார்யனோடு ஸச்சிஷ்யனுக்குண்டா மிந்த ஸம்பந்த்தம் விளம்பமற்ற ஸம்ஸார மோக்ஷத்துக்கே ஹேதுவா யபங்குரமா யஹிதம் கலசாதிருக்கும்.

௨௩௪. இப்படி யுபயஸாதாரண ஸ்வதந்த்ரபக்த்துவான பகவானை அபத்தேகலபிக்கை ததபிமதனை வாசார்யனாலே யுண்டாம்;

௨௩௫. அஸாதாரணபக்த்துவான வாசார்யனைலபிக்கை மஹோபகாரகனான பகவானாலேயுண்டாம்.

௨௩௬. ஆகி லுபயரு முபகாரகராமிடத்தில் ஸமரோவென்ன, ஈச்வரனே மஹோபகாரகனென்கிறார் மேல், (உபகார்யவஸ்து) இத்யாதியால். ஆசார்யனு மீச்வரனு முபகரித்தவஸ்துக்களைச்சேரத்தூக்கிப்பார்த்தால், ஆசார்யோபகார்யவஸ்துவான பகவத்விஷயத்தைப்பற்ற பகவதுபகார்ய

---

பொதுவாயிருக்கும். ஆசார்யஸம்பந்த்தம் மோக்ஷத்துக்கே ஹேதுவாயிருக்கும்.

௨௩௪. பகவல்லாபமாசார்யனாலே.

௨௩௫. ஆசார்யலாபம் பகவானாலே.

௨௩௬. உபகார்யவஸ்து கௌரவத்தாலே

---

ஜீ.—ஸம்பந்த்தமாகையாலே, உபயஸாதாரணமாயிருக்கை; (ஆசார்யஸம்பந்த்த) மாகிறது - (ஆசார்யனைப்பற்றுகை) என்று கீழ்ச்சொன்ன ததாச்ரயண ரூபஸம்பந்த்தம், அது (மோக்ஷத்துக்குஹேது வாகை) யாவது கர்மாநுகுணமாக ஸம்ஸரிக்கவும் விடும் ஸ்வதந்த்ரனன்றிக்கே ஸர்வப்ரகாரத்தாலும் இவனை யுஜ்ஜீவிப்பித்தேவிடும் நிரநிசயக்ருபாவானோட்டை ஸம்பந்த்தமாகையாலே, ஸம்ஸாரமோக்ஷங்களுக்குப் பொதுவன்றிக்கே ஸம்ஸாரவிமோசநைகஹேதுவா யிருக்கை. இத்தால் மோக்ஷைகஹேதுத்வசிபந்த்தகமானவைபவம் சொல்லப்பட்டது.

௨௩௪. உத்தாரகத்வத்தி லாசார்யனுடையவாதிக்யத்தை யருளிச்செய்தார்கீழ், உபகாரகத்வத்தி லீச்வரனுடைய வாதிக்யத்தை யருளிச்செய்கைக்காக வடிகொண்டெழுந்திருக்கிறார்மேல், (பகவல்லாபம்) என்று துடங்கி. அதாவது நிருபாதிகசேஷியாய் நிரங்குச ஸ்வதந்த்ரனாயிருக்கும் பகவானைலபிக்கை தத்ஸம்ருத்த்யேக ப்ரயோஜநனாய்க்கொண்டு மங்களாசாஸநத்துக் காளாகவேணுமென்று தன்னை யங்கீகரித்து, தத்வ்யாமோஹவிஷயமாக்கின ஸ்வாசார்யனாலேயென்கை.

௨௩௫. ஏவம்பூதனானவாசார்யன் தன்னைலபிக்கைக்கு ஹேதுவேதென்னு மபேக்ஷையிலே யருளிச்செய்கிறார், (ஆசார்யலாபம்) என்றுதுடங்கி. அதாவது பகவல்லாபஹேதுவாய் பரமப்ராப்யபூதனான வாசார்யனை லபிக்கை, "ఈశ్వరస్యచ సౌహార్దమ్" "ஈச்வரஸ்யச ஸௌஹார்தம்" இத்யாதிப்படியே நிருபாதிக ஸுஹ்ருத்தாய் விசேஷகடாக்ஷப்பற்றுசைகளையும் தானேகற்பித்துக்கொண்டு விசேஷகடாக்ஷத்தைப்பண்ணி, அத்வேஷத்தைப்பிறப்பித் தாபிமுக்க்யத்தையுண்டாக்கி ஸாத்விகஸம்பாஷணத்திலேமூட்டி ஸதாசார்ய ப்ராப்தியைப்பண்ணிவிக்கும் நிர்ஹேதுகக்ருபாவானான பகவானாலேயென்கை.

௨௩௬. ஆனாலிருவரு முபகாரத்தில் ஸமரோவென்ன வருளிச்செய்கிறார், (உபகார்யவஸ்து) என்றுதுடங்கி. அதாவது உபயரு முபகரித்த வஸ்துக்களைச் சேர்தூக்கிப்பார்த்தால், ஆசார்யோபகார்யவஸ்துவான

ஆ.—வஸ்துவான வாசார்யகௌரவத்தாலே, ஈச்வரனையுபகரித்த வாசார்யனைப்பற்ற மிகவும் மஹோபகாரகன் ஆசார்யனை யுபகரித்த வீச்வரனேயென்கிறார். "ఈశ్వరస్యచసౌహార్దమ్" "ஈச்வரஸ்யச ஸௌஹார்த்தம்" இத்யாதிகளில் ஆசார்யப்ராப்திஹேதுவாகவிறே யவனுபகரிப்பது.

௪௩௭. இப்படி மஹோபகாரகனான வீச்வரனையுபகரிக்குமாசார்யன் திருவடிகளில் தனக்குண்டான சேஷபூதசிஷ்யத்வஸம்பந்தம், தேவதாந்தர மந்த்ராந்தராதி தோஷகந்தஸ்பர்சத்தாலே கலங்கிக்குலையாதே ஸத்தையுடன் கிடக்கப்பெற்றால், ஸ்வரூபாலங்காரமான தத்வஜ்ஞாநம் அநந்யபக்தி அநந்யவைராக்யங்களில்லாவிடிலும், தத்ஸம்பந்தத்தாலேமெள்ள வுண்டாக்கிக் கொள்ளலாம், ம்ருதஸஞ்ஜீவநமான வாசார்யஸம்பந்தம் நிஷித்தாநுஷ்டாநாந்வயலேசத்தாலே யவன்கைவிடும்படி குலைந்தர்த்தமே விளைந்தால், ஆத்மாலங்காரமான வந்த ஜ்ஞாநாதிகள் அகடிதகடநமாக வுண்டானபோலே தோற்றித்தாகிலும், அவத்யகரங்களாமத்தனையல்லது அவற்றால் வரும் ஸ்வபரப்ரயோஜநமில்லை.

## ஆசார்யனில்காட்டில் மிகவுமுபகாரகனீச்வரன்.

௪௩௭. ஆசார்யஸம்பந்தம் குலையாதேகிடந்தால் ஜ்ஞாநபக்தி வைராக்யங்களுண்டாக்கிக்கொள்ளலாம். ஆசார்யஸம்பந்தம் குலைந்தால் அவையுண்டானாலும் ப்ரயோஜநமில்லை.

ஜீ.—பந்தமோக்ஷோபயஹேதுவாய் ப்ரதமபர்வமுமா யிருக்கிறபகவத்விஷயத்தில் காட்டில் பகவதுபகார்யவஸ்துவான மோக்ஷைகஹேதுவாய் சரமபர்வமுமா யிருக்கிற வாசார்யவிஷயத்தினுடைய கௌரவத்தாலே, ஈச்வரனை யுபகரித்தவாசார்யனில் காட்டில் ஆசார்யனையுபகரித்த வீச்வரன் மஹோபகாரகனென்கை.

௪௩௭. "నమోఽచిన్త్యాద్భుతాక్లిష్ట జ్ఞానవైరాగ్యరాశయే । నాథాయమునయేఽగాధ భగవద్భక్తిసిన్ధవే" "நமோசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாநவைராக்யராசயே। நாதாயமுநயேऽகாதபகவத்பக்திஸிந்தவே" என்கிறபடியே ஆசார்யன் தனக்கேற்றம் ஜ்ஞாநவைராக்யபக்திகளாலேயிறே; அந்தஜ்ஞாநவைராக்யபக்திகளுண்டானவ னிந்த வாசார்யஸம்பந்தத்தை நெகிழ்கின்றனாகிலும் அவை பகவல்லாபத்துக் குடலாமோவென்ன வருளிச்செய்கிறார்மேல், (ஆசார்யஸம்பந்தம் குலையாதே கிடந்தால்) என்றுதுடங்கி. அதாவது- கீழ்ச்சொன்னபடியே யுத்தாரகனுமா யுபகாரகனுமா யிருந்துள்ள ஸ்வாசார்யன் இவனென்னுடையவனென் றபிமானித்திருக்கும்படி அவன்திருவடிகளில் தனக்குண்டானஸம்பந்தம், ஸ்வவிப்ரதிபத்தியாலே குலையாதபடி அதைநோக்கிக்கொண்டு கிடந்தால், ஆத்மாலங்காரங்களான தத்வஜ்ஞாந மப்ராப்திவிஷய வைராக்யம் ப்ராப்தவிஷயபக்தியாகிற வாத்மகுணங்களில்லை யாகிலும், அவ்வாசார்ய ப்ரஸாதாதிகளாலே க்ரமேண வுண்டாக்கிக்கொள்ளலாம்; ஸர்வமங்கள ஹேதுவான வந்த வாசார்யஸம்பந்தம் ஸ்வவிப்ரதிபத்தியாலே குலைந்தால், ஜ்ஞாநாதிகளானவவை பூர்வஸுக்ருதங்களாலே சிறிதுண்டாயிற்றாகிலும் பகவதங்கீகார ஹேதுவாகாமையாலே நிஷ்ப்ரயோஜநமென்கை.

ஆ.—௪௩௮. என்போல வென்னில் "పతివ్రతానిమిత్తంహి వలయాదివిభూషణమ్" "பதிவ்ரதாநிமித்தம்ஹி வலயாதிவிபூஷணம்" என்று பதிவ்ரதைக்கு பதிஸம்பந்தஸூசகமாய் ப்ரதமாலங்காரமான தாலியொன்றும் போகாமல் கிடந்தால் வலயாதிவிபூஷணங்களெல்லா முண்டானபோது பண்ணிக்கூச்சமறப் பூணலாம், அவை பூணுதிருந்தால் வரும் குறையில்லை, அபிரூபைக்குத் தாலியளவே போரும்; அத்தாலி யொன்றும் போனால் அலங்காரமான வலயாதிவிபூஷணம் தானே விதவாலங்காரமாய் பாதிவ்ரத்யத்துக்கவத்யத்தை விளைக்கும். அப்படி யாசார்ய ஸம்பந்தமற்ற ஜ்ஞாநாதிகளும் சிஷ்யனுக்கவத்யமாய்த் தலைக்கட்டுமத்தனை.

௪௩௯. இந்த ஸம்பந்தம்குலையில் பரமபந்துதானே விடப்பார்க்குமென்கிறார்மேல் (தாமரை) இத்யாதியால். "నారాయణోఽపి వికృతిం యాతిగురోః ప్రచ్యుతస్యదుర్బుద్ధేః। కమలంజలాదపేతం శోషయతిరవిర్నతోషయతి" "நாராயணோऽபி விக்ருதிம்யாதிகுரோ: ப்ரச்யுதஸ்ய துர்புத்தே: । கமலம் ஜலாதபேதம் சோஷயதிரவிர்நதோஷயதி" என்றும் ஜலத்தில்பிறந்து ஜலமேதாரகமாய் ஜலத்தைவிடாதே செவ்வி பெற்றுப்போரும் தாமரையைத்தானேயலர்த்தக்கடவபாந்தவமுள்ள வாதித்யன், தாரகமானவன் நீரை அங்யர்பிரிக்கப்

---

௪௩௮. தாலிகிடந்தால் பூஷணங்கள் பண்ணிப்பூணலாம்; தாலிபோனால் பூஷணங்களெல்லா மவத்யத்தைவிளைக்கும்.

௪௩௯. தாமரையை யலர்த்தக்கடவ வாதித்யந்தானே, நீரைப் பிரிந்தா லத்தை யுலர்த்துமாபோலே, ஸ்வரூப விகா

---

ஜீ.—௪௩௮. ப்ரயோஜநமில்லாமையே யன்று அவத்யகரமுமென்கிறார், (தாலிகிடந்தால்) என்றுதுடங்கி. அதாவது பதிவ்ரதையான ஸ்த்ரீக்கு பதிஸம்பந்தஸூசகமான தாலியொன்றும் போகாமல்கிடந்தால், பூஷணங்களில்லையே யாகிலும் முதலுண்டானபோது பண்ணிப்பூண்டு கொள்ளலாயிருக்கும்; இத்தனை பூஷணமுண்டேயென்று நினைத்து தாலியை வாங்கிப்போகட்டால், விதவாலங்கார கல்பமாகையாலே பூண்டபூஷணங்களெல்லா மவத்யாவஹங்களா யிருக்குமென்கை. இத்தா லாத்மபூஷணங்களான ஜ்ஞாநவைராக்யபக்திக ளில்லையேயாகிலும் ஆசார்யஸம்பந்தமாத்ரம் குலையாமல்கிடந்தால் அவன் ப்ரஸாதத்தாலே யவைகளைக்ரமேணவுண்டாக்கிக்கொள்ளலாம்; ஆசார்யஸம்பந்த மித்தனையும் குலைந்தால் ஆத்மகுணங்களான ஜ்ஞாநவைராக்ய பக்திகளெல்லா முண்டானாலும், அவை ச்லாக்யதாஹேதுவன்றிக்கே அவத்யாவஹமாய் விடுமென்றபடி.

௪௩௯. ஆசார்யஸம்பந்தம் கிடந்தாலும் ஸ்வரூப விகாஸகனீச்வரனன்றோ; அது குலைந்ததாகிலும் இத்தனை யாத்மகுணமுடையவனுக்கு அவன் ஸ்வரூபவிகாஸத்தைப் பண்ணானோவென்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார், (தாமரையை) என்றுதுடங்கி. அதாவது ஜலஜமென்னும்படி ஜலத்திலேபிறந்து ஜலைகதாரகமாயிருக்கும் தாமரைக்கு "செங்கமலமந்தரம்சேர் வெங்கதிரோற்கல்லாலலராவால்" என்னும்படி நியமேந விகாஸகனாய்ப் போருமாதித்யந்தானே, ஸ்வதாரகமான ஜலத்தைவிச்லேஷித்தால் அந்தத்தாமரையை விகஸிப்பியாத மாத்ரமன்றிக்கே சோஷிப்பிக்குமாபோலே, ஆசார்யாந்வயத்தாலே ஸத்தைபெற்று ஸ்வஸத்தாதாரகமான தத்ஸம்பந்தம்குலையாதே நிற்குமளவில், இவனுடைய ஸ்வரூபத்தை ஜ்ஞாநவிகாஸமுகேந "உள்ளவுலகளவும் யானுமுளனாவன்" என்னும்படி விகஸிப்பிக்கு மீச்வரந்தானே, ஸ்வஸத்தாதாரகமான வாசார்ய

ஆ.—பிரிந்தால் அப்பசையற வுலர்த்துமாபோலே "సహివిద్యాతస్తంజనయతి" "ஸஹிவித்யாதஸ்தஞ்ஜநயதி" என்றுசார்யன் திருவடிகளிலே பிறந்து அதுவேதாரகமாய் அவனபிமாநத்திலே விடாமலொதுங்கிச் செத்தலிக்கும் ஸ்வரூபத்தை மேல்விழுந்து தானே நோக்கி "உள்ள வுலகளவும் யானுமுளனுவன்" என்னும்படி தத்ஜ்ஞாநவிகாஸத்தைப் பண்ணும் பரமபக்த்துவான வீச்வரந்தானே தேவதாந்தராத்யந்யஸ்பர்சத்தாலே ஸத்தாதாரகமான வாசார்ய ஸம்பந்தம் குலைந்து பஹிஷ்க்ருதனுனல், தானுலர்த்தத்தக்க வந்த ஸ்வரூபத்தை சேஷத்வ ரூபஜ்ஞாநப்பசையற கண்ணற்று சீறி நோக்கி யுபயோக யோக்யமல்லாதபடி வாடப்பண்ணும். இந்த வாசார்ய ஸம்பந்தம் குலைந்ததாகில் பழையபகவத்ஸம்பந்தத்தை யுண்டாக்கிக் கொள்ளுகிறோமென்னவொண்ணாது.

௪௪௦. ஸ்வரூபோஜ்ஜீவநமாய்க் கொண்டு ப்ரதாநமான விந்த வாசார்யஸம்பந்தத்தை யொழியில், இதடியாக வுண்டாய் நிலை நிற்கும் ஸ்வரூபோஜ்ஜீவக பகவத்ஸம்பந்தம் யாவதாத்மபாவி துர்லபம்; தத்ஸம்பந்தம் குலைந்துகிடந்தவளவிலும் ஏதத்ஸம்பந்தம் ஸுலபமாம்; இது குலைந்தால் பின்னையொருக்காலும் ஸுலபமாகமாட்டாதென்றபடி.

௪௪௧. ஆனுலிந்த பகவத்ஸம்பந்த ஸ்த்தாபகமான வாசார்யஸம்பந்தமும், இத்தாலே ஸ்த்தாபிதமான பகவத்ஸம்பந்தமும், இவன் ஸ்வரூப முஜ்ஜீவிக்கைக்கமையாதோ, ப்ரதம ரஹஸ்யமத்யமபத ப்ரதி

---

ஸத்தைப்பண்ணு மீச்வரந்தானே, ஆசார்யஸம்பந்தம் குலைந்தா லத்தைவாடப்பண்ணும்.

௪௪௦. இத்தையொழிய பகவத்ஸம்பந்தம் துர்லபம்.

௪௪௧. இரண்டுமமையாதோ, நடுவில்

---

ஜீ.—ஸம்பந்தத்தை ஸ்வவிப்ரதிபத்தியாலே இவன்குலைத்துக் கொண்ட காலத்தில் தான் விகஸிப்பிக்கக் கடவவந்த ஸ்வரூபத்தை விகஸிப்பியாதமாத்ர மன்றிக்கே நாளுக்கு நாளும் நஷ்டப்ரஜ்ஞமாய் ஸங்கோசித்துப் போம்படி பண்ணுமென்கை. "నారాయణోఽపి వికృతిం యాతి గురోః ప్రచ్యుతస్య దుర్బుద్ధేః । కమలం జలాదపేతం శోషయతి రవిర్న తోషయతి" "நாராயணேபிவிக்ருதிம் யாதிகுரோ: ப்ரச்யுதஸ்யதுர்புத்தே: । கமலம்ஜலாதபேதம் சோஷயதிரவிர்நதோஷயதி" என்னக்கடவதிறே.

௪௪௦. இங்ஙன் சொல்லுகிறதென் இவ்வாசார்யஸம்பந்தம் குலைந்ததாகிலும் "ஒழிக்கவொழியாது" என்கிறபகவத்ஸம்பந்த முஜ்ஜீவநத்துக் குடலாகாதோவென்ன வருளிச்செய்கிறார், (இத்தையொழிய) என்றுதுடங்கி. அதாவது அநாதிஸித்தமாயிருக்கச் செய்தேயும், ஆசார்யனுணர்த்துவதற்கு முன்பு அஸத்கல்பமாய் அவனுணர்த்தின பின்பு இவனுக்கு கார்யகரமாகக்கடவதா யிருக்குமது, இவ்வாசார்யஸம்பந்தம் குலைந்தபோது இதடியாகவந்ததானும் குலைந்துபோமாகையாலே, இவ்வாசார்ய ஸம்பந்தத்தை யொழிய பகவத்ஸம்பந்த மிவனுக்குக் கிடையாதென்கை. ஆகையா லிதுபோயிற்றாகிலும் அதுநமக் குஜ்ஜீவநத்துக்குடலென்றிருக்க விரகில்லையென்றுகருத்து.

௪௪௧. இப்படி யாசார்யஸம்பந்தத்தை யொழிய பகவத்ஸம்பந்தம் லபியாமையாலே ஆத்மோஜ்ஜீவநத்துக் கிரண்டும் வேணுமென்னுமத்தை தர்சிப்பித்தவநந்தரம், பாகவதவிஷயஸம்பந்தமு மவ்வோபாதி யிவனுக் கவச்யாபேக்ஷிதமென்னுமத்தை தர்சிப்பிக்கைக்காக தத்விஷய ப்ரச்

ஆ.—பங்கபாகவத ஸமுதாயஸம்பந்தமாகிற நடுவில் பெருங்குடி பகவத்ப்ராப்திக்காகவோ ஆசார்யப்ராப்திக்காகவோ யிதேதுக்காகவென்று ப்ரச்நம்பண்ணி.

சசஉ. மேலுத்தர மருளிச்செய்கிறூர், (கொடி) இத்யாதியால். வளரிளங்கொடியை ஆச்ரயமான கொள் கொம்பிலே படரும்படி சேர்க்கும்போது, தரைப்படாமல் அதிலேசேர்க்கும் சிலசுள்ளிக்கால் அவச்யம் வேண்டினுப்போலே, கோல்தேடியோடும் கொழுந்ததே போன்ற வபிமுகனை விச்சேதநனுடைய வாச்ரயமான வாசார்ய சரணுந்வயத்துக்குமிந்த ததீயஸம்பந்தமவச்யம்வேணும். பகவத்ஸமாச்ரயணத்துக்கு ஆசார்யஸம்பந்தமும் ததீயஸம்பந்தமு மிரண்டுவேணும்; ஆசார்யஸமாச்ரயணத்

பெருங்குடியென்னென்னில்.

சசஉ. கொடியைக்கொள்கொம்பிலே துவக்கும்போது சுள்ளிக்கால்வேண்டுமா போலே, ஆசார்யாந்வயத்துக்கு மிது வேணும்.

ஜீ.—நத்தையநுவதிக்கிறூர், (இரண்டுமமையாதோ நடுவில் பெருங்குடியென்னென்னில்) என்று. அதாவது ஆத்மோஜ்ஜீவநத்துக்கு பகவத்ஸம்பந்தஸ்தாபகமான வாசார்யஸம்பந்தமும் தத்ஸ்தாபிதமான பகவத்ஸம்பந்தமுமாகிற வுபயமும் போராதோ, ப்ராப்யமத்யமபர்வோக்ததயா நடுவில் பெருங்குடிபோலேயிருக்கிற பாகவதர்களோடு "ஸாத்விகைஸ்ஸம்பாஷணம்" "ஸாத்விகைஸ்ஸம்பாஷணம்" என்கிறஸம்பந்தமெத்தைப்பற்ற வேண்டுவதென்கிறதாகிலென்கை.

சசஉ. இப்ப்ரச்நத்துக் குத்தர மருளிச்செய்கிறூர், (கொடியை) என்றுதுடங்கி. அதாவது உபக்நாபேக்ஷமாய் வளருவதொருகொடியை அதின் பரிணமத்துக்கெல்லா மிடம்கொடுக்கத்தக்க பெரியதொருபக்கத்திலே சேர்க்கும்போது முதலிலே யது தன்னோடே சேர்க்கப்போகாமையாலே, தரைப்படாமல்முந்துறத்தா னிதுக்காச்ரயமாய்க்கொண்டணுகிநின்று தன்னோட்டை யந்வயமுகேந கொள்கொம்பிலே கொழுந்துவிக்கும் சுள்ளிக்காலபேக்ஷித மாமாபோலே, கோல்தேடியோடும் கொழுந்துபோலே அபிமுகனை விச்சேதநன் ஆச்ரிதரத:பதியாமலுத்தரிப்பிக்கும் மஹதாச்ரயமான வாசார்யன் திருவடிகளி லந்வயிக்கும்போது, முதலிலே ததந்வயம்ஸித்திக்கை யரிதாகையாலே முந்துறத்தாங்களாஸந்நராய் நின்று தங்களோடே யிணைக்கிவித்து அவ்வழியாலே யாசார்யவிஷயத்திலே சேர்க்கும் பாகவதர்களோட்டே ஸம்பந்த மவச்யாபேக்ஷிதமென்கை. இப்படி யாசார்யாந்வயத்துக்கடி பாகவதர்களாகில் (ஆசார்யலாபம் பகவானாலே) என்பானென்னென்னில் அதுக்குக்குறையில்லை, பாகவதாந்வயந்தனக் கடியவனாகையாலே ஆபிமுக்க்யபர்யந்தமாகத்தானே க்ருஷிபண்ணிக்கொண்டுவந்து பின்னைபாகவதர்களோடே யிணக்கி அவ்வழியாலேயிறே யவந்தா னுசார்யவிஷயத்திலேசேர்ப்பது, இதித்தனையு மிவரருளிச்செய்த த்ருஷ்டாந்தத்திலேஸித்தம்; எங்ஙனேயென்னில் சேதநனைக்கொடியினுடைய ஸ்தானேயாகவும் ஆசார்யனைக்கொள் கொம்பினுடைய ஸ்தாநேயாகவும் பாகவதர்களைச்சுள்ளிக்காலினுடைய ஸ்தாநேயாகவு மருளிச்செய்கையாலே, கர்ஷகனாயிருப்பானொருவன் ஸ்வப்ரயோஜநார்த்தமாக முதலிலே வித்தையிட்டு முளைவித்துக்கொழுந்துசிரிக்குமளவும்வளர்த்துக்கொண்டுபோந்ததொருகொடியை

ஆ.—துக்கு ததீயஸம்பந்த்தமொன்றுமே விசேஷிக்கவேணும். தத்ஸம்பந்த்தம் ததீயஸம்பாஷணாதி ஸம்பந்த்தத்திலே மூட்டுமித்தனை, ஆசார்யஸம்பந்த்தத்துக்கு முக்யஹேதுவாயற்றது ததீயஸம்பந்த்தமேயிறே; கையைப்பிடித்துக்கொண்டுபோய் ஆசார்யன் திருவடிகளிலே சேர்க்குமவர்கள் ததீயரிறே; இந்தத்ததீயஸம்பந்த்தமெப்போதுமுண்டு.

௪௪௩. நம:பததாத்பர்யமான விந்தத்ததீயர் முன்னாகப்பற்றும் ஸதாசார்யாபிமானமே ஸத்தோஜ்ஜீவனஹேதுவென்கிற ஸத்ஸம்ப்ரதாயஸித்த்தமாய் ஸதாசார்யசிரகால ஸேவாலப்யமாய் இப்ரபந்த்ததாத்பர்யமானப்ரமேயஸாரத்தை வெளியிட்டருளுகிறார் மேலில் சூர்ணையால்; இந்த வசநபூஷணத்தில் நாயகரத்னமிந்தச்சூர்ணை; கீழும்மேலுமிந்தரத்னத்தின் செப்பும்மூடியுமென்று உருத்தோரும் பிள்ளையருளிச்செய்வர். "𑌈𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌹𑌮𑍍" "ஈச்வரோஹம்" என்றீச்வரனோடே யெதிர்மலையும்படியான ஸ்வாதந்த்ர்யாபிமானமாகிற ஸ்வாபிமானத்தாலே, ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேச்வரனுடைய "𑌤𑍍𑌵𑌂 𑌮𑍇" "த்வம்மே" என்கிற மதீயத்வாபிமான ஸித்தமான ஸ்வதஸ்ஸித்த்தசேஷத்வத்தை "𑌅𑌹𑌂 𑌮𑍇" "அஹம்மே" என்றெதிர்மலைந்து மன்றுடிக்குலைத்துக்கொண்டு அஸத்ஸமனானதிகே

---

௪௪௩. ஸ்வாபிமானத்தாலே யீச்வராபிமாநத்தைக் குலைத்துக்கொண்ட விவனுக்கு, ஆசார்யாபிமானமொழிய கதி

---

ஜீ.—இதுக்கினியோருபக்கம் வேணுமென்று தானே யுபக்கமும் தேடி அதிலேசென்றேறுகைக்குச் சுள்ளிக்காலும்காட்டி அவ்வழியாலே யுபக்கத்திலே சேர்க்குமாபோலே, ஸர்வசேஷியான ஸர்வேச்வரன் ஸ்வப்ரயோஜநார்த்தமாக விச்சேதநனை முதலிலேஸ்ருஷ்டித்து, "𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌸𑍌𑌹𑌾𑌰𑍍𑌦𑌮𑍍" "ஈச்வரஸ்யச ஸௌஹார்தம்" இத்யாதிப்படியே க்ரமேணபிமுக்யபர்யந்தமாக விளைத்து இவனுக்கோராசார்யனையுமின்னானென்று தானே திருவுள்ளம்பற்றி அவனோடேசேரும் பாகவதர்களோடே முதலந்வயிப்பித்து அவ்வழியாலேயாசார்யவிஷயத்திலே யந்வயிப்பிக்குமென்னுமிடம் தோற்றுகையாலே; கொள்கொம்பிலே யேறவிட்டகர்ஷகனுக்கே அந்தக்கொடியாலுள்ள ப்ரயோஜநமாமாபோலே, ஆசார்யவிஷயத்திலீச்வரன்சேர்த்த சேதநனாலுள்ள ப்ரயோஜநமுமீச்வரனதேயென்னுமிடமும் பலிதம்; இனி யசேதநமான கொள்கொம்புபோலன்றியே சேதநோத்தமனான விவ்வாசார்யன் தானும் பரஸம்ருத்த்யேகபரனாகையாலே, ஸ்வசேஷியான வீச்வரனுடைய ப்ரயோஜநமே ஸ்வப்ரயோஜநமாக நினைத்திருக்குமிறே.

௪௪௩. இனி (ஸ்வாபிமானத்தாலே) என்றுதுடங்கி (ஆசார்யாபிமானமே யுத்தாரகம்) என்னுமளவாக. இப்படி ததீயர்முன்னாக பற்றப்படும் ஸதாசார்யனுடைய வபிமானமே யுஜ்ஜீவனத்துக்குநிதோபாயமென்று இப்ரபந்த்ததாத்பர்யத்தை ப்ரகாசிப்பித்தருளுகிறார்; பெருவிலையனானவாபரணத்துக்கு நாயகக்கல்போலேயாயிற்று வசநபூஷணத்துக்கிப்ப்ரதேசம் நாயகரத்நமாயிருக்கும்படி; இத்தனையுமருளிச்செய்கையைப்பற்ற வநிஷ்ட்டிக்கையிட்டுக்கொண்டுவந்தது கீழடங்கலும், மேலடங்கலுமிதில் நிஷ்ட்டையை ஸ்த்தாபிக்கிறது; இதில் ப்ரதமத்தில் இவ்வர்த்தம் ஸத்ஸம்ப்ரதாய ஸித்த்தமென்று ஸர்வரும் விச்வஸிக்கைக்குடலாக இது தமக்காப்தோபதேச லப்த்தமென்னுமிடத்தை யருளிச்செய்கிறார், (ஸ்வாபிமானத்தாலே) என்றுதுடங்கி. அதாவது அநாதிகாலம் நானேயெனக்கு நிர்

ஆ.—டனுக்கு, உக்தலக்ஷணோபேதனான ஸதாசார்யன் தன் க்ருபையாலே விசேஷகடாக்ஷம்பண்ணி நம்முடையவனென்றிருக்கா லபிமானிக்கு மபிமானமொழிய உஜ்ஜீவிக்கைக்கு வேறுகதியில்லையென்று, நம்மாழ்வாரவதாரமான நம்பிள்ளை திருவடிகளே நெடுநாள்பழுக்க ஸேவித்து அவருடைய விசேஷகடாக்ஷபாத்ரபூதராய் அவர் ஸகலதாத்பர்யங்களையு மருளிச்செய்யக்கேட்டு தந் நிஷ்டராய் ததேகபரதந்த்ரரான பிள்ளை, அடியேனுக்கு தஞ்சகமேதென்று ஏகாந்தமாகக் கேட்டபோதெல்லாம் பலகால மிப்பரமரஹஸ்யமான பாசுரத்தைத் தேன்பொழியவருளிச்செய்ய செவியும் நெஞ்சும் நிறையக்கேட்டு, இதுவேதஞ்சமென்றறுதியிட்டு நிர்ப்பரனாய் நிஸ்ஸம்சயனாயிருக்கையாயிருக்குமென்று, ஸதாசார்யாபிமானமே தஞ்சமென்றிந்தச் சரமப்ரபந்த தாத்பர்யத்தை வெளியிட்டருளினார். ஆக ஸதாசார்யனே சரமப்ராப்யனென்றும் ததபிமானமே சரமோபாயமென்றும் நிச்சயிக்கப்பட்டது.

௪௪௪. முமுக்ஷுக்களுக்கு தத்ப்ராப்த்யுபாயமாக சாஸ்த்ரம்சொல்லுகிறபக்தி ப்ரபத்திகளை விடவேண்டுவதென்னென்ன, ஸ்வபாராநு ஸந்தாந நிமித்த பயத்வயமடியாகத் தன்னடையே நழுவி நிற்கையாலே யென்கிறார் மேல், (ஸ்வஸ்வாதந்த்ர்ய) (ஸ்வஸ்வாதந்த்ர்யம்) இத்யாதியால். ஸ்வயத்நஸாத்த்யமாய்க்கொண்டு ஸ்வபாரதந்த்ர்ய விரோதியான ஸ்வஸ்வாதந்த்ர்யத்தை யுண்டாக்குமென்னும் ஸ்வரூபஹாநி நிமித்தபயத்தாலே ஸ்வயத்நஸாத்த்ய பக்த்யுபாயம், உறங்குகிறவன் கையிலெலிமிச்சம்பழம் போலே தன்னடையேநழுவுற்று ;

---

யில்லையென்று பிள்ளைபலகால மருளிச்செய்யக் கேட்டிருக்கையா யிருக்கும்.

௪௪௪. ஸ்வஸ்வாதந்த்ர்யபயத்தாலே பக்திநழுவிற்று

ஜீ.—வாஹகனென்றிருக்கும் தன்னுடைய துரபிமானத்தாலே, இவன்நமக்குசேஷம் இவன்காரியம் நமக்கேபரமென்று தன்னை யுஜ்ஜீவிப்பிக்கைக்குடலான விச்வராபிமானத்தை யழித்துக்கொண்ட விவனுக்கு, துர்க்கதியே பற்றுசாக வங்கீகரித்து தன்னுடைய வுஜ்ஜீவனத்துக்கு க்ருஷிபண்ணிப் போரும் பரமதயாளுவான வாசார்யன், இவன் நம்முடையவனென் றபிமானித்திருக்குமந்த வபிமானமொழிய, வேறுஜ்ஜீவநோபாயமில்லையென்று ஸகலசாஸ்த்ர ஸாரவிதக்ரேஸரரான நம்பிள்ளை திருவடிகளிலே பழுக்க ஸேவித்து ததேகபரதந்த்ரராய் ஸகலசாஸ்த்ர தாத்பர்யங்களையு மவரருளிச்செய்யக்கேட்டு தந் நிஷ்டராயிருக்கும் நம்முடைய வாசார்யரான பிள்ளை, தஞ்சமாகப்பலகாலு மருளிச்செய்யக் கேட்டிருக்கை யாயிருக்குமென்றபடி. ஆகையாலாசார்யாபிமானமே இவ்வாத்மாவுக்குஜ்ஜீவநோபாயமென்று கருத்து.

௪௪௪. இப்படி (ஆசார்யாபிமானமொழியகதியில்லை) என்பானேன், சாஸ்த்ரஸித்தங்களான பக்த்யாத்யுபாய விசேஷங்களுண்டே யென்கிற சங்கையிலே இதொழிந்தவையெல்லா மிவனுக்குபாயமன்றிக்கே நின்றமையை யடைவே யருளிச்செய்கிறார் மேல் ; அதில் ப்ரதமத்திலே பக்தியுபாயமன்றியே நின்றபடியை யருளிச்செய்கிறார், (ஸ்வஸ்வாதந்த்ர்ய) (ஸ்வஸ்வாதந்த்ர்ய) இத்யாதியாலே. அதாவது பகவத்ப்ராப்தி ஸாதநதயா விஹிதையாய் ஸ்வயத்நஸாத்த்யையானபக்தி, பகவதேகபாரதந்த்ர்யவிரோதியான ஸ்வஸ்வாதந்த்ர்யத்தை யுண்டாக்குமென்னும் பயத்தாலே இவனுக்குபாயமன்றியிலே நழுவிநின்றதென்கை.

ஆ —௪௪௫. பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாய்ஸ்வேச்சாகாரியான பகவத்ஸ்வாதந்த்ர்யம் மீளவும் ஸம்ஸரிப்பிக்கில் செய்வதென்னென்ன மஹாபயத்தாலே, தத்விஷய மஹாவிச்வாஸமாகிற ப்ரபத்யுபாயம், நடுங்கினவன் நெஞ்சில் தைர்யம்போலே நிலைவறநழுவுற்று. ஆக ஸ்வரூபஹாநி நிமித்தபயத்தாலே ஸ்வஸ்வரூப விரோத்யுபாயமும், பரஸ்வரூபாநு ஸந்தாநபயத்தாலே ஸ்வரூபப்ராப்தோபாயமும், சரமஸ்வரூபஜ்ஞ முமுக்ஷுவின்நெஞ்சில் தொங்குற்றில்லையென்றபடி.

௪௪௬. இப்படி யுபயோபாயத்துக்கு மளவன்றியே ஆசார்யோபாய வரணம் பண்ணுமவனுக்கு, நித்யஸ்வாமியான வாசார்யனை அவன் ஸ்வம்மானதானே தனக் குபாயமாகவேணுமென்று ஸ்வரூபவிருத்தமாகப்பற்றும் பற்று, ஸ்வபலித்வாபிமானரூபமான வஹங்காரகர்ப்பமாகையாலே, ஸ்வவிநாசத்தைப்பாராமல் தன்னையழியமாறி துஷ்ப்ரதிக்ரஹமானகாலன் கொண்டு, சாவாமல் பிழைத்தால் ப்ரதிக்ரஹித்தவந்தப் பொன்கொண்டு அருளாழிமோதிரமிட்டு வாழுமோபாதி, பகவத்விஷயத்தில்போல் ததவதார விசேஷமான வாசார்யவிஷயத்திலும், ஸ்வகத ஸ்வீகாரம் ஸ்வரூபவிருத்தமுமாய் நிஷ்ப்ரயோஜநமுமாய்த் தலைக்கட்டும்.

௪௪௭. ஆகையாலே கீழ்ச்சொன்ன (ஆசார்யாபிமானமே யுத்தாரகம்) என்று சரமோபாய ஸ்வரூபசோதநம்பண்ணி நிச்சயித்தருளினார்.

---

௪௪௫. பகவத்ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே ப்ரபத்தி நழுவிற்று.
௪௪௬. ஆசார்யனையும் தான் பற்றும்பற்று அஹங்காரகர்ப்பமாகையாலே, காலன்கொண்டு மோதிரமிடு மோபாதி.
௪௪௭. ஆசார்யாபிமானமே யுத்தாரகம்.

---

ஜீ.—௪௪௫. அநந்தரம் ப்ரதிபத்தி யுபாயமன்றியே நின்றபடியை யருளிச்செய்கிறார், (𑌭𑌗𑌵𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯) (பகவத்ஸ்வாதந்த்ர்ய) இத்யாதியாலே; அதாவது ஸ்வபாரதந்த்ர்யாநுரூபையாய் மஹாவிச்வாஸரூபையான ப்ரபத்தி, பந்தமோக்ஷோபய நிர்வாஹகனான பகவான் தன் ஸ்வாதந்த்ர்யத்தாலே மீளவும் கர்மாநுகுணமாக வைத்தசிந்தைதவாங்குவித்து ஸம்ஸரிப்பிக்கில் செய்வதென்னென்கிற மஹாபயத்தாலே இவனுக்குபாயமன்றியிலே நழுவி நின்றதென்கை.

௪௪௬. அநந்தர மாசார்யவிஷயத்தில் ஸ்வகீயஸ்வீகார முபாயமன்றிக்கே யொழிந்தமையை யருளிச்செய்கிறார், (ஆசார்யனையும்) என்று துடங்கி. அதாவது ஆசார்யனையும் உபாயமாகத்தான் ஸ்வீகரிக்கிற ஸ்வீகாரம் ஸ்வபலித்வகர்த்ருத்வ ரூபமாய் ஸ்வரூபநாசகமாயிருக்கிற வஹங்காரத்தை யுள்ளேயுடைத்தா யிருக்கையாலே, ஸ்வவிநாசகரமான காலனை பரிக்ரஹித்து அந்தப்பொன்னாலே அங்குளீயகதாரணம்பண்ணின லவத்யகரமோபாதி தன்னுடையஸ்வரூபத்துக் கவத்யகரமா யிருக்குமென்கை. ஆகையாலிதுவு முபாயமன்றியே நின்றதென்றுகருத்து.

௪௪௭. பாரிசேஷ்யாத் கீழ்த்தாமருளிச்செய்ததே யுபாயமென்று தலைக்கட்டுகிறார், (ஆசார்யாபிமானமே யுத்தாரகம்) என்று. அதாவது-மோக்ஷஸாதநதயா சாஸ்த்ரஸித்தங்களான பக்த்யாதிக ளொன்றுமுபாயமன்றியிலே நின்றபின்பு, நிரதிசய க்ருபாவானாய் நிர்ஹேதுகமாகத் தன்னை யங்கீகரித்தருளி நிரபாயமாக நோக்கிக்கொண்டு போருமாசார்யன் இவன் முடையவனென் றிருக்குமந்தவபிமானமே இவனை ஸம்ஸாரத்தினின்று நம்முத்தரிப்பிக்குமென்கை. ஆக(ஸ்வதந்த்ரனை யுபாயமாகத்தான்

